
FB Posts Of Pattabi

Oct-Nov 2025



R. Pattabiraman

FB Posts of Pattabi sep-oct 2025

sep 2025 FB Posts

sep 1

தமனின் மன்மோகன்...

வாத்தியாரா இருந்தா போதாது, கொள்கை முடிவுகளில் தன் கைப்பட வேண்டும் என்கிற மன்மோகனின் விருப்பம் 1971ல் நிறைவேறியது. அவர் சர்வதேச வர்த்தகத் துறையில் கொண்டிருந்த கருத்து நிபுணத்துவம், அவரை வர்த்தக அமைச்சர் துறைக்கு advisor ஆகக் கொணர்ந்தது. பல்கலை சூழலிலிருந்து அரசியல், அதிகாரவர்க்கம், பைல், விவாதம் என்கிற புதிய சூழலை மன்மோகன் விரைவாக கற்று தேர்ந்தார்.

ஒருமுறை அமைச்சர் எல் என் மிஸ்ராவிடம் அப்படி செய்யவியலாது என சொன்னதால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அதை ஐ ஜி படேல் அறிந்து, மன்மோகன் விடு, உன்னை நிதி அமைச்சக chief Economic Advisor ஆக பதவி உயர்வு கொடுத்து போடுகிறேன் என ஒரே வாரத்தில் செய்தார்.

1971-1980 காலத்தில் மன்மோகன் 3 பிரதமர்கள், பல அமைச்சர்கள், ஏராள செயலர்கள், அதிகார வர்க்கத்தினர், துறை சார்ந்து விவாதிக்க வரும் டாட்டா பிர்லாக்கள் என அனுபவங்களை சேர்த்துக்கொண்டார்.

காங்கிரஸ் நேரு கொள்கைகள் மீதான விசுவாசத்துடன் இருந்தது. சாஸ்திரி விவசாயத்தில் சில மாற்றங்களை முயற்சித்தார். எதிர்ப்பு இல்லாமல் இல்லை. சி சுப்பிரமண்யம் பெரிய மாற்றங்களைக் கொணர்ந்தார். உணவு அமைச்சகம் சார்பில் பெரும் போராட்டங்களை நடத்தி மாற்றங்களையும் அவர் ஏற்படுத்தினார். அருமையான , புதிய புதிய எண்ணங்களை கொண்ட intellectual சி எஸ் என மன்மோகன் மகள் தமனிடம் சொல்லியுள்ளார்.

மன்மோகன் தான் அரசாங்க பதவிகளில் நுழைந்தவுடன், நன்கு பழக்கமுள்ள பிமல் ஜலான், மாண்டேக் அலுவாலியா, ராஜா செல்லையா, விஜய் ஜோஷி போன்றவர்களையும் கொணர்ந்தார்.

எல்லோருமே பெரும் சம்பாதித்தியம் விட்டு, குறைந்த சம்பள அரசாங்க பணிக்கு வந்தனர் .

அரசாங்கத்தில் நீ நினைத்த கருத்துக்களை அமுல் படுத்த முடிந்ததா அப்பா என தமன் கேட்டபோது , பொறுமையாக மன்மோகன் பதில் தந்தார். நல்ல பாடம் எனலாம்.

அதிகார வர்க்கத்தில் மோதலுக்கு எல்லையுண்டு. செயலரை ஏற்க வைக்க முடியாவிட்டால் ஒன்றும் செய்யவியலாது. எல்லோரும் பழுத்தவர்கள். பெரும் புத்திஜீவிகள். எளிதில் ஏற்க வைக்கவும் முடியாது. பொறுமையாகவும் நம்பிக்கையுடனும் செயல்பட வேண்டும். எதுவும் அவசர அவசரமாக நடந்து விடாது. அதான் அரசாங்கம். இரண்டு முக்கிய அம்சங்களை மன்மோகன் நம் எல்லோருக்காகவும் சொல்லித் தருகிறார்.

People with good ideas found listeners

The best can easily become the enemy of good. எவ்வளவு அழகான பாடம்.

எல்லோருக்கும் மிக சீனியரான எஸ் பூதலிங்கம் ஒன்றை சொல்லித் தருவாராம். இதைப் பாரு, நீ இப்படி மாற்றி செய்யலாம், புதிதா செய்யலாம் என ஆரம்பிச்சா , பாதி காங்கிரஸ் மந்திரிகள் நீ என்ன நேருவை விட பெரிய ஆளா என ஆரம்பித்து நம் வாயை மூட வைப்பார்கள். எனவே கொஞ்சம் நல்லது என செய்ய விரும்பினால், only by stealth. You had to say that you were continuing with the past, even if you were not

அதாவது நாம் எதையும் மாற்றவில்லை, அதை இப்படி செய்கிறோம் எனச் சொல்ல வேண்டும் என்பாராம் பூதலிங்கம். இவர் அக்காலத்தில் புகழ் வாய்ந்த தமிழ் எழுத்தாளர் கிருத்திகாவின் கணவர். மன்மோகன் இந்த பாடத்தையே நரசிம்மராவுடன் 191-92 களில் பாடினார் என்பதை நான் உணர்கிறேன்.

எமர்ஜென்சி இருந்த காலத்தில் அரசு அதிகாரிகள், இந்திரா தோற்றுவிடுவார் என்கிற எண்ணமே இல்லாமல் இருந்ததை மன்மோகன் சொல்கிறார். ஜனதா ஆட்சியில் பல அதிகாரிகள் மாற்றப்பட்டாலும், நிதி அமைச்சர் எச் எம் படேல் , மன்மோகனை தொடவேண்டாம் என்றார்.

மன்மோகன் இந்திராவிடம் நல்ல பெயர் எடுத்தவர், அவரின் செயலர் பி என் தாருடன் நெருக்கமானவர் என ஜனதா ஆட்சி நிதி அமைச்சர் படேல் அறிந்தாலும், மன்மோகனை வைத்துக்கொள்ள விழைந்தார். எச்

எம் படேலே நேரு கால டிடிகே முந்த்ரா ஊழல் விஷயத்தில் பாதிக்கப்பட்டு பதவி விலகியவர். எல்லாம் செயலர் செய்தது என அரசியல்வாதிகள் தப்பிக்க முயற்சி செய்வர். படேல் தன் கிராமம் சென்று, கிராமத்தலைவரானார். பெரும் intellectual க்கு அது நேர்ந்தது. ஒரு முறை அவர் மன்மோகனிடம் எனக்கு வெறுப்பு ஏதுமில்லை. நேரு செய்தாரே என அவர் மகள் இந்திராவிற்கு நான் ஏன் கெடுதல் செய்ய வேண்டும் என மனம் திறந்தார். வெவ்வேறு இடங்களில் அவரவர் அரசியல் காரணமாக இருந்த பலரிடம் மனிதம் செயல்படாமல் இல்லை என்கிற வாழ்க்கைப் பாடம் படிக்கலாம்.

அப்பா பிரதமர்கள் பற்றி அப்போது என்ன நினைத்தாய் என மகள் கேட்டார். இந்திரா என் வேலைகளில் திருப்தி அடைந்தார். என்னிடம் அன்பாக, கோபமே காட்டாமல் இருந்துள்ளார். மொரார்ஜியிடம் நான் இந்திரா மனிதன் என சொல்லப்பட்டதால் ஆரம்பத்தில் சரியாக முகம் கொடுக்காமல் இருந்தார். போகப்போக அன்பு காட்டலானார். விவாதங்களை செவிமடுத்தார். அவர் கடுமையானவர் போல் தோற்றம் காட்டினாலும், நியாயமானதை சொன்னால் ஏற்பவராக இருந்தார். சரண்சிங்கிடமும் இந்திரா மனிதன் என்ற எண்ணம் இருந்தது. ஆனாலும் அவர் ஒரு நாள் கையைப் பற்றி மன்மோகன் உன் மேல் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு என மனம் திறந்தார்.

என்னைப் பொறுத்தவரை அக்காலத்தில் நான் வேலை பார்த்த அமைச்சர்களில் சி எஸ் தான் ‘பெஸ்ட் ‘ என்றார் மன்மோகன்.கற்றாரை கற்றாரே...

அப்பா , அப்பவே ஊழல் தலைதூக்க ஆரம்பித்து விட்டதா என துணிந்து மகள் கேட்டார். பரவாயில்லையே, மன்மோகன் பதில் சொல்லிவிட்டாரே என இவ்வரிகளை கடந்தேன். தமன் தன் அப்பா சொன்ன வரிகளை இப்படி எழுதியுள்ளார்.

The political system needs money. This money cannot be raised in a legal manner. Elections become very expensive. Therefore political parties have to mobilise resources, and they do all sorts of things to do so. ..if a person collects so much money in the name of the party, who can say how much he gives to the party , how much he keeps for himself

இவ்வளவு வெளிப்படையாகவும் மனதில் பட்டதை சொல்லக்கூடியவரா மன்மோகன் எனத்தோன்றியது.

அதிகாரிகள் ரொம்ப ஒழுங்கா என கேள்வி வராதா? பல நேர்மையான திறமையான புத்திக்கூர்மையான அதிகாரிகளை தான்

பார்த்துள்ளதாக மன்மோகன் சொல்கிறார். சிறு சிறு சலுகைகளை விதிகளைத் தாண்டி அவர்கள் அனுபவித்தனர் என்கிறார். உயர் அதிகாரிகள் அப்போது அப்படி அவர் கண்ணுக்கு பட்டனரோ என்னவோ..சற்று விட்டுக்கொடுக்காமல் மன்மோகன் பேசினாரோ என தோன்றுகிறது.

மன்மோகன் மிக முக்கிய பாடத்தை ஆரம்ப ஆண்டுகளிலேயே கற்றார்.

I must say in all humility that I think I have become more and more humble about the limits of our knowledge…I must say there are layers of rationality other than those which are perceived in the textbooks of economists. There are compulsions which are no less real , simply because they do not figure in the textbooks of economists.

என்ன அருமையான பொறுப்பான தெறிப்பது.

சரி மனுஷன் குடும்ப நிகழ்ச்சிகளில் எப்படி..ஒட்டும் ஒட்டாமல்தான்..பட்டும் படாமல் தான். அப்பா கேட்டால் பணம் அனுப்பிவிட்டு அத்துடன் பொறுப்பு விட்டது என...தங்கைகள் திருமணத்தின் போது இழுத்துப் போட்டு ஏதும் செய்யவில்லை. தலையை காட்டிவிட்டு வேலை என கிளம்பிவிடுவார். பைல்களுடன் கூட வருவார்.

அம்மா மியுசிக் பைத்தியம் எனலாம். சுயமாக கற்றுத் தேர்ந்தவர். ரேடியோவில் கசல் பாடியவர். இசைத் தோழி கன்வால். அவரது ஐ ஏ எஸ் கணவரோ கன்வாலை அப்படி பாராட்டுவார். அம்மா உன் புருஷன் எப்படி என தமன் வம்பு கேட்டால், விடு தடுக்காமல் இருந்ததே போதும் என்பார் குர்சரண்.

இப்படி வேலை வேலை என வாழ்க்கையை பெருங்கடமையாக நகர்த்திப் பார்த்த நல்ல மனிதர் மன்மோகன் என்கிற குணச் சித்திரத்தை அவர் மகள் சொன்னதால் மட்டுமல்ல, நாமும் உணர முடியும்.

1-9-2025

sep 2

ராஜம் அவர்களின் சரிதை

பி ஆர் ராஜம் அய்யர் என்றால் கமலாம்பாள் சரித்திரம் என இலக்கியவாசிகளுக்கு உடன் ஞாபகம் வரும். தமிழ் நாவல் பாதை போட்டவருள் ஒருவர் என சிறக்கச் சொல்வர்.

பாரதிக்கு 10 வயது மூத்தவர் ராஜம். பாரதி வாழ்ந்ததைவிட 11 ஆண்டுகள் குறைவாக வாழ்ந்தவர். வசன நடையை ஆண்டு போனவராக ராஜம் தெரிகிறார். விவேகானந்தரைப் பார்த்தவர் ராஜம். அவரைவிட 9 வயது சிறியவர். அவர் மறைவதற்கு நான்கு ஆண்டுகள் முன்னரே ராஜம் மறைந்தவர்.

அ மாதவய்யா பத்மாவதி சரித்திரம் எழுதத் தொடங்கிய ஆண்டில் ராஜம் மறைகிறார். 1898ல் ராஜம் அவர்களுக்கு 26 வயது தான். கமலாம்பாள் எழுத ஆரம்பித்தது 21 ம் வயதில். மாதவய்யா கூட 43 ஆண்டுகள் (ஒன்றும் அதிகமில்லை தான்) வாழந்துள்ளார். மாயவரம் வேதநாயகம் பிள்ளை 63 ஆண்டுகள் வாழ்ந்தவர். தன் பழுத்த 53 ஆம் வயதில் அவர் பிரதாப முதலியார் சரித்திரம் எழுதினார். முதல் நாவல் என இலக்கியவாசிகள் அதைக் கொண்டாடி வருகின்றனர். மூன்று பேருக்கும் முன்னோடிகள் என்கிற அந்தஸ்தை இலக்கிய உலகம் தந்துகொண்டுதான் இருக்கிறது.

நான் இங்கு சொல்ல வந்தது 1909 ல் வெளிவந்த ராஜம் அய்யர் சரிதை என்கிற நூலைப் பற்றி. சரிதை என்பதாலும் 126 பக்க பிடிஎப் என்பதாலும் வேகமாக போக முடிந்தது. 26 வயதிற்குள் இவ்வளவு பேரறிவா தீட்சண்யமா பிரமிக்க வைக்கிறார், அந்த 19 ம் நூற்றாண்டு இளம் அறிஞர். காலத்தால் முந்திய மனிதர்.

கமலாம்பாள் சரித்திரம் கூட அதன் பிற்கூற்று சுபம் அடைய 300 பக்கங்களைத் தொட்டது. மெதுவாகத்தான் படிக்க வேண்டியிருந்தது. அதிலும் ஏராள தெறிப்புகள் உண்டு.

ராஜம் சரிதை எழுதியவர், 1909ல் மைலாப்பூர் பி எஸ் ஹைஸ்கூல் ஆசிரியராக இருந்த ஏ எஸ் கஸ்தூரிரங்கய்யார்.

நூல் பிறப்பு வளர்ந்தது படித்தது பற்றிப் பேசுகிறது. வழக்கம்போல் அப்பாவின் கவலை. குழந்தை மண வாழ்க்கை. நாஸ்திக நெடியுடன் பையன் எனக் குடும்பம். சாதி ஆசாரங்கள் ஏன் தான் இந்த பிராம்மணர் ஏற்படுத்தி பாழ்படுத்தினாரோ என்கிற விசாரணை எல்லாம் ராஜம் அவர்களிடத்தில் ஆரம்பத்தில் இருந்தது.

வாழ்க்கை பல விளையாட்டுக்களை மனிதரிடம் நிகழ்த்திக்காட்டும். ராஜத்தால் சட்ட படிப்பில் தேறமுடியாமல் போனது. எல்லாம் மாறியது. மனம் வாடிச் சோர்ந்தது. எதில் மேலும் பற்று போனது. போதும் போதாமைக்கு சந்நியாசினி அம்மையார் உபதேசங்களில் மனம் ஒன்றியது. அவர் விரும்பியே உபதேசங்களைக் கேட்டார். ஆனால் அமைதியாக வந்து போவார்.

சந்நியாசினி அம்மாள் போனபின்னர், சாந்தானந்த ஸரஸ்வதி சுவாமிகள் என்கிறவர் ராஜம் அவர்களின் குருவானார். ஆரம்பத்தில் குருவிடம் போதிய ஞானமில்லையோ என அவர் அய்யப்பட்டார். பழக விவாதிக்க அவரிடம் முழுமையாக சரணாகதியானார். ராஜம் உடல்நிலை கவலைக்கிட செய்தி கேட்டு குரு சுவாமி ராஜம் அவர்களைப் பார்க்கப்போனார். ராஜம் அப்போது பாத பூஜை என எழப்பார்த்தார். மனசுக்கு மனசே சாட்சி. அமைதியாக இரு. உன் குரு நேசம் நான் அறிவேன் என்றாராம் சுவாமிகள். குருவிற்கு அவர் பழகிய நாட்களில் அப்படி பாதபூஜை செய்ததில்லை என்கிற செய்தியையும் கஸ்தூரி தருகிறார்.

வேர்ட்ஸ்வர்த்,ஷெல்லி, டெனிசன், கம்பர், தாயுமானவர், சாக்ரடிஸ் பிளாட்டோ அரிஸ்டாட்டில், ஷோபன்ஹர் போன்ற மேற்கு சிந்தனையாளர் பலர் உள் புகுந்தனர். அவர் 26 வயதிற்குள் (அதில் இரு ஆண்டுகளுக்கு மேலாக படு உடல் உபாதை அவஸ்தைகள்) அறிந்த சிந்தனை சாலை பிரமிக்க வைக்கிறது. வேதம் உபநிடதம், கைவல்ய நவநீதம் என முழு கவனம் போனது. அநுபூதி நூல்கள் உள் நுழைந்தன.

அமெரிக்கா செல்ல வேண்டும் என்கிற ஆசை அறுந்தது. விவேகானந்தரை நண்பர்கள் சந்திக்க வைக்கின்றனர். இவ்வளவு ஞானஸ்தனை சும்மா விடாதீர்கள் எழுத வையுங்கள் என அவர் வழியும் சொல்லிச் சென்றார். பிரபுத்த பாரதம் பத்திரிகையில் ராஜம் எழுதி குவித்தார். அவர் மறைந்தவுடன் பத்திரிகையே நின்றது. விவேகானந்தர் முன் முயற்சியால் கல்கத்தாவில் ராஜம் எழுதி வைத்து போனவை தொடர்ந்தனவாம். எழுதியவற்றை தொகுத்து 900 பக்கங்களுக்கு ஆங்கில நூல் வந்தது என்கிறார் சரிதை எழுதிய கஸ்தூரி.

விவேக சிந்தாமணி இதழில் தான் ராஜம் 'ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்'என்கிற கற்பனைகதையை தொடராக எழுதினார். எழுதி குவித்த காலத்தில் பொதுவாக எவர்

கண்ணிலும் அவர் படுவதில்லையாம். எப்போதும் பத்திரிகை அலுவலகத்தில் இருந்தாராம்.

திருவல்லிக்கேணியிலிருந்து வந்த பிரம்மவாதினி என்கிற ஆங்கில இதழுக்கு தெரிந்த நண்பர்கள் எழுத வேண்டினர். ஏன் உன் ஞானத்தை வெளிப்படுத்தாமல் அமைதியாக பித்து நிலையில் இருக்கிறாய் என அவர்கள் எடுத்துச் சொல்ல, சரி என ஒரு வியாசம் ஆங்கிலத்தில் எழுதிக்கொடுத்தார். Man His Littleness and Greatness- அதன் தமிழ் தலைப்பு 'மனிதன் தாழ்வும் ஏற்றமும்'. அதை கஸ்தூரி இந்நூலில் இணைப்பாக தந்துள்ளார். அந்த ஒரு கட்டுரை போதும் என எனக்குத் தோன்றியது. என்ன மனுசய்யா அவர் , அந்த சிறு வயதில் எவ்வளவு விஸ்தீர வாசிப்பு என அசந்து போனேன். என் 25 வயதில் நான் எவ்வளவு மக்காக இருந்தேன் என என் மனம் வேறு சுட்டலானது.

பெரும் ஞானஸ்தர்களை என்ன அவசரமாக காலம் முடிக்க வைக்கிறது. அதனால் தான் அவர்கள் அவசர அவசரமாக உலகை உள்வாங்க முயற்சித்தனரோ எனத் தோன்றுகிறது.

ராஜம் கொடுத்த 'வியாசத்தை' முதலில் ஏனோ அவர்கள் பிரம்மவாதினியில் போடவில்லை. பிறகு சாவதானமாக இதழை நிரப்ப ஏதாவது எனத் தேடிய நேரத்தில் அதை எடுத்துப் போட்டனர். ஏகப் பாரட்டல்களால் பின்னர் அவர்கள் திக்குமுக்காடினர்.

மயிலை பிரபுக்கள் சிலர் அப்போது தியோசபிக்கல் சொசைட்டிக்கு ஆதரவாக இருந்தனர். அவர்களுக்கு இந்தியர் எவராவது இந்து மதம் பற்றி சிறப்பாக சொன்னால் ஆதரவுண்டு எனச் சொல்லி வந்தனர். அப்படி வந்தவரே அச்சுவாமிகள். பின்னர் ராஜம் பழக்கம் பிரபுக்களுக்கு ஏற்பட்டு அவரின் ஞானத்தில் சொக்கினர்.

பிரம்மவாதினிக்கு சென்று பிரபுக்கள் ராஜம் பற்றிக் கேட்டனர். அவன் பித்தன் அய்யா என்றே செய்தி கிடைத்தது. வீடு தேடி வந்து பேசியதில் பெரும் புத்திமான் என அறிந்தனர்.

சுவாமிகள் அனுபவத்தையெல்லாம் கமலாம்பாளில் ராஜம் கொணர்ந்திருப்பார். விவேகானந்தர் விஜயத்தின் போது சுவாமிகள் பற்றியும் அவரது உரைகளை சிறப்பாக சொல்ல இதழ் வேண்டும் என்ற பேச்சும் வந்து பிரபுத்த பாரதம் - விழிப்படைந்த இந்தியா கொணரப்பட்டது.

சுத்த மனதுடன் நாங்கள் அறிய வந்தவற்றை வேறு சிலருக்கும் எடுத்துக்கொடுக்கவே இப்பத்திரிகை என ராஜம் எழுதினார். 1500

சந்தாக்கள் பெரிய விஷயம். ராஜம் தன் எழுத்து நேர்த்தியால் இரண்டே ஆண்டுகளில் 4500 என பத்திரிகையை விரிவடைய வைத்தார். எத்தனையோ தெறிப்புகள், முத்துக்கள் அவற்றில் என கஸ்தூரி சிலவற்றை என் போன்றவர்க்கு இந்நூலில் தரவும் செய்துள்ளார். ஏரால சிறுகதைகள், மௌனியின் மனம், புராண கதைகள் என பல சேர்த்து அவர் எழுத்து வந்ததாம். உண்மை உயர்வு அல்லது வாசுதேவ சாஸ்திரி என்கிற கதையை கஸ்தூரி குறிப்பிட்டு சொல்கிறார்.

ராஜம் மறைந்தபோது பிரபுத்த பாரதம் இப்படி சொன்னது

நாங்கள் சம்பாதிக்க தொடங்கவில்லை. எளிய நடையில் வேதங்களையும், உண்மைகளையும் கொண்டு செல்லவே தொடங்கினோம். பத்திராதி ராஜம் அய்யர் இறந்துவிட்டபடியால், எம்முள் அவரைப்போல ஒருவர் உண்மையை எடுத்துச் சொல்லி நிலைபெற செய்யமுடியாமையால்- பத்திரிகை நிறுத்த சந்தாதார் அனுமதிக்க வேண்டும் என வெளியிட்டனர். ஒருவர் போனதால் பத்திரிகையே 4500 அளவில் 1890 களில் போன இதழே நிறுத்தக்கூடிய அளவு ராஜம் அய்யர் உயர்ந்து நின்றுள்ளார் என அறிகிறோம்.

ராஜம் மறைந்த 8 ஆண்டுகளுக்கு பின்னர் மயிலை தன் வந்தர்கள் அவரது எழுத்தை வேதாந்த உல்லாஸம் என தொகுப்பாக கொணர்ந்தனராம். அது பெரிய புத்தகம் என்கிறார் கஸ்தூரி. கஸ்தூரி அத்தொகுப்பு வர உழைத்தவரும் கூட. Rambles in Vedadta by B R Rajam Iyer being a collection of his contributions to The Prabuddha Bharata 1896-98 என்று ஆங்கிலத்தில் வந்த அந்நூல் 900 பக்கங்களில் இணையத்தில் இருக்கிறது. நான் வாசிக்கவில்லை. அதற்கு முன்னுரை எவர் பெயரும் போடப்படாமல் 1905 மதராஸ் என போடப்பட்டிருக்கிறது. Mr Rajam Iyer died as Martyr to his philosophy என்கிற வரியை அதில் புரட்டும் போது கண்டேன்.

குடும்பத்தில் மனைவியிடம் தனக்கு துறவு மனம் இருப்பதை காட்டிக்கொள்ளாமல் இருந்துள்ளார் ராஜம். 1896 முதல் குடற்சிக்கல் அவதியால் இருந்த அவரை துணைவியார் கவனித்துக்கொண்டார். பிரபுக்கள் சிகிட்சைக்கும் உதவினர். அவருக்கு உடல் முழுதும் வீங்கின.சிறுநீர் வெளியேறா நிலை. அவ்வப்போது தேறினாலும், தன் உழைப்பின் அயர்வாலும் அவர் உடல் சோர்ந்தது. சாவை கண்ணியமாக வரவேற்கும் மனோதிடம் அவரிடம் அதிகமானதை நண்பர்கள் கண்டனர் என கஸ்தூரி சொல்கிறார். 1898ல் தூக்கமில்லா அவதி , மே 13 அன்று மரணத்தை ராஜம் அதிபால்ய வயதில் கண்டார்.

அவர் ஏப்ரலில் கூட பத்திரிகைக்கு எழுதியுள்ளார். அதில் எழுதப்பட்ட வியாசம் வேதாந்தமும் சக்கரவர்த்தி பெருமானும் என்பது அரசாங்கத்திற்கு விரோதமாக இருக்கிறது, ராஜத்தை விசாரிக்க வேண்டும் என போலீசார் , அவர் மறைந்த இரு நாட்கள் கழித்து வந்து, அவர் போயே போய்விட்டார் என அறிந்தனர். சக்கரவர்த்திகள் போய்த்தான் ஆகவேண்டும் என அவர் எழுதியிருந்தாராம்.

ராஜம் அவர்களின் படைப்பு மொழி, சிந்தனா மொழி குறித்து இந்நூல் நிறைய பேசுகிறது. மாதிரிக்கு நான் இங்கு ஓரிரண்டை தருகிறேன்.

" நமக்கு கடவுள் விளையாடக் கொடுத்திருக்கிற ஸாமான்களைப் பாருங்கள்! மரங்கள், நதிகள், மேகங்கள், ஆகாயம், நட்சத்திரங்கள். நமக்கு என்ன குறைவு. நாம் அனுபவிக்க பிறந்தவர்கள். அனுபவிக்கும் சக்தியையும் கொடுத்து, ஸ்லபத்தில் கிட்டாதபடி பலமான தடைகளையும் செய்துள்ளார்... அய்யோ இவ்வுலகம் செய்கிற சந்தடி, அற்ப சந்தோஷங்கள், அற்ப சண்டை சச்சரவுகள் நம்மை கழுதையாக்கி விடுகின்றன"

" மனதைக் கொல்ல துணிதல் ஆழமான் குழியைப் பறித்து அதனுள் நமது நிழலைமூடிவிடத் துணிவதற்கு ஸமானம். எவ்வளவு ஜாக்கிரதையாக நமது நிழலை மூட முயன்றாலும் எப்போதும் நாம் போடும் மண்ணிற்கு மேலேயே நிற்கும்..மனதை வெகு தந்திரமாக சாவதான வழிகளில் அடக்க வேண்டும்..."

"செத்தாரைப் போல திரி என்றார் பட்டினத்தார்..உயிருள்ள காலத்திலேயே எவன் செத்தாரைப் போலிருக்கிறானோ, துக்கத்திலிருந்து விடுபடுகிறானோ அவனே மரனம் அடைய யோக்கியனாவான்"

" நம்முடைய திருப்திக்காக இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டிருப்பது போல காணவில்லை. உலகத்தில் நடப்பதெல்லாம் நம்மை கேட்டுக்கொண்டா நடக்கிறது? ..."

" நாளை வரும் நெல் குவியலிலும் இன்றுள்ள பிடி விதை பெரிது என்கிற .. ஜாதியாரைப் போல வாழ.."

"மூட நம்பிக்கைகள் படிப்பில்லா அஞ்ஞானிகளிடம் தான் காணப்படும் என்பதே ஒர் மூடநம்பிக்கையாகும். படித்தவர்களது மூட நம்பிக்கை.. அதிகேட்டை விளைவிக்கக் கூடியது"

" பக்தியால் ஒருவன் தொழில் செய்வதால் அவனின் ஆத்மசக்தி வெளியாகிறது. வருவன கூறல், அற்புத மருந்துகள், உண்மை வாக்கியங்கள், மெய் மறந்து கூறல் போன்றவை எதேச்சையாக உருவாகும்...அவர்களுக்கு தங்கள் வாக்கு உண்மையாக வேண்டுமே என்கிற கவலை இருப்பதில்லை"

வேதாந்தம் என்றால் விவேகானந்தர் என உள்வாங்கிய தமிழ் பொதுபுத்தி, தமிழர் ஒருவர் அது குறித்து 1890 களில் பக்கம் பக்கமாக எழுதிப் போயுள்ளார் எனக் கூட அறியாத பொதுப் புத்தியையும் சேர்த்தே வைத்துள்ளது போலும்.. பாரதிக்கு 10 வயது மூத்தவர் ராஜம். பாரதி வாழ்ந்ததைவிட 11 ஆண்டுகள் குறைவாக வாழ்ந்தவர். வசன நடையை ஆண்டு போனவராக ராஜம் தெரிகிறார்.

எப்படிப்பட்ட தெறிப்பான சிந்தனைகள் மொழிக்கனத்துடன் நல்ல நடையில் அந்த இளம் ராஜம் அவர்களிடமிருந்து.. பிரமிக்க வைக்கும் மனிதர்கள் வாழ்ந்து மறைந்த தமிழ்நாடு. அவர்கள் உள்ளொடங்கி வெளித்தெரியாமலும் போன நீட்சிகள்...

1-9-2025

sep 3

மிகப் பெரும் பொறுப்பில் தோழமையும் உரசல்களும்

மன்மோகனுக்கும் பிரணாபிற்கும் இடையே தோழமை நட்புகளும், முகம் கோணக்கூடிய திரிபுகளும் இருந்தன. பிரணாப் அரசியலில் ஊறித்திளைத்து இந்திரா நிழலில் தன்னை வளர்த்துக்கொண்டவர். முழுமையான அரசியல் , கட்சி , தனது பதவி போன்ற இலக்கணத்துடன் ஆட்டம் நடத்தியவர். கடுமையான உழைப்பாளி. தீவிர வாசிப்பாளியும் கூட. எங்கு என்ன செய்ய வேண்டும் என்கிற சாதுர்யமானவர்.

மன்மோகன் தன்னை முன்வைத்துக்கொள்ளாத, சூழலை உணர்ந்து எடுபடக்கூடிய வகையில் தன் ‘அதிகார தட்டு பாஸ்களுக்கு ‘ கருத்தைச் சொல்லி உரையாடி வளர்ந்தவர். அரசியல் கட்சி இலக்கணங்களில் தோயாமல், அரசாங்கம் என்றால் என்ன, அதிகாரியாக அரசியல் பாஸ்களிடம் எப்படி நடக்க வேண்டும் என அறிந்து வளர்ந்தவர். அவர் நிதியமைச்சராக, பின்னர் பிரதமராக காங் தலைவர்களை நம்பியிருந்தவர். நம்பிக்கைக்கு பாத்திரமாக தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பில் மன சாட்சியை துணைக்கு வைத்து வாழ்ந்தவர்.

பிரணாப் 1982 லேயே இந்திராவால் நிதி அமைச்சர் ஆக்கப்பட்டவர். அவர்தான் மன்மோகனை ரிசர்வ வங்கி கவர்னர் ஆக்கும் உத்தரவைப் இந்திரா சொல்படி போட்டவர். மன்மோகனின் திறமை இந்திராவிற்கு பிடித்து இருந்தது. நரசிம்மராவ் காலத்தில் 1991-92 ல் பெரும் மாற்றங்களை உருவாக்க வேண்டிய கடமையுடன் மன்மோகன் நிதி அமைச்சராக்கப்பட்டார். பிரணாபோ திட்டக்குழுவிற்கு அனுப்பப்பட்டார்.

மன்மோகன் சோனியாவின் நம்பிக்கைக்குரியவர் என்பதால் பிரதமர் ஆக்கப்பட்டார். பிரணாபிற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. தான் உத்தரவு போட்ட பழைய அதிகாரி, இப்போது பிரதமர், அவருக்கு கீழே என்கிற உளவியல் சிக்கலுக்கு பிரணாப் உள்ளாகியிருக்க வேண்டும். எவருக்கும் இந்த சிக்கல் எழும். பிரதமர் சிந்திக்க தெரிந்தவர், நேர்மையானவர் என்றால் , அவர் அரசியல் விஷயங்களை விட ஆட்சி விஷயங்களில் கவனம் செலுத்துபவர் என்றால், இந்த உளவியல் கூடும். மன்மோகன் அடிக்கடி சொல்லும் the best is enemy to good தொழிற்படும்.

ஷர்மிஸ்தா தன் நூலில் அப்பா பிரணாபிற்கும், மன்மோகனுக்குமான ஏற்ற இறக்க உறவுகள் குறித்து கொஞ்சம் எழுதியுள்ளார். பிரதமரை புறக்கணிக்கிறாரோ பிரணாப் என்கிற எண்ணம் பேச்சு வராமல்

இல்லை. மன்மோகன் பிரணாபை சந்திக்கும்போது சகஜமாக நடந்துகொள்ளாமல் ஏன் இப்படி என்கிற எண்ணம் அப்பாவிற்கு. யார் என்ன போட்டுக்கொடுக்கிறார்களோ என பிரணாப் அடிக்கடி சொல்லும் நிலை. சோனியாவிடம் சென்று விலகிவிடுகிறேன் என புலம்பும் நிலை. சோனியாவின் சமாதானம் அவரை நிலைக்க வைத்தது.

மன்மோகன் பிரணாப் இருவரும் ஒருவரை ஒருவர் பொதுவெளியில் மிகுந்த மரியாதையுடன் சொல்லக்கூடிய பாங்கு. இருவரும் தீவிர உழைப்பாளிகள் என்பதை உணர்தல். தேர்ந்த சிந்தனை உரையாடல் நிரம்பியவர்கள். வேறுபாடுகள் அன்றாட நிகழ்வுகளாக இருந்தாலும், handling differences in a matured way அறிந்தவர்கள் என்கிற வகையில் குறைந்த மனக் காயங்களுடன் அவரவர் பொறுப்பை செய்தவர்கள்.

ஒருவர் உடல்நிலை குறித்து மற்றவர் மிக கரிசனத்துடன் நடந்துகொண்டவர்கள். அவரவர் role காரணமாக உறவோ வேறுபாடோ என முடிந்தவரை எதையும் personal ஆக எடுத்துக்கொள்வதை தவிர்க்க முயற்சித்தவர்கள்.

அப்பா மன்மோகன் சிங் பற்றி பேசும் போதேல்லாம் 'ஜெண்டில்மேன்' என்கிற பதத்தையே பயன்படுத்தி தான் பார்த்ததாக ஷர்மிஸ்தா எழுதுகிறார்.

பிரணாப் டைரி குறிப்பு ஒன்று இப்படி..

It was not necessary for them to always be in agreement. You do not need to agree on everything every time..under high pressure conditions, there were bound to be differences. Nothing unusual about it. But differences do not mean conflict. (We) knew how to handle the differences

இது நம் அனைவருக்குமான பாடமும் கூட.

ஒருமுறை மன்மோகன் பாகிஸ்தான் உறவு மேம்பட எடுத்த இருதரப்பு தீர்மானம் குறித்து கடும் சர்ச்சை காங்கிரசில் வந்தது. மன்மோகன் மீது விமர்சனங்கள் வந்தன. மன்மோகன் , நாட்டின் சூழல் அமைதியாக இருந்தால்தான் பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்த முடியும் என உறுதியாக இருந்தவர். அண்டை நாடுகளுடன் நல்லுறவு எனக் கருதியவர். அகமது படேல் போன்றவர், காங்கிரஸ் தலைமையை கலந்து பேசாமல், பிரதமராக அவர் முடிவுகளை எடுக்கக்கூடாது என அவரிடம் சொல்ல வேண்டும் என பேசலாயினர். 'PM - pre consultation' செய்தாக வேண்டும் எனச் சொல்லக்கூடாது என பிரணாப் அறிவுரை தந்தார். We cannot denigrate the office of PM. We should not as party distance

ourselves in the parliament also என பிரதமர் பதவிக்கான குணத்தை வீழ்த்திவிடக்கூடாது என அந்த institution மீது இருக்க வேண்டிய மரியாதையை எடுத்து வைத்தார் பிரணாப்.

பிரணாப் கார் விபத்தில் சிக்கி airlift செய்யப்பட்டு டெல்லி கொணரப்பட்டபோது, பிரதமர் என்கிற புரோட்டகால் பார்க்காமல், தனது சீனியர் சகாவை நேரடியாக ஏர்போர்ட்டில் சென்று பார்த்தவர் மன்மோகன்.

பிரணாப் குடியரசுத் தலைவர் ஆன பிறகு 2013ல் காபினட் செயலரை அழைத்து மன்மோகனுக்கு பாரத் ரத்னா தருவது மிக உகந்தது என்கிற தன் மனக்கிடக்கையை வெளியிட்டார். இந்திய பொருளாதாரத்தை உலகமே வியக்கும் வண்ணம் தூக்கி நிறுத்தியவர் எனப் பாராட்டி சொன்னார். என்ன ஆனது. அது proposal வடிவம் எடுத்ததா என ஷர்மிஸ்தா இதில் குறிப்பிடவில்லை. ஆனால் டெண்டுல்கருக்கு பாரத் ரத்னா கிடைத்தது என சூசகமாக சொல்லிச் செல்கிறார்.

மனித வாழ்க்கை போட்டி பொறாமை அசூயை கோபதாபங்கள் நிறைந்த ஒன்றுதான். சமாளிக்க முடிகிறதா, அல்லது வெறுப்பால் நம்மையும் பிறரையும் பொசுக்கி அமைதி இழக்கிறோமா என்பது பெரிய ‘லிட்மஸ் டெஸ்ட்’. இதில் பல பெரிய மனிதர்கள் கூட தேறி நிற்பது சவால் தான். நின்றவர்கள் நமக்கு பாடமாகிறார்கள்.

அன்பில்லா மனித மனம் என்பதும் கூட அபூர்வமானது. உறவுகளை பேணுவது எளிதான கலையல்ல. அதுவும் அமைப்புகளில் கரங்கள் குவிவதும் நம் கால்கள் வீழ்வதும் சகஜமானவை. வேறுபாடுகளுடன் கூடிய பரஸ்பர மரியாதை, தோழமை பெரும் கலை..

மன்மோகனும் பிரணாபும் முயற்சித்து பார்த்தனர் என புரிந்து கொள்கிறேன்...

3-9-2025

sep 4

It is heartening to note that BSNL employees' recognised unions have been trying their level best to bring some understanding with the management and to initiate some joint recommendations through wage revision committee.

This may be a first step, and many steps within BSNL are there to process and conclude the same with formal agreement. That stage is possible only after DOT's approval of the Joint Recommendations of the wage committee and its submission through BSNL Board.

Unions may feel sad about the pay scales suggested by BSNL which may cause stagnation again. Stagnating and standing on 2nd PRC scales or entering to 3 rd PRC scale and stagnating there- is the vital question, need to be addressed by the employees. I hope employees would understand the most unfriendly DPE orders, not favouring any settlement in loss making PSUs.

Happy to see that the unions raised concern about the Pay scales. But insisting to get assurance connecting that with 4 th PRC may become a problem, according to my limited experience in the TU movement. Nobody knows what will happen to 4 th PRC today and it is difficult for this wage committee to give any assurance about the future wage committee. If the unions succeed , then I will also appreciate. For signing joint recommendations, if it becomes a condition, I feel differently.

Fine to see the wisdom of leaders, instead of harping too much on fitment issue, they agree to get for Non Executives the same fitment of that of Executives, as and when decided by the authority concerned, here DOT.

Regarding stagnation increments, there are rules guided by DPE. I feel management implement that only and may refuse to go beyond that. This point should also to be taken into account before putting this as condition to sign the recommendations.

I hope BSNL unions may try to bring the mutually agreed joint recommendations this time. Employees should understand the integrity of the leaders and give their helping hand to clinch the deal in the wage committee. The unions are bringing some accord in the environment of the most unfriendly DPE orders .

Good wishes to them.

DOT has to take some initiative to settle the wage revision of Executives as per the DPE scales. Then only the issue of NE wage settlement will find its implementation. Hoping the best..

4-9-2025 R. Pattabiraman

sep 6

பிரணாப்- ஷேக் ஹசினா

வங்க தேச ஷேக் ஹசினா, பிரணாப் குடும்பத்தின் நெருக்கமான தோழி. வங்க விடுதலைக்கு பின்னர் முஜிபுர் குடும்பமே படுகொலையானது. அதில் தப்பிய சகோதரிகள் இருவருள் ஹசினா ஒருவர்.

அந்த துயர் நிறை ஆபத்துக் காலத்தில், தன் வீட்டில் தங்கவைத்து பாதுகாப்புடன் அவரை காப்பாற்றியவர்கள் பிரணாப் குடும்பத்தினர். கீதா முகர்ஜி, ஹசினாவை தன் தங்கை என்றே அறிமுகப்படுத்தினார். ஹசினாவும் அக்கா என்றே அழைக்கலானார். ஹசினா பின்னர் வங்கத் தலைவராகி பிரதமராக புகழ் பெற்றார். இன்று அவர் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது தனிக் கதை.

பிரணாப் மகள் புகழ் வாய்ந்த ' டான்சர்' ஷர்மிஸ்தாவிற்கு டாக்காவில் நிகழ்ச்சி ஒன்று இருந்தது. ஷர்மிஸ்தா நிகழ்ச்சி பற்றி அறிந்த ஹசினா , அவள் எங்கும் போய் தங்கக்கூடாது, பிரதமர் வீட்டில் தான் தங்க வேண்டும் என தொலைபேசி உரையாடலில் சொல்லிவிடுகிறார். கீதாவும் ஹசினாவிற்கு பிடித்த புடவைகள் உட்பட பரிசுகளை ஷர்மிஸ்தாவிடம் அனுப்புகிறார். ஆனால் பல 'புரோட்டகால்' நடவடிக்கைகளை சமாளிக்கவேண்டும். எல்லாம் எளிதாக்கப்பட்டு ஷர்மிஸ்தாவும் பிரதமர் ஹசினா வீட்டில் ஒதுக்கப்பட்ட அறையில் தங்க வைக்கப்படுகிறார்.

பிரதமருக்கு ஏராள நிகழ்ச்சி நிரல்கள் இருக்கும் என அறிவுரை சொல்லி அப்பா பிரணாப் எச்சரித்து அனுப்புகிறார். இரவில் ஷர்மிஸ்தா அறைக்கு ஹசினா ஏராள பரிசுகளுடன் வருகிறார். இவையெல்லாம் வங்கத்தில் நெய்த அற்புத சேலைகள். பிடித்ததை எடுத்துக்கொள் மகளே என வாஞ்சை தழுவ அணைத்துக்கொள்கிறார். நாளை உனக்கு shopping ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தா ரூபாய், வேண்டுவதை வாங்கிக்கொள் என்கிறார் ஹசினா. அத்தை இப்போது எனக்கு வயது 45, குழந்தையில்லை என ஷர்மிஸ்தா. வங்கத்தில் வீட்டிற்கு வரும் விருந்தினர் எவருக்கும் ரூபாய் கொடுக்கும் வழக்கம் உண்டு. அதைத்தான் ஹசினாவும் செய்தார். கண்கலங்கியபடி ஹசினா மகளே,உன் அம்மா அப்பா அன்று என்னை காப்பாற்றாவிட்டால், இந்த வாழ்க்கை எனக்கு எப்படி சொல். நீ என் மகள் போன்றவள். தட்டாமல் வாங்கிக்கொள் என்று கொடுத்தார். எவ்வளவு அதிகாரம் இருந்தாலும், மனதில் ஈரமும் இருக்கும் என்கிற பாடம் நமக்குக் கிடைக்கலாம்.

ஆனால் அது சுரக்க வேண்டிய நேரத்தில், சுரக்க வேண்டியவர்களிடத்தில் மட்டுமே சுரக்கும் எனவும் எடுத்துக்கொள்ளலாம்.

பிரணாப் நிதி அமைச்சராக இருந்த காலத்தில் , பிரதமராக ஹசினா இந்தியா வந்தார். வீட்டிற்கு வர வேண்டும் என்றார். புரோட்டகால் படி அது சரியல்ல, அப்பாயிண்ட்மெண்ட் நேரத்தில் கீதாவும் குழந்தைகளும் வந்து பிரதமரை பார்க்கலாம் என்றார் பிரணாப். அட போங்கண்ணா (dada என ஹசினா அழைப்பார்), என் கீதாவைப் பார்க்க என்ன புரோட்டகால் எனச் சொல்லி ஹசினா வீடு தேடி சென்று கீதாவிற்கு தான் கொணர்ந்தவற்றை தமக்கையாக கொடுத்து வந்தாராம்.

2012ல் இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் பிரணாப் முகர்ஜி என்றது. பிரணாபிற்கோ தன் 18 மணிநேர அரசியல் வாழ்வு என்னவாகும் என்கிற கவலை. மன்மோகனை போட்டுவிட்டு தன்னை பிரதமர் ஆக்கக்கூடாதா என்கிற கொஞ்ச சபலமும் கூட சஞ்சலமாக மனதில்.. அகமது படேல் போன்றவர் அப்படி செய்யலாம் என சோனியா காதில் போடவும் செய்தனர். சோனியா இல்லை, பிரணாப் குடியரசு தலைவராகட்டும் எனச் சொல்லிவிட்டார்.

மமதா முலயாம் இருவரும் ஆரம்பத்தில் எதிர்த்தனர். சரத் பவார், பால் தாக்கரேவை பாருங்கள் என பிரணாபிடம் சொன்னார். சோனியா எதற்கு எனக் கேள்வி எழுப்பினார். பம்பாய் சென்ற பிரணாப் தாக்கரேவைப் பார்த்து ஆதரவு கோரினார். பின்னால் சரத்பவார் சிவசேனா காங்கிரஸ் என்கிற அரசியல் கூட்டு உருவானதற்கான விதை என இதை வர்ணிப்போரும் உண்டு.

பிரணாப் 30 ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரசின் ஆக உயர் CWCல் இருந்தவர். அதை விட்டு பிரிவது மிக துக்கமான ஒன்றாக அவர் கருதினார். அவரை நல்ல வார்த்தைகள் சொல்லி வழி அனுப்பினர். பிரணாபும் ஜூலை 25,2012ல் குடியரசு தலைவராக பதவியேற்றார்.

மாளிகை விருந்தில் வந்திருந்த ஷர்மிஸ்தாவின் அத்தைகளுக்கு, அதன் பிரம்மாண்டம் வியப்பைக் கூட்டியது. சாப்பாட்டு விருந்தில் எதை முதலில் சாப்பிடுவது எப்படி சாப்பிடுவது என முழிக்க வேண்டியிருந்தது. ஷர்மிஸ்தா அத்தை, என்னடி என அவரிடம் காதோரம் கேட்க, கையால் சாப்பிடு அத்தை என்றார் ஷர்மிஸ்தா. அது எப்படி தப்பா போகாதா எனக் கேட்க, குறிப்பால் உணர்ந்த பிரணாப், பொது அறிவிப்பை கொடுத்தார். அவரவர் வசதிப்படி பிடித்ததை

கையால் எடுத்தும் சாப்பிடலாம் என்று. அப்பா பெரிசுகளிடம் பெருமூச்சு.

என்ன சாப்பாட்டில் எல்லாம் புரோட்டகாலோ.. ஷர்மிஸ்தா இங்கே எப்படி இருக்கப் போற , ஓர் அத்தை. திரும்பின இடமெல்லாம் மிலிட்டரிகாரன் சல்யூட் அடிக்கிறான். நம்மள யாராவது பார்த்துக்கொண்டே இருப்பது போல இருக்கே...நான் ஏன் அத்தை இங்கே, எங்க 3 BH வீட்டிற்கு நான் போய் விடுவேன். அப்பா அம்மாவிற்கு யார் துணை? அதெல்லாம் அவர்கள் பாடு அத்தை என ஷர்மிஸ்தா. ஆனால் ஷர்மிஸ்தா கூட வந்து அங்கு இருந்தது தனிக்கதை.

பிரணாபின் விருந்தினர்களை உபசரிக்கும் பொறுப்பு, வெளிநாட்டு பயணங்களில் செல்ல வேண்டிய வாய்ப்பு ஷர்மிஸ்தாவிற்கு கிடைத்தது. அப்பாவுடன் போன அந்த நாட்களை ஷர்மிஸ்தா தன் நூலில் சொல்கிறார்.

2014ல் காங்கிரஸ் தோற்று மோடி பிரதமர் ஆகிறார். பிரணாபின் 16 மே 2014 டைரி குறிப்பு இவ்வாறு இருந்ததாம்

We shall have to see how this new man Modi emerges. Stability of the government is assured, but what about social cohesion? I am really worried “

மன்மோகன் சிங் தன் பிரதமர் பதவி விலகலை கொடுக்க குடியரசுத் தலைவர் பிரணாபிடம் வருகிறார். பிரணாப் மன்மோகனின் மகத்தான பங்களிப்பிற்கு நன்றி சொல்லி பாராட்டுகிறார். மன்மோகனும் நாம் 30 ஆண்டுகள் பழகியவர்கள். பிரதமராக இருந்த காலத்தில் கொடுத்த ஒத்துழைப்பிற்கு நன்றியை தெரிவித்தார். Farewells are always sad என இருவர் கண்களும் பேசி சமாளித்தன. புரோட்டகாலை மீறி , மன்மோகனை அவரது கார் இருக்கும் இடம் வரை சென்று கரம் குவித்து வழியனுப்பிய மரியாதையை பிரணாப் செய்ததையும் காண்கிறோம்.

இந்திய அரசியல் சூதுவாது, பொறாமை பொச்சரிப்பு, துரோகம் காலைவாரல் என்கிற ஈன குணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, மிக உயரிய நாகரீக பண்புகளையும் காட்டாமல் இல்லை. நாம் தேடிச் சொன்னால் அந்த மேலான குண தரிசனங்களும் கிட்டாமல் இல்லை என உணர்கிறேன். மனிதன் அன்பானவனும் கூட...

6-9-2025

sep 6

BSNL Wage Revision Issue

com SSG , Ex Secy NFTE informed me this morning his discussion with Com C Singh GS of NFTE BSNL about wage negotiation. He suggested me to write about a piece about the same with the background. I tried to give here , some connected points with the available particulars then and there sent by Vellore senior leader com Mathi. If any inaccuracy is found , I owe it as mine. I know my limitation and cannot give the exact picture, as I do not speak like an insider. Please bear with me for all inadequacies.

I just connect the dots year wise to some extent.. Kindly read this sketch with my earlier piece dated 4-9-2025

2017

on 14th Nov 2017 BSNL had sent its " proposal for revision of Board level and below board level Executives of BSNL under 3rd PRC w.e.f 1-1-2017"

In turn DOT vide its letter dated 11th June 2018, sent its reply demanding BSNL to furnish report on the required items.

I do not know what happened to this proposal of BSNL board , may be kept in cold storage for the last many years.

2018

During 2018 itself BSNL management after some discussion with the unions placed its "Record of Proceedings of Joint committee on Wage Revision for NE in BSNL w.e.f 1-1-2017. The chairman of that committee then was Shri H C Pant CGM legal. I do not know the exact date of this draft , may be by Nov 2018.

That draft was a little long one with the following contents having many paras in each content.

1.Introduction and background

2. Guiding principles of Pay revision

3.proposal of the Committee

4. Retirement benefits

lastly on one side 5 names of the Officers of that committee and on the other side 8 names of staff side members.

In the proposal of the Committee , scales were also listed starting

NE1 as 19000-45700 and ending with NE 12 as 39900-114800

3.2 para is about fitment

" At this stage fitment benefit of 15 % is proposed, however the same will be in line with that granted to/ approved for Executives by DOT/ Govt/ Board

The Record of Proceedings drafts also said about - methodology of pay fixation, 3 % increment rate, DA after neutralisation 119.5 % becoming zero on 1-1-2017, allowances as per pre revised scales.

on 11-12-2018 the General secretaries of both the recognised unions had sent their 12 suggestions to the GM SR. Broadly the suggestions were for modification, some addition or deletions.

For para 3.2, Unions gave this suggestion

" Fitment Benefit: At this stage fitment benefit of 15 % is proposed"

regarding HRA the suggestion of Unions were - " HRA would be drawn on revised pay scales"

on 28-12-2018 DGM SR (signed) reply was given to the Unions. The last paragraph of that reply goes like this

" 4. In view of the aforesaid facts and that the revised scales/ fitment of Executives as per 3rd PRC is yet to be approved by the competent authority, your suggestion to delete the portions of the procedings will not be in conformity with the above mentioned DPE guidelines and hence cannot be agreed for...

you are therefore advised to reconsider the matter w.r.t above cited DPE guidelines and convey your consent for early settlement"

2019

on 10-1- 2019 DPE sent its reply to DOT's request dated 3-8-2018 for relaxation from the Affordability Clause

" Any relaxation/ amendment in the extant of guidelines would require the approval of cabinet.."

BSNL sent an appeal on 15-2-2019 to all the Unions to withdraw their proposed agitation. In that the following was stated regarding wage revision

".... DOT is considering DA neutralisation on the basis of 3rd PRC scales...DOT will try further 5 % fitment thereafter...It may be appreciated that in view of the present financial position, higher fitment is not feasible"

From this I infer for Executives DOT is considering DA neutralisation. I may be wrong, just my inference only, because the appeal was addressed to Executive Associations also.

2021-23

in Dec 2021 different scales were proposed

NE1 is 17100-31000 and ending NE 12 is 36100-87600

This was opposed by Unions and on further discussion during 2022 Nov , it was said these new scales finalised having NE1 19000-32000 and ending NE 12 as 38000-88000

More rounds of meetings of wage committee , of course on some intervals were held and discussion on Scales fitment were dominant in those meetings to avoid stagnation.

Management suggested zero fitment and the staff side demanded atleast 5 %. Management side explained that even revision at zero percent, if approved, will result in considerable financial burden and informed

"it is not possible to give wage revision of 5 % as BSNL is incurring losses since 2009-10 "(mts dated 16-11-2022)

In the mean time various Pensioners associations had their meeting with DOT for their pension revision on 17-10-2022. In that meeting DOT suggested revision of pension on the same lines , as told to BSNL unions- that is IDA merger with nil fitment on 3rd PRC scales. Then a pertinent question was raised about unknown NE Pay scales , and DOT assured the same would be obtained from BSNL.

In order to break the stalemate in wage negotiation, both the General secretaries of the recognised Unions wrote a letter to CMD on jan 13, 2013 stating the unfriendly positions taken by the management.

That letter cited the following as unreasonable stand of the management.

Refusing to take the scales already finalised on 27-7- 2018

Saying ‘No signing of wage agreement’, only the revised pay scales should be finalised.

Revision of allowances cannot be done.

From this one can understand the pressure mounted on BSNL from the side of DOT to obtain some pay scales for NE, as assured to the associations of Pensioners.

This can be in a way confirmed by a separate letter addressed by the GS of NFTE on 3-2-2023 to the CMD

" We are compelled to bring into your kind notice that the GOI has reportedly delinked the pension revision of pre 2017 BSNL retirees and the quantum of fitment for the purpose is under consideration. According to Information the BSNL management has forwarded the pay scales of Non Executives without the agreement with the unions. ...

we urge upon you to take steps to end the crisis and avert unplesanat situation and ensure wage revision"

Com Islam Senior leader of NFTE and President at that time also felt the same, when I discussed the issue of ‘DOT’s 17-10-2022 meet with the pensioners’.

2024- 2025

Management has reassured and explained the following to the unions by their minutes issued on 14-3-2024

There is no reduction in the pay of any employees after implementation of new pay scales

Stagnation on the existing pay scales are largely addressed

As pension contribution is linked to the maximum of pay scale, the new pay scales have been designed optimally to increase in pension contribution

Financial burden has to be minimum so as to take the proposal viable as any additional financial to be met from the internal resources of the company

Another important point informed to the staff side is

" There are number of CPSUs which are loss making and the government has to decide in totality. Whatever proposal Joint committee recommends, should be with minimum financial implication"

As of NOV 2021 total number of NE (absorbed 18513, Direct 14491) was 33006. Of these employees stagnating was 9205 that is 28 %.

As on 1-1-2024, 83.36 percent of absorbed employees in stagnation. NE total is 29990 and of this 16435 stagnated that is 54.80 %.

Management informed also even for zero fitment, the additional financial outgo should be 900 crores per year.

Staff side stoutly defended their case in that meeting also to break the everlasting stagnation issue.

Now in 2025 , employees may know well what is going on in the negotiations. Leaders are trying their level best to bring some settlement as early as they can. Even the 'Record of proceedings' may be a step ahead to reach the goal of final settlement.

BSNL Management and DOT should take some bold initiatives to give morale boost to the employees who are all still suffering in 2007 pay scales.

Let us hope the best to cook palatably with the available things in the present context and constraints.

15 hrs 6-9 2025 R. Pattabiraman

sep 7

தமன்சிங் தன் தாய் தந்தையரைப் பற்றி எழுதிய நூல்தான் மேலே குறிப்பிட்ட ஒன்று. இதற்கு முன்னர் சில பதிவுகளை இட்டுள்ளேன். இந்தப் பதிவில் மன்மோகனின் 1980-84 காலத்திற்கான சில முக்கிய செய்திகளை தரப்பார்க்கிறேன்.

இந்திரா அம்மையார் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர், நிதி அமைச்சகத்தில் ஓர் அதிகாரியாக நன்கு செயல்பட்டு வந்த மன்மோகனை அழைத்து, திட்டக்குழு உறுப்பினராக போ, கொஞ்சம் அங்கு வேலை இருக்கு என்கிறார். அப்போது மன்மோகனுக்கு வயது 48. அரசுப்பணியில் இன்னும் 10 ஆண்டுகள் இருந்தால்தான் முழு பென்சன். மூன்று பெண் குழந்தைகளை கரையேற்ற வேண்டும்.

வெளிப்படையாக , அப்படிப் போனால் எனக்கு முழு பென்சன் இல்லாமல் போய்விடும் என்கிற உண்மையை மன்மோகன் சொல்கிறார். சரி பார்ப்போம் என இந்திரா சொல்லிவிட்டு, காபினட் செயலரை அழைத்து pensionable service உடன் மன்மோகனை அனுப்ப வழி ஒன்றை கண்டுபிடியுங்கள் என்கிறார். அவரும் member secretary instead of member என போஸ்ட் ஒன்றை உருவாக்கினால் போடலாம். பென்சனுக்கான தகுதி ஆண்டுகள் குறையாது என்கிறார்.

ஒரு பென்சனர், பென்சன் குறித்து ஏராளம் எழுதியவன் என்கிற வகையில் மன்மோகனின் உள்ளத்தை சரியாக என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் நேர்மையற்ற சம்பாதித்தியம் என்பதை கனவிலும் நினைத்துப் பாராதவர். சிலர் அப்படி 'போஸ்ட்' உருவாக்க முடியாது எனச் சொன்னதை ஏற்காமல், இந்திரா உருவாக்கி மன்மோகனை நியாயமான வழியில் திட்டக்குழுவிற்கு அனுப்பினார்.

அடுத்து அவருக்கு வந்த பதவி உயர்வு ரிசர்வ் வங்கி கவர்னர் என்பது. ஆனால் டெல்லியிலிருந்து பம்பாய் போகவேண்டும். பெரிய பெண் கிக்கி ஸ்டீபன் கல்லூரியில் lecturer , இரண்டாவது பெண் தமன் அக்கல்லூரியில் கணிதம் படிக்கிறார். இருவரையும் விடுதிக்கு அனுப்பிவிட்டு குடும்பம் பம்பாய் நகர்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ரிசர்வ் வங்கி கவர்னர் என்கிற மரியாதை, வசதி, வேலை நெருக்கடிகள் என வாழ்க்கைப் போனது.

ரிசர்வ் வங்கி காலத்தில் இரு நிகழ்வுகளையாவது இங்கு சொல்ல விழைகிறேன். தமன் நிறைய சொல்கிறார். ஒன்று ரிசர்வ் வங்கி யூனியன் போராட்டங்கள், அடுத்தது பெரு முதலாளி ஸ்வராஜ் பால் கேஸ்.

ரிசர்வ் வங்கி சங்கம் சிவ சேனா பெரும்பான்மையுடன் இருந்தது. அதன் ஊழியர் தலைவராக சூர்யகாந்த் மகாதிக் என்பார் இருந்தார். பின் நாட்களில் இவர் சிவசேனா எம் எல் ஏ ஆனவரும் கூட. மன்மோகன் வருவதற்கு முன்னர் அங்கு கம்யூட்டர் கொணரக்கூடாது என்கிற போராட்டம் தீவிரமாக எழுந்தது. சம்பள மாற்றம், பதவி உயர்வு போராட்டங்களும் நடந்தன. அதிரடியாக சூர்யகாந்த் நடந்துகொண்டார் என்ற புகார்கள் தொடர்ந்தன. அவரை நிர்வாகம் வேலைநீக்கம் செய்தது. தொழில் உறவுகள் மிக மோசமான சூழலில்தான் மன்மோகன் அங்கு கவர்னர் பொறுப்பேற்கிறார்.

அப்பா எப்படி தொழில் உறவை சமாளித்தாய், பெண் கவலையுடனும் ஆர்வத்துடனும் கேட்டார். மன்மோகனும் நினைவுபடுத்தி கொஞ்சம் சொன்னதைப் பார்க்கிறோம்.

அவர் முதலில் தொழிற்சங்கத் தலைவரை மீண்டு. பணியில் சேர்க்க உத்தரவு போட்டார். அழைத்து என்ன குறைகள் என்பதை, ஒரு முறைக்கு இருமுறை கேட்டறிந்தார். தான் பெரிய கவர்னர், டெபுடி கவர்னரிடமோ அல்லது தொழில் உறவு அதிகாரியிடமோ போய் பேசு என ஒதுங்கவில்லை. நிர்வாகம் ஏன் என்ன செய்ய விழைகிறது. தொழிலாளர்க்கு எப்படி இடையூறு இல்லாமல் செய்ய விழைகிறோம் என்பதை தன் கைப்பட விளக்கி சூர்யகாந்த் தொழிற்சங்கத் தலைவருக்கு கடிதம் எழுதினார். நிலைமைகள் சீராகத் தொடங்கின என மகளிடம் அப்பா சொன்னதைக் காணலாம்.

1985 ல் அவர் தொழிற்சங்கத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் காணப்படும் சத்தான வரிகள்

...My experience of handling industrial relations in the RBI convinces me that the heart of our TU movements is in the right place, and that given mutual goodwill and understanding, industrial peace and harmonious relations are an attainable ideal.

பல ஊழியர்களிடம் குடிப்பழக்கம் இருந்தது. சிலர் நோயாளிகள். வீட்டுப் பெண்களிடமிருந்து புகார் கடிதங்கள் வந்தன. மன்மோகன் தலைவர்களிடம் உங்கள் உண்மையான பலம் எவ்வளவு பேர்கள் என்பதில் இல்லை. எவ்வளவு சரியானதை செய்கிறீர்கள் என்பதில் இருக்கிறது.

“Strength comes from a conviction that what you are doing is the right thing to do..pay more attention on social issues”

பின் சில ஆண்டுகள் கழித்து மன்மோகனை சந்தித்த சூர்யகாந்த், சார் என் குழந்தைகள் ஐடி துறையில் வெளிநாடுகளில் நன்கு சம்பாதிக்கிறார்கள். அன்று கம்ப்யூட்டர்மயத்தை எதிர்த்தோம் என சுயவிமர்சனத்தை வைத்துக்கொண்டாராம்.

Mechanisation of Banking Industry என்பதற்கு ரங்கராஜன் கமிட்டி போடப்பட்டபோது, கடுமையான எதிர்ப்புகள் வந்தன. எப்படி சமாளித்தாய் அப்பா என தமன் கேட்டபோது தன் நினைவை சொன்னார் மன்மோகன்

" I went and talked to Mr Jyoti Basu. He was sympathetic, but he also recognised the difficulties of persuading the Trade Unions. I don't think we were able to achieve solid results, but bit by bit we were able to change the thinking"

நாளடைவில் எங்களைப் போன்ற தொழிற்சங்கத்தினர், நிர்வாகத்திடம் யூனியனுக்கு கம்ப்யூட்டர் என கோரிக்கை வைத்துக்கூட பெறும் அளவு மாற்றங்கள் வந்தன. இன்று இடதுசாரி அமைப்புகளும் ஐடி விங் வைக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

ஸ்வராஜ் பால் விஷயம் , என் ஆர் ஐ முதலீடு தொடர்பானது. மன்மோகன் அலுவலகத்திற்கும் பிரணாபின் நிதி அலுவலகத்திற்குமான பெரும் மோதலானது. நீதிமன்ற வழக்குகள் வந்தன. நிதி அமைச்சகம் சொல்வதை மீறமுடியா நிலை உருவானது. ஆனால் உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் மிக கண்ணியம் காத்த நேர்மையான பண்புள்ள அதிகாரி என்கிற பாராட்டினை மன்மோகனுக்கு எழுதியது.

வீட்டில் திருமணம் என்கிற காட்சி நகர்கிறது. முதல் பெண் கிக்கி விஜய் என்பாரை மணக்க முடிவெடுத்தார். விஜய் கிக்கியுடனவ ஸ்டீபன் கல்லூரியில் பேராசிரியர். அவர்கள் காதல் விவகாரம் வீட்டில் அடுத்த பெண்ணான தமனுக்கு மட்டுமே தெரியும். சாப்பாட்டு மேஜையில் கிக்கி நான் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறேன் என்கிறார். ஒரு நிமிடம் சாப்பிடுவதை நிறுத்திய மன்மோகன் எப்ப என்கிறார். கடுப்பான கிக்கி சாப்பாட்டிலிருந்து எழுந்து போகிறார். அப்பாவிற்கு புரியலை. தமன், அப்பாவிடம் இப்படியா கேட்பாய்- யார் எவர் என்று விசாரிக்காமல் எப்ப எனக் கேட்டால், கோபம் வராதா எனப் புரிய வைத்தார்.சீக்கியர் அல்லாதவரை மணம் புரிவது என்கிற பிரச்சனை இருந்த நிலையில் , பெற்றோர் அதை ஏற்று எளிமையாக 150 பேர்கள் மட்டும் அழைக்கப்பட்டு திருமணம் முடிந்தது.

அம்மாவின் குடும்ப உறவினர் ஏற்க மறுத்தனர். எனவே பல உறவினர் அழைக்கப்படாமலேயே அத்திருமணம் முடிந்தது. தமனும் பின்னர் அசோக் பட்நாயக் என்பாரை மணந்தார்.இம்முறை அனைவருக்கும் அறிவிக்கப்பட்டே நடந்தது. கடைசி பெண் அமு பார்ட்டன் பீபி என்பாரை நியுயார்க்கில் மணந்தார். அத்திருமணத்திற்கு இங்கிருந்தபடியே வாழ்த்து அனுப்பினர்.எங்கள் குடும்பத்தில் நடந்த கலப்பு மணங்களுக்கு பின்னர், சில உறவினர் வீடுகளிலும் அவரவர் பிரச்சனைகளுடன் நடக்கலாயின.

1980-84 இந்திரா காலத்தில் , மன்மோகனுக்கு முக்கியத்துவம் இருந்தது. இந்திரா வெற்றி பெற்றவுடன் நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய உரையை, மன்மோகனை அழைத்து சரியா எனப் பார் என்றார். ஜனதா ஆட்சி குறித்து சில உண்மையல்லா செய்திகள் இருப்பதை தயக்கமின்றி மன்மோகன் சுட்டிக்காட்டினார். சரி செய்துகொள்கிறேன் என்றார் இந்திரா. அடுத்து ஏகப்பட்ட வாக்குறுதிகள் அதில் இருப்பதைப் பார்த்து, பணவீக்கம் அதிகமாகியுள்ள சூழலில் இவ்வளவு வேண்டுமா என மன்மோகன் கேட்டார். செய்ய முடியாமல் போகும் என்றார். சரி செய்வதாக இந்திரா சொல்லி அனுப்பினார்.

அதேபோல் இந்திரா , RBI அதிகாரங்களை குறைத்து காபினட் முடிவை எடுத்தார். சரியல்ல என இந்திராவிடம் மன்மோகன் convince செய்தவுடன், அந்த காபினட் முடிவையே மாற்றிடும் முடிவை இந்திரா எடுத்தார்.இது சாதாரண விஷயமல்ல என மகளிடம் மன்மோகன் சொல்லியதைப் பார்க்கிறோம்.

1984 பிந்தரன் வாலா, ஆப்பரேஷன் புளு ஸ்டார், இந்திரா படுகொலை , சீக்கியர் மீது தாக்குதல்கள் என நாடு பெரும் சோதனைகளை கண்டது. மன்மோகன் ஆர்பிஅய் கவர்னர் என்கிற வகையில் விடியற்காலையே வந்து அஞ்சலி செலுத்திவிட்டு, வங்கி விருந்தினர் மாளிகை அறைக்குள்ளேயே இருந்த சூழல், டெல்லித் தெருக்களில். மன்மோகன் மகள் இருந்த வீட்டை கொளுத்த வந்தனர். மருமகன் விஜய் வந்து சொல்லி தடுத்தார். குர்சரண் உறவுக்காரர்கள் வீடுகள் கொளுத்தப்பட்டன. குர்சரண் Cousin பிரேயருக்காக குருத்வாரா சென்றவள் கைது செய்யப்பட்டு, 5 ஆண்டுகள் எந்த தவறும் செய்யாமலேயே சிறையில் வாடினார். பூட்டா சிங் முயற்சியால் பின்னர் வெளி வந்தாராம்.

மன்மோகன் எந்த வன்முறையையும் ஏற்றவர் அல்ல. சீக்கியர் ஆயுதம் ஏந்தி தங்களை இப்படி பாழ்படுத்திக்கொள்ளக்கூடாது என்றே கருதினார்.

" Sikhs have been and will always be an integral part of part the Indian polity. Our gurus sacrificed all their being in order to protect Indian culture and civilisation. To separate Sikhism or Sikhs from the rest of the Indian polity is something I never appreciated " என தன் மகளிடம் மன்மோகன் மனம் திறந்தார். அம்மாவிற்கோ இந்திரா படுகொலை எவ்வளவு வேதனையோ, அதே அளவு அப்பாவி சீக்கியர்களின் உயிர்களும் உடைமைகள் அழிவும் என்ற மனநிலை. கேட்டால் , விடு வேண்டாம், நினைவில் இல்லை என்கிற மன அழுத்தத்தை குர்சரண் காட்டியதைக் காண்கிறோம்.

முடிந்தவரை தான் பயின்ற கண்ணியத்தை மன்மோகன் கணவனாக, தந்தையாக, அதிகாரியாக, அரசியல் பொறுப்பாளராக காட்டியதை நாம் உணரமுடியும்..

7-9-2025

sep 8

பிரணாப்- மோடி

வட இந்தியாவில் ஒரு பழக்கத்தை நேரில் நான் பலமுறை கண்டிருக்கிறேன். பெரியவர்களைப் பார்த்தவுடன் குனிந்து காலைத் தொட்டு வணங்குவர். குடும்பத்தில் மட்டுமல்லாது, அமைப்புகளில், அரசியலிலும் இப்பழக்கம் இருக்கும்.

திரு மோடி அவர்கள் குஜராத் முதல்வர் ஆவதற்கு முன்பாகவே, பிரணாபை பார்த்தால் , dada எனச் சொல்லி குனிந்து கால் தொட்டு வணங்குவாராம். அதேபோல் அவர் 2014ல் பிரதமர் ஆகும்போதும், குடியரசுதலைவர் மாளிகையில் , தனி சந்திப்பில் பிரணாபிடம் அப்படி செய்து, உங்களின் இளம் சகோதரனுக்கு உரிய வழிகாட்டலை செய்யுங்கள் என வேண்டினாராம்.

குடியரசு தலைவரான உடனேயே தன் பதவி எல்லைகள் குறித்த விழிப்புணர்வு தனக்கு தேவை என பிரணாப் கருதினார். அவரின் டைரியில்

" I knew that my active political role had come to an end and that I would have to conduct myself as a constitutional head and interfere unnecessarily the domain of the Executive.."

இதை நான் நன்கு உணர்கிறேன். டெலிகாமில் சுமார் 10 ஆயிரம் பேர்கள் மத்தியில் தொழிற்சங்க வேலை- மாலை மரியாதை, சொல்லடி பட்டு பின்னர் அதை விடுவது என்கிற போராட்டம் எளிதாக இல்லை. ஓர் அதிகாரமும் இல்லா அதற்கே, அந்த தலைவர் கிறக்கத்தை decoil செய்திட , பதவி ஏதும் இல்லா சாதாரண குடிமகன் வாழ்வை பழக எனக்கு பல மாதங்கள் தேவைப்பட்டது. பிரணாப் போன்றவர்களுக்கு Executive அதிகார கிறக்கம் சாதாரண ஒன்றல்ல. அடங்குவது எளிதாக இருந்திருக்காது.இது அனுபவம் என்பதற்காக இங்கு என்னை இழுத்து சொல்லியுள்ளேன். வேறு முக்கியத்துவம் இல்லை.

மோடியும் தன் முதல் காபினட் கூட்டத்திலேயே தன்னை உறுதிப்படுத்திக்கொள்ளும் காட்சியை உருவாக்கினார். ஜாம்பவான்கள் ஜேட்லி, சுஷ்மா, ராஜ்நாத், வெங்கையா, ராம்விலாஸ் போன்றவர்கள் கூட பிரதமரிடம் சொல்லி, அவரது அறிவுரைபடி தான் செய்யமுடியும் என தெரிவிக்கலாயினர். புதிய விஷயங்களுக்கு நிதியை பிரச்சனையாக்க வேண்டாம் என மோடி சொன்னாராம். அதேபோல நிர்வாக முடிவுகளில் அரசியல் கலக்க வேண்டாம் என

மந்திரிகளிடம் தெரிவித்தாராம். இதெல்லாம் அவர் உட்பட நடத்தினாரா என்பது பெரும் விவாதத்திற்குரிய விஷயம்.

பல ஆண்டுகள் காங்கிரசில் இருந்த ஒருவர், பாஜக ஆட்சிக்கு பிரமாணம் செய்கிறோமே என்ற வலியை உணர்ந்ததாக பிரணாப் டைரி சொல்கிறது. குடியரசு தலைவர் நாடாளுமன்ற உரை தயாரிப்பில் பிரணாப் சொன்ன சில மாறுதல்களை ஏற்றுள்ளனர். மோடி அவர்களும் சந்தித்து திருத்த ஒப்புக்கொண்டுள்ளார். முந்திய காங்கிரஸ் ஆட்சி மீது விமர்சனம் இருக்கட்டும், அது எல்லை மீறி காட்டமாக வேண்டாம், குடியரசு தலைவர் 'embarrassing' ஆகாமல் இருக்கவேண்டும் எனவும் மோடி சொன்ன தகவல் ஷர்மிஸ்தா நூலில் இருக்கிறது.

ஷர்மிஸ்தா ஒருமுறை மோடியிடம் சார் தேர்தலில் வெற்றி பெறும் கலையை எனக்கும் சொல்லித் தருவீர்களா எனக் கேட்க, வாருங்க விவாதிக்கலாம் எனச் சொன்னாராம். அப்படி நேரம் கொடுத்து அரசியலை விவாதிக்கவும் செய்தாராம். பல விஷயங்களை ஏற்க முடியவில்லை, மரியாதை கருதி எதிர்த்து பேசவில்லை எனச் சொல்கிறார் ஷர்மிஸ்தா. அப்பாவைவிட உனக்கு பெரிய குரு இல்லை, கேட்டு தெரிந்துகொள் என மோடி சொன்னபோது, அப்பாவிடம் எதைக் கேட்டாலும் 5 புத்தகங்களையாவது கொடுத்து படித்து தெரிந்துகொள் எனப் போய்விடுவார் என ஷர்மிஸ்தா சொல்ல அங்கு சிரிப்பொலி எழுந்ததாம்.

Demonetisation வந்தபோது, பிரணாப் கவலையை தெரிவித்துள்ளார். I am afraid that demonetisation will have tremendous adverse impact on the economic growth of India. There is no ease of peoples troubles..என பிரணாப் குறித்துள்ளதைக் காண்கிறோம்.

GST அமுலாக்கம் முடிவு வந்தபோது, குடியரசு தலைவரை அழைத்து நாம் இருவரும் அதை inaugurate செய்யலாம் என மோடி அழைத்தாராம். தங்களின் முன்முயற்சியை அங்கீகரித்து தங்களுக்கு dedicate செய்கிறேன் எனவும் சொன்னாராம். பிரதமர் மட்டுமே அதை செய்திருக்கலாம். அவர் அழைப்பு கொடுத்தது மகிழ்ச்சி என பிரணாப் தெரிவித்தாராம்.

ராகுல் அதை 'கப்பர்சிங் டாக்ஸ்' எனச் சொன்னதை பிரணாப் ஏற்கவில்லை. Catchy ஆக மக்களிடம் செல்லுமே என ஷர்மிஸ்தா கேட்டபோது அப்படி பெரும் விஷய விவாதங்களை பேசக்கூடாது என்றார் பிரணாப்.

Serious debates cannot be replaced by catchy slogans. People might remember your slogans, but will not pay attention to your arguments. You are simply trivialising the issue என்கிற முக்கிய அரசியல் பாடத்தை பிரணாப் தந்தார்.

மரணதண்டனை கைதிகளின் மனுக்களை நிராகரித்தபோது, அன்று இரவு தூங்காமல் guilty ஆனாராம் பிரணாப். அது rarest rare case ஆக இருக்க வேண்டும் எனக் கருதியுள்ளார்.

குடியரசு தலைவர் காலத்தில்தான் அவர் மனைவி கீதாவின் இறப்பு என்கிற துயரைக் கண்டார். கீதா இருந்த அறைக்குப் போய் பெருமூச்சு விட்டுவிட்டு படுக்கச் செல்வாராம். அவர் வைத்துப் போன எதையும் கலைக்க வேண்டாம் என்றாராம். ஆனால் எந்த அலுவலையும் நிறுத்தாமல், ஏற்றுக்கொண்டபடி, துக்கத்தை மறைத்துக்கொண்டு செய்தார் என மகளின் பதிவு செல்கிறது.

குடியரசு தலைவர் மாளிகை மக்களுடன் நெருக்கமாக இருக்கட்டும் என்பாராம். Demystifying of Rashtrapati Bhavan எனப் பேசினாராம். எந்த பொறுப்பானாலும் அதற்கான 'அக்கவுண்டபிலிட்டி' என்பது பேசவேண்டும் என்றாராம். தன் பொறுப்புக் காலத்தில் 'ரிபோர்ட் கார்ட் ' கொண்டுவந்தாராம். குடியரசு மாளிகை நூலகத்தை புதுப்பித்தாராம். பெரும் புத்தக காதலர் என அவரை அறிந்தவர்க்கு தெரியுமாம். புத்தகங்களை மின்மயமாக்கம் செய்ய அறிவுறுத்தியும் உள்ளார். மாளிகைப் பற்றி மட்டும் 23 நூல்களை அவர் காலத்தில் கொணரச் செய்தாராம்.

நேரு, இந்திரா, ராஜிவ் போன்றவர் பிரதமராக இருந்தவர்கள்- நாட்டுக்கு நற்பணியாற்றியவர்கள் என்ற எண்ணம் மோடி அரசுக்கு இல்லையே என பிரணாப் வருத்தப்பட்டுள்ளார். இந்திராவின் அக்டோபர் 31 அரசாங்க நிகழ்வுகள் இல்லாமல் போவது குறித்து வருத்தமானார். பிரணாப் எழுதினார் - how fair he was என வரிகள் உணர்த்தும்

"Modi Govt's programme of De Nehrufication has begun. If they think they can erase Nehru, Indira, Rajiv from history, they are mistaken. All the three earned their places in history- Nehru as the architect of modern secular democratic India, Indira as the liberator of Bangladesh and as a crusader against terrorism and Rajiv as the architect of IT revolution in India. Observation of Sardar Patel's birthday as Unity Day is a welcome move, but for that to ignore others is not a healthy one"

அதேபோல் சோனியாவும் அவரது வாரிசுகளும் சாஸ்திரியை, நரசிம்மராவை , ஏராள காங்கிரஸ் தலைவர்கள் பங்களிப்புகளை

பொருட்படுத்தி சொல்லாமல் விடுவதும் தவறு என பிரணாப் சொல்லலானார்.

எழுத்தாளர், கலைஞர் இன்னும் பலத்துறை நிபுணர்களின் residency programs என 7 நாட்கள் உடன் தங்கி நிகழ்வுகள் நடத்தினாராம் பிரணாப். அவரது காலத்தில் குடியரசு தலைவர் இணைய தளம் 49 கோடி ஹிட்ஸ் பெற்றதாம்.

குறையில்லா மனிதர் இருப்பதில்லை. குறை மட்டுமே கொண்டவரும் இல்லை. இப்படி கிடைத்த வாய்ப்பில் முடிந்தவரை ஒளிர்ந்த சிலரை இந்தியா நினைவு கூர்ந்து நகரட்டும்..

8-9-2025

sep 9

கல்கி கட்டுரைகள்

கல்கியின் நாவல்களை படித்தேனா எனக் கேட்டால் என்னிடம் பதில் இல்லா மௌனமே நிலைக்கும். ஆஹா அவருடைய கட்டுரைகளா, மூன்று தொகுதிகளா எனக் கேட்டால் முகம் கொஞ்சம் மலரும்.

கல்கி அவர்களின் நூற்றாண்டின்போது 1999ல் அவரது கட்டுரை தொகுதிகளை கொணர்ந்தார்கள். அவர் 500க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர். 90 கட்டுரைகளை எடுத்து மூன்று தொகுதிகளில் இட்டு தந்துள்ளனர். ஆளுமைகள் பற்றி கல்கி நிறையவே எழுதியுள்ளார். இங்கு கொஞ்சம் சொல்லப் பார்க்கிறேன்.

கல்கி, திரு வி க பற்றிச் சொல்லும் போது எப்போதும் அவர் நினைவில் நின்ற குணாதிசயம் ஒன்றை சொல்கிறார். 'திரு விக எவ்வளவு நல்ல மனிதர்' என்பதே அது.

கல்கி பையனாக இருந்தபோது, டி எஸ் எஸ் ராஜன் அழைத்து நீ கெட்டிக்கார பையன், முன்னுக்கு வரவேண்டும். திரு வி க விடம் போய் நவசக்தியில் பணியாற்று என அனுப்பி வைத்தார்.

திருவிக வின் தேசபக்தன் எழுத்தைப் பார்த்து 'என்ன தமிழ்' என தமிழகம் வியந்தது. அந்தப் பெரிய பண்டிதரிடமா என்கிற தயக்கம் கல்கிக்கு..

சுதேசமித்திரனும் தேசபக்தனும் ஒரே விஷயத்தை எப்படி எழுதினார்கள் என்பதைச் சுட்டி, திருவிக நடையின் அபாரத் திறமையை கல்கி காட்டியிருப்பார். திருவிக அரசியலில் நுழைந்த பின்னர்தான் தமிழ் மொழி சுயமதிப்புடன் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது என கல்கி மதிப்பீடு செல்கிறது.

4 ஆண்டுகள் திரு விக கொடுத்த அழைப்பை ஏற்று நவசக்தியில் கல்கி பணியாற்றினார். 'ராயப்பேட்டை முனிவர்' என அவரை முதலில் அழைத்தது கல்கிதான்.

எளிமையான வெண்மை கதர் ஆடையுடன் சைவ சித்தாந்தவாதியாக உச்சிக் குடுமி கொண்ட திருவிகவை கல்கி சித்திரமாக தந்துள்ளார்.

கல்கி நவசக்தியில் பணியாற்றிய போது, காந்தி கட்டுரை ஒன்றை மொழி பெயர்த்தார். காந்தி 'லார்ட் சிவா' என எழுதியிருந்தத்தை

’இறைவன்’ என கல்கி பெயர்த்திருந்தார். பார்த்த திருவிக அழைத்து கேட்ட உரையாடல் சுவையான ஒன்று.

திருவிக : உனக்கு எந்த மதத்தில் பற்று?

கல்கி: எனக்கு எந்த மதத்திலும் பற்று கிடையாது. மதம் பற்றிய உண்மையை இன்னும் நான் அறியவில்லை.

திருவிக: எந்த மதம் மீதாவது கோபமுண்டா?

கல்கி: இல்லவே இல்லை. மதம் என்னை என்ன செய்தது?

ிருவிக : சிவனை உனக்குப் பிடிக்காதா?

கல்கி: ரொம்பப் பிடிக்கும் அவரது நெற்றிக்கண் பிடிக்காது. ஏன் கேட்கிறீர்கள்?

இவ்வளவும் சிவன் இருந்த இடத்தில் சிவன் எனப் போடாமல் இறைவன் எனப் போட்டதற்காக. கல்கி எப்படியோ அவரிடம் சமாளித்தேன் என எழுதியுள்ளார்.

திருவிகவிற்கு மதவேற்றுமை உணர்ச்சி கிடையாது என்பதை கல்கி அழுத்தமாக சொல்லவும் செய்கிறார். இயற்கை வாழ்வு, பெண்ணின் பெருமை அவருக்கு முக்கியமானவை. ’பெண் தெய்வங்கள்’ என முதலில் சொன்னவர் திருவிக என்கிறார் கல்கி. திருவிகவின் தொழிலாளர் பற்று, சாதுக்கூட அச்சக தொழிலாளர்களிடம் தொடந்து பல்லாண்டுகள் அவர் காட்டிய நேயத்தையும் கல்கி சொல்கிறார். சூளை தொழிலாளர் கூட்டத்திற்கு திருவிகவுடன் கல்கி சென்றுள்ளார். அங்கும் அதே தமிழ் நடையில்தான் திருவிக உரை இருந்தது என்று சொல்கிறார். விளங்குமா என சந்தேகம் கல்கிக்கு. ஆனால் தொழிலாளர் முகம் மலர்கிறதே என கல்கி சமாதானம் அடைவாராம். எங்களுக்கான தோழர் என தொழிலாளர் உணர்ந்தனராம்.

கல்கியால் திருவிக நடைக்கு போகமுடியவில்லை. பெரும்பாலும் மொழிபெயர்ப்பு வேலைகள் மட்டுமே இருந்தன. கல்கி நடை நவசக்திக்கு பொருத்தமா என்கிற கேள்வி கல்கியிடம் வந்ததால், நான் போகிறேன் என்றாராம். திரு விக என்ன குறை இங்கே என சில முறை கேட்டறியப்பார்த்துள்ளார். கல்கி பிடிவாதம் பார்த்து, 6 மாதம் உன் இடத்தை காலியாக வைத்துள்ளேன். எப்ப வேண்டுமானாலும் வா என வாஞ்சைக் காட்டி அனுப்பிவைத்தாராம்.

அடுத்து வ ரா பற்றி கல்கி எழுதிய செய்திகளை கொஞ்சம் தருகிறேன்.

இளைஞராக கல்கி திருச்சி வாசக சாலையில் லோகமான்ய திலகர் வழக்கு நூலை படித்துக்கொண்டிருந்தாராம். அங்கு நுழைந்த ஒரு மனிதர்,என்ன பிள்ளையாண்டான் திலகரா , ஆங்கில புத்தகம் அதான் படிக்கிறாய், தமிழில் இருந்தால் படிப்பியா- தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையை படிப்பியா? தமிழில் என்ன இருக்கிறது என தமிழன் கேட்கிறான். சுரணை இருக்கா- பாரதின்னு ஒருத்தன் இருந்தான்னாவது தெரியுமா. வாயை திறந்து சொல்லுங்கள்- காதில் ஏறவில்லையா எனப் படபடவென அவர் பொரிந்து தள்ளினார். யாரும் பேசமாட்டீர்களா, சரி போறேன் என போய்விட்டார் அந்த மனிதர்.

யாருப்பா இவரு பொல்லா மனுஷன் என ஒருவர் கேட்க, வேறு ஒருவர் இவர் தாம்ப்பா திருப்பயணம் வ ராமசாமி அய்யங்கார் என்றாராம். வ ரா என்கிற சித்திரம் இப்படித்தான் கல்கியிடம் 'அ' போட்டுக்கொண்டது.

உட்லண்ட்ஸில் வராவின் மணிவிழா நடத்த பூர்வாங்க கூட்டம் நடந்தது . பணமுடிப்பு தரவேண்டும் என முடிவு. செய்தி வராவிற்கு சென்றது . 'ஓய் என் வறுமையை தரித்திரத்தைச் சொல்லி பணமுடிப்பா.. உலகின் செல்வம் எனதய்யா-- என்னைவிட ஏழைகள் இருக்கிறார்களே.. தமிழ் வளர்ச்சிக்கு தொண்டு செய்தவன் எனச் சொல்லி கொடு..தரித்திரன் எனச் சொன்னால் வேண்டாம் ' என்றாராம்.

கல்கி 30 ஆண்டுகளுக்கு முன்னர் வாசகசாலையில் பார்த்த அதே படபடப்பு நியாய உணர்வுடன் வ ரா இருப்பதைக் கண்டேன். அவரின் தன் மதிப்பு கண்டு வியந்தேன் என கல்கி எழுதுகிறார்.

வ ரா வை தமிழ் எழுத்தாளரின் முதல்வர், நிரந்தரத் தலைவர் என எழுதினார் கல்கி. எழுத்து தான் அவரின் மதம். ஜீவனத்திற்கும் அதுவே. அதுவே அவரது கலையும் கூட .புதிய புதிய எழுத்தாளர்களை உருவாக்கியவர் வ ரா.

வேறு ஒரு கட்டுரையில் கல்கி முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பினார். மவுண்ட்பாட்டன் பொறுப்பேற்றபோது 6000 பேர்கள் விருந்திற்கு அழைக்க்ப்பட்டனர்.. யார் யார் நம்ம தென்னிந்தியாக்காரர்கள் எனப் பேச்சு.. எல்லாம் மேனன்கள் அய்யங்கார்கள் அய்யர்கள் எனப் பதில் வந்தது. வன்னிய குல சத்திரியர் எவருமில்லையா என கல்கி. நண்பர் சொன்னாராம் இந்தி தெரிந்தால் போயிருக்கலாம் என்று. மேலும் அவர் சொன்னது - ஆங்கிலத்தை படித்துவிட்டு அடிமையாய் இருப்பேனே தவிர , ஹிந்தி படித்துவிட்டு ஆள ஆட்சேபம் என்கிற உலகமய்யா நமது -என்றாராம்.

கே சந்தானம் வந்து ரயில்களில் செய்த சீர்திருத்தங்கள் பற்றி விகடமாக கல்கி எழுதினார். என்ன இனி பர்ஸ்ட் கிளாஸ் இல்லையா- அக்கிரமம். வாரா வாரம் ரயில்வேயில் என்ன செய்யலாம் என பலரையும் அழைத்து கூட்டமாமே. - ரயிலிலே மூட்டைப்பூச்சியே கூடாது என்கிறார் சந்தானம்- அதெப்படி. கிராண்ட் டிரங் டெல்லிக்கு போகும் நேரம் 4 மணி குறைக்கப்படும் என்கிறார்... ஒரே எஞ்சின் அலறலாக அறிவிப்புகள்.

இந்த சந்தானம் மன்னார்குடி கும்மட்டித்திடல் கிராமத்தில் பிறந்து சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஆனவர். காந்தி ராஜாஜியால் ஒத்துழையாமையில் ஈடுபட்டு தொழிலை விட்டவர். 1922 திருச்சி சிறையில் சக கைதிகளுடன் இந்த எம் ஏ பில்லும் கல் உடைத்த காட்சியை சிறை சென்ற கல்கி பார்த்துள்ளார். கல் உடைக்கும் போது அவர்கள் இந்திய பொருளாதாரம் பேசினர். கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தவர் கே சந்தானம். நாபாவில் நேருவுடன் கைசங்கலி இணைக்கப்பட்டு சிறை அனுபவித்தவர். 1930 வேதாரண்ய உப்பு போராட்டத்தில், 1932, 1940 என சிறை வாசங்களைப் பார்த்தவர்.திருச்செங்கோடு ஆசிரமத்தில் 10 ஆண்டுகள் குடிசைவாசி. பின்னர் இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்துஸ்தான் டைம்சில் பணி. அரசியல் நிர்ணய சபையில் விவாத தரத்தை மேம்படுத்தியவருள் ஒருவர்.

நேரு ராஜாஜியிடம் கேட்டால் தெளிவாகும் என்பார். ராஜாஜியோ சந்தானத்தை கூப்பிடு தெளிவாகும் என்பார்.

அந்த சந்தானம் ரயில்வே மந்திரி. அங்கு தொழிற்சங்கம் பலமானது, ஜேபி சோசலிஸ்ட் தலைவரும் கூட. அங்கு தொழிலாளர் பிரச்சனையும் தீரவேண்டும், ரயில்வே திவால் ஆகாமலும் காக்க வேண்டும். சவாலான வேலை என கல்கி எழுதினார்.

செம்மங்குடி சீனிவாசய்யர் சங்கீத மேதை குறித்த கட்டுரை ஒன்றும் உள்ளது. இசைப் பிரியர்கள் அனுபவித்து மகிழக்கூடும். என் சுவாரஸ்ய பகுதிக்கான கல்கியின் வரிகளை தருகிறேன்.

" சுதந்திர பாரத சர்க்கார் இரண்டாவது ஆண்டிலேயே செம்மங்குடியை கௌரவிக்கத் தீர்மானித்ததில் விசேஷப் பொருள் உள்ளது. இந்தியா சுதந்திரம் அடையும் முயற்சியில் செம்மங்குடியும் அவரது சகோதரர்களும் ஈடுபட்டவர்கள். மகாத்மா காந்தியிடம் பரம பக்தி கொண்டவர்கள். கதர் இயக்க ஆரம்ப நாட்களிலேயே தாங்களே கையினால் நூற்ற நூலைக் கொண்டு நெய்த கதராடை தரித்து

வருகிறவர்கள்.. பாரதியின் என்று தணியுந்மிந்த சுதந்திர தாகத்தை செம்மங்குடி மனமுருக பாடுவார்”

சென்ற ஆண்டு அரியக்குடி, இவ்வாண்டு செம்மங்குடி என பெரும் பாராட்டை கல்கி தந்தார்.

நாதஸ்வர ராஜரத்தினம் பிள்ளைப் பற்றி கட்டுரை ஒன்று. நாதபிரம்மத்தின் கட்டளை போலும் அவரின் பூமி அவதரிப்பு என எழுதினார் கல்கி. தோடி ராகத்தை சிம்மாசனம் ஏற்றியவர் அவர் என்கிறார் (எனக்கு சங்கீத ரசனை அறிவு ஏதுமில்லை).

அவர் நாதஸ்வர சக்கரவர்த்தி என்பதை கல்கி ஏற்றாலும், சரியாக நேரம் கடைபிடிக்காமை, ஒப்புக்கொண்ட நாளில் வராமல் போவது போன்ற குறைகளும் கொண்டிருந்தார் எனவும் சொல்கிறார். ஆனால் அவரின் மேதையான திறமை முன் இக்குறைகள் எடுபடுவதில்லை எனவும் சொல்கிறார்.

எம் எஸ் அவர்களின் தாயார் வீணை சண்முக வடிவு அம்மாள் பற்றி கல்கி எழுதியுள்ளார். சண்முக வடிவின் அம்மா ஸ்ரீமதி அக்கம்மாள் அவர்களின் வயலின் வாசிப்பு சொக்க வைக்கும் என்கிறார் கல்கி. சண்முக வடிவை வக்கீல் பி எஸ் சுப்பிரமண்யம் மணந்தார். கவர்னர் பெர்ட்லாண்ட் 1914 ஆம் ஆண்டில் வடிவு அவர்களின் கச்சேரி கேட்டு தங்க பதக்கம் கொடுத்தாராம். வடிவு அவர்களின் வீணை கச்சேரிகள் ஏராளம் நடந்தனவாம். வீணை தனம்மாள் போன்றவர்களே மிகவும் பாராட்டினர். அவர்கள் வீட்டிலேயே தியாகராஜ உற்சவம் வடிவு நடத்தினாராம். 10 வயதிலேயே அம்மாவுடன் எம் எஸ் அவர்களும் கச்சேரிகளில் பாட ஆரம்பித்தார். சண்முக வடிவின் வீணை வாசிப்புகள் கிராமபோனில் இங்கிலாந்து சென்றது என கல்கி எழுதியுள்ளார். தனது மகள் புகழடைய அம்மா தன் கச்சேரிகளை நிறுத்திக் கொண்டு மகளின் மேம்பாட்டில் கவனமானார்.

திலகர் ரசித்து ’கீர்த்தனபடு’ என்ற பட்டத்தை பெற்றவர் நம் தமிழ்நாட்டின் சரஸ்வதி பாய். 1910 களில் இந்தியா முழுதும் சென்று காலட்சேபம் செய்து பெரும் புகழ் பெற்றவர். சிறுமியான சரஸ்வதி பாயை கிருஷ்ணாச்சார் என்பாரால் ஞானம் பெற்று பெரும் புகழை அடைந்தார். சபைகளில் பெண்கள் வரவே அச்சப்பட்ட காலத்தில் மணிக் கணக்கான பிரசங்கங்களை கிருஷ்ணா செய்தார். அர்த்தமற்ற சமூக சம்பிராதாயங்களை துணிச்சலுடன் உடைத்து எறிந்த தென்னாட்டு வீராங்கனை என கல்கி எழுதினார்.

பிறரை மகிழ்ச் செய்பவர்க்கு சொர்க்கம் எனில் என் எஸ் கிருஷ்ணன் சொர்க்கம் போவார் என கல்கி எழுதினார். பரோபாகாரத்தில் மகிழ்ச்சி அடைந்தவர் என் எஸ் கே என்றார். சினிமா நடிகர் மட்டுமல்ல, பொதுஜனத் தொண்டர், சீர்திருத்தவாதி அவர். மூட குருட்டு நம்பிக்கைகளை ஹாஸ்யத்துடன் எடுத்துச் சொல்லி உதற வேண்டினவர் கிருஷ்ணன். கலைவாணரின் காந்தி மகான் சரித்திரம் பிரசித்தி பெற்றது என எழுதினார் கல்கி. நல்ல தம்பி படத்தில் காந்தியைக் காட்டி கடவுள் என்று கூட சொல்ல வைத்தவர்.

வேறு ஒரு கட்டுரையில் தமிழ் சங்கீதம் கைகூடும் என்றார் கல்கி. அய்யர்வாள் பாட்டுக்களைப் போலவே,தமிழ் கீர்த்தனங்களையும் சங்கீத வித்வான்கள் கொஞ்சகாலம் கையாண்டால் அவையும் கச்சேரி பாணி ரசனைக்கு வந்துவிடும் என்றார் கல்கி. இதற்கு அண்ணாமலை செட்டியார், செம்மங்குடி, அரியக்குடி, முத்தையா பாகவதர், டைகர் வரதாச்சாரி, பாபநாசம் சிவன் ஒத்துழைத்தால் காரியம் சுலபமாகும் என எழுதினார். டமிழ் சங்கீதத்துக்கு ஏற்ற பாஷையா எனக் கேட்பவர்கள் கம்பனை, பாரதியை, தேவார திருவாசகங்களை, அருட்பாவை படிக்கட்டும். பிறகு சொல்லட்டும் என்று வாதிட்டார் கல்கி.

கீர்த்தனங்களில் சாகித்யம் பிரதானமில்லை சங்கீதம் தான் பிரதானம். தெலுங்கு பாட்டு பாடட்டும், தமிழ் ஏன் கூடாது என்கிற கட்சியை கல்கி கட்டினார். கர்நாடக சங்கீத வித்வான்கலே நீங்கள் எவ்வளவுக்கு மனப்பூர்வமாக தமிழ் இசை இயக்கத்தில் ஈடுபடுகிறீர்களோ அவ்வளவுக்கு துவேசம் பரவாமலிருக்க உதவி செய்கிறீர்கள் என வேண்டுகோள் விடுத்தார் கல்கி.

செம்மங்குடி ஒருமுறை சங்கீதம் பற்றி பாமரர் பேச ஆரம்பித்தால் பாழாய்ப் போகும் எனச் சொன்னதை கடுமையாக விமர்சித்து எழுதினார் கல்கி. அவரே ஜனங்களைப் படிப்பதில் பாமரர்தான் என்றார். மிக முக்கிய கேள்வியை கல்கி எழுப்பினார். கர்நாடக சங்கீதம் நாலுபேர் ரகசியமாகக் கூடி அநுபவிக்கும் கலையா அல்லது பொது ஜனங்கள் திரளாகக் கூடி அநுபவிக்கக்கூடியதா? நல்லவேளை சர் பி ராமசாமி அய்யர் சங்கீதம் எல்லோரும் கூடி அனுபவிக்க வேண்டியது எனச் சொல்லிவிட்டார் என கல்கி குறிப்பிடுகிறார்.

கல்கி கட்டுரைகள் பல்சுவை கொண்டவையாக இருக்கின்றன. அவரைப் பற்றி ஏற்ற இறக்க மதிப்பீடுகள் இலக்கிய உலகில் இருக்கலாம்.தமிழ் வசன நடை உலகில் அவர் வாழ்ந்து வருகிறார் என்றே தோன்றுகிறது...

sep 10

Strictly Personal

Strictly Personal நூல் என்னை ஒரு இடத்தில் ஏமாற்றிவிட்டது. என் எதிர்ப்பார்ப்பு என் குறையாகவும் இருக்கலாம். 33 இயல்களில், தமன்சிங் தன் தந்தை மன்மோகன் பிரதமர் காலம் பற்றி கொஞ்சமாவது பேசியிருப்பார் என எதிர்பார்த்து ஏமாற்றம் பெற்றேன்.

2004 தேர்தலில் காங்கிரஸ் அதிக இடங்களைப் பெற்ற கட்சி என்கிற வகையில் கூட்டணி சர்க்காரை அமைக்க முடிந்தது. காங் தலைவர் சோனியா பிரதமர் ஆவார் என்கிற எதிர்ப்பார்ப்பில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. மன்மோகன் சிங் அவர்களின் பெயரை சோனியா முன்மொழிந்தார்.

தமன் 32 வது இயலில் ஒரே ஒரு வரி எழுதுகிறார். On 22 May 2004 Manmohan Singh was sworn in as Prime Minister of India. அவ்வளவுதான். அடுத்த இறுதி இயலில் தமன் தருகிற வரிகள்

On the morning of 15 th Aug , Gursharan sits in front row as her husband addresses the national from the ramparts of the RedFort for the tenth consecutive year. She has read each draft of his speech and knows , what he is about to say..

இருவரும் சேர்ந்து பல நிகழ்வுகளில் இக்காலத்தில் பங்கேற்று பயணித்தனர்...என் அம்மா குருசரணுக்கு வாழ்க்கை என்பது தான் நினைப்பதைவிட மிகப்பெரிது என்கிற அனுபவம் கிடைத்தது என தமன் நூலை முடித்து விடுகிறார்.

தமன் , நிதி அமைச்சராக தன் தந்தை மிகப்பெரிய மாற்றங்களை கொணர்ந்த 1991-96 பற்றி விரிவாக எழுதியுள்ளார். நரசிம்மராவின் முழு ஆதரவுடன், சிதம்பரம் போன்ற அமைச்சர்களின் தேர்ந்த புரிதலுடன் ஏராள விமர்சனங்களை தாங்கி மன்மோகன் பெரும் பொருளாதார அடித்தளத்தை அமைத்துச் சென்றார்.

ஆரம்பத்தில் தயங்கிய அரசியல் உலகம், அந்தப் பாதையை கடந்த 35 ஆண்டுகளாக மாற்றிக்கொள்ளவில்லை. எந்த கட்சியானாலும் 1991-96 அடித்தளத்தின் மீதான பாதைகளிலேயே செல்ல முடிகிறது என்பதைக் காண்கிறோம்.

மீடியாக்கள் மன்மோகனை மெல்ல புரிந்து ஆதரவாக விவாதிக்கத் தொடங்கின. இடது மீடியாக்கள் கடுமையாக விமர்சித்தன. நாடாளுமன்ற விவாதங்களில் பெரும் சொல்லடிகளை அந்த

மென்மையான , மிக அடக்கமான , நேர்மையும் கண்ணியமும் மிகுந்த அந்த மனிதர் தாங்க வேண்டியிருந்தது. IMF WB மற்றும் மேற்கின் கைக்கூலி, அங்கு பென்சன் பெறுபவர் என்கிற அவதூறுகள் வீசப்பட்டன. இல்லாத மகன் இருப்பதாக கதைத்து, பங்கு மார்க்கெட் ஊழலில் சம்பந்தப்படுத்தி அவர் மீது வசை பாடினர்.

ஐ எம் எப்,உலக வங்கியில் தான் எந்த பென்சனும் பெறவில்லை, இந்திய அரசாங்க அதிகாரியாக ஓய்வு பெற்று ரூ 2000 மட்டுமே பென்சன் பெறுகிறேன் என நாடாளுமன்றத்தில் மனம் திறந்தார் மன்மோகன். எனக்கு மூன்றே பெண்கள் அவர்கள் எவரும் எந்த வங்கியோடும் தொடர்பற்றவர்கள் எனச் சொல்ல வேண்டியிருந்தது. வாஜ்பாய் அருகே வந்து அரசியலில் நிற்க தடித்த தோல் தேவை சார் எனச் சொல்லிப்போனார். அத்வானி கூட , மன்மோகன் சரியான விவரங்களையே தந்தார் என ஏற்று பேசிய காட்சியும் கிடைத்தது.

வாயில் வந்தபடி தெருக்களில் ஆர்ப்பாட்டங்களில் அப்போது நிதி அமைச்சரை, பின்னர் 2004-13 களில் பிரதமரை பேசியவர்களை பார்த்திருக்கிறேன். அறியாமையின் உச்சத்தில் அரைவேக்காட்டு பேச்சுக்களை கேட்டுள்ளேன். நானும் , ஆனால் மரியாதை குறைவாக அல்லாமல், பட்ஜெட்டுகளை என் அரைகுறை அறிவில் விமர்சித்து தொழிற்சங்க இதழ்களில் தலையங்கம் எழுதினேன்.

மன்மோகன் நரசிம்மராவை ஏற்க வைக்க ஒரு மாதமாவது பாடுபட்டிருப்பார். Middle path எடுத்துக்கோ, marginalised section Liberalisation ஆல் பாதிக்கப்படாமல் அணைத்துக்கொள் என்பது மட்டுமே நரசிம்மராவ் சொன்ன அறிவுரை. மன்மோகன் பட்ஜெட்டு உரைகள் இன்றும் கூட வளரும் நாடு தன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான prescription எனச் சொல்லலாம். நரசிம்மராவையே இந்திய பொருளாதார மாற்றங்களுக்கான father figure என மன்மோகன் அடக்கமாக தன் மகளிடம் கூட சொல்லியுள்ளார். அவரின் ஆதரவு இல்லாவிட்டால், ஒருவேளை மன்மோகன் கொடுத்த ராஜினாமை நரசிம்மராவ் ஏற்றிருந்தால் கூட, மன்மோகன் என்கிற பிரதமர் கிடைக்காமல் கூட போயிருக்கலாம். 1991-96ல் பிரதமராக, முழு ஆதரவை அவர் மன்மோகனுக்கு தந்து, அவரது மாண்பை வெளிக்கொணர்ந்தார்.

நேரு, இந்திரா, ராஜிவ் மாதிரி unquestionable leader அல்ல நரசிம்மராவ். அவர் great consensus builder , விவாதம் வழியே பொறுமையாக காங்கிரஸ்காரர்களை ஏற்க வைக்க போராடியவர் என மன்மோகன் தன் மகளிடம் சொல்லியுள்ளார்.

இந்த நாட்டில் அரசியல்வாதிகள் அதிகாரவர்க்கம் பெருமுதலாளிகள் nexus என்பதை நன்கு அறிந்து தன் பாதையை போட்டவர் மன்மோகன். தொழிலகம் பெயரில் விவசாயம் சுரண்டப்பட்டதை நன்கு அறிந்து தன்னால் முடிந்த மாற்றங்களை எடுத்துச் செல்ல முயற்சித்தேன் என தமனிடம் அவர் சொல்லியிருக்கிறார். அவர் இப்படி மனதின் குரலை வெளிப்படுத்தியுள்ளார்

How has India become poor? There is a conspiracy of silence when we talk about the root causes of poverty in this country..why indiscriminate protection to industry ..why should our farmers were made to buy high cost fertilisers

How are you going to meet the challenges of the 21st century if you have a working class which is half educated or uneducated?

If the PSUs are not profitable, how are you going to borrow at the rates of interest that prevail in our country?

If you do not tackle the shortage of foreign exchange, I do not believe this country can really sustain a high rate of growth

” இந்தியா எப்படி ஏழையானது? இந்த நாட்டில் **வறுமையின் மூல காரணங்களைப்** பற்றி பேசும்போது ஒரு **மௌனச் சதி** நிலவுகிறது... தொழில்துறைக்கு ஏன் **வரம்பற்ற பாதுகாப்பு** அளிக்கப்பட்டது?.. நமது விவசாயிகள் ஏன் **அதிக விலையுள்ள உரங்களை** வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்?

பாதிப் படித்த அல்லது படிக்காத தொழிலாளர் வர்க்கம் உங்களிடம் இருந்தால், **21-ம் நூற்றாண்டின் சவால்களை** நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

பொதுத் துறை நிறுவனங்கள் (PSUs) லாபகரமாக இல்லாவிட்டால், நமது நாட்டில் நிலவும் **வட்டி விகிதங்களில்** நீங்கள் எப்படி கடன் வாங்கப் போகிறீர்கள்?

நீங்கள் **அந்நியச் செலாவணி பற்றாக்குறையை**ச் சமாளிக்கவில்லை என்றால், இந்த நாடு உண்மையில் **அதிக வளர்ச்சி விகிதத்தைத்** தக்கவைத்துக் கொள்ள முடியும் என்று நான் நம்பவில்லை.”

அவர் முழு நேர அரசியல்வாதி அல்ல, அரசியல் தெரியாது என்கிற தாக்குதல் வந்தபோது, அற்புதமான பதில்களை அவர் அடக்கமாக தந்தார். தான் பல பிரதமர்களுடன், இந்திய வரலாறு உலக வரலாறு

மற்றும் அரசியல் அறிந்து வளர்ந்தவன் என்றார். எனக்கு low cunning self aggrandisement politics என்பது தெரியாமல் இருக்கலாம். நாட்டின், மக்களின் தேவைக்கான அரசியல் நன்கு உணர்ந்தவன் எனச் சொன்னார். முழுநேர அரசியல்வாதிகளின் ஏகபோகமல்ல தேசப்பற்று..எனது தேசப்பற்று சற்றும் குறைந்ததல்ல எனவும் அவருக்கு பதிலடி சொல்லத் தெரிந்தது.

சந்திரசேகர் போன்றவர்கள் சோவியத் மட்டுமல்லாமல் பல சர்வாதிகாரிகள் சரிந்தது போல், மன்மோகன் காணாமல் போவார் எனப் பேசினர். இதையெல்லாம் கேட்டு அவரது குடும்பத்தார் அதிர்ச்சிக்குள்ளாயினர். பைபாஸ் சர்ஜரி நடந்த அந்த மென் மனிதர் இந்த அரசியல் புயல் தாக்குதல்களை சந்திக்கும் உரம் பெற்றவரா என்கிற கவலை அவர்களுக்கு... மன்மோகனே சொல்லியுள்ளார், சில நேரம் பூனையிடம் சிக்கிக்கொண்ட புறா போல என் நிலைமை என்று..

மன்மோகன் தன் மகளிடம் ஒன்றைச் சொன்னார்.

The purpose of politics is not a ticket to personal power and wealth, but an instrument of purposeful social change..

அற்புதமான வரிகள்..அவர் வாழ்ந்து காட்டிய வரிகள்...நாடு அவரை கொண்டாடுமா...காங்கிரஸ் கொண்டாடுமா...

10-9-2025

sep 11

ஷர்மிஸ்தாவின் Pranab My Father

எடுத்துக்கொண்ட முடிவொன்றை அமுல்படுத்துவதில் மனிதனுக்கு கொஞ்சம் மகிழ்ச்சி கிடைக்கும். இரு அரசியல் குடும்பத்து பெண்கள் தந்தையர் பற்றி எழுதியதை simultaneous ஆகத் தருவது என்பதை சற்று நிறைவேற்ற முடிந்த ஆறுதல் இன்று.

ஷர்மிஸ்தாவின் Pranab My Father இறுதி இயல் மிக அற்புதமாக நகரக்கூடியது.

பிரணாப் குடியரசுத் தலைவர் பதவிக்காலம் முடிந்தபோது, தனியாக பிரதமர் மோடி சார்பில், நாடாளுமன்ற அவைகளின் சார்பில், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சார்பில் என அவருக்கு பிரிவு விழாக்கள் நடந்தன. வெகுவாக பாராட்டப்பட்டார்.

நீதிபதிகள் சார்பில் தலைமை நீதிபதி

The judges unanimously decided to declare that the President discharged his responsibility with dignity , apt ness and unparalleled sense of patriotism எனக் குறிப்பிட்டார். இது அப்போது பெரிய விஷயமாக பார்க்கப்பட்டது.

பிரணாப் 37 ஆண்டுகள் எம்பி- 22 ஆண்டுகள் அமைச்சர்- 5 ஆண்டுகள் குடியரசுத் தலைவர் என்கிற பேரனுபவம் பெற்றவர். சிகரெட், பைப் பிடிக்கும் வழக்கம் 1990 வரை இருந்தது. ‘தண்ணி’ அடிக்கிற பழக்கம் அவரிடம் இல்லை என்கிறார் மகள். துர்கா மீதான துதிப்பாடல்களை மனனம் செய்தவர். வீட்டில் மகள் ஷர்மிஸ்தாவின் நாத்திகத்திற்கு அப்பா தடையாக இருக்கவில்லை.

அப்பா , மீண்டும் உன்னை மோடி பிரசிடெண்ட் ஆக்கலாம் என பாஜக நண்பர்கள் சொல்கிறார்களே உண்மையா என மகள் வாயைக் கிளறினார். ஒன்று தெரிந்து கொள் மகளே அரசியல் முடிவுகளையும் நட்பு மரியாதைகளையும் குழப்பிக்கொள்ளாதே. அவரவர் அரசியலுக்கு உகந்தவரே வருவர். Personal relations different- that will never bind political decisions என்கிற பாடத்தை பிரணாப் தந்தார்.

அப்பா எழுதிய டைரி வால்யூம்கள் 51 என்கிறார் மகள். பலவற்றை வெளியிடமுடியாது. நுணுக்கமான பதிவுகள் கொண்ட அரசியல் இலக்கியம் அவை என்கிறார் மகள். தினம் எவ்வளவு கிமீ பயணம் என்பது கூட இருந்தது. 2012ல் 1,77,578 கிமீ பயணம் என்கிற செய்தி

இருந்தது. இளம் வயதில் வண்டியில், டிராக்டரில் ஏன் யானை மீது கூட எவ்வளவு தூரம் என எழுதி வைத்திருந்தாராம்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 2018, 2019 ஆண்டுகளில் இரு சர்ச்சைகளில் பிரணாப் பெயர் பெரும் விமர்சனங்களுக்கு உள்ளானது. ஒன்று ஆர் எஸ் எஸ் நிகழ்வில் பங்கேற்றது, அடுத்து பாரத் ரத்னா ஏற்றது. இவை குறித்து மகள் ஷர்மிஸ்தா எழுதியுள்ளார்.

ஜூன் 7, 2018ல் ஆர் எஸ் எஸ் அழைப்பை ஏற்று பிரணாப் நாக்பூர் சென்றார். மூன்றாண்டு பயிற்சி முடித்த கேடர்களுக்கு வழியனுப்பும் நிகழ்வு. பிரணாப் பேசிய தலைப்பு Nation Nationalism Patriotism. காங்கிரஸ் தரப்பில் கடும் விமர்சனம் எழுந்தது. ஷர்மிஸ்தா அப்போது காங்கிரசில் வளர்ந்துகொண்டிருந்தார். டெல்லி மகிளா காங் தலைவி, national spokesperson என்றெல்லாம் தெரியலானார். அப்பா நீ துரோகம் செய்கிறாய் என பழி சண்டை வீட்டில். அகமது படேல், அஜாய் மகான் போன்றவர் தடுக்கப்பார் என அறிவுறுத்தல்கள்.

அப்பா பிரணாப், மகளின் தாக்குதல்களுக்கு மௌனத்தை பதிலாக்கினார். தன் தரப்பை கேட்க யாரும் வீட்டில் இல்லை என்கிற எண்ணம் ஓடியிருக்கலாம். அப்பா open ground ல் வெப்பத்தால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமே என்கிற மகளின் கவலையும் கூட. அப்பாவோ ஏற்றுக்கொண்டேன், போகிறேன் எனச் சென்று உரையாற்றினார். முழு உரையும் இணையத்தில் இருக்கிறது என மகள் சொல்கிறார். பிரணாப் உரையில் சில வரிகள்

The construction of Indian Nationalism is ‘Constitutional patriotism, which consists of an appreciation of our inherited and shared diversity..

The soul of India resides in pluralism and tolerance. This plurality of our society has come through assimilation of ideas over centuries. Secularism and inclusion are a matter of our faith for us. It is our composite culture which makes us into one nation

” இந்திய தேசியத்தின் கட்டுமானம் என்பது, **‘அரசியலமைப்பு தேசப்பற்று’** ஆகும். இது நாம் **மரபுரிமையாகப் பெற்ற மற்றும் பகிரப்பட்ட பன்முகத்தன்மையை**ப் பாராட்டுவதில் அடங்கியுள்ளது.

இந்தியாவின் ஆன்மா **பன்மைக் கொள்கை மற்றும் சகிப்புத்தன்மையில்** வாழ்கிறது. நமது சமூகத்தின் இந்தப் **பன்முகத்தன்மையானது** பல நூற்றாண்டுகளாக **யோசனைகளை ஒன்றிணைத்ததன்** மூலம் வந்துள்ளது. **மதச்சார்பின்மையும் உள்ளடக்கமும்** நமக்கு ஒரு நம்பிக்கைக்குரிய விஷயம். இதுவே நமது **இணைவுக் கலாசாரம்**, அது நம்மை ஒரே தேசமாக ஆக்குகிறது.”

இந்த composite culture concept நேருவின் புகழ் வாய்ந்த ஒன்று என விவரமுள்ளவர் அறிவர். காங்கிரஸ் பேச்சை அறிந்தவுடன் பிரணாப் ஆர் எஸ் எஸ்க்கு கண்ணாடி காட்டிவிட்டார் என அறிக்கைவிட்டது.

வீட்டில் மகள் 'நீ போய் ஏன் ஆர் எஸ் எஸ்க்கு legitimacy தந்தாய்' என தந்தையிடம் கேட்டார். நான் யார் அதைத் தர. இந்திய மக்கள் ஆர் எஸ் எஸ் பிரச்சாரக்கை பிரதமர் ஆக ஏற்றுள்ளனர். மக்கள் ஏற்ற எதன் மீதும் விவாத வெளியை மூட முடியாது. You may choose to ignore it at your own peril என்கிற அனுபவத்தை மகளிடம் போட்டார் பிரணாப். மகளுக்கு காங்கிராசாரை எப்படி இனி சந்திப்பது என்கிற தயக்கம்.

அப்பா , நான் அரசியலை விட்டு விடட்டுமா என மகள். நீ என்ன பெரிய அரசியல் செய்துவிட்டாய் விட, தந்தையின் கேலி. சமாதானப் படுத்த , மகளே உன் தர்மம் காங்கிரஸ் அரசியல். எழுந்தாலும் வீழ்ந்தாலும் அது உன் தர்மம் என்றார் அப்பா.

வீட்டில் பூனைகள், தெரு நாய்கள் உட்பட உணவு ஏற்பாடு இருக்கும். 40-50 குரங்குகள் நுழைந்து காய்கறி பழத் தோட்டத்தை நாசம் செய்யும். விரட்டச் சொன்னால் அப்பா துரத்தாதே என்பார். உன்னிடம் பணம் இருக்கு காய் பழம் வாங்க முடியும். அவை என்ன செய்யும் என உயிர் தர்மம் பேசுவார் அப்பா என ஷர்மிஸ்தா எழுதுகிறார்.

முன்னதாக வாஜ்பாய் காலத்தில் நாடாளுமன்றத்தில் சாவர்க்கர் படத்திறப்பு என கமிட்டியில் முடிவெடுத்தனர். அதில் பிரணாப், சிவராஜ் படீல், சோம்நாத் சட்டர்ஜி உட்பட பலர் ஒருமித்து எடுத்த முடிவது. சோம்நாத்தை சிபிஎம் எச்சரித்து அறிக்கைவிட வைத்தது. சோனியா பிரணாபை கடிந்து கொண்டார். அவர் மன்னிப்பு கொடுத்தவர் என சோனியா விமர்சித்தார். காங்கிரஸ் 'பாய்காட்' செய்தால், நிகழ்விற்கு போகமாட்டேன், ஆனால் சாவர்க்கர் அந்தமான் துன்பங்கள் இல்லாமல் போகாது. அவரின் பின் வரலாறால் முன் வரலாறு போய்விடாது என்கிற விளக்கத்தை பிரணாப் சோனியாவிடம் தந்தார்.

2019ல் மோடி அரசாங்கம் பிரணாபிற்கு பாரத் ரத்னா முடிவெடுத்த செய்தி கசிந்ததால், ஷர்மிஸ்தாவை பத்திரிகையாளர்கள் கேட்கலாயினர். அப்பா உனக்கு பாரத் ரத்னாவா, இப்பத்தான் மோடி பேசி வைத்தார் என அப்பா சொல்ல, நீ ஏன் என்னிடம் கூட சொல்லலை என மகள். முடிவு அதிகார அறிவிப்பை பெறாதபோது சொல்வது அழகல்ல என்றார் பிரணாப். ராகுல் மட்டும் வாழ்த்துகள் என டிவீட் போட்டார். காங் தலைவர்கள் விழாவில் பங்கேற்கவில்லை.

பிரணாப் ஆகஸ்ட் 31, 2020ல் மறைந்தார். அவர் இறுதிக்கால மாதங்களில் காங்கிரஸ் தேற வேண்டுமே என்கிற கவலையைப் பட்டார். மோடியின் 'காங் முக்த் பாரத்' ஒருபோதும் நிறைவேறாது என்றாலும் , காங்கிரசில் ஜனநாயகமின்மை குறித்த கவலை அவரிடம் அதிகமானது. சுயவிமர்சனம் செய்துகொண்டார்.

மறைவதற்கு ஒரு மாதம் முன்னரான ஜூலை டைரி குறிப்பில்

Congress lost its democratic character which impacted the polity of the country. After Independence, if 5 family members of the same family controlled the congress presidency for 37 years , it speaks the worst form of hegemony….

How far people like me are responsible for this decline? Did the blind loyalty of people like me to Indira in 70s 80 s, and later to Sonia greatly responsible for mortgaging the party to the family… people like us are responsible for allowing Congress to disintegrate and become family fiefdom

" காங்கிரஸ் கட்சி தனது **ஜனநாயகத் தன்மையை** இழந்தது, இது நாட்டின் அரசியலை பாதித்தது. சுதந்திரத்திற்குப் பிறகு, **ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள்** 37 ஆண்டுகளாக காங்கிரஸ் தலைவர் பதவியைக் கட்டுப்படுத்தினால், அது **மோசமான ஆதிக்க வடிவத்தைக்** காட்டுகிறது.

என்னைப் போன்றவர்கள் இந்தக் **வீழ்ச்சிக்கு** எவ்வளவு தூரம் பொறுப்பு? 70கள், 80களில் இந்திரா காந்திக்கும், பின்னர் சோனியா காந்திக்கும் என்னைப் போன்றவர்களின் **குருட்டு விசுவாசம்**, கட்சியை அந்தக் குடும்பத்திற்கு அடகு வைப்பதற்குப் பெரிதும் பொறுப்பா? காங்கிரஸை **சிதைந்து போகவும்** ஒரு குடும்பத்தின் **சொந்த நிலமாக** மாறவும் அனுமதித்ததற்கு என்னைப் போன்றவர்களே பொறுப்பு."

ஒருவர் ஏற்கலாம். நிராகரிக்கலாம்.

மகளுக்கு மிக முக்கிய பாடத்தை பிரணாப் சொல்வாராம்.

Politics and Governance in a diverse country like India is nothing but balancing of different, often contradictory interests. This reflects the true ethos of parliamentary democracy

பிரணாபுடன் 50 ஆண்டுகள் தோழராக கல்லூரி கால நண்பனாக இருந்த பேரா அமல் குமார் முக்கோபாத்யாயா பிரணாப் பற்றி எழுதினார்

A politician befitting with the system whose personality is marked by civility , gentlemanliness, clear and rational thinking, taking decision coolly , never imposes his opinions to others, highly educated mind, a passion for work

சரியாகவே தன் தோழனை அமல் குமார் படம்பிடித்து காட்டியுள்ளார்...

மகள்கள் தந்தைகளை என் வழியேயும் கொஞ்சம் பேசிவிட்டனர்...

11-9-2025

sep 12

Well done DOT- BSNL- Unions

It seems that DOT is moving its cards beautifully paving the road to settle the issue of Pay and Pension revision to the absorbed BSNLwallahs.

The unions may feel good on finding one of their long pending demands settled by DOT with the due approval of DOE ID note dated 29-8-2025. The subject matter is ' calculating pension contribution at actual pay drawn instead of the maximum scale'.

DOE has approved the same from a prospective date that is from 1-9-2025 only, instead from 1-1-2017. Though it may stand as a grievance, BSNL may take good breath at least from that date regarding its 'expenditure burden' on pension contribution. For CG departments, this concession was given long back, now at least BSNL got that.

Each demand has its own background and its birth pains.

-37 A was brought at the behest of formation of BSNL

-Pro rata pension option (when combined service pension only there) was inserted during ITS option struggle

-Pension expenditure linked to 60 percent of Receipts withdrawn during 78.2 extension to pensioners

-Now pension contribution on actual pay instead of the maximum scale due to the exigencies of approving DPE directed Executive Scales.

This order of DOT dated 1-9-2025 is necessitated to settle the long pending issue of approving 3 rd PRC Executive scales which stands in the gateway to allow NON Executive scales and the following or simultaneous pension revision to both the pensioners.

Since the calculation of contribution is prospective (1-9-2025), the 3rd PRC scales may also be notional from 1-1-2017 and may become actual any day on or after 1-9-2025.

A sound question may arise, if notional how they revise pension to all those retired from 1-1-2017 that is post 2017 . Pension is fixed on the basis of last pay drawn. Their pension is fixed today as per 2nd PRC last pay drawn. If 3rd PRC scales are given notionally, can they fix pension as per notional pay so calculated.

DOT well ahead expecting this situation intimated its requirement to DOPPW seeking its support for a decision on' issuing PPO on notional pay', if necessary through relaxing appropriate pension rules. Hope DOPPW might have given its nod to settle this question. I do not know the exact version of DOPPW on this notional pay PPO issue, if DOT decides to settle Executives scales on 3rd PRC notionally from 1-1-2017.

Another important question is whether BSNL is going to come down to redesign the NE scales ‘on the same lines of Executive scales as arrived at during 2018’ or going to keep ‘the Nov 2022 scales’. The main cause of ‘reduced scales’ is the issue of pension contributions on the maximum of the scales. Now that question is settled. So BSNL may take that 2018 scales to satisfy the demands of the recognised unions in the wage committee.

DOT mentioned in its earlier leaked note sheet the followings.

-PSU division would notify the approved 3rd PRC scales for the purpose of revision of pension of pre 2017 BSNL IDA Pensioners

-BSNL would notify the revised pay scales for NE to enable their pension revision along with that of Executives.

The most important question one needs to address in this context is - DOT’s approval of scales and BSNL notification of scales only for the pension revision sake or that amounts to pay revision also to the BSNL employees. Whether DOT is going to issue any pay revision orders to Executives or not - one should wait and watch.

DOT Issuing such order only helps the NE to get their 3 rd PRC revision. For this one has to wait till ‘the Recorded Proceedings signed by both BSNL management and Unions’ issued.

In this ‘pension contribution’ matter also one may appreciate the wisdom of com O P Gupta by playing the sub rule 23 of 37 A ‘open ended one’.

" ….the Govt will specify the arrangements and the manner including the rate of pensionary contributions made by BSNL to the Govt ..”. This open ended enabling clause helped us without any amendments to 37 A to bring this 1-9-2025 intimation on Pension contribution.

Hope things will move smoothly after this 1-9-2025 letter addressed to CMD BSNL by DOT.

07 hrs 12-9-2025 R. Pattabiraman

sep 13

கொஞ்சம் நினைவு படுத்திக்கொள்ளலாமே என கீழ்கண்ட நூல்களை கடந்த சில நாட்களில் வாசித்து வைத்தேன். சில 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு முறை வாசித்தவையும் கூட. இவை குறித்தெல்லாம் என்னால் எழுத இயலாது என நான் அறிவேன். இலக்கிய ரசனைப் பயிற்சி எனக்குப் போதாது என்பதால், அந்நூல்கள் குறித்து கருத்து சொல்ல முடியவில்லை. வாசித்தேன். வாசிப்பில் ஆர்வம் இருப்பவர் எவராவது வாசிக்க விரும்பினால் வாசிக்கலாமே என்றே குறிப்பிடுகிறேன்

க நா சுவின் விமர்சனக் கலை

க நா சுவின் இந்திய இலக்கியம்

தி ஜா கட்டுரைகள்

கு ப ரா கட்டுரைகள்

கி ரா கட்டுரைகள்

க நா சு முன் வைத்து திறனாய்வு கைலாசபதி

முற்போக்கு இலக்கியத் திறன் என் சி பி எச்

மௌனியுடன் கொஞ்ச தூரம் திலீப்

இவை என் உரைகள் சு ரா

நவீனத் தமிழிலக்கிய அறிமுகம் ஜெயமோகன்

பாலையும் வாழையும் வெ சா

தமிழின் நவீனத்துவம் பிரமிள்

எழுத்து தொகுப்பு வல்லிக் கண்ணன்

இலக்கிய உலகை அகவுலகின் வெளிப்பாடுகள் என்கிற வகையில் புரிந்து கொள்கிறேன். காந்தி பேசிய அல்லது வாழ்ந்து காட்டிய- இரண்டும் அவருக்கு ஒன்றே என்கிற வகையில் அவரின் exemplarinessக்குள் நுழைவதில் - நுழைவதில் (அனுசரிப்பது என்பதில் பெருந்தோல்விகளுடன்) என் சௌகரியத்தை உணரமுடிந்தது. ஆனால் இலக்கியத்தில் ரசனை நுண்ணிய உணர்வு கற்பனை மனோவுலக பாய்ச்சல் என்பது குறித்து புரிபடா தன்மையே என்னிடத்தில் இன்னும். ஒருவேளை என் ஆழ உழைப்பை தராமல் மனம் மேலேழுந்தவாரியாக அதைப் பார்க்கிறதோ எனவும் உணராமல் இல்லை. அதனால்

நாகரிகமாக பயிற்சி இல்லை எனச் சொல்லி மூடிவிடுகிறேன். அரசியல் எழுத்துக்களில் எப்படியோ மனம் சௌகரியம் கண்டுவிட்டது.

இங்கு வெங்கட் சாமிநாதனின் 330 பக்க நூலிலிருந்து அவரின் இறுதி கட்டுரையிலிருந்து (1974 நவ தில்லி எழுத்தாளர் அவைப் பேச்சு) சில வரிகளைத் தரவே மேலே போட்ட பீடிகை. மேலே சொன்ன வேறு சில நூல்களில் குறிப்பிட வரிகள் இல்லாமல் இல்லை. வெ சாவின் இந்த உரை ' என்னைப் பற்றி' என்பது உள்முகப் பயணமாக இருந்த ஒன்று. அது மட்டுமல்ல அவ்வுரைதான் காந்தியை கொஞ்சம் பேசியதாகவும் இருந்தது. அதனாலேயே தரலாம் எனத் தோன்றியது. வெ சா அதிரடியாக தூக்கி கடாசும் விமர்சகர் என்கிற பெயரையும் பெற்றவர்.

வெ சா 'எழுத்து என் உயிர் மூச்செல்லாம் இல்லை' எனச் சொல்லி அந்த உரையில் பேசியிருப்பார். அவரது வரிகளை கொஞ்சம் 'பிச்சு பிச்சு' தருகிறேன்.

" மனித உன்னதம் எந்த வகையில் எந்த மார்க்கத்தில் மலர்ந்து தன்னை வெளிப்படுத்திக்கொண்டால் என்ன?

மனிதன் தன் சக மனிதர்களின் சமூகத்தின் , மனித குலத்தின் உன்னதத்திற்கான , பூரணத்துவத்திற்கான எத்தனையோ எண்ணற்ற மற்ற சாதனங்களில் எழுத்தும் ஒன்று. ..வாழ்க்கையே சாதனம் தான்..

"தன் வாழ்க்கை என்ற சாதனத்தில் தான் காந்தி தன் பூரணத்துவத்தை தன் உன்னதத்தை , அவருடைய சகமனிதரின் மனித சமூகத்தின் உன்னதத்தை வெளியிட்டிருக்கிறார்..

காந்தியைப் பொறுத்த விஷயத்தில் அவருடைய வாழ்க்கையிலிருந்து எழுந்தவைதான் அவருடைய எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் வெளியீடு பெற்றவை. இவையெல்லாம் சேர்ந்துதான் அவருடைய வாழ்க்கையும். இவற்றில் முரண் இருந்ததில்லை. எனது எழுத்து பேச்சு வேறு, வாழ்க்கை வேறு என்று அவர் சொன்னதில்லை. Gandhi's speeches and writing found substantiation in his life..எவ்வளவு பேர் எழுத்துக்கள அவர்களது வாழ்க்கையினோர் ஒன்றியைந்த அம்சமாக வாழ்க்கையிலிருந்து கிளர்ந்து வெளிப்பட்ட ஒன்றாக வாழ்க்கையின் வெளிப்பாட்டில் காணமுடிகிறது"

" நம் எழுத்தாளர்கள் அதைத் தொழில் பண்ணுபவர்கள். அவர்கள் வாழ்க்கை வேறு. எழுதும் எழுத்து வேறு"

" என்னளவில் சமூக பிரக்ஞைஎன்பது ஒரு தனி மனிதன் தான் வாழும் சமுகத்தில் தன் உறவைப் பற்றி, தன் உள்ளிருந்து எழும் பிரக்ஞையாகும். அது சமூகத்துடன் கொள்ளும் உறவாடலில் , தனி மனிதன் உள்ளிருந்து எழ வேண்டும்....ஒவ்வொரு மனிதனின் சமூகப் பிரக்ஞையும் அவனுக்கே உரிய தனித்துவத்தை அவனுடைய ஆளுமையைத் தன்னுள் கொண்டதாக இருக்கும் அவனை சமூகத்தின்மற்ற ஒவ்வொருவரிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டும். அதே சமயம் அவனும் மற்றவரும் வாழும் சமூகத்தையும் பிரதிபலித்துக் காட்டும்..."

Our writings speeches or actions need founding substantiation in life என்கிற காந்திய messageயை 'அதிரடி விமர்சகர்' இலக்கியத்தில் கடத்தப் பார்த்துள்ளார் .

அவரவர் ரசனைக்கு ஏற்ப அல்லது புரிதலுக்கேற்ப மேற்கண்ட நூல்கள் வாசகனோடு உறவாடலாம். அல்லது வேறுபட்டு தள்ளிப் போகலாம்.. நான் வாசித்தேன் என்ற அளவே சொல்லிக்கொள்ள முடியும்..

13-9-2025

sep 14

Com C Singh GS NFTE just reported me over phone the sudden demise of com Islam Ahmad, the fine leader of NFTE BSNL.

It is a very shocking news to all the people connected to telecom trade union movement . Com Islam a man and a leader of fine understanding of the issues of workers as well as industry , specially BSNL. He was considered as the tallest senior leader not only by the TU leaders also by the BSNL management. BSNL officers of high levels even listened him and appreciated his manners of telling things to them for settlement.

He was in the office of secretary Federation during Gupta's time, previously a leader from Telegraph background . He was instrumental to register the name of NFTE BSNL on the formation of BSNL company, the corporation. He greatly assisted com O P Gupta and com Jagan for bringing a wonderful settlement after 3 days September strike during the time of corporatisation.

He stood as a champion after Gupta's demise to safeguard the rules of 37 A and all issues connected to the absorbed employees. He was the leader who brought that even dismissal employees can get pension, a unique achievement of him. 100s of that category benefitted.

He fought with the management on the principle of Bonus, even a rupee , should be given to employees and he won that even that year of loss.

He had his uniqueness , unparalleled in getting recognition for more than one union, greatly fought for the recognition rules that only paved way for the continuous recognition of NFTE.

He had a great role in recognising the issue of 78.2 after ONGC officers fought and got that. His perseverance on that 78.2 yielded a good victory to lakhs of employees and discrimination was wiped out amongst the PSU employees. This helped the pensioners also to get the same.

His arguments and way of putting things in the National Council JCM was well appreciated by all the officers. He stood firm for the issues and caused issuance of many orders favouring employees.

He greatly traveled with senior leaders of the movement of Telegraph wing and KR of FNPTO, Gupta -Jagan - Vichare- Sajwani of NFTE. He was a brother like to the present GS com Singh.

He wrote many editorials in the Telecom, listened the grievances of comrades from various circles throughout India and took maximum efforts to settle them.

A friend guide and warm leader now passed away. A great loss to NFTE and even to the telecom movement.

A great personal loss also. Even three days before he discussed with the issue of wage revision. A fine personality , a pious leader is gone. A man of cool temperament is no more.

Salute to his services and heartfelt condolences.

14-9-2025

sep 14

பாதுகாப்பு உற்பத்தி ஊழியர் போராட்டம்

Ordnance Factories ‘பொதுத்துறையாக்கம்’ பிரச்சனையாகியுள்ளது. ஊழியர்களின் deemed deputation தொடரவேண்டும் என போராட்டங்கள் எழுந்துள்ளன. இச்சூழல் என்னை பி எஸ் என் எல் உருவாக்க 2000 ஆண்டிற்கான சிந்தனைகளுக்கு அழைத்துச் சென்றது.

பி எஸ் என் எல் தோழர்கள் 4 லட்சத்திற்கு மேல் அன்று கார்ப்பரேட்மய பிரச்சனையை சந்தித்தனர். அவர்களின் நிமித்தம் , பொதுத்துறைக்கு திரளாக நுழையும் அரசாங்க ஊழியர்களுக்கான 37 A உருவாக்கப்பட்டது.

பி எஸ் என் எல் 2000 போன்ற சூழலை , பாதுகாப்பு உற்பத்தி ஊழியர் சங்கங்கள் 2021 முதல் சந்தித்து வருகின்றனர். இவர்கள் சுமார் 62 ஆயிரம் ஊழியர்கள், இதில் பலர் பழைய ஓய்வூதியத்தில் வராமல், 2004க்கு பின்னர் வந்த ஊழியர்கள். Sanctioned Strength லட்சத்திற்கு மேல் இருப்பதை அரசாங்கம் வெட்டி குறைத்துள்ளனர் என ஊழியர் சங்கங்கத்தினர் விமர்சித்து வருகின்றனர்.

பி எஸ் என் எல்லில் அன்று NFTE, FNTO, BTEF போலவே ஓ எப் துறையில் AIDEF, INDWF, BPMS அங்கீகார சங்கங்கள் பெரிய அமைப்புகளாக உள்ளன. 2021 பொதுத்துறையாக்கம் எதிர்த்து - ஊழியர்களின் சேவை நிலைமைகள் குறித்து போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள் என இவர்கள் இன்று சந்தித்து வருகின்றனர்.

பி எஸ் என் எல்லின் கடந்த சில ஆண்டுகளின் சோதனைக்கால அனுபவத்தை முழுமையாகக் கணக்கில் கொண்டுள்ளனர் இத்தோழர்கள். தாங்கள் அப்படி நட்டப்படும் நிலைக்கோ, ஊதிய மாற்றம்- பென்சன் மாற்ற சிக்கலுக்கோ பின்னொரு காலத்தில் போய்விடக்கூடாது என நினைக்கின்றனர். ஓ எப் பொதுத்துறைகளுக்கு அனுப்பட்ட தோழர்கள் deemed deputation என்கிற வகையிலேயே ஓய்வு பெற விழைகின்றனர். DPSU (defence PSUs) பொதுத்துறைகளில் absorption இல்லாமல் ஓய்வு பெற அனுமதிக்க வேண்டும் என்ற போராட்டத்தை AIDEF, INDWF, BPMS இன்னும் பிற சங்கங்களுடன் கையில் எடுத்துள்ளனர்.

BSNL ல் இருந்தது போலவே அங்கும் மூன்று சம்மேளனங்கள், ITS- GrB போல அங்கு IOFSA - Gazetted Gr B சங்கங்கள் உள்ளன. பொதுத்துறை கம்பனிகள் உருவாக்க 2021-22 காலத்தில் எல்லோரும் சேர்ந்து

கோரிக்கைகளை எழுப்பவும் செய்தனர். அரசாங்க ஸ்டேடஸ், சம்பளம் அலவன்ஸ் உட்பட consolidated fund லிருந்து என்கிற கோரிக்கைகளை வைத்தனர். பி எஸ் என் எல்லில் நாம் 2000ல் பென்சன் என்பது consolidated fund லிருந்து என வைத்திருந்தோம்.

7 பொதுத்துறைகளின் உருவாக்கத்தை இனி மாற்ற முடியாது என்கிற சூழலில் , ஊழியர்களின் அரசாங்க ஊதியம், பதவி உயர்வுகள், பென்சன் போன்ற சேவை நிலைமைகளையாவது deemed deputation மூலம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிற முனைப்பில் இச்சங்கங்கள் இறங்கியுள்ளன. பிரசார் பாரதியில் செய்யப்பட்ட ஒன்றை தங்களுக்கும் தரவேண்டும் எனக் கோரி வருகின்றனர்.

பிரசார் பாரதி ஊழியர்கள் , அக் 5 2007 வரை வந்தவர்கள் -போராடி deemed deputation லேயே மத்திய அரசாங்க ஊழியராக ஓய்வு பெற அனுமதி பெற்றனர். அப்படி ஒரு வாய்ப்பை பாதுகாப்பு உற்பத்தி ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்கிற போராட்டம் தீவிரமாகியுள்ளது. அரசாங்கம் , பிரசார் பாரதி 1990 Actல் 2011 இறுதியில் திருத்தம் ஒன்றைக் கொணர்ந்தது. அதன் மூலம் அந்த ஊழியர்கள் deemed deputation அந்தஸ்தில் , மத்திய அரசாங்க ஊழியர்களாகவே 6வது , 7 வது CPC படி ஓய்வு பெற முடிந்தது. AIR, DD சார்ந்த இந்த ஊழியர்களில், அந்த குறிப்பிட்ட அக் 5, 2007 தேதிக்குப் பின் வந்தவர் - பிரசார் பாரதி கார்ப்பரேஷன் ஊழியராக PRC ஊதிய முறைக்குள் வந்தனர்.

இந்த பிரசார் பாரதி deemed deputation அந்தஸ்து போலவே DPSUக்களிலும் தங்களை சேவைக்காலம் முழுமைக்கும் மத்திய அரசாங்க ஊழியராகவே வைக்கப்பட வேண்டும் என OF - DPSUவில் பணிபுரியக்கூடியவர் போராடி வருகின்றனர். அப்படியிருந்தால் மட்டுமே வரப்போகிற 8 வது ஊதியக்குழு பலன்களை தாங்கள் பெறமுடியும் என சங்கங்கள் ஊழியர்களிடம் விளக்கி வருகின்றன.

மத்திய அரசாங்கம் 1-10-2021 முதல் 7 பொதுத்துறைகள் என்கிற அரசிதழ் அறிவிப்பை (41 ஓ எப் களை மாற்றி) வெளியிட்டது. பி எஸ் என் எல் போலவே 37 A படி Absorption என்றது. முதல் இரண்டு ஆண்டுகளுக்கு deemed deputation எனச் சொல்லி பின்னர் அதை 2025 வரை நீட்டித்தது.

Department of Defence Production OM dated 24-9-2021

3. The Govt has decided that all the employees of OFB belonging to the production units and also identified non production units shall be transferred en masse to the new

PSUs on terms of foreign service without any deputation allowance deemed deputation initially for two years from the appointed date, in accordance with Rule 37 A of CCS pension Rules 1972

4. Each of the new DPSUs is required to frame rules and regulations related to service conditions of the absorbed employees and seek an option for permanent absorption from the employees on deemed deputation….A committee would be constituted by DDP for guiding the new DPSUs in this regard so that the absorption package given is attractive.

5. Till such time the employees remain on deemed deputation to the new DPSUs, they shall continue to subject to all the extant rules , regulations and orders as are applicable to the CG servants, including related to their pay scales, allowances, leave, medical facilities, career progression and other service conditions

7..The pension liabilities of the Retirees and the existing employees will continue to be borne by the Govt from the Ministry of Defence budget (before 1-1-2004 employees)

8. The conditions of payment of pensionary benefits to the employees of OFB on absorption to the new DPSUs would be regulated in accordance with Rule 37 A of CCS pension Dukes 1972.

9. These orders will come into effect from 1-10-2021(appointed date)

சங்கங்கள் நீதிமன்ற போராட்டங்களையும் நடத்தின.

நீதிமன்றத்தில் (BPMS case Aug 2023) para 32

“The GOI has decided that all employees of OFB belonging to production units would be transferred to the corporate entities on deemed deputation initially for a period of two years without altering their service conditions as CG employees. It has been stated on the affidavit that the pension liabilities of the retirees and the existing employees will continue to be borne by the Govt..Meaning thereby , it has been stated on affidavit that the service conditions of the employees will not be changed. They will be entitled to the same benefit which they were drawing prior to conversion..”

இந்த வழக்கில் கார்ப்பரேஷன் என்கிற கொள்கை முடிவில் தலையிட முடியாது என்பதும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மற்றொரு வழக்கான AIDEF vs GOI dated 29th July 2024 ல் Madras HC

6. This has been reiterated in both the counter as well as in the reply of the respondents to the petitioner’s rejoinder wherein they state that the Govt remains committed to safeguard the interests of the erstwhile OFBs. At paragraph 35 of reply dated12-2-2024 of the respondents to rejoinder dated 8-11-2021, they make it clear that the employees of erstwhile OFBs on deemed deputation to the newly formed 7 PSUs would continue as CG servants as their pay scales , allowances, leave , medical

facilities, carrier progression and other service conditions will continue to be governed by the extant rules, Regulated and orders as are applicable to CG servants

7. They would be given an option for permanent absorption in the new DPSUs and their terms of service would change only consequent upon their exercises of such option. The Delhi HC in BPMS has taken note of this fact

தற்போது நிர்வாகம் ஊழியர்களிடம் option பெற நடவடிக்கைகளை, கமிட்டி ஒன்றை போட்டு செய்ய நினைக்கும் சூழல் உருவாகியுள்ளது . தொழிற்சங்கங்கள் ஊழியர்களிடம், நிலைமைகளை எடுத்துச் சொல்லி - 'ஆப்ஷன்' தரவேண்டாம் இயக்கத்தில் இறங்கியுள்ளனர். 8வது ஊதியக்குழு அமையவிருக்கும் நேரத்தில், ஆப்ஷன் கொடுத்து பொதுத்துறைக்குப் போனால் அப்பலன்கள் கிடைக்காது என்பதையும் எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

நிர்வாக கமிட்டிக்கு TOR தரப்பட்டுள்ளது. அதில் 'விருப்பம் தராத ஊழியர்களை எப்படி redeploy செய்வது' அல்லது 'வி ஆர் எஸ் வாய்ப்பு' போன்றவற்றையும் ஆய்ந்து சொல்லக் கேட்டுள்ளனர். அந்த கமிட்டி ஆவணத்தையோ, AVNL பொதுத்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள absorption service conditions ஆவணத்தையோ என்னால் பொது வெளியில் தெரிந்துகொள்ள முடியவில்லை.

கடுமையான சூழலில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தங்கள் முழு ஒற்றுமையை வெளிப்படுத்துவார்கள் என நல்ல நம்பிக்கையுடன் ஊழியர் சங்கங்கள் போராடி வருகின்றனர். AIDEF பொதுச் செயலர் தோழர் ஸ்ரீகுமார் அவர்கள் தலைமையில் ஊழியர்களது கோரிக்கைகள் வெற்றியடைய நல் வாழ்த்துகள்!

18 hrs 14-9-2025 R. Pattabiraman

sep 15

Tales of Fathers by Daughters

Strictly personal by Daman singh and Pranab My Father by Sharmistha என்கிற இரு நூல்கள் குறித்த எனது முகநூல் இடுகைகளை தொகுத்து சிறு நூலாக்கியுள்ளேன். பெண்களின் அரசியல் இலக்கியமும் சுவையாகவே இருக்கும். ஆகஸ்ட் 14, 2025 முதல் செப்டம்பர் 11, 2025 காலத்தில் இந்த இடுகைகள் முகநூலில் எழுதப்பட்டன. இரு நூல்களும் அளவில் சேர்த்தால் 825 பக்கங்கள் வரும். இடுகைகள் எனப் பார்த்தால் 18 வரும். அவை 60 பக்க அளவில் இங்கே பிரசுரமாகிறது.

இரு நூல்கள் குறித்தும் மாறிமாறி எழுதியதை, பிரசுர வாசக வசதிக்காக மன்மோகன் தனியாகவும் பிரணாப் தனியாகவும் தொகுத்துக் கொடுத்துள்ளேன். முன்னீடு என ஓர் இடுகையும், பின்னீடாக ஓர் இடுகையையும், பொதுவானவை என அடுக்கியுள்ளேன். ஒரு சேர படிப்பவர்களுக்கு சுவாரஸ்யமாகவே இருக்கக்கூடும். இனி உள்ளே வைத்திருப்பவை பேசட்டும்

sep 16

கடந்த செப் 12, 2025 அன்று நான் எழுதியிருந்த DOT- BSNL சார்ந்த இடுகை ஒன்று சம்பந்தப்பட்ட தோழர்களால் எப்படி புரிந்து கொள்ளப்பட்டது என ஊகிக்க முடியவில்லை.

விவரங்களை அறிவதிலும் அதை உள்வாங்கி புரிந்து கொள்வதிலும் தோழர்கள் -உறுப்பினர்கள் -தலைவர்கள் எப்போதும் ஒரு படித்தாக இருப்பதில்லை. அவரவர் உள்வாங்குதலுக்கேற்ப அமைதியாக இருப்பது அல்லது எதிர் வினைகள் செய்வது நிகழும். இதில் தனிநபர் ego கலப்பும் இருந்தால் அதற்கேற்ப அலட்சிய பாவங்களும் தொழிற்படும். பதவிக்கும் பொறுப்பிற்குமான புரிதல் விகிதமும் இதில் தென்படும். சில நேரங்களில் பதவியும் அலட்சியமும் நேர்விகிதத்தில் பயணிக்கும்.

DOT-BSNL ஆகிய இரு நிர்வாகங்களுமே அவர்களுக்கு முன்னர் இருக்கக்கூடிய உத்தரவுகள் மாற்றப்படும் வரை அவற்றின் வரையறைக்குள் செயல்படும் வரம்புகளைக் கொண்டவை. ஊதிய மாற்றம் பி எஸ் என் எல்லில் நடைமுறைக்கு வரவேண்டும் என்றால், முதலில் Executive க்கான ஊதிய மாற்றம் அறிவிக்கப்படவேண்டும். அதையொட்டியே, அதற்கு conflict இல்லாமல் NE ஊதிய மாற்றம் நடைமுறைக்கு வரமுடியும். இப்படியான சூழலை DPE உத்தரவுகள் கொடுத்துள்ளன என்கிற புரிதல் நிர்வாகத்தினரிடம் தெளிவாக இருக்கிறது.

பென்சன் ரிவிஷன் என்கிற கோரிக்கையை , பென்சனர் சங்கங்கள் தீவிரப்படுத்தினர். எண்ணிக்கையிலும் இவர்கள் அதிகம் உள்ளனர். அனைத்து பென்சனர் சங்கங்களும் ஒரு முக்கிய விஷயத்தில் தங்கள் நிலைப்பாட்டை சாதிக்க முயன்றனர். அது delinking pension revision from BSNL wage revision.

பென்சனர் சங்கங்களின் இந்த நிலைப்பாட்டை, அதாவது ஊதிய மாற்றம் செய்வதற்கு சாதகமான உத்தரவுகள் இல்லா சூழலில், பென்சன் மாற்றத்தை பரிசீலிக்கவே கூடாதா என்கிற கேள்வி விவாதிக்கப்பட்டது. பரிசீலிக்கலாம் என்கிற உடன்பாட்டு நிலையை DOT தன் 17-10-2022 கூட்டத்தில் பென்சனர் தலைவர்களிடம் வெளிப்படுத்தியது. அதே நேரத்தில் அப்படி ஒன்றை பரிசீலிக்கும்போது, அது ஊதிய மாற்றம் என்பதுடன் conflict ஏற்படுத்தா வண்ணம் நடைபெறவேண்டும் என்கிற கடமையை DOT உணர்ந்தது.

ஆனால் இந்த நிலைப்பாட்டை பேச்சு வார்த்தையில் பங்கேற்ற தலைவர்கள் ஒரு படித்தாக புரிந்துகொள்ள முடியாமல் போனது.

எந்த அமைப்பாக இருந்தாலும், அதில் தலைவர்களின் செல்வாக்கு என்பது அந்த அமைப்பின் -உறுப்பினர்களின் நம்பிக்கையை பொறுத்தே அமையும். நம்பிக்கை என்பது அவர்களின் நலன் சார்ந்த தீர்வுகளால் கட்டப்பட்டால் அது உயர்வாக இருக்கும்.

அமைப்பில் பெற்ற செல்வாக்கை தக்க வைத்தல், வேறு எவருக்கும் அதில் பங்கு தர மறுத்தல், செல்வாக்கை ஏகபோகமாக எண்ணி துய்க்க காரியமாற்றுதல் போன்றவை அமைப்புகளில் அடுத்து வளர விரும்பும் தலைவர்கள் மத்தியில் மோதல்களை , வேறுபாடுகளை உருவாக்கும். நலன் சார்ந்து கவனம் குவிக்கப்பட வேண்டிய 'அமைப்பின் பலம்', மோதல் சார்ந்த செலவிடப்பட்டு விரயமாகும்.

'என் மரியாதை' என்பதை மய்யமாக கொண்ட செயல்பாடு , அமைப்பு உருவாக்கும் குணங்களில் ஒன்று. 'என் மரியாதையே அமைப்பு மரியாதை ' என்கிற பார்வை, சொந்த விசுவாசிகள் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ள எத்தனிக்கும். இதுவும் அமைப்புகள் உருவாக்கும் குணமே. இப்படியான 'இந்திராவே இந்தியா', இன்று 'மோடியே மோட்சம்' என்கிற பெரும் அரசியல் விளயாட்டுக்களை இந்தியா கண்டது தான். தனித் தலைவர் ஒருவரின் 'கடாட்சங்களில்' மட்டுமே அமைப்புகள் நகரா. ஆனால் இந்திய உளவியல் அப்படிப்பட்ட 'அருளுக்காக' அதை கொண்டாடும் தன்மையுடனேயே தொழிற்படுகிறது.

சரி , issueக்கு வருகிறேன். பென்சன் ரிவிஷன் செய்ய வேண்டும் என்றால் அதற்கு புதிய ஊதிய நிலைகள் தெரிய வேண்டும் என்பதிலும் DOT தெளிவாக இருந்தது. அதன் ஒரு பலவீனம் NE ஊதிய நிலை பற்றிய அலட்சியம். இது கேள்வியான பின்னர் DOT அதை ஏற்றது. பி எஸ் என் எல்லிடம் பெறுவோம் என்றது. சில பென்சனர் தலைவர்களுக்கு பென்சன் ரிவிஷன் செய்ய 'pay scales' அவசியம் என்கிற புரிதல் இல்லை. அப்படியொன்றும் அவசியமில்லை என்கிற பேச்சை அவர்கள் உதிர்த்து வந்தனர்.

'Pay revision' இல்லாமல் பென்சன் ரிவிஷன் இல்லை எனப் பேசியவர்களுக்கும் தெளிவு கிடைத்தது. DOT அப்படி செய்ய வழியுண்டு எனச் சொன்ன பின்னர், அவர்கள் அதையே

வலியுறுத்துவதில் அர்த்தமிருக்காது என உணர வேண்டியதானது. ஆனால் மீண்டும் 7 th CPC or 3 rd PRC என்கிற வேறுபட்ட நிலைப்பாடுகள், வழக்குத் தீர்ப்பு என்கிற சூழல் உருவாயின. வழக்கு தீர்ந்தபாடில்லை.

இன்று நிலைமை புதிய சூழலுக்கு சென்றுள்ளது. DOT கடந்த செப் 1, 2025ல் BSNLக்கு எழுதிய pension contribution கடிதம் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. NE சங்கங்கள் முழு மூச்சாக ஊதிய உடன்பாடு ஒன்றை, முடிந்தவரை stagnationயை குறைத்து போட இயலுமா எனப் பார்க்கின்றனர். உடன்பாடு நடைமுறைக்கு வரவேண்டும் என்றால், DOT ஆல் Executive ஊதிய மாற்றம் அறிவிக்கப்பட வேண்டும். இதை DOT செய்திட , அரசாங்க உத்தரவுகள் அதற்கு அதிகாரத்தை கொடுத்துள்ளனவா என்பது தான் புரிந்து கொள்ளப்பட வேண்டிய கேள்வி. DOT , ‘அதிகாரிகளுக்கான ஊதிய மாற்றத்தை’ அறிவிக்குமா? அறிவித்தால் மகிழ்ச்சி. ஆனால் அறிவிக்குமா?

பி எஸ் என் எல் தனது குறிப்பில்

There are number of PSUs which are loss making and the govt has to decide in totality என்கிற எச்சரிக்கை குறிப்பையும் சொல்லியுள்ளது.

சரி. DOT ஆல் pre 2017 pensioners க்கு , அனைத்து பென்சனர் சங்கங்களும் கோரும் வகையில் பென்சன் மாற்ற அறிவிப்பை செய்ய முடியுமா? தாங்கள் அப்படி செய்ய உத்தேசித்துள்ளோம் என்பதை கசிந்த ‘நோட் சீட்’, மற்றும் அக் 17, 2022 கூட்டக் குறிப்புகளில் DOT சுட்டிக் காட்டியது. இப்போது DOE காட்டிய பச்சைக்கொடி Executive Scalesயை அப்படியே எடுத்துக்கொள்ள DOTக்கு உதவியுள்ளது. NE scales குறித்து சங்கங்களுடன் உடன்பாடு வந்தால், அந்த ஸ்கேல்சும் DOTக்கு கிடைத்து விடலாம் (முன்னரே அது பெற்றும் வைத்திருக்கலாம்).

இந்த சூழலில் post 2017 Retirees க்கும் ஏற்படும் ‘அனாமலி’ குறித்தும் DOT தெளிவு படுத்தியுள்ளது. அவர்களுக்கு notional pay fixationல் பென்சன் நிர்ணயம் என்றது. இதற்கு DOPPW ஒப்புதல் அல்லது பென்சன் விதிகளில் மாற்றம் தேவைப்படலாம். PPO on the basis of Notional Pay என்பது ஏற்கப்படவேண்டும். இப்படி செய்வதால் ஊதிய மாற்றம் மேலும் தள்ளிப் போக வாய்ப்புண்டு.

DOT தான் தெளிவு படுத்திய 17-10-2022 போக்கிலேயே காய்களை நகர்த்தி வருகிறதோ என எனக்குத் தோன்றுகிறது. ஊதிய மாற்றம்

என்பதைவிட, pre 2017- post 2017 conflict இல்லாமல் புதிய ஊதிய நிலைகளை notify செய்து ‘பென்சன் மாற்றம்’ என்கிற திசையில் செல்கிறதோ என எனக்குத் தோன்றுகிறது. இதனால் பென்சனர் சங்கங்கள் ஒரு சேர தங்களின் தீர்க்க தரிசனம் குறித்து பெருமையும் கொள்ளலாம்.

சில பென்சனர் சங்கங்கள் தங்களின் 7th CPC வழக்கு துணை நிற்கும் என தொடர்ந்து முயற்சிக்கவும் கூடும்.

தொழிற்சங்கங்களுக்கு post 2017 பென்சன் பிரச்சனை தீரலாம் எனக் கருதினாலும், ஊழியர்கள் ஊதிய மாற்றப் பலன்களை பெறுவதில் மேலும் கால தாமதமா என்கிற கவலை உருவாகலாம். இவையெல்லாம் எனக்குத் தோன்றுபவையே. நடக்கலாம். நடவாமல் நான் தவறாகவும் ஆகலாம். நிலைமைகளைப் பார்த்து மனதில் தோன்றியதைச் சொல்கிறேன். அவ்வளவுதான். ஏற்பதும் அலட்சியப் படுத்துவதும் அவரவர் ‘பதவி -செல்வாக்கு’ பொறுத்து அமையும்.

9 hrs 16-9-2025   R. Pattabiraman

sep 18

Theory & Practice

என் அனுபவத்தில் பெரும் முரண் ஒன்றை என் வாழ்க்கைச்சாலையில் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இளைஞனாக மார்க்சை வாசித்தபோது பெரும்பாலும் தெருவில் நிற்பவனாக இருந்தேன். மார்க்ஸ் அதிகமாக theoryகாகவும், கொஞ்சம் practiceக்காகவும் நேரம் செலவழித்தவர். Marx 's theory is for action but Marx is an embodiment of theory. அப்போது நான் அதிகமாக practice ஓரளவு theoryக்காக நேர செலவீட்டை செய்து வந்தேன். ஏறத்தாழ 40 ஆண்டுகள் இப்படிப் போயிருக்கும்.

இங்கு நான் practice எனச் சொல்வது எனது பெரும்பான்மையான தொழிற்சங்க செயல்பாட்டையும், ஓரளவு கட்சி செயல்பாட்டையும் தான். அதாவது ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதல், கூட்ட ஏற்பாடுகள், கூட்டம் பேசுதல், மாநாடுகள், நேரம் பார்க்காது கண்விழிப்பு என்றவகையில் அந்த களப்பணி practice இருந்தது. ஊரில் எந்த அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் வேலைநிறுத்தம் என்றாலும் அங்கு மணிகணக்காக நிற்றல் , சக ஊழியனுக்கு பாதிப்பு என்றால் அதை துடைத்தல் - அதாவது உறுப்பினர் எப்போதும் சரியானவர் என்ற புரிதலில் செயல்படுதல். கல்லூரி ஆசிரியர் இயக்கம் முதல் நகர சுத்தி தொழிலாளி ஈறாக நிற்காத இடமில்லை. இவை தான் நான் practice என அனுசரித்தவை. இந்த practiceல் சில சமயங்களில் நேரவிரயம் ஆகியிருக்கும். ஆனால் அதைப்பற்றிய விழிப்புணர்வு ஏதும் இருந்ததில்லை. நேரம் பொன்போன்றது என்ற பேச்சு மட்டும் இருக்கும்.

பெரும்பாலான பயணங்கள் பேருந்து வழியாகவே இருந்தன. 24 மணிநேர பயணம் கூட அவ்வாறு பேருந்து வழியில் செய்யப்பட்டதும் உண்டு. இரயில் பயணங்கள் 90 சதம் இரண்டாவது வகுப்பு பெட்டியில் தான் நடந்தது. பம்பாயிலிருந்து டாய்லட் அருகேயே பலமணிநேரம் நின்று unreservedல் வந்த அனுபவம்கூட கிடைத்தது.

அப்போது theory என்பது மார்க்ஸ் ,எங்கெல்ஸ் ,லெனின் ,ஸ்டாலின், மாவோ, ரோஸா , கிராம்சி (புரிந்தும் புரியாமலும் அறிந்தும் அறியாமலும்) இன்னும் பல மார்க்சியர்கள் வாசிப்பு. இந்திய இடதுசாரி தலைவர்கள் வாசிப்பு, இடது பத்திரிகைகள் வாசிப்பு, அம்பேத்கர் எழுத்துக்கள் ,தலித் வாய்ஸ், பெரியார் மற்றும் திராவிட கழக

வெளியீடுகள் வாசிப்பு, மெயின்ஸ்ட் ரீம், ஜனதா , இபிடபிள்யு, இன்னும் ஏன் ஆர்கனைசர் கூட வாசிப்பு... அவ்வப்போது தொழிற்சங்கத்திற்காக எழுதுதல், இடதுசாரிகளின் பிரிவினர்களுடன் விவாதித்தல் போன்றவைகளுடன் கல்லூரி நூலகம், சிபிஎம் நூலகம், தஞ்சை சிபிஅய் நூலகம், பள்ளி நூலகம், மாவட்ட நூலகம் வழி புத்தகங்கள் வாசிப்பு அதை குறிப்பெடுத்தல், டெஸ்க்டாப் கம்ப்யூட்டர் வந்தவுடன் அதன் வழி அவ்வூரின் முதல் 12 டயல் அப் இண்டெர்நெட் பயனாளிகளில் ஒருவனாகி அதன் வழி வாசிப்பு என்பதாக எனது theory நேரம் சென்றது. இலக்கியத்தை எப்போதாவது எட்டிப்பார்ப்பதுண்டு. அது வங்கித்தோழர் ரகுபதியால் வாய்க்கும்.

கொஞ்சம் எழுதுதல் என்பதும் கூடவே நடந்தது. அப்போது காந்தி, நேருவிடம் நான் செல்லாமல் செலவுசெய்த காலம்.

நான் காந்தியை எட்டிப்பார்த்த காலத்தில் எனது வாழ்க்கையில் அந்த முரண் ஏற்பட்டது. முழுநேர வாசிப்பாளன், சிலவற்றை எழுதிப் பார்ப்பவன் ஆக நேர்ந்தது. காந்திக்கு செயல் தான் அடிப்படை. Gandhi is an embodiment of action ..action with moral impulse is his theory. அவர் தெருவிலேயே மக்களுடனேயே இருந்தவர். மார்க்ஸ் பெரும்பாலும் படிப்பறையில் இருந்தவர். காந்தியை மேலும் மேலும் அறிந்துகொள்ளும் காலத்தில் எனது practice என மேற்சொன்ன அனுசரிப்புகள் குறைந்தன.

மார்க்ஸ் right oriented மனோபாவத்தை என்னுள் அதிகம் விதைத்ததால் இன்றும் அதிலிருந்து என்னால் விடுபடமுடியாமல் இருப்பதை உணர்கிறேன். காந்தியோ duty oriented மனோபாவத்திற்காக நின்றவர். அப்படி duty oriented ஆக இருப்பவர்கள் மீது இப்போதெல்லாம் மனதில் மரியாதை கூடுகிறது.

சிலர் கூடிவிட்டால் எதையும் போராடி சாதிக்கமுடியும் என்ற மனோபாவத்தை மார்க்ஸ் ஏற்படுத்தினார். நான் எப்போதும் சரியானவன் ஏனெனில் மார்க்சை படிப்பவன் என்ற உணர்வை அவர் ஏற்படுத்தினார். Vanguard என்ற எண்ணத்தைதான் லெனின் உணர்த்திக்கொண்டிருந்தார்.

போராட்டத்தை மக்கள் மயப்படுத்தியவர் காந்தி . காந்தி எனது லிமிட்டேஷனை உணர்த்துகிறார். I am fallible என உணர்த்துகிறார். இரட்டைநிலைப்பாடு குறித்து என்னிடம் கேள்விகளை எழுப்புகிறார். Turn searchlight inwards என்கிறார். Sweep your own house clean என்கிறார். Where is your moral practice என கேட்டுக்கொண்டேயிருக்கிறார். Be an

exemplary otherwise your talks are waste என காந்தி சொல்லித்தருகிறார். நடந்து காட்டிவிட்டு அதைப் பற்றி பேசு என்கிறார்.

இப்போதும் எனது theory என்பதில் அதன் அனுசரிப்புகளில் பெரிய மாற்றம் இல்லை. வெவ்வேறு வாசிப்புகளை சேர்த்துக்கொண்டுள்ளேன். காந்தி, நேரு, படேல், கிருபளானி, பிரசாத், ராஜாஜி, முன்ஷி இன்னும் பல காந்தி, நேரு குறித்த ஏராள வாசிப்புகள் , சோசலிஸ்ட் தலைவர்களான ஜேபி, லோகியா, ஆச்சார்யா நரேந்திரதேவ், அசோகாமேத்தா, லிமாயி வாசிப்புகள், வலதுசாரிகளில் சாவர்க்கர், ஹெட்கேவர், கோல்வால்கர், தீன் தயாள், தெங்காடி வாசிப்புகள் என பரவலாயின. ஏதாவது எழுதிப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

இதனால் நேர விகிதாச்சாரம் முன்பிருந்தது போல் இல்லாமல் சற்று மாறுபட்டுள்ளது.

எல்லாம்தான் படிச்சிங்க என்ன பண்ணி கிழிச்சிங்க என்ற கேள்வியை சிலர் என்னிடம் கேட்டதுண்டு. ஓரிரு புத்தகங்களை அறியாமல் கைப்பட்டு கிழித்ததுண்டு. நோட்டுத்தாள்களை அவ்வப்போது கிழித்ததுண்டு ..வேறு அதிகமாக கிழித்து வீணாக்கவில்லை.

எனது theory and Practice அனுமானத்தில் அனுசரிப்புகளில் தனி நபராக நான் உணர்ந்த முரணை பதிவிட்டுள்ளேன். அதற்கு மேல் இதில் வேறு முக்கியத்துவம் ஏதுமில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பே என் மனக்குரலாக இருக்கும் என் தோழன் நமரி சொன்னான். Reading is also a doing and doing is also a reading. அவன் சொன்னது சரி என்றால் அதில் பாதியான reading என்ற doing செய்துகொண்டிருக்கிறேன். படிப்பதும் ஒருவகை உழைப்பு செயல் என்றால் உழைப்பாளியாக இப்போதும் என்னை சேர்த்துக்கொள்ளலாம். 26-2-2023

sep 19

The Good Boatman

ராஜ்மோகன் காந்தியின் The Good Boatman -A portrait of Gandhi நூல் வந்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று படிக்கும்போதும் அவ்வளவு fresh ஆக இருப்பதை உணரமுடியும்.

மார்சலோ மஸ்ட்டோவின் The Marx Revival படித்துக்கொண்டிருந்தபோது, மார்க்ஸ்- காந்தி சந்திப்பு புள்ளிகளை ஆங்காங்கே என் வாசிப்பு மனம் ஒத்துப் பார்த்துக்கொண்டது. மார்சலோவின் அந்நூல் குறித்து தனியாக சொல்ல விருப்பம்.

இந்த 'நல்ல படகோட்டி காந்தி' நூல் வழக்கம் போல புதிய பொருள் நுட்பங்களை ஆங்காங்கே தருகிறது. காந்தியிடம் போகிற எவருக்கும் , எப்போது போனாலும் அவர்களுக்கு ஏதாவது காதோரம் அவர் சொல்லக்கூடியதைக் கேட்க முடியும். புதிய புதிய விரிவுகளை அவர் தந்துகொண்டேயிருக்கிறார். மார்க்சிடமும் அப்படியான உணர்தலை அனுபவிக்கலாம். காந்தியிடம் அப்படியான புதிய புதிய விரிவுகள் கிடைப்பதை பலர் சொல்லவும் கேட்டுள்ளேன். மார்க்சிடம் பலர் சொன்னதைக் கேட்டுள்ளேன்.

இதை அம்பேத்கரிடமும் பெரியாரிடமும் கூட பெற முடிந்ததாகவும் பலர் சொல்லக்கூடும். அதேபோல் வலது அரசியலிடம், அல்லது உன்னத இலக்கிய ஆளுமைகளிடம் கிடைக்கப் பெறுவதாகவும் பலர் உணரக்கூடும். நாம் தேடிப் போகிறோம்..போய்க் கொண்டேயிருக்கிறோம்..நம் மன வாயில்களுடன் அவை சுதந்திரமாக உள் நுழைந்து சௌகரியமாக நம்முடன் பழகி உரையாடும்வரை, நாம் போய்க்கொண்டுதான் இருப்போம். கொண்டாடவும் செய்வோம். வாசக விரிவு என்கிற நம் உழைப்பும் இதில் சேர்ந்தே பயணிக்கிறது. அந்த உழைப்பில்லாமல், நம்மால் ஒன்றுதல் செய்ய முடியாது.

மானுட வாழ்க்கை அவர்தம் உழைப்பு வகைப்பட்ட நகர்தலாகவே இருக்கிறது. உழைப்பின் கௌரவம் கீழிறக்கப்படும் எல்லா இடங்களிலும் முரண்கள் உருவாகின்றன. மாவோ மொழியில் இது பகை முரணாகக் கூட உருவெடுக்கலாம். உழைப்பு பழிப்பு பொல்லாத ஒன்று. எந்த உழைப்பும் தாழ்வானதல்ல என மனம் ஏற்க பெரும் பயிற்சி தேவைப்படுகிறது. '

உழைப்போர் மத்தியிலும் முரண் உருவாகலாம். ‘என் உழைப்பே புனிதமானது’ என உயர்த்தும் போது பழிப்பு நுழையலாம். முரண் உருவாகலாம். மாவோ மொழியில் இது பல தரப்பட்ட உழைப்போர் மத்தியில் உருவாகும் பகையற்ற முரணாகலாம். ஒருவரின் உழைப்பு எதற்காக என்ற கேள்வியும் எப்போதும் எழக்கூடிய ஒன்றுதான். இங்குதான் அவரவர் புனித கற்பிதங்கள் ஏற்றப்படும்.

காந்தி அவரது மனப்பயிற்சி அனுசரிப்பில் இந்த முரண்களை தீர்க்க தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருந்தார். தனக்கு கண்டிப்பாகவெற்றி மட்டுமே கிடைக்கும் என்ற நம்பிக்கையோ, இலாப நட்ட கணக்கோ கொள்ளாமல் மனித உறவுப் பாலத்தை அவர் கட்ட முயற்சித்தார்.

சரி Good Boat Man நூலுக்கு வந்துவிடுகிறேன். இந்நூலுக்கு எழுதப்பட்ட மதிப்புரை ஒன்று இப்படிச் சொல்கிறது

Rajmohan has discovered Gandhi for us. From this book emerges a portrait of Gandhi which is unconventional and yet very convincing. வேறு ஒரு ரிவ்யூ இந்நூலை excitement as any gripping novel என்றது.

எவர் ஒருவரால் தங்கள் விடுதலையை பிறர் மீது வெறுப்பு கொள்ளாமல் பெற முடியும் என உழைக்கிறோர்களோ- தலாய் லாமா, மண்டேலா , ஆங்சாங் போன்றவர்களைக் குறிப்பிட்டு இந்நூலை ராஜ்மோகன் அர்ப்பணித்துள்ளார். இந்தப் பெயர்களில் எவரேனும் மாறுபடலாம். ராஜ்மோகன் 12 இயல்களில் ஏறத்தாழ 500 பக்கங்களில் தன் காந்தி தேடலை stitch செய்திருப்பார்.

எங்கெல்லாம் என் மனம் அந்நொடியில் வயப்பட்டதோ அந்நொடிகளை மட்டும் சில புள்ளிகளாக தரப்பார்க்கிறேன். ராஜ்மோகனின் வாக்கு மூல வரிகள், என் போன்றவர்க்கும் பொருந்தும் வரிகள்-

Gandhi wanted us to turn searchlight inwards, and that is seldom wholly Pleasant, for most of us hide unattractive corners. He is disturbed in other ways too. The life style he prescribed seemed too severe, and some of his practices strange. If I wanted to understand him fully , I also needed to face him fully

1915ல் ஜம்னதாஸும், இந்துலாலும் காந்தியை பம்பாய் கூட்டத்திற்கு அழைத்திருந்தனர். தங்கியிருந்த இடத்திலிருந்து கூட்ட அறைக்கு காந்தி நடந்தே வந்துவிட்டார். வருத்தம் அடைந்த ஏற்பாட்டாளர் இருவரும் , திரும்பி போகும்போது கார் வைத்து அழைத்துப் போயினர். உரையாடல் எழுந்தது. காந்தி, உங்களின் ஒத்துழையாமையை மக்கள் ஏற்பார்களா, வெற்றி பெறுவீர்களா. காந்தி சொன்ன பதில்

அமைப்புகளில் வேலை பார்க்கும் ஒவ்வொருவருக்குமான ஒன்றாக எனக்குப் பட்டது. காந்தியின் வரிகள்

I am not very much worried securing a large following. That will come in due course. But I do anticipate that a time may come when my large following may throw me overboard on account of my strict adhesion to my principles- and it may that I shall almost be turned out on the streets and to have to beg for a piece of bread from door to door

எவ்வளவு பெரிய உணர்தல். 10 பேர் பக்கத்தில் நின்றாலே மனது ஆட்டம் போடும். பந்தா காட்டும் மனிதப் பண்பு. லட்சக் கணக்கானவர் பின் தொடர்ந்தாலும் அதை மண்டைக்குள் ஏற்றிக் கொள்ளா நிதானம். என்று வேண்டுமானாலும் தனித்து விடப்பட வாய்ப்புண்டு என்கிற சாத்தியத்தை உணர்ந்த பெரிய சிந்தனை காந்தியிடம் தொழிற்பட்டதை உணர்கிறேன்.

அடுத்த புள்ளி ஒன்றிற்கு நகர்கிறேன். 1931 மார்ச். காந்தியிடம் லண்டன் வட்டமேஜை மாநாடு குறித்து பல கேள்விகள் கேட்கப்பட்டன. இரு கேள்விகள்- பதில்களை மட்டும் சொல்கிறேன்.

கேள்வி- Do you prefer the English people as a governing race to other races ?

Gandhi - I have no choice to make. I do not wish to be governed but by myself. சுயராஜ்யம் என்பதற்கான பளிச் பதில் I do not wish to be governed but myself. எவ்வளவு ஆழமான புரிதல்..என்ன ஒரு confidence.

அடுத்த கேள்வி நீங்கள் பிரதமர் ஆவீர்களா? பதிலாக காந்தி No . It will be reserved for younger minds and stouter hands . தெளிவைப் பாருங்கள். தியாகம் என்றெல்லாம் புரிய வைக்க முயற்சிக்கக் கூட இல்லை. இதை இவரிடம் விடல் என்கிற பூரண புரிதல்.

அடுத்த புள்ளி ஒன்று. கீழைத்தேயம் குறித்த அவரது புரிதல். குவாக்கர்ஸ் மத்தியில் காந்தி உரையாடிக் கொண்டிருக்கிறார். மேற்கு நூல்கள் குறித்து பேச்சு போகிறது. காந்தி , போலக் கொடுத்து படித்த Thomas Kempis's Imitation of Christ பற்றி சொல்கிறார். ஒரே அமர்வில் படித்ததைச் சொல்கிறார். eastern book மாதிரி இருக்கிறதே என உணர்ந்ததையும் சொல்கிறார். உடனே ஒருவர் கேட்கிறார். அப்படியானால் அந்நூல் யுனிவர்சல் என்கிறீர்களா? காந்தி சொல்கிறார் கீழைத்தேயம் என்று சொன்னால் யுனிவர்சல் தானே என்று. எவ்வளவு பெரிய மன விரிவை அவர் முன் நகர்த்துகிறார் என இப்புள்ளி எனக்கு உணர்த்தியது. ஆனால் இன்றோ நமது அரசியல் எவ்வளவு narrow ஆக முடியும் என பார்த்துக்கொண்டேயிருக்கிறதே?

1931ல் லண்டனில் அவர் மேலும் உணர்த்திய வரிகளுடன் நிறுத்தப் பார்க்கிறேன். அவ்வரிகள்

The doctrine of fitness to govern is mere eyewash. Independence means nothing more or less than getting out of alien control.

19-9-2025

sep 21

Bury My Heart at Wounded Knee

“அந்த நதிக்கரையில் என் இதயத்தைப் புதையுங்கள் “ நூலை தோழர் ரவி, அக்களூர் - அமெரிக்கா வாழ் தோழர் விட்டலுடன் வந்து 10 நாட்களுக்கு முன்னர் கொடுத்துச் சென்றார்.

அக்களூர் ரவி மொழிபெயர்த்த நூல். இருபத்தைந்து நூல்களை தமிழர்களுக்காக அவர் மொழிபெயர்த்து தந்துள்ளார். அவரது வீட்டில் அவரின் தின உழைப்பை பார்த்து பெருமையும், concernம் கொள்கிற குடும்பத்தார் சில நாட்களுக்கு முன்னர் இந்நூலை அறிமுகம் செய்து வைக்கும் நல்ல நிகழ்வை, ஏராள நண்பர்கள் வாழ்த்துக்களுடன் நடத்தினர். அவர் குடும்பத்தார் உபசரிப்பை வந்த நண்பர்கள் அன்று பெற்றோம்.

Bury My Heart at Wounded Knee- Dee Brown அவர்களால் எழுதப்பட்டு 55 ஆண்டுகள் ஆகிறது. அந்நூல் ரவியின் பார்வைக்கு வந்து, அவர்தம் பெரும் உழைப்பின் மூலம் இப்போது 2025ல் தமிழுக்கு வந்துவிட்டது. அளவில் 680 பக்கங்கள் கொண்ட பெரிய நூல். ‘எம வேலை’ என்பார்களே, அப்படியான கடும் தேகச் சேவையை- மூளை உழைப்பை ரவி செய்துள்ளார்.

ரவியின் மொழிபெயர்ப்பு தேர்ச்சிக்கு இனி புதிய சான்றிதழ்கள் எல்லாம் தேவையிருக்காது. அது முன்னரே அவருக்கு கைகூடிவிட்டது. எடுத்துக்கொண்ட எந்த உழைப்பிற்கும் ஆக உயர்ந்த நேர்மையுடன் , இதய சுத்தமாக , மாசு மரு இல்லாமல் தரப் பார்ப்பவர் ரவி. அப்படித் தருகிறார். மேலும் அவர் உயர்ந்து சிறக்க வாழ்த்துகள்!

ஆங்கில நூலை நான் 140-145 பக்கங்கள் தான் படித்தேன். பொதுவாக ரவி எழுதும் அரசியல் நூல்களின் மொழிபெயர்ப்பு குறித்து பேசுவது எனில் ஆங்கில நூல்களை முழுமையாக படித்துவிட்டுத்தான் , அவரின் மொழி பெயர்ப்பு குறித்து , அல்லது நூலின் உள்ளடக்கம்- கருத்துச் செறிவு குறித்து பேசியிருக்கிறேன். அவரது மொழிபெயர்ப்பின் நேர்த்தியை அந்நூல்கள் குறித்து பேசிய போது சுட்டியும் காட்டியிருக்கிறேன். இந்நூல் குறித்து முழுமையாக படிக்காமல் எழுதும் குறையைச் செய்கிறேன்.

இந்த புதிய நூலுக்கு அறிமுகம் எழுதியுள்ள தோழர் மருதன்

..இரவியின் இந்த மொழியாக்கம் நிறைவை அளிக்கிறது...என எழுதியுள்ளார். ரவி தன் மொழிபெயர்ப்பாளர் குறிப்பின் தலைப்பிலேயே, இந்நூல் அவரை உள் ஆழம்வரை சென்று எப்படி பாதித்தது என்பதை சொல்லும் வகையில் 'கண்ணீர்த் தடம்' என மனம் ஒன்றி பேசியுள்ளார்.

ரவி வீட்டில் நடந்த கூட்டத்தில் அருகாமை இருந்த சில நண்பர்களிடம் நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். நிலத்துடன் எவரும் பிறப்பதில்லை, நிலத்தில் தான் மனிதன் உட்பட அனைத்து உயிர்களும் பிறக்கின்றன. மோதிக்கொண்டு வலுத்தவன் பாத்தி கட்டுகிறான். பிறரை அண்டவிடுவதில்லை. மனிதர்கள் மண்ணுக்காக நடத்திக்கொண்ட மோதல்கள் பெரும் வரலாறுகளாக படிந்து போயுள்ளது. காலம் நினைவுகளை அழிக்கவும் செய்கிறது. வாய் வரலாறுகளும் எவ்வளவு நேர்மையாக மிகையில்லாமல் சொல்லப்படுமோ, கைமாற்றி வரும்போது எப்படியெல்லாம் தூசு படுமோ தெரியவில்லை. மனித மனங்கள் வெறும் போட்டோகிராபிக்கானதல்ல, தன்னால் முடிந்த கற்பனா வளத்தை சேர்க்கக் கூடியவை.

ரவியும் தன் குறிப்பில் " நிலப்பரப்பு எவருக்கும் சொந்தமல்ல. இயற்கை நமக்கு அளித்திருக்கும் கொடை. இறைவனின் அருளால்தான் வாழ்கிறோம் என்பது பூர்வகுடிகளின் எண்ணம்" என எழுதியுள்ளார்.

அய்ரோப்பியர் , அமெரிக்காவின் பூர்வ குடிகளை- கொலம்பஸ் கண்டதற்கு பின்னரான கால வெளியில், உள்நுழைந்து எப்படி கொடுமையாக வெளியேற்றி, தனி ஒதுக்கப்பட்ட பட்டிகள் போன்ற இடங்களில் அடைத்தனர் என்பதை இந்நூல் விரிவாக , பல்வேறு திரட்டுகளுடன் பேசுகிறது. அவர்கள் மோதிக்கொண்டனர். காயம்பட்டனர். கொலையுண்டனர். உறவும் கொள்ளலாயினர், திருமணம் செய்து கொண்டதும் நடந்தது . அவ்வப்போது சமரசம் செய்தும் கொண்டனர். ஆனால் வலுத்தவர்களே வாழ முடிந்த உலகாக அமெரிக்கா கட்டப்படலானது. எளிமையானவர் ஓரமாக்கப்பட்டனர். Marginalised.

எவர் வந்தேறிகள் என எப்போதும் எல்லா இடங்களிலும் பல்வேறு narratives இருக்கவே செய்கின்றன. இருப்பவர்களின் புனிதமும் வந்தேறிகளின் வில்லத்தனமும் அவ்வப்போது ஆங்காங்கே வரலாறாக்கப்படுகின்றன. இப்போது Trumpயியர்களின் நாட்டண்மை நாடாக புதிய வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

1970ல் டீ பிரவுன் எழுதியபோது ‘ செவ்விந்தியர்’ என பொதுப் புத்திக்கு ஏற்றப்பட்ட இம்மக்கள் குறித்த பல myths அபத்தமானவை, உண்மையில்லை என எழுதியுள்ளார். அவர்கள் ‘பூமியின் பாதுகாவலர்களாக’ இருந்தவர் என்கிறார். அவர்கள் வாழிடங்களின் வறுமைச் சூழலை நேரிடையாக பார்ப்பவரால் உணரமுடியும் என்று எழுதியுள்ளார். இவர்களின் வாய்மொழி கைமற்றி தரப்பட்ட பல்வேறு வரலாற்று புள்ளிகளை பிரவுன் இணைத்து நூல் ஆக்கி தந்திருந்தார். Wounded Knee Massacre என்பது பற்றி ஏராள வரலாற்று செய்திகள் , தேடுவோர்க்கு கிடைக்கும்.

அவரின் முதல் இயலே பூர்வீககுடிகளுக்கு கொடுக்க வேண்டிய கண்ணிய மொழியுடன் Their Manners are Decorous and Praiseworthy என்றே தலைப்பிடப் பட்டிருக்கும். அமெரிக்க வரலாற்றில் , இன்றைய உலகம் அறிந்து கொள்ளாத புதையுண்ட அதிர்ச்சி வரலாற்றை, தோண்டி எடுத்து பிரவுன் விசாரித்திருக்கிறார். அவ்வப்போது பட்டுப்போகும் நியாய உணர்வை, துளிர்க்க வைக்க இப்படியான நூல்கள் உதவலாம். மானுட வாழ்க்கை சில நேரம் தம் முன்னோர்களின் சிறப்பை கொண்டாடும் அதே வேளையில், அவர்களின் பேராசைக் கொடுமைகளை அவலங்களையும் நினைத்து பிராய சித்தம் செய்ய வேண்டிய மனநிலைக்கு போகிறது.

இது அமெரிக்க வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் கூட வேறு பெயரில் வேறு அடையாளத்தில் நடந்தவையாகலாம். இன்னும் எங்கெங்கே பூமிப் பரப்பில் சக மனிதர்களை ஏதோவொன்றாக அடையாளப்படுத்தி கீழிறக்கி அப்புறப்படுத்தி சிறுமை செய்த எல்லா இடங்களுக்குமான நிகழ்வாகவும் இருக்கலாம். மனிதனின் மனசாட்சியை துரு பிடிக்காமல் செய்துகொள்ள இவ்வகை soul stirring நூல்கள் உதவக் கூடும்.

பொறுமையாக நிதானமாக இன்னும் படிக்க வேண்டிய ஏராள பக்கங்கள் பிரவுனின் ஆங்கில நூலிலும், ரவியின் தமிழ் நூலிலும் எனக்கு இருக்கின்றன. பார்க்கலாம். ரவியின் உழைப்பிற்கு வணக்கமும் பாராட்டும்..

21-9-2025

sep 23

So taught Gandhi

My democracy means Everyman his own master..we must remove any hatred..at least in my heart there is no such hatred

Fraud and untruth today are stalking the world. I cannot be helpless witness to such a situation

In this age of democracy, age of awakening of the poorest of poor..you will complete the conquest of the west not through vengeance because you have been exploited, but with real understanding. ..I want Asia has to conquer the west through love and truth

English will never be excluded from my small store of knowledge. It cannot become our national language or medium of instruction..The rule of the English will go because it was corrupt, but the prevalence of English will never go.

Is it that everyone with an Indian skin is good?..India can gain nothing from the rule of murderers no matter whether they are black or white. Under such a rule, India will be utterly ruined and laid waste.

There are as many religions as there are individuals..in no part of the world are one nationality and one religion synonymous terms, nor it ever been so in India

Many examples can be given in which acts of majorities found to have been wrong and those of minorities to have been right. All reforms owe their origin to the initiative of minorities in opposition to majorities

Civilisation is the mode of conduct which points out to man the path of duty. Performance of duty and observance of morality are convertible terms. To observe morality is to attain mastery over mind and our passions

In no part of the world, and under no civilisation, have men attained perfection. The tendency of the Indian civilisation is to elevate the moral being…

-Inputs from The Good Boatman Rajmohan Gandhi

தமிழில் ஏ அய்

எனது ஜனநாயகம் என்றால் ஒவ்வொரு மனிதனும் **தனக்குத் தானே எஜமானன்**. நாம் எந்த **வெறுப்பையும் அகற்ற வேண்டும்**... குறைந்தபட்சம் என் இதயத்தில் அப்படி எந்த வெறுப்பும் இல்லை.

மோசடியும் பொய்யும் இன்று உலகைச் சுற்றி வருகின்றன. இத்தகைய சூழ்நிலைக்கு நான் ஒரு **சக்தியற்ற சாட்சியாக** இருக்க முடியாது.

ஜனநாயகத்தின் இந்தக் காலத்தில், **ஏழையிலும் ஏழையின் எழுச்சிக் காலத்தில்**, நீங்கள் மேற்கை வென்றெடுப்பதை நிறைவு செய்வீர்கள் -

நீங்கள் சுரண்டப்பட்டீர்கள் என்பதற்காக **பழிவாங்குதல்** மூலம் அல்ல, ஆனால் உண்மையான **புரிதல்** மூலம்... **ஆசியா அன்பும் உண்மையுமே** மேற்கை வெல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஆங்கிலம் என் சிறிய அறிவுக் களஞ்சியத்திலிருந்து **ஒருபோதும் விலக்கப்படாது**. அது நமது **தேசிய மொழியாகவோ** அல்லது **கல்வி பயிற்று மொழியாகவோ** ஆக முடியாது... ஆங்கிலேயரின் ஆட்சி **ஊழல் நிறைந்தது** என்பதால் போகும், ஆனால் ஆங்கிலத்தின் பரவல் ஒருபோதும் போகாது.

இந்தியத் தோல் (தோற்றம்) கொண்ட அனைவரும் நல்லவர்களா? யார் கொலையாளிகள், அவர்கள் கருப்பா அல்லது வெள்ளையா என்பதைப் பொருட்படுத்தாமல், அத்தகைய ஆட்சியால் இந்தியா எதையும் பெற முடியாது. அத்தகைய ஆட்சியின் கீழ், இந்தியா **முற்றிலும் பாழாகி, வீணாகிப் போகும்**.

எத்தனை தனிநபர்கள் இருக்கிறார்களோ, **அத்தனை மதங்கள்** உள்ளன... உலகில் எந்தப் பகுதியிலும் **ஒரே தேசமும் ஒரே மதமும்** ஒத்த சொற்கள் அல்ல, இந்தியாவிலும் அப்படி இருந்ததில்லை.

பெரும்பான்மையினரின் செயல்கள் **தவறானவை** என்றும், சிறுபான்மையினரின் செயல்கள் **சரியானவை** என்றும் கண்டறியப்பட்ட பல எடுத்துக்காட்டுகளைக் கொடுக்க முடியும். எல்லா சீர்திருத்தங்களும் பெரும்பான்மையினருக்கு எதிராக **சிறுபான்மையினரின் முன்முயற்சியால்** தான் உருவாகின்றன.

நாகரிகம் என்பது மனிதனுக்கு **கடமையின் பாதையைச் சுட்டிக் காட்டும் நடத்தையின்** முறை. கடமையைச் செய்வதும் **ஒழுக்கத்தைக்** கடைப்பிடிப்பதும் **மாற்றிக் கொள்ளக்கூடிய சொற்கள்**. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது என்பது **மனதையும் நம் ஆசைகளையும்** கட்டுப்படுத்துவதே.

உலகின் எந்தப் பகுதியிலும், எந்த நாகரிகத்தின் கீழும் மனிதர்கள் **பூரணத்துவத்தை** அடையவில்லை. இந்திய நாகரிகத்தின் போக்கு **ஒழுக்க ரீதியான மனிதனை உயர்த்துவது**...

sep 23

Marcello Musto The Marx Revival

மார்க்சை புதுப்பித்தல் என்கிற வகையில், அவரின் பல்வேறு எழுத்து பரிமாணங்களில் கிடைத்த புதிய வெளிச்சத்தில் நூல் ஒன்றை 2020ல் மார்செல்லோ மஸ்டோ எடிட் செய்து கொணர்ந்தார். மார்க்ஸ் பேசிய இன்றும் மார்க்சியர் பலர் விவாதித்துக்கொண்டிருக்கக் கூடிய , விவாதிக்க வேண்டிய 22 முக்கிய கருத்தாக்கங்கள் (Key concepts) பற்றிய புதிய விளக்க விவரங்களுடன் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. 22 மார்க்சிய ஆய்வாளர்கள் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். இந்நூல் 416 பக்கங்கள் கொண்ட ஒன்று. ஒவ்வொரு பக்கமும் நிதானமான வாசிப்பைக் கோருபவை.

அந்த 22 கருத்தாக்கங்கள் எவை என்பதை கீழே தந்துள்ளேன் (22 key concepts discourses based on Marx writings)

Capitalism, Communism, Democracy,

Proletariat, class struggle, political organisation, Revolution,

work, capital and temporality, ecology,

Gender equality, nationalism and ethnicity,

migration, colonialism, state,

Globalisation, war and international relations,

religion, education, Art, technology and science,

Marxisms

why Marx was wrongly identified with the then existing Socialism of Soviet or present socialism of China or any other variety அப்படி செய்வது சரியா என்கிற கேள்வியையும் மஸ்ட்டோ விவாதிக்கிறார்.

மார்க்சை மேலும் மேலும் புதிய வெளிச்சத்தில் விவாதிக்கத் தகுந்த மார்க்சின் ஏராள எழுத்துக்களை தேடி புதிய ‘மெகா’ 28 வால்யூம்கள் கொணர்ந்துள்ளனர். பல ஜெர்மான்ய எழுத்துக்கள் சேர்க்கப்பட்டதாக மஸ்டோ சொல்கிறார். இதுவரை மார்க்சின் மீது அய்ரோப்பிய மய்யவாதி, பொருளாதார குறுக்கல்வாதி, வறட்டுவாதி எனப் வீசப்பட்ட பல விமர்சனங்களுக்கு , அவர் அப்படியானவர் அல்ல எனச் சொல்லத் தகுந்த பதில்களை புதிய வெளிச்சத்தில் காணமுடிகிறது என்கிறார் மஸ்டோ.

150 ஆண்டுகளுக்கு மார்க்ஸ் எழுதியவைதான் எல்லாம் என்பதை மஸ்டோவும் ஏற்கவில்லை. ஆனால் அவர் எழுதிய பல ’கண்டெண்ட்’ குறித்து பேசாமல் இருக்க முடியாது என்பதை மஸ்டோ வலியுறுத்துகிறார்.

இங்கு முதல் இரு கட்டுரைகளை அதாவது காபிடலிசம்- கம்யூனிசம் என்கிற தலைப்பில் எழுதப்பட்டவற்றை மட்டும் கொஞ்சம் சொல்லப் பார்க்கிறேன். எவ்வளவு முடியுமே அந்த அளவு எளிமையாக, என் வாசிப்பு புரிதலில் என்பதையும் சேர்த்தே சொல்ல வேண்டும். இந்த இரண்டும் குறித்து பேசிய மிகச் சுருக்கமான இக்கட்டுரையே 1400 வார்த்தைகள் கட்டுமானத்தைப் பெற்றுவிட்டது.

காபிடலிசம் என்கிற கருத்தாக்கம் பற்றி விவாதித்துள்ளவர் மிஷேல் கிராட்கே. காபிடலிசம் என்கிற பதத்தை மார்க்ஸ் மிகக் குறைவாகவே 5 முறை மட்டுமே பயன்படுத்தியதாக கிராட்கே சொல்கிறார். பகுனின் அவர்களுக்கு பதில் சொல்கையில் அவர் capitalist mode of production என்கிற பொருளுக்கு சுருக்கெழுத்தாக காபிடலிசம் எனப் பயன்படுத்தியதை கிராட்கே சொல்கிறார். கிரன்ரிசேவில் மார்க்ஸ் mode of production based upon capital, dominated by capital, mode of production by capital, capitalist mode of production- (in German ideology Marx used materialist conception of history) போன்றவற்றைப் பயன்படுத்தினார் என்கிறார் இக்கட்டுரை ஆசிரியர்.

நவீன சமூகத்தில் வர்க்கங்கள் என்பதை மார்க்ஸ் முதலாளித்துவ உற்பத்தி முறையிலான் வர்க்கங்கள் எனப் பேசுகிறார். Economic categories bear a historical imprint என மார்க்ஸ் நினைத்தார். சரக்கு உற்பத்தியின் சர்வாம்சம் பற்றி அவர் பேசினார். மனித உழைப்பு உட்பட..

சரக்குகளை சாதனமாகக் கொண்டு சரக்கு உற்பத்தி என்பதை வேறு பார்முலாவாக முதலாளித்துவம் மாற்றியது. அதாவது production of commodities as the product of capital by means of commodities as the product of capital என்கிற புரிதலை இங்கு கிராட்கே தருகிறார். மற்றொரு குணமாக surplus value as the aim and determining motive of production- capital wage labour relationship என்பதைச் சொல்கிறார்.

capital is not a thing, but a social relation between persons which is mediated thro things என்று மார்க்ஸ் பேசியதை கிராட்கே சொல்கிறார். ஒட்டுமொத்த உற்பத்தி நிகழ்வில் கூலி உழைப்பாளரை மீண்டும் மீண்டும் உருவாக்கல் நிகழ்வாகவும் அது இருக்கிறது. சரக்கு சுழற்சி என்பதை

பணச் சுழற்சி நிகழ்வாகவும் முதலாளித்துவ உற்பத்தி முறைதான் ஏற்படுத்தியது. எல்லாமே பணம்- பணத்தில் ஆரம்பித்து பணத்தில் முடியும் சிஸ்டம் என்றானது.

முதலாளி தொழிலாளி மோதல், முதலாளிகளுக்கு இடையே போட்டி என்ற இரண்டு மோதல்களையும் சிஸ்டம் காணவேண்டியதானது. இதன் விளைவாக accelerated accumulation of capital உருவானது என ஆசிரியர் முதலாளித்துவ உற்பத்தி முறைப் பற்றி விளக்கிச் சொல்கிறார். வேலை வாய்ப்பு,மிகை உற்பத்தி, வளமை தேக்கம் வேலையின்மை நெருக்கடி என்கிற சுழலுக்கு சிஸ்டம் பழக வேண்டிய நிலை உருவாகிறது.

இங்கு கிராடிக் எழுதுவது exploitation blurred from the consciousness of the parties- The mysterious forms, from the commodity form, or value form to the money form and many others constitute the whole world of mystifications.

முதலாளித்துவம் தன்னளவில் மாறி வளர்ந்து வரக்கூடிய சிஸ்டமாக இருப்பதையும் காண்கிறோம். மார்க்சும் கூட முதலாளித்துவ ஆய்வில் அதன் பொது விதிகள் என்றே முன் வைத்தார். அவை வளரக்கூடிய மாறக்கூடிய விதிகள் என மார்க்ஸ் பார்த்ததாகவும் கிராட்கே எழுதுகிறார்.

The development of contradictions of a given historical form of production is the only way in which it can be dissolved என மார்க்ஸ் கருதினார்.

முதலாளித்துவம் அசமத்துவத்தை வளர்க்கும் சிஸ்டம் என அவர் விமர்சித்தார். In proportion as capital accumulates, the situation of worker, be his payment high or low, must grow worse என மார்க்ஸ் சொன்னதை கிராட்கே நினைவு படுத்துகிறார். அதாவது accumulation of wealth inevitably go together with accumulation of misery என்பதை மார்க்ஸ் நமக்கு சொல்லிக் கொடுத்தார்.

எனக்கு மார்க்ஸ் காந்தி சந்திப்பு புள்ளியாக இது தோன்றியது.

2

இந்நூலின் இரண்டாம் கட்டுரை மர்செல்லோ மஸ்ட்டோ அவர்கள் கம்யூனிசம் என்கிற கருத்தாக்கம் பற்றி எழுதிய ஒன்று. மார்க்ஸ், அவர் காலத்தில் சோசலிசம் பற்றி கண்ணில் பட்ட பல நூல்களை ஆய்வு செய்து, தானும் எங்கெல்ஸ் அவர்களும் பேசுவது விஞ்ஞான சோசலிசம் என்கிற முடிவிற்கு வந்தார்.

மஸ்ட்டோவும் இந்தக் கட்டுரையில் மார்க்சிற்கு முன்னர் பலர் எழுதிய நூல்களை அவற்றின் சாராம்சத்தைக் குறிப்பிட்டு விரிவாக எழுதியுள்ளார்.

மார்க்ஸ் கம்யூனிசம் பற்றி எழுத வந்ததை, மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு எழுத முன் வந்தது குறித்து மஸ்ட்டோ இக்கட்டுரையில் ஆய்விடுகிறார். அவருக்கு the law of economic motion of the society முக்கியமாக இருந்தது. அதன் மூலம் பாட்டாளி வர்க்கம் என்கிற புரட்சிகர தன்னிலை கட்டுமானத்தை நோக்கி மார்க்ஸ் நகர்ந்தார். ஆனால் மிக கவனமாக அத்தன்னிலைப் பற்றிப் பேசினார். எதுவும் வாய்ப்பாட்டு யாந்திரிகமானதல்ல என்றார். இங்கு மஸ்ட்டோ தருகிற மார்க்சின் வரிகள்

‘The working class did not expect miracles from the Commune. They have no ready-made utopias to introduce by a decree of the people. ’Rather, the emancipation of the proletariat had‘to pass through long struggles, through a series of historic processes, transforming circumstances and men’

மார்க்சின் பல்வேறு வால்யூம்களின் வழியே அவரின் எழுத்துக்களை ஆய்வு செய்த மஸ்ட்டோ கீழ்கண்ட மதிப்பீட்டை தருகிறார்.

Marx’s notes on communism should not be thought of as a model to be adhered to dogmatically, still less as solutions to be indiscriminately applied in diverse times and places. Yet these sketches constitute a priceless theoretical treasure, still useful today for the critique of capitalism.

முன்னேறிய பொருளாதாரத்தில் தனியார் சொத்துடமை ஒழிப்பு, தேசிய வங்கி, மய்யப்பட்ட தகவல் தொடர்பு துறை, அரசாங்க கடன் முறைகள் , பொதுக் கல்வி முறை, no inheritance rights உள்ளிட்ட பல நடவடிக்கைகளை அடுத்தக் கட்ட சமூகம் நோக்கிய வளர்ச்சிக்கு மார்க்ஸ் முன்வைத்தார்.

Marx’s vision of communism was of ‘an association of free individuals , working with the means of production held in common, and expending their many different forms of labour-power in full self-awareness as one single social labour force’ என மஸ்ட்டோ விளக்குகிறார்.

மார்க்ஸ் முதலாளித்துத்துவ உற்பத்தி முறைக்கு மாற்றாக பேசும்போது கோஆப்ரெட்டிவ் சொசைட்டி, அசோசியேட்டட் லேபர் புரொடக்சன் போன்ற சில பதங்களை பயன்படுத்தியுள்ளதாகவும் மஸ்ட்டோ சொல்கிறார். புதிய சமூக உற்பத்திக்கான ruling principle என்று the full and free development of every individual என்கிற பார்வையை மார்க்ஸ்

வெளிப்படுத்தினார். ஒவ்வொருவரின் முழுமையான சுதந்திரமான வளர்ச்சிக்கு உதவும் உற்பத்தி முறை என இதை நான் எளிமையாக புரிந்து கொள்கிறேன். முழுமையான வளர்ச்சி என்பது காலந்தோறும் மாறக்கூடிய அளவீடுகளைக் கொண்டதாக இருக்கவே செய்யும். அது போலவே சுதந்திர என்பதற்கான காலத்தேவைகளும் மாறிக்கொண்டேதான் இருக்கும். இதுவரைதான் சுதந்திரம்- இவ்வளவே வளர்ச்சி என்று எவராலும் வரையறுக்க முடியா தன்மையும் கேள்வியாக எழாமல் இல்லை.

பகுனின் ஸ்டேடிசம் நூலை விமர்சித்தபோது , மார்க்ஸ் radical social change would start with self government of communities எனச் சொல்வதை மஸ்ட்டோ சுட்டிக் காட்டுகிறார். இங்கும் மார்க்ஸ் காந்தி சந்திப்பு புள்ளியைக் காண்கிறேன்.

சுதந்திர போட்டி என்கிற உற்பத்தி முறையில் முதலாளிகள் மட்டுமே சுதந்திரத்தை பெறுவார்கள்-ொழிலாளிகளுக்கு அது கிடைப்பதில்லை என்கிற மார்க்சின் விளக்கமும் நமக்கு கிடைக்கிறது. எந்த ஆலையும் உற்பத்தி என்பது குறித்து கவலை கொள்ளுமே தவிர உழைப்பவன் குறித்தல்ல என்றார் மார்க்ஸ்.

'கூலி முறை சிஸ்டம் ஒழிப்பு' என மார்க்ஸ் பேசும்போது a fair day's wage for a fair day's work என்று சொல்வார். இந்த fair என்பதை முதலாளிகள் என்கிற வர்க்கம் நிர்ணயிக்கும் அதிகாரத்தை இழக்கும் என்ற வகையில் மார்க்சின் இந்தக் கூற்றை புரிந்து கொள்கிறேன். ஆனால் இதில் கேள்விகள் விவாதங்களுக்கு இடம் இருக்கவே செய்யும்.

புதிய சமுகத்தில், free time for the few என்பதற்கு மாற்றாக shortening that part of the working day in which the worker must work for himself and lengthening the other part in which he is free to work nothing for capitalist என நம் புரிதலை எளிமையாக்குவார் மார்க்ஸ். சீனாவின் நடைமுறை இப்படியான வேலை நேரக் குறைப்பு கொண்ட தொழிலாளர் என்பதை நமக்கு உணர்த்தவில்லை என்பதையும் காண்கிறோம்.

அதேபோல் 1866ல் அகிலத்தில் தொழிலாளி வர்க்க விடுதலை emancipation பற்றி மார்க்ஸ் பேசியபோது, கீழ்கண்டவற்றை அவர் புதிய சமூகத்தில் எதிர்பார்ப்பாக முன் வைத்தார்.

'A preliminary condition, without which all further attempts at improvement and emancipation must prove abortive, is the limitation of the working day.' It was needed not only 'to restore the health and physical energies of the working class', but also'to secure them the possibility of intellectual development, sociable intercourse, social

and political action’. இவை உறுதியாகும் சமுதாயம் புதிய சமுதாயமாக அமையக்கூடும் என அவர் கருதினார்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவன் உழைப்பு நேரம் குறைந்து, அவன் விரும்பி தன்னையும் சமுகத்தையும் உயர்த்திக்கொள்ள அவனுக்கு செலவழிக்க கிடைக்கும் நேரத்தின் அவசியத்தை மார்க்ஸ் வற்புறுத்தினார். மஸ்ட்டோ தருகிற வரிகள்

In Theories of Surplus Value (1862–1863), he made it even clearer that ‘real wealth’ was nothing other than ‘disposable time’. In communist society, workers’ self-management would ensure that ‘a greater quantity of time’ was ‘not absorbed in direct productive labour but ...available for enjoyment, for leisure, thus giving scope for free activity and development

புதிய கம்யூனிச சமூகத்தில் அரசு என்பது உழைப்போரின் விடுதலைக்கு தடையாக இருக்க முடியாது என மார்க்ஸ் கருதினார்.

The workers can prevent the State from becoming an obstacle to full emancipation.public policies should prioritize the ‘collective satisfaction of needs’. இங்கும் கூட மார்க்ஸ் காந்தி சந்திப்பு புள்ளியையே என்னால் பார்க்க முடிகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்கிற பதத்தை மார்க்ஸ் பயன்படுத்தினாரே என மார்க்சின் பெயரால் அரசியல் கட்சிகளும், விமர்சனம் செய்வோரும் பேசுவதைக் கேட்கிறோம். மார்க்ஸ் அவரின் ஆயிரக்கணக்கான பக்க எழுத்துக்களில் அப்பதத்தை 7 முறை மட்டுமே பயன்படுத்தியுள்ளார் என ட்ராப்பர் போன்ற மார்க்சியர் சொல்லப் பார்க்கிறோம். மேலே சொன்ன பல ஊகிப்புகளை மார்க்ஸ் தான் விழைந்த புதிய சமுகம் குறித்து வைத்துள்ளதை காண்கிறோம். இந்தியாவில் 1950 களின் இறுதியிலேயே அமிர்தசரஸ் கட்சி காங்கிரசிலேயே கம்யூனிஸ்ட்கள் அந்த பதத்தைக் கைவிட்டதையும் சேர்த்தே புரிந்துகொள்ள வேண்டும்.

22 கருத்தாக்கங்களில் 22 கட்டுரைகள் என்பதில் இரண்டை மட்டுமே எடுத்து இங்கு மிகச் சுருக்கமாக நான் புரிந்து கொண்ட வகையில் தந்துள்ளேன். மேலும் வாய்ப்பு கிடைக்கும்போது பேசலாம் என நம்பி நிறுத்துகிறேன்.

18-9-2025

sep 25

EMS on Communists Contribution to the theory and practice of Indian Politics

சிபிஅய் மற்றும் சிபிஎம் கட்சிகள் சார்பில் வெளியிடப்பட்ட கட்சி வரலாற்று ஆவணங்களை அவ்வப்போது புரட்டுவதுண்டு. இம்முறை சிபிஅய்யின் வால்யூம் 2 -1923-25 ஆவணத்தையும், சிபிஎம் வெளியிட்ட 1917-28 ஆவணத்தையும் பார்த்துக்கொண்டு வந்தேன். Refresh செய்து கொள்ள அவை உதவும். சிபிஅய்யின் 1923-25 குறித்த செய்தி ஒன்றை - கான்பூர் கட்சி அமைப்பு மாநாட்டு தொடர்பான செய்தியையும், சிபிஎம் ஆவணத்தில் 70 ஆண்டுகள் கால (1996 UF ஆட்சிக் காலம் வரையிலான) இ எம் எஸ் அவர்களின் மிக முக்கிய ஆவணமாக்கப்பட்ட கட்டுரை ஒன்றையும் பார்த்தேன்.

இ எம் எஸ் கட்டுரை சிபிஎம் 1917-28 ஆவண 1134 பக்கத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள முதலாவது கட்டுரை. அதன் முக்கியத்துவத்தை கருதி அவர்கள் முதல் வால்யூமின் முதல் கட்டுரையாக அதை வைத்துள்ளனர். எனது வாசிப்பிலும் அது முக்கிய கட்டுரையாகவே பட்டது. கட்டுரையின் தலைப்பு சற்று நீளமானதாக இருந்தாலும், அதன் பொருளடக்கத்தை தலைப்பே உணர்த்திவிடும். தலைப்பு

"The communists contribution to the Theory and practice of Indian Politics" By EMS

.

இக்கட்டுரை அந்த ஆவணத்தில் பக் 15-32/1134ல் 18 பக்க அளவிலான, ஆழமும் அடர்த்தியும் கொண்ட ஒன்று. இ எம் எஸ் பார்வையில் சிபிஎம் கட்சியின், முன்னதாக ஒன்றுபட்ட சிபிஅய் நிலைப்பாடுகள் விளக்கப்பட்டிருக்கும். கட்டுரையை ஆர்வம் உள்ளவர் தேடி முழுமையாக வாசிப்பது நலம்.

இங்கு அந்த ஆங்கில கட்டுரையிலிருந்து என் வாசிப்பில் எடுத்து வைத்த நோட்ஸ்- குறிப்புகளை மட்டும் தருகிறேன். இக்குறிப்புகள் தோழர் இ எம் எஸ் அவர்களின் அக்கட்டுரையை முழுக்க உணர்த்திவிடாது என்றாலும், சில அம்சங்களை காட்டவே செய்யும். ஆங்கில வாசிப்பு கொண்டோர் வாசிக்க முடியும். அதே நேரத்தில் கவனமாக வரிகளையும் அவர் கொண்டு வந்து சேர்க்கும் மதிப்பீடுகள் கருத்தாக்கங்களையும் வாசிக்கும் போதே நன்றாக உள்வாங்கிக் கொள்ள முடியும். 100 ஆண்டுகள் ஆன இன்றைய சூழலிலும் அவரின் 70 ஆண்டுகால முன் வைப்புகளில் பெரிய மாற்றத்தை காண முடியவில்லை என்பதை சேர்த்துப் பார்த்தால் அவரின் கட்டுரையை நன்றாக புரிந்து கொள்ள முடியும். அவரின் பார்வையிலிருந்து

வேறுபடும் உரிமை வாசிப்பவர்க்கு உண்டு என்பதையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

எனது குறிப்புகளிலிருந்து.. 1000 வார்த்தைகள் இருக்கலாம்..

2

Though at Tashkent at 1920 and Kanpur 1925 formed, CPI AI Centre formed in 1934 with PB and CC

MN Roy's 'India in Transition' the first Marxist Leninist analysis of the Economy, polity and Ideology of India in the British Rule. 'India Today' by Rajani Palme Dutt was a sister publication to that Roy's book

M N Roy drawn attention of communal riots relating to class struggle- the antidote to communal division is class unity thro struggles.. This principle of M N Roy is even relevant today.

1940s we in the CPI called India a 'multi national state-' it is supplementary than contradictory to the unity of India as a Nation

1951 programme demanded maximum possible state autonomy for every cultural linguistic group .. This was the distinct contribution made by the Indian communists to the nature and content of Indian politics- 'distinct nationality within the indivisible Indian state'.

1930 first programmatic statement of the illegal Communist party of India - Indian freedom can be won only through the revolutionary means in which multi million peasantry are drawn into a militant movement headed by the working class. This was opposed to the bourgeoisie national leadership led by Mahatma Gandhi such as Non violence, ..trustees doctrine etc

CPI enjoined on ideological struggle against these Gandhian concepts.. right leadership of congress

1940s two struggles - quit India by Gandhi and INA by Netaji. The CPI kept away from both the movements

-could not support either of them, quit India a move to put pressure to British rulers to open negotiation with bourgeois leadership for transfer of power.

As for INA, CPI considered that , despite genuinely anti imperialist sentiments of its leaders, it was a movement directed by the Japanese imperialist power which had its contradictions with the British rulers.

CPI engaged in mighty militant struggles like strike of Industrial workers, peasant movements like Punnapra vayalar Tebhaga etc

CPI was an extremely weak force in the anti imperialist movement which by and large led by the Congress..

The CPI's opposition to quit India and INA movements was correct. However the CPI was a minor force in the political scenario, unable to meet the onslaught of Gandhian ideology in the quit India and the left bourgeoisie pro fascist ideology of the INA movement.

However credit of CPI is during these movements, keeping afloat the flag of proletarian internationalism. Held high resistance of fascism as an integral part of India's freedom struggle.

In the post war phase party a significant force in Indian politics- 1952 election major party of opposition

During China war the left wing of CPI for peaceful negotiation with China

1934-64 the party was a victim of right and left opportunism- 1942-46 right opportunism- corrected in 1948 but leadership switched to left opportunism. Both were corrected after serious discussion with CPSU leadership , at a special conf in oct 1951 CA New programme and statement of policy evolved

Party is for PDR and PD govt -not socialism as an immediate objective which is impracticable

statement of policy issued and guided for going to the electoral system- struggle on the parliamentary arena and outside parliament

Non use of the revolutionary potentialities of the struggle on parliament and subordinating the mass struggle to parliamentary work are the left and right forms of opportunism against which the party should guard itself.

1957 Kerala state govt experience- without slipping to right opportunist parliamentarism

காந்தி படேலுக்கு ஏப்ரல் 13ல் எழுதிய கடிதத்தில் மனம் திறக்கிறார். நிறைய வேறுபட்ட புரிதல்கள் நம்மிடத்தில்..காந்தி என்கிற தனி மனிதனாக வைஸ்ராயை சந்திப்பது உகந்ததா..லட்சக்கணக்கான மக்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருக்கும் உங்களால், நான் பார்ப்பது போல் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஒருவேளை உங்கள் இடத்தில் நான் இருந்தால், நீங்கள் பேசுவது போல பேசியிருக்கக்கூடும். காந்தியின் வரிகளைத் தருகிறேன்

There is wide and frequent divergence of views between us..is it desirable that I should see the Viceroy even in my individual capacity? ..It is possible that in the course of

administering the affairs of the millions you can see what I cannot. Perhaps I too would act and speak as you do if I were in your place.

முன்னதாக மனச் சோர்வில் அவர் ஏப்ரல் 8 அன்று இப்படி பேசிவிட்டாரா..என்னால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் உள் மனதில் அவருக்கு ஏற்பட்ட தொந்தரவை புரிந்து கொள்ள பார்க்கிறேன். இப்படி வரிகள் அவரிடம் வெளிப்பட்டது

Who cares for the nation today? Everyone wants to realise his ambition..

ஏன் இந்த உணர்வு அவருக்கு ஏற்பட்டது? விடுதலை நாள் தள்ளிப் போனாலும், அவரின் கேள்விகளுக்கு பதில் கிடைக்க வேண்டும் என அவர் நினைத்தார். ஒன்றுபட்ட இந்தியாவிற்கான வாய்ப்புகளை மேலும் சோதிக்க முடியுமா எனக் கூட அவர் எண்ணியிருக்கக் கூடும். பிரிட்டிஷ் 'முன் வைக்கும் தீர்வு' என்பதற்கு பதிலாக, நேரு படேல் ஜின்னா கைக்கு ஆட்சி வந்து அவர்கள் தங்களுக்கான தேவைகளை தீர்த்துக்கொள்ள முடியாதா என நம்பிக்கை வைத்ததாக இருந்திருக்கலாம்.

ஜின்னா வரலாறு எழுதிய ஸ்டான்லி வொல்போர்ட் குறிப்பிட்டது போல காந்தியின் 'ஜின்னாவை பிரதமர் ஆக்கலாம்' ஆலோசனை King Solomon solution(குழந்தை ஒன்றிற்காக மல்லு கட்டிய பெற்றவள் மற்றவள் உரிமை கோரல் ..பெற்றவள் விட்டுக்கொடுத்த காட்சி உணர்தல்) - might just have worked என்கிற ஊகக் கணிப்பு. முன்பு குறிப்பிட்டதது போல if களுக்கு ஏது இடம்..

என் போன்றவர் இயங்கிய டெலிகாம் இயக்கத்தில் தோழர் குப்தாவின் கடைசிக் காலம் எனக்கு காந்திக்கு நேர்ந்தவற்றை நினைவு கூர்ந்தது. அவரின் சீடர்களே கூடி நின்று அவரை போதும் எனச் சொன்ன காட்சி நிழலாடுகிறது. ஒரே ஒரு முறை தோல்வி, இனி அவர் இந்த இயக்கதிற்கு சுமை - வரமல்ல என்ற உணர்வை பலருக்கு ஏற்படுத்தியது. இவையெல்லாம் 16-17 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவை. இயக்க பிதாமகன்கள் தங்களின் சொந்த தோழர்களால் தூரமாக்கப் படுவதையும் வரலாறு தன் பக்கங்களில் எழுதிக் கொள்ளாமல் இல்லை. அவர்களின் தனிமைப்பட்ட கால ஆண்டுகள் எவ்வளவு குறைவாக இருக்குமோ அந்த அளவைப் பொறுத்து, அவர்களின் மறைவிற்கு பின்னரான பீடமேற்றங்கள் அமையும்.

தென்னாப்பிரிக்கா தோழர்களான நாய்க்கர், யூசுப் ஆகியவர்கள் காந்தியை சந்தித்த போது அவர் எதிர்கால இந்தியா பற்றி தன்

கவலையைப் பகிர்ந்து கொண்டார். சிறுபான்மையினர் நிலை என்னவாகுமோ என அஞ்சினார். அவரின் வரிகளுடன் முடிக்கிறேன்.

India is now on the threshold of Independence. But to my mind it will be no independence if India is partitioned and the minorities do not enjoy security, protection and equal treatment..if what is happening today is an earnest of things to come after independence, it bodes no good for the future..I therefore feel ill at ease. But I am content to leave the future in God's good hands.

காந்தி நம்பிய கடவுளே oh God , இந்தியாவை யார் யார் கைகளின் வழி அழைத்துச் செல்லப் போகிறாயோ...சப் கோ சன்மதி தே பகவான்...

4-10-2025

oct 5

காந்திக்கு படுக்கையில் கிடந்து முதுமைப் பிதற்றலுடன் சாகக் கூடாது என்கிற தவிப்பு இருந்திருக்கக் கூடும். தான் கொல்லப்படக் கூடும் என்ற உள்ளுணர்வு அவருடன் பயணித்துக்கொண்டேயிருந்தது.

நாம் எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை, கடவுளைத் தவிர - என இருக்கப் பழகுங்கள் என்று பார்த்தவர்களிடமெல்லாம் சொல்லி வந்தார். அப்படிச் சொல்லும்போது, அவர் அது தனக்கானது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டிருந்தார்.

சோசலிஸ்ட்களிடம், நீங்கள் எனது குழந்தைகள், உங்களை நேசிப்பவன் நான் என்றார். இந்து மகாசபை நண்பர்கள், நீங்கள் மகாத்மா இல்லை என்ற போது, உங்களின் சக்தியை நிர்மாணப் பணிகளில் செலவிடுங்களேன் என்றார்.

மக்கள் தன்னைக் காண முண்டியடுத்து வந்த போது அவர் வேடிக்கையாகச் சொன்னார். எனக்கு கொம்பு, வால் இருக்கிறதா , நான் எப்படி இருப்பேன் என்று பார்க்கும் ஆர்வத்தால் அவர்கள் வருகிறார்கள் என்று..

சில நேரம் கடவுள் தன்னை தனித்து விடுவதும் கூட புதிய அனுபவத்தையே தனக்கு தந்தது என்றார். I am experiencing an ineffable inner joy and freshness of mind and I feel God himself lighting my path before me and I am able to fight on single handed என சமாதானமடைந்தார். செயல்படவும் துணிந்தார். அப்படி தனித்து செயல்படமுடியாத நேரத்தில், எனக்கு அந்த பலம் இல்லை என ஏற்றுக்கொண்டார்.

சோசலிஸ்ட்களிடம் அவர் வேறு ஒன்றை உணர்த்த முயற்சித்தார். ஒருவருடன் வேறுபட்டால் சந்தித்து பேசி புரிதலை உருவாக்காமல், ஏன் வசவுகளின் வழியே பொதுவெளியில் வேறுபாடுகளை அதிகமாக்க வேண்டும் என வினவினார். .instead of trying to find a solution, we take him to task publicly. This creates antagonism. Parties and isms are only results of such differences..என உணர்த்த முயற்சித்தார்.

வாழ்க்கையை தீர்வை நோக்கி நகர்த்து, வசவுகளின் வழி வாழாதே எனச் சொல்லிப் பார்த்தார். வசவுகள், குறுகிய நேர புளகாங்கிதத்திற்கு உதவலாம். தீர்விற்கு உரையாடல், கண்ணியமான உரையாடலே உதவும். பேச்சு வார்த்தைக்கு எவருடன் செல்ல வேண்டுமோ அவரை ‘அயோக்கியன், ரோக்’ என பேசிவிட்டு, எழுதிவிட்டு அவருடன்

சுமூகமாக உரையாடல், தீர்வை எட்ட வேண்டும் என நினைப்பது சரியா என்ற கேள்வியை அவர் நமக்கு உணர்த்தியிருக்கலாம்.

மனித கௌரவம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. Honour என்பது பொதுவானது. அந்தந்த நேர முரண் கொண்ட எதிரிக்கும் அந்த கண்ணியத்தை ஒருவர் வழங்க வேண்டும் என காந்தி நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்த்திருக்கலாம். அவர் அப்படித்தான் வாழ்ந்து காட்டினார். நம்மால் முடியாமல் போகலாம். முயலாமல் போகக்கூடாது என்கிற பாடமாவது தேவைப்படும்.

நாடோ , கட்சிகளோ, அமைப்போ , தனி மனிதனோ - தன் படையை பெருக்கி பலத்தை கூட்ட நினைக்கும் போதெல்லாம், எதிரியும் கூட்டிக்கொண்டே போகிறான் என்கிற புரிதலையும் அவர் நிதானமாக யோசிக்கச் சொன்னார். முடிந்தவரை சக்திதனை constructive வழிகளில் செலவழிக்க முடியாதா என கேட்டுக்கொண்டேயிருந்தார்.

விடுதலை இந்தியாவில், ஆகஸ்ட் 15 1947 அன்று மே வ மந்திரிகள் அவரிடம் கல்கத்தாவில் ஆசி பெற வந்தனர். அதிகாரம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் என்றார். அது பெரும் ஊழலாகக் கூடும் என அவர் சொல்லத் தவறவில்லை.

Do not let yourselves be entrapped by its pomp and pageantry. Remember, you are in office to serve the poor in India’s villages. Be humble, be forbearing. Now you will be tested through and through . Beware of power, power corrupts.

இது ஏதோ மந்திரிகளுக்குமானதல்ல. அவர்களில் பெரும்பாலோர் கடந்த 75 ஆண்டுகளில் இதை நினைவு கூட வைத்துக்கொள்ளவில்லை- ஏன் அறியக் கூட முயற்சித்ததில்லை என்பது பெரும் சோகம். அமைப்பில் பணியாற்றிய என் போன்றோர் மட்டும் என்ன வாழ்ந்தோம் என்பதும் பேசப்பட வேண்டிய கதைதான்.

தமிழக அரசியல் சூழல் முழுமையாக ‘வாக்குவேட்டை’ மயமான ஒன்று. இங்கு பிறரை கைகாட்டும் அரசியலே சத்தமாக தொழிற்படுகிறது. இங்கு அவரவரின் moral ties என்பது பேசப்படுவது இல்லை. வாக்கு அரசியலுக்கான பெரியார், அம்பேத்கர் , கொஞ்சம் அண்ணா- காமராஜ்- எம் ஜி ஆர் என அது போகும். மருந்திற்கும் காந்தி தொடப்படுவதைக் காண முடியவில்லை. கருத்தரங்குகளில் மார்க்ஸ் கொஞ்சம் , நேரு கொஞ்சம் இருக்கலாம். காந்தி ஜெயந்தி அன்று அவருக்கு ..

ஆனால் காந்திக்கு மட்டும் அவர் மீது அளப்பரிய நம்பிக்கை இருந்தது. அவர் ஆகஸ்ட் 7, 1947ல் அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

I shall be alive in the grave and, what is more , speaking from it.

அவர் நம்மிடம் கணந்தோறும் உணர்ந்து வந்த உண்மைகளை சொல்லி வந்தார்.

நாம் நம் மனசாட்சியுடன் உரையாடும் போதெல்லாம், தோழனாக வந்து அவர் அருகே அமர்கிறார். நாம் நம் மன்சாட்சியை மூடிவிடும் போதெல்லாம், எவராவது தோழமைக்கு கிட்டமாட்டாரா என அவர் தேடி தனியனாகிறார்...அவரை தனியனாக்கிய பொறுப்பு நம் எல்லோரையும் சார்ந்ததே..அவர் தன்னை sinner என அழைத்துக்கொண்டார். We are the sinners என்று எனக்குத் தோன்றுகிறது..

6-10-2025

oct 6

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவில் , சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், திமுகவின் முன்னணி தலைவர் திரு அ.ராஜா அவர்கள் ஆற்றிய சிறிய உரை ஒன்றைக் கேட்டேன். கம்யுனிஸ்ட்கள் குறித்த விமர்சனப் பகுதிக்கு சிபிஅய் மாநில செயலர் தோழர் மு வீரபாண்டியன் அங்கேயே பதிலும் சொல்லியிருந்தார்.

திரு அ. ராஜா அவர்களின் உரை குறித்து சர்ச்சைகள் அரசியல் வட்டாரத்தில் இல்லாமல் இல்லை. பொது வெளியில் , இன்றைய அரசியல் சூழலை மனதில் வைக்காமல் ஏன் அவர் பேசுகிறார் என்கிற கேள்வியும் கூட எழாமல் இல்லை. 1925 யை மய்யமாக வைத்து எழுந்த சுயமரியாதை இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சி- இயக்கம், ஆர் எஸ் எஸ் அமைப்பு ஆகியவற்றின் நூற்றாண்டு சூழலில், காங்கிரசையும் பொருத்தி அவரது உரை அமைந்தது.

அவர் உரையின் சாரம் பெரியாரை விமர்சித்த கம்யூனிஸ்ட் தலைவர்கள், காங்கிரஸ் எனப் பலரும் இன்று பெரியார் நோக்கி வந்துள்ளார்கள். பெரியாரிடம் வந்துள்ளார்கள் என அவர் சொல்வதாக நான் புரிந்து கொள்கிறேன். ஆர் எஸ் எஸ் வளர்ச்சி மற்றும் அதனால் உருவாகி வரும் அரசியல் சமூக ஆபத்துக்கள் குறித்த எச்சரிக்கையும் அவரது உரையில் இருந்தது. 20 நிமிட உரைக்கு இது பெரிய canvas. காங்கிரஸ்- இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம்- சு ம இயக்கம் - காங்கிரஸ் என்பதின் நூற்றாண்டு கால உறவு உரசல் , தோழமை- கருத்துப் போராட்டம் விரிவான ஒன்று. Just like that தொட்டு சிராய்ப்பை உருவாக்கிவிட்டு போகிற ஒன்றல்ல என்கிற புரிதல் இல்லாதவர் அல்ல திரு ராஜா. திமுகவின் intellectuals ல் ஒருவர் என அவரை நான் புரிந்து கொள்கிறேன்.

ஆர் எஸ் எஸ் குறித்து கூட விரிவாகவே விவாதிக்க வேண்டியிருக்கிற அரசியல் சூழல்தான் நிலவுகிறது. போகிற போக்கில் அப்பிவிட்டு போகிற அரசியல் , 'தோழமை அரசியலுக்கு ' உதவுமா எனத் தெரியவில்லை. எந்த உரையாடலுக்கும் அது உதவுமா எனத் தெரியவில்லை.

குறுகிய நேரத்தில் ஆய்வொன்றை வெளிப்படுத்தக் கூடாது என நான் சொல்ல வரவில்லை. நேர்மையாக- 1925 ல் தோன்றி நூற்றாண்டு கண்ட இயக்கங்கள்- கொள்ளத் தக்கனவும் தள்ளத் தக்கனவும் என்று கூட இயக்கம் சார்ந்தோர் கருத்து உரையாடல் செய்துகொள்ள முடியும். அவரவர் அடிப்படை கொள்கையும், தோழமை கொள்ள வேண்டிய

பிறர் அடிப்படை கொள்கைகளின் இணைவையும் கூட பேசிக்கொள்ள முடியும்.

பெரியாரிடம் கொள்ள வேண்டியவற்றை அவரவர் - அவரவர் கோணம் கொண்டு ஆய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என ஏற்கமுடியும். பெரியாரும் மற்ற எல்லோரிடமும் போயுள்ளார். காங்கிரசில் இருந்து காந்தி ராஜாஜியிடம், காங்கிரசிடம் காமராஜர் வழியாக, அம்பேத்கரிடம், முன்னராக இந்து மகா சபாவிடம் கூட (அ ராஜா அதையும் சொல்கிறார்), சிங்காரவேலரிடம் பின்னரும் கூட கம்யூனிஸ்ட்களிடம், அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு இணக்கம் ஏற்பட்டு அண்ணா initiative ஆல் திமுக விடம் பெரியாரும் போனவர் தான் என்கிற புரிதலும் தேவை.

தான் நேரிடையாக ஆட்சி அதிகாரம் , தேர்தல் பங்கேற்பு என வராமல் தனித்து பெரியார் நின்றாலும், ஆட்சிக்கு வந்தவர்களுடன் தோழமையையோ- எதிர்ப்பையோ அவர் தன் கொள்கை நிலைநாட்ட அசைவுகளுக்காக உருவாக்கிக் கொண்டவரும் கூட.

எல்லோரும் பெரியாரிடம் வந்தார்கள் என தெரிவித்த திரு ராஜா அவர்கள் , திமுக போனதை சொல்லாமல் விடுத்தார். 1949 ல் பிரிந்து போன திமுகவும் 1967 ல் ஆட்சி சமர்ப்பணம் என பெரியாரைத் தேடிப் போனதும் நடந்தது. அது அண்ணாவின் broadness என்று புரிந்து கொள்கிறேன் . 1949-1967 கால இடைவெளியில் திக- திமுக ஒருவரையொருவர் தங்களின் பத்திரிகைகளில் விமர்சித்து ஜாடைமாடையாக பேசிக் கொண்ட அனைத்தும் பொது வெளி ஆவணமாக வைக்கப்படும் என்றால், அந்த ஆவணத்தை விட மிக அதிகமாக பெரியாரை மற்றவர் விமர்சித்த கூட்டுத்தொகை வருமா எனத் தெரியவில்லை.

இன்றும் கூட சுயமரியாதை இயக்கம்- நீதிக்கட்சி- திக என உருவாகி இன்றும் நிற்கும் திக வேறு. அதிலிருந்து கருத்து மாறுபட்டு வெளியேறி உருவான திமுக வேறு என்ற நிலை தொடரவே செய்கிறது. இன்று திக திமுக வேறுபாடுகள் என ஏதுமே இல்லையா? வேறுபடுதலைவிட ஒன்றுபட காரணங்கள் அடிப்படைகள் இருக்கின்றது என்றாலும் , ஒன்றுபட முடியாத இரு வேறு இயக்கங்களாக தொடரும் எதார்த்த நிலையே நிலவுகிறது. தாய்க் கட்சி எனச் சொல்லிக் கொள்ளலாமே தவிர போய் இணைய முடியாது. ஆட்சியில் இருக்கும் போது திக தன் நிலைகளை சாதித்துக்கொள்ள கொடுக்கும் தோழமையை, எதிர்கட்சியாக இருக்கும் போது, அளவு மாறாமல் அப்படியே கொடுக்க

முடியாமல் இருந்த காட்சிகளையும் (ஜெ அம்மையார் கால) பார்த்துள்ளோம்.

திகவில் அண்ணா இருந்த போதே ஆகஸ்ட் 15 துக்கநாள்- இன்ப நாள் விவாதம் பெரியார் அண்ணாவிடம் மேலோங்கி வந்தது. கருப்பு சட்டை கட்டாயம் என்பதிலும் அண்ணா சினுங்கவே செய்தார். பின் கடவுள் இல்லை என்பது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கிற united divinity ஆனது. தேர்தல் பங்கேற்பு என்கிற நிலைப்பாடு வந்தது. தனி நாடு கோரிக்கைக்கு காரணங்கள் இருந்தாலும் கைவிடுதல் என முடிவெடுக்க வேண்டியதானது.

பெரியாரின் 'மரண சாசனம்' எனக் கருதப்படும் இறுதி சொற்பொழிவில் கூட (19-12-1973) பார்ப்பனர்களை- சாதி இழிவுகளை,கடவுளை , தேர்தல் அரசியலில் பங்கேற்போரை, மந்திரி ஆவதை, ஓட்டுதான் பெரிது என்று அரசியல்வாதி எந்த அளவிற்கு வேண்டுமானாலும் இறங்குவான் எனக் கடுமையாகவும் மற்றும் கம்யூனிஸ்ட்களை விமர்சித்தும் அவர் பேசியிருந்தார். அவரது உரையை தோழர் வே ஆனைமுத்து 1993ல் பிரசுரமாகக் கொணர்ந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் 5 கொள்கைகளை அவர் தன் உரையில் எடுத்து விளக்கவும் செய்தார்.

" 1. கடவுள் ஒழியணும் 2. மதம் ஒழியணும் 3. காந்தி ஒழியணும் 4. காங்கிரசு ஒழியணும் 5. பார்ப்பான் ஒழியணும்"

திக வால் இதை இன்றும் உரக்க பேசிவிட முடிகிறது. திமுக வால் இந்த கொள்கைகளை அப்படியே இன்று எடுத்துக் கொள்ள முடிகிறதா என்பது பற்றி அவர்கள் தான் விளக்க வேண்டும். வாக்கு அரசியல் இங்கிதம் வேறு. அங்கு ஒழியணும் என்பதை விட 'இருப்பது எல்லாம் வேணும்' என்பது தொழிற்படும்.

எனவே இரு வேறு இயக்கங்கள் என்றால் வேறுபாடுகள் இருப்பதால் தான் அவை அவ்வாறு தொடரும் நிலையில் உள்ளன. ஏன் ஒவ்வொரு இயக்கத்திற்குள்ளும் கூட வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

நூற்றாண்டு காணும் எந்த இயக்கமும் வெவ்வேறு கால சூழலில் , அதன் முன்னோடி தலைவர்களின் புரிதல்களில் வைத்து அரசியல் புகட்டிய கொள்கை நிலைப்பாடுகள், வேறு ஒரு காலச் சூழலில் மாறுபட்டு போகலாம். இது இடது வலது இயக்கங்களே ஆனாலும் அல்லது வட்டார இயக்கங்கள் ஆனாலும் நேரும். ஆனாலும் அவர்களின் some

fundamentals அதில் எவ்வளவு தேய்மானம் இருந்தாலும், அவர்களின் முகமாக இருக்கும். அவரவரிடம் fundamentals குறித்த சில அழுத்தங்களும், சில நேரம் அவைகளை காணாமலும் கூட இருக்க வேண்டிய சூழல் இருக்கும்.

காலம் அனைவருக்கும் புதிய புதிய பாடங்களை- கற்கைகளை நல்கும். வரலாற்றை அன்று அப்படிச் சொன்னோமே என பயந்து மூடாமல், வெளிப்படையாக ஆமாம் அன்று அப்படிச் சொன்னோம்- இப்படி இந்த புரிதலில் இன்று இருக்கிறோம் என நூறாண்டு காணும் இயக்கங்கள் துணிவுடன் நிற்பது நலம்.

திகவும் பெரியாரின் - அவர் குறித்த ஆதரவு அல்லது எதிர்ப்பு சார்ந்த அனைத்து ஆவணங்களையும் ஒரு சேர ஒன்றுவிடாமல் பொது வெளிக்கு வைக்கும் கடமையை ஏற்குமா என்பது இன்றும் பதில் கிடைக்கா கேள்வியே. மார்க்சிற்கு, காந்திக்கு, நேருவிற்கு, ஓரளவு அம்பேத்கருக்கு , அண்ணாவிற்கு, தற்போது கலைஞருக்கு வைத்துள்ளது போல் ஆவண மின்கிடங்கு பெரியாருக்கும் - 1949க்கு பின்னரான முழு எழுத்துக்களுடன் திகதான் வைக்க முடியும். செய்வார்களா ? அல்லது அரசால் தான் செய்ய முடியும்..

6-10-2025

oct 7

Morning fun with AI on the topic of the twin natures of Indian Constitution- spirit of capitalism and spirit of welfare (socialism). Second part is comparing with US and China .

When I ask one question, it asks more questions with all enthusiasm. .just enjoy the fun with the serious topic

AI நம்ம 'பட்டிணத்தில் பூதம்' ஜாவர் போல இருக்கு

AI analysis

Part 1 – இந்திய அரசமைப்பும் ஏழைகளின் பாதுகாப்பும், முதலீட்டாளர்களின் பாதுகாப்பும்

⚖️ இந்திய அரசமைப்பு இரண்டு நோக்கங்களை ஒரே நேரத்தில் பின்பற்றுகிறது:

1. சமூக நீதி மற்றும் ஏழைகளுக்கான பாதுகாப்பு

2. முதலீட்டாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சட்ட ரீதியான பாதுகாப்பு

இந்திய அரசமைப்பின் நீதிமுறை மையம் பொதுமக்கள் அனைவருக்கும் சமநிலை மற்றும் நீதியை உறுதி செய்யும் நோக்கம். இது ப்ரீம்பிளில் குறிப்பிடப்பட்டுள்ள "சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியை" முன்னிலையில் இயங்குகிறது.

🏛️ ஏழைகளுக்கான பாதுகாப்பு

முக்கிய சட்டப் பிரிவுகள்:

சமநிலை மற்றும் மத வன்முறை தடுப்பு (14–17): சட்டம் முன் சமநிலை, வேறுபாடு இல்லை

பொருளாதார நலன் (38–43A): வேலை, சம உழைப்பு, பணவிநியோக சராசரி, செல்வச்சங்கேந்திர நீக்கம்

வாழ்வாதிகாரம் (21): உணவு, தொழில், மருத்துவம், கல்வி மற்றும் வாழ்வாதாரம்

முன்னுரிமை (15(4), 16(4)): பின்பற்றப்பட்ட சாதிகள் மற்றும் பிற பின்னோக்க மக்கள் சேமிப்பு

கல்வி மற்றும் ஊட்டச்சத்து (21A, 47): 6–14 வயது குழந்தைகளுக்கு இலவச கல்வி; ஊட்டச்சத்து மேம்பாடு

நீதிமன்ற விளக்கம்:

ஒல்கா தெல்லிஸ் (1985) – வாழ்வாதிகாரம் = தொழில் செய்யும் உரிமை

உண்ணிகிருஷ்ணன் (1993) – கல்வியை அடிப்படை உரிமையாகக் கொண்டது

PUCL (2001–) – உணவுக்கு உரிமை

இதனால் அரசாங்கத்தின் கட்டாயமான சமூக நலன்கள் நீதிமன்ற முயற்சியால் செயல்படக்கூடியதாக மாறின.

💼 முதலீட்டாளர்களுக்கான பாதுகாப்பு

முக்கிய சட்டப் பிரிவுகள்:

தொழில் செய்யும் உரிமை (19(1)(g)): அனைத்து குடிமக்களும் தங்கள் தொழிலை மேற்கொள்ள உரிமை பெற்றுள்ளனர்

கட்டாயமான கட்டுப்பாடுகள் (19(6)): அரசாங்கம் தற்செயலாகத் தடுக்கும் அதிகாரம் இல்லை

சட்டம் முன் சமநிலை (14): தனியார் நிறுவனங்களுக்கு வேறுபாடின்றி சட்ட பாதுகாப்பு

சொத்து உரிமை (300A): சட்டத்தின் கீழ் மட்டுமே சொத்து கைப்பற்ற முடியும்

நீதிமன்ற சீர்குலைவு (32, 226): முதலீட்டாளர்கள் அரசாங்க நடவடிக்கைகளை சவால் செய்யலாம்

மத்திய–மாநில அமைப்பு (246, ஏழாவது அட்டவணை): மாநிலங்கள் இடையே முதலீட்டுக்கு போட்டியை ஊக்குவிக்கும்

நீதிமன்ற வழக்குகள்:

ஆர்சி.கே. கூப்பர் (1970) – வங்கிகள் தேசியப்படுத்தலைத் தடை செய்தது

எக்ஸல் வெர் (1978) – தொழில் மூட உரிமை பாதுகாக்கப்பட்டது

மினெர்வா மில்ஸ் (1980) – உரிமைகள் மற்றும் சமூகவாத நோக்கங்கள் சமநிலை

1991 பின்பு – சந்தை திறன், ஒப்பந்த பாதுகாப்பு, முதலீட்டாளர்களின் உறுதி முக்கியமாக இருந்தது

 சுருக்கமான ஒப்பீடு

அங்கம் ஏழைகள் முதலீட்டாளர்கள்

அடிப்படை நோக்கம் சமநிலை, சமூக நீதி தொழில், உரிமை

சட்ட ஆதாரம் ப்ரீம்பிள், DPSP அடிப்படை உரிமைகள்

அரசாங்க பங்கு வழங்குநர், நலனுக்கான விநியோகி கட்டுப்படுத்தும், பாதுகாக்கும்

நீதிமன்ற அணுகுமுறை செயற்பாட்டாளர், நலனுக்கேந்தான் சந்தை நட்பான, கவனமான

முழு விளைவுகள் நலன்கள் சிலவும், இடம் சிக்கல் சட்ட பாதுகாப்பு, முதலீட்டின் உறுதி

✅ Part 1 முடிவு:

இந்திய அரசமைப்பு ஏழைகளுக்கு நீதிமுறை வாய்ப்பையும், முதலீட்டாளர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பையும் தருகிறது.

Part 2 – இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா: ஒப்பீட்டு பார்வை

🌏 சட்டப்பூர்வ முதலீட்டு முறைமை உலகில் தனித்துவமானது.

இந்திய அரசமைப்பு சமூகநீதி + முதலீட்டாளர்கள் பாதுகாப்பு என்ற சமநிலை உருவாக்க முயற்சி செய்கிறது.

US அமெரிக்கா: சந்தை சுதந்திரம்

அமெரிக்க அரசமைப்பு தனியார் முதலீட்டை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது

Fifth & Fourteenth Amendments – சொத்து உரிமையை சட்ட விதிகளை தவிர எடுக்க முடியாது

நீதிமன்றங்கள் நிறுவன உரிமைகள் மற்றும் பணம் மூலம் சொற்பொழிவு உரிமைகளை முன்னிறுத்தின

அரசு குறைந்த பட்சம் மட்டுமே இடையீடு செய்கிறது

பலம்:

தொழில் வளர்ச்சி, புதுமை, செல்வம் அதிகரிப்பு

சமூக சமநிலை குறைவு, செல்வ வித்தியாசம் அதிகம்

CN சீனா: கட்சியியல்-முதலீட்டு முறை

சீன அரசமைப்பு சமூகவாத அடிப்படையிலானது

முதலீட்டின் வளர்ச்சி கம்யூனிஸ்ட் கட்சியினால் கட்டுப்படுத்தப்படுகிறது

பெரிய நிறுவனங்கள், நிலம், நிதி அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது

2004 சட்ட மாற்றம் மூலம் தனியார் சொத்துகள் சட்ட ரீதியாக மதிக்கப்பட்டன, கட்டுப்பாடுகளுடன்

பலம்:

வேகமான வளர்ச்சி, திட்டமிட்ட முதலீடு

அரசியல் சுதந்திரம் குறைவு, முதலீட்டு சுதந்திரம் கட்டுப்பாடுகளுடன்

IN இந்தியா: சட்டப்பூர்வ முதலீட்டு முறைமை

தனியார் முதலீட்டை அனுமதிக்கும், DPSP மற்றும் பொதுநலக் கட்டுப்பாடுகள் மூலம் சட்டச் சோதனை செய்கிறது

1991 பின்பு சந்தை திறன், ஒப்பந்தப் பாதுகாப்பு, முதலீட்டாளர்களின் உறுதி முக்கியமாக இருந்தது

பலம்:

பொருளாதார வளர்ச்சி, நடுத்தர வர்க்கம் விருத்தி

நலன்கள் சில அளவில் மட்டுமே; முதலீட்டாளர்கள் சட்ட ரீதியாக பாதுகாப்பு பெற்றனர்

 ஒப்பீட்டு சாராம்சம்

அம்சம் அமெரிக்கா சீனா இந்தியா

அரசியல் அமைப்பு லிபரல் ஜனநாயகம் ஒரே கட்சி சமூகவாத நாடு பாராளுமன்ற ஜனநாயகம்

முதலீட்டுக்கான அரசமைப்பின் அணுகுமுறை தனியார் சொத்து பாதுகாப்பு அரசாங்க கட்டுப்பாட்டில் முதலீடு சமநீதி + சந்தை சுதந்திரம்

சொத்து உரிமை அடிப்படை மற்றும் பாதுகாப்பானது மாநிலம் கட்டுப்படுத்துகிறது சட்ட ரீதியாக, கட்டுப்பாடுகளுடன்

நீதிமன்றம் சந்தை நட்பான கட்சியினால் கட்டுப்படுகிறது சுயாதீனமாக சமநிலை ஏற்படுத்துகிறது

விளைவுகள் செல்வ வித்தியாசம் + புதுமை வளர்ச்சி + அதிகாரம் வளர்ச்சி + சமநிலை சவால்கள் + நலன்கள்

✅ முடிவுரை

இந்திய அரசமைப்பு மோறல் + சட்ட ரீதியாக கட்டுப்படுத்தப்பட்ட முதலீட்டை சமநிலையாக்குகிறது

ஏழைகளுக்கு நீதிமுறை வாய்ப்பு, முதலீட்டாளர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு

உலக ஒப்பீட்டில்:

அமெரிக்கா → முதலீட்டின் சுதந்திரம் முன்னிலை

சீனா → அரசாங்க கட்டுப்பாடு + வளர்ச்சி

இந்தியா → சந்தை + சமூகநீதி சமநிலை

எதிர்காலம் — முதலீட்டு நியாயமும், சமூக நலனும் ஒன்றிணைந்த முறையாக வளர வேண்டும்.

🎯 Part 2 முடிவு:

இந்திய அரசமைப்பு உலகில் தனித்துவம் கொண்டது:

> “சட்டப்பூர்வ முதலீடு + சமூகநீதி” என்ற சமநிலை உருவாக்க முயற்சி.

oct 8

காந்தியின் வாரிசு யார் என்ற கேள்வி , விடுதலை போராட்ட இந்தியாவில் அடிக்கடி பேசப்பட்ட ஒன்று. ராஜாஜியா, படேலா, பிரசாத்தா, நேருவா, ஆசாத்தா என அவ்வப்போது நிலவும் சூழலுக்கேற்ப இந்தப் பேச்சு எழும் - அடங்கும்.

தேவதாஸ்- லஷ்மி திருமணத்திற்குப் பின்னர் ராஜாஜி வாரிசு என்ற பெயர் அடிபடுவது நின்று போனது. 1940 களில் நேருவே வாரிசு என காந்தி சொன்னதற்குப் பின்னர் அப்பேச்சுக்கு முற்றுப்புள்ளி வந்தது.

காந்திக்கு தன் சொந்த மகன்கள் மீது பாசமே, பெருமிதமே இருந்ததில்லையா? இல்லாமல் இல்லை. கோடானுகோடி ஜனங்களின் நன்மை என்பதற்குள் காந்தியின் தந்தை பாசம் அடங்கி அமர வேண்டியிருந்தது. ஹரிலால் சிறைக்குப் போய் அவதிப்பட்டதை அவர் பெருமையாக பார்த்தார். துன்ப அனுபவிப்பு என்றால் பெருமிதம் வந்தது. வேறு பலன் அனுபவிப்பு என்றால் அதில் முகம் கொடுக்காது , கோடியில் அவர்களும் ஒருவர் என்ற எண்ணத்தையே காந்தி பழகிக்கொண்டார் என அறிய முடிகிறது.

தன் உறவினரான நர்மதா காந்தி என்பார் , ஏதோ ஒன்றை கேட்டு செய்து தரவேண்டும் என வற்புறுத்தியபோது காந்தி இந்த வரிகளை ஜூன் 1947ல் எழுதி புரிய வைக்க முயன்றார்

I have many sons, some of whom bear the name of Gandhi and some bear other names..இந்த கோடானுகோடி மகன்களை மருமகள்களை முழுமையாகப் பார்த்துதான் எனது செயல்கள்- முடிவுகள் அமைய வேண்டும்.

காந்திக்கு எல்லோரும் தேவைப்பட்டனர். அதே நேரத்தில் தனியாகத்தான் என்றால் அப்படி செல்லும் நெஞ்சுரமும் அவரிடம் இருந்தது. அவர் உடன்பாட்டு அம்சங்களுக்காக சதா உரையாடல்களை அமைத்துக்கொண்டார். வேறுபாடுகள் துல்லியமாகத் தெரிந்தால், பிரிந்து செல்லும் உரிமையை எடுத்துக் கொண்டார். பிறரும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் தன்னை விமர்சித்து கருத்து ரீதியாக விலகி, நட்பை தொடரலாம் என்பதற்கான spaceயை அவர் உருவாக்கி வைத்தார்.

போஸ் உடன் உறவையும் , கடும் விரிசலையும் அவர் காண நேர்ந்தது. நேரு அவ்வப்போது சிணுங்கிக் கொண்டேயிருந்தார். ராஜாஜியும் முகம் கோணிய நிலை இல்லாமல் இல்லை. ஆசாத்தோ சம மரியாதை எதிர்பார்ப்பிலேயே இருந்தவர். படேலும் பிரசாத்தும் பொதுவாக

‘லட்சுமண ரேகை’ தாண்டாமல் நின்றனர். விடுதலை நெருங்கும் நேரத்தில் படேலும் முகம் தூக்கிக் கொண்ட காட்சிகள் வராமல் இல்லை.

நேரு தலைமையில், படேலின் உடல் நலம் அதே நேரம் அவரின் ஆற்றல் நீங்காமல் , இருவரும் சேர்ந்து பயணிக்க காந்தி விழைந்தார். இருவரின் பலம் பலவீனத்தை காந்தி அறிந்தவராகவே இருந்தார்.

ஜேபி, லோகியா, நரேந்திரா, அசோகா போன்ற சோசலிஸ்ட்களிடம் அவர் வாஞ்சையுடன் உரையாடல் மேற்கொண்டார். கிருபளானிக்கு பின்னர் காங் தலைவராக ஜேபி வரலாம் எனக் கூட அவர் விழைந்தார். சோசலிஸ்ட்களுடன் கடும் கசப்பான அனுபவங்களைப் பெற்ற படேல் அதை விரும்பவில்லை. நேருவும் தீவிரமாக ஜேபி வரட்டும் என பேசவில்லை.

நேருவின் அரசாங்கம் உலகம் மெச்சும் புகழை தன் செயல்பாடுகளின் மூலம் பெறவேண்டும். இந்தியா உலகிற்கு சொல்ல , காட்ட ஏதோ இருக்கிறது என்பது நடக்க வேண்டும் என்கிற விழைவு காந்தியிடம் இருந்திருக்கலாம். அவர் மனுவிடம் பேசிக் கொண்டிருந்த போது சொல்கிறார்..நேரு குழந்தை மாதிரி..புத்திசாலிக்கெல்லாம் புத்திசாலி..அவரது கொப்பளிக்கும் ஆற்றலைப் பார்த்து இளைஞர்களே வெட்கப்பட வேண்டியிருக்கும். நேருவால் பாம்பு தன் சட்டை உரிப்பது போல எதையும் துறக்கவும் முடியும். In many ways Nehru surpassed me என மனுவிடம் காந்தி சொன்னதையும் பார்க்கிறோம்.

இப்ப நான் நேருவின் அல்லது படேலின் உத்தரவுகளுக்கு பணிந்தாக வேண்டும். மகன், சகோதரன் என்பது இருந்தாலும்- பொது பிரச்சனையில் இப்போது அவர்கள் தான் தலைவர்கள் என புகார் சொல்ல வருபவர்களிடம் அவர் சொல்லி நிதானப் படுத்தவும் செய்தார். ராஜாஜி அதி புத்திசாலி, நேருவோ பெரிய மனிதர், படேல் பர்தோலி வீரர்..இப்படி காங்கிரஸ் பலரை, ஏன் அது உங்கள் ஒவ்வொருவருக்குமானது என அவர் பலரை சமாதானப்படுத்த வேண்டிய நிலையில் இருந்தார். பெரும் இயக்கத்தையும் அதில் சமபலம் கொண்ட பல இணையான தலைவர்களையும் பெற்ற ஓர் இயக்கத்தை உடையாமல் அழைத்துப் போவது எளிய செயலல்ல. அதற்கு பலரின் நம்பிக்கைப் பெற்ற ஆசாபாசத்திற்கு அப்பாலான உயர் தலைவர் வேண்டும். அது காந்தியாகவே இருந்தார்.

காந்தி படேல் மகாதேவ் சிறையில் வேடிக்கை விளையாட்டுக்களை நடத்தி ரசித்துக்கொண்டவர்கள். காந்தி படேலிடம் உனக்கு எந்த

மந்திரி பதவி பிடிக்கும் எனக் கேட்டார். எனக்கு 'பிச்சை பாத்திரம்' பிடிக்கும் என படேல் சொன்னார். எதற்கும் முண்டியடிக்காமை என்கிற நிதானம் படேலிடம் இருந்தது. காந்தி கேட்டால், துறவு என்கிற நிலை அவரிடம். நேருவிடமோ தன்னால் பொறுப்பில் இருந்தால் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கையும் அதற்கான ஆசையும் பயணித்தது.

சில வெளிநாட்டு நண்பர்களுடன் உரையாடும் போது காந்தி சொன்னார்

My co-worker Jawahar, who is like a son to me, is working hard to make my dream come true..if Jawahar's words and actions differ, I shall shun him

இப்படி வெளிப்படையாக சொல்லும் நெஞ்சுரம் அவருக்கு இருந்தது. பெரும் பணக்காரர்களிடம் அடிக்கடி நன்கொடை எனப் போகாதே என படேலுக்கு காந்தி அறிவுரை சொன்னார். படேலும் ஆசாத்திடம், பணம் இல்லை என்ற ஒரு காரணத்தில் நாம் தேர்தலில் தோற்றுவிடக் கூடாது என சமாதானம் சொன்னார். காந்தியும் எல்லைப் புற மாகாண பிரச்னையில், நேருவிடம் நான் தலையிடுவது சரியில்லை என நீங்கள் கருதினால், பாட்சா கானுக்கு வழிகாட்டும் பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள் எனச் சொன்னதைக் காண்கிறோம்.

காந்திக்கு ஒன்று நன்றாக தன் சக தோழர்கள் குறித்து தெளிவாயிற்று. அவர்கள் புத்திசாலிகள். மக்களின் நம்பிக்கையை பெற்ற தலைவர்களாக உயர்ந்து வருகிறார்கள். உழைக்க அஞ்சாதவர்கள். அரசாங்க ஆட்சியாளர்கள். நிர்வாகிகள். அவர்கள் பார்வை தம்மிடமிருந்து மாறுபடலாம். அவர்களின் ஆற்றல் மீதான அளப்பரிய நம்பிக்கையுண்டு. ஆனாலும் தன் அனுபவம் உணர்த்தும், அறம் உணர்த்தும், மனசாட்சி பேசும் நிலைமைகளில் அவர்களுடன் முரண்படும் கடமையும் தனக்குண்டு. அப்படித்தான் அவர் விடுதலை கால இந்தியாவில் வாழ்ந்த ஏறத்தாழ 6 மாதங்களில் வாழ்ந்து சென்றார்.

காந்தியின் சக தோழர்கள் தங்கள் மத்தியில் மோதிக்கொண்டபோது , காந்தி என்கிற நடுவரிடம் அவர்களால் போக முடிந்தது. காந்தி படுகொலை எனும் துயரம் அவர்களை சில காலம் இணைத்தது. ஆனாலும் அவர்கள் 'நடுநிலை மாமனிதர்' ஒருவரை அவ்வப்போது தேடமுடியுமா என சோதித்துக்கொண்டனர். அவர்கள் அதில் முழு வெற்றி பெறாமல் உடைந்து போகவும் செய்தனர். காந்திக்கு வாரிசு என்பது முடிந்த ஒன்றா...தொடர வேண்டிய ஒன்றா... எனில் எவரால்..பலராலா?

இந்திய அரசியலும் சமூகமும் அற உலகும் அப்படியான எல்லோரும் போகத்தகுந்த நம்பிக்கையான இடத்தை இட்டு நிரப்பத் தெரியாது இன்றும் தவித்து வருவதாகவே எனக்குத் தோன்றுகிறது.

8-10-2025

oct 9

நகுலன் கட்டுரைகள்

நகுலனை வங்கி இயக்கத் தலைவர் தோழர் ரகு தான் எனக்கு அறிமுகப்படுத்தினார் என என் நினைவு. பல ஆண்டுகளுக்குப் பின்னர், நகுலன் கட்டுரைகளை கொஞ்சம் வாசித்துப் பார்த்தேன்.

'எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்' என்கிற மெளனியின் தெறிப்பு என்னை தொந்தரவு செய்த ஒன்று. மெளனியைப் பேசும் நகுலன் இவ்வரியை சொல்லும்போது வேறு ஒன்றை சுட்டி கண்ணாடி காட்டுவார்

" இருப்பதெல்லாம் இல்லாமையாகப் போவதற்குத்தான் என்று தெரிந்தாலும்- இந்த இருந்தும் இல்லாமல் போகும் ஒன்றின் மீது நம் பிடிப்புத்தான் எவ்வளவு அழுத்தமாக இருக்கிறது? எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?"

நகுலன் அவர் ரசித்த கவிதை வரியாக (ஏராளம் ரசித்திருக்கலாம்)

"முகம் பார்க்கும் கண்ணாடி

மூன்றுண்டு என் வீட்டில்

மூன்றில் பார்த்தாலும்

முகம்தான் தெரியவில்லை

அகம்தான் தெரிகிறது "

அகம் காட்டும் கண்ணாடி எங்குளது நகுலன் , கொஞ்சம் அனுப்புங்களேன்...சரி கண்ணாடியே இல்லை என்றால்..அகமும் இருக்காதா?

நகுலனை வாசித்துக் கொண்டிருந்த நேரம் நேபாள் நாட்டின் Gen Z பற்றி எரிந்து கொண்டிருந்தது. அப்போது என்னிடம் வந்த வரிகள்

பண்டிதர் மாளிகைகள் எரிஞ்சு போச்சு

மொழி நாட்டில் 'ஜென் சி ' கூட்டம்.

க நா சு பற்றி நகுலன் எழுதிய போது அவருக்கு தோன்றிய வரிகள்

" அங்கதம் என்ற கண்ணாடியில் ஒருவன் தன் முகத்தைப் பார்க்கும்பொழுது அவனுக்கு தன் முகம் தவிர மற்ற எல்லா முகங்களும்

தெரிகின்றன...பிறரை நீ கிண்டல் செய்கிறபோது நீ உன்னையே காட்டிக் கொள்கிறாய். பிறர் சட்டை உரிக்கப்படும் போது உன் சட்டையும் உரிக்கப்படுகிறது”

துரைசாமி (நகுலனின் பெயர்) என அழைத்த சி சு செல்லப்பா சொன்னார் “ எதையும் நின்று நிதானமாகப் படிப்பதற்கு நாம் பழக்கிக் கொள்ளவில்லை”

கலாப்பிரியாவின் ‘காற்றைப் புரிந்து கொண்டாரா’ (கவிதையை புரிந்து கொள்தல் பற்றிய விவாதம்) பற்றி நகுலன் பேசிய போது சொன்னவை

“ எந்தத் தத்துவமும் நம் கையில் மதில் மேல் இருக்கும் பூவைத் தருவதில்லை. காற்றை புரிந்து கொண்டவர் யாருமில்லை. ஆக்சிஜன் என்று கூறிப் பயனில்லை. உடையவரும் இல்லாதவரும் காற்றை ஒரே மாதிரியாகத் தான் காண்கிறார்கள்”

அப்படியா நகுலன் ஒரே மாதிரியாகவா...அப்போ அங்கு தீர்மானம் இயற்றப்பட்டிருக்க வேண்டும்...

தாஸ்தவஸ்கியை அழைத்து நகுலன் சொல்ல வருவது

“ வாழ்க்கையின் எந்த அனுமானத்தையும் விட வாழ்க்கை தான் முக்கியம்”

நகுலன் காட்டும் இன்னொரு கவிதை வயது காலத்திற்கு ஒத்தடமாக

“ எனக்கும் அவளுக்கும் வயசாகும்

இமை முடிகள் நரைத்துப் போகும்

பிடுங்கி வைக்கத் தரையின்றி

விழிகள் மண்டி மரங்களாகும்” பட்ட மரம் பாவம் இனி துளிர்க்காது. பாவனைகள் வீண்.

பிரம்மராஜன் பற்றி நகுலன் பேசும் போது இப்படியான கம்பராமாயண வரி ஒன்றைக் காட்டுகிறார்

புல்லொக்கும் நெல் என்றாலும்

சொல்லொக்கும் பொருள் ஒவ்வாது

இதை தந்து விட்டு கட்டுடைத்தலுக்கு போகிறார். "சொல் பொருள் இல்லாததையே காட்டுகிறது. ஆடு என்றால் மாடு இல்லை என்றவாறு"

ஆத்மாநாமை நகுலனிடம் இப்படிப் பார்த்தேன்

"சூரியன் மேலே சென்றான்

எருமைகள் ஓட்டிச் சென்ற

சிறுவனின் தலையில் வீழ்ந்தான்" சூரியன் எருமைகள் சிறுவன் தலை ஏன் ஆத்மநாம் என எல்லோருமே இன்னும் இருக்கிறார்கள்..

தள்ளி இருந்தால் முழு உருவம் கிடைக்குமாம். ஆனால் தள்ளிப் போக ஒரு மனது வேண்டுமே..

பஸ்ஸில் உங்களுடன் வரும் மரங்கள் குறைந்து விட்டனவா?

குழுவிற்கே உள்ள உறவு கூட்டுழைப்பா அன்பா...தெரியலையே நகுலன்

நகுலன் கட்டுரைகள் 320 பக்கங்கள் கொண்ட சற்று பெரிய நூல் தான். நானே வாசித்துவிட்டேன்...ஜாம்பவான்களை கேட்க வேண்டுமா என்ன..

9-10-2025

oct 10

BSNL NE Wage Revision – Terms of settlement A Forwarding Moment

The expected moment of thousands of employees and retirees of BSNL was captured by bringing an amicable Terms of settlement as reported by the Joint Committee on oct 8th 2025.

Com C Singh the GS of NFTE, com Abhimanyu Ex GS and Animesh Mishra GS of BSNLEU have played well to bring this Terms of settlement. NFTE has lost two gems during this period, earlier com Seshadhri, recently com Islam -they also made their appreciable prints on the sittings. Hope everyone salute them.

The Terms of settlement arrived at will be forwarded to DOT for 'In Principal approval', after the same got approved by the competent authority at BSNL.

The Joint committee was formed during 2018 itself. Even for bringing the DPE OM for workmen 8th round, Unions did their best and struggled for the same got forwarded by DOT on 27-4-2018 to BSNL for constituting committee and holding wage negotiations.

The first meeting itself staff side brilliantly questioned the impact of 'Incipient sickness Board' on BSNL and got the reply that clause in the DPE Om was not applicable to BSNL. But that was before 2019 Revival package. Fortunately there is no mention about this in the Terms.

The trick of BSNL was found to amend its wordings – JC for wage structure- into JC for wage revision and the staff side done it cleverly. Now one can see that have come as 'Report of Wage Revision committee' not as Wage structure committee.

The staff side raised another issue in the earlier meetings itself about taking scales on 68.8 instead of 78.2 designed one. Though they cannot amend that, now they got in the Terms now. one can see that the sustained demand of staff side thus accepted in this para

" 5.3 Committee agrees for pay scales with shorter span/ lower multiplication factor in view of the current BSNL financial status. However, it shall not form the basis for next wage revision."

Another important issue of the staff side , connected with both Executive scales and NE scales also is settled. Though this was not placed in Terms, but staff side can feel proud of their achievement in bringing 'Pension contribution on actual pay instead of the maximum pay'. DOT gave that assurance to the Unions well before by its minutes dated 24-11-2021.

"Payment of Pension contribution by BSNL based on the actual pay brought by union representatives is looked after by DDG Est" . The efforts of DDG Est is appreciated here for getting DOE approval from 1-9-2025 at least.

The terms

‘2.1 this settlement will be applicable to NE who were on the rolls of BSNL as on 31-12-2016’-

2.2 "New revised IDA pay scales under this settlement shall be effective from 1st Jan 2017..."

Staff side cleverly overcome the question of ‘notional pay’ as mentioned in the JC held on 10-3-2022 - 'new scales proposed notionally w.e.f 1.1.2017'

If notional then we may face a different experience like the one we faced during 78.2 issue on pension retirement benefits like DCRG, Commutaion and leave encashment. Absence of any ‘postponing the actual benefit to some other date’ and avoiding arrears to the employees seems good. We have to wait till the final order and we have to wait till we get Executive Pay revision order.

Fitment as per the terms (3.3.3 para) is - Basic as on 1-1-2017 (stagnation pay personal pay etc) plus IDA 119.5 and fitment at par with Executives

Here staff side taking their all efforts and succeeded by not mentioning zero fitment . Both DOT and BSNL have been telling IDA merger with nil fitment only since 2019. Many of the explanations given by Management side and recorded in the JC minutes are speaking zero percent only. The main reason for this is , the DPE guidelines are silent about this zero percent , where as they speak about 15, 10 and 5% conditionalities.

DPE has advised DOT if any deviation from the said clauses, then they have to go to Cabinet. I do not know if DOT and BSNL take shelter 'on the silence of zero percent' in the DPE OM, then also they need to or should seek cabinet approval for the same. We have to wait and see the DOT's move on the Executive Pay revision or the PO for that.

Management side informed that the pay revision of executives, a proposal with 15 % fitment has already been sent to DOT on 14-11-2017 itself. However the decision on the proposal is still awaited.

Management side informed the NE wage revision is linked with Executive wage revision and so we need to wait for the same.

It may be difficult to avoid stagnation, but if any – standing on 3rd PRC scales is better than standing and stagnating on 2nd PRC scales .

Some section may get dissatisfaction on their scales and may be vocal on that.

The issue of Pre 2017 pension revision may crop up with – when both Executives and NE once get their wage revision w.e.f 1-1-2017 . It is a challenge for both DOT and BSNL to match the outcome of PBCAT judgement of 2023 for pension revision. We have to wait how DOT is smart in all these things.

In the present conditions of BSNL both the Unions – their leadership have done their best and let us appreciate them for all they did by their hard negotiations. Hope things will get forwarded to the next stages.

19 hrs 10-10-2025   R. Pattabiraman

oct 11

At cross Roads

In the BSNL, the employees' unions have been fighting for their pay revision w.e.f 1-1-2017 , and the Pensioners' Associations are fighting for their pension revision w.e.f 1-1-2017. They all demanded in one voice and concurred on a particular issue ' Delinking Pension Revision from Pay revision'. The unions though demanded pay revision separately did also acknowledge this demand of Pensioners' 'Delinking'.

DOT in their meeting with pensioners' representatives on Oct 17, 2022- also expressed their willingness to concur with the demand of 'delinking' and pronounced its methodology of linking both Pre 2017 and Post 2017 pensioners revision on the basis of 3rd PRC scales with nil fitment on IDA merger. Here the difference between various associations were exhibited, some demanded better fitment by not accepting zero fitment proposal of DOT, and some other negated PRC and demanded fitment on the basis of 7th CPC.

Those accepted PRC, demanded how DOT can act without NE scales. DOT assured them that NE scales would be obtained from BSNL and it seemed they obtained that from BSNL. Now of course transparently DOT got it , on BSNL's signing the 'Terms of settlement' with Unions on Oct 8 , 2025. The NE scales thus arrived in the 'Terms' become official once DOT gives its approval . DOT , which is having the forwarded Executive scales by BSNL, should issue its presidential order, then only the NE gets their wage revision order .

The Terms signed by the unions for NE and if any PO by DOT for Executives - then all these are only for Post 2017 pensioners, that is for the employees on that day 1-1-2017. Here Pay linked pension is again in clear terms without any ambiguity, pension as per 3rd PRC scales is in clear terms, once DOT's approval is done. The date of effect is also here in clear terms that is 1-1-2017.

Fitment is the main issue here. If DOT takes '5 to 15' percent route, then they have to seek exemption on Affordability clause, which DOT may feel difficult. In the Secretaries meeting for deciding 3rd PRC , 'then DOT secretary' did not seek any exemption while Coal Secretary sought the same. So DOT may take their well thought out IDA merger route with nil fitment, as DPE is silent on that. This may be the crux of the problem in the PRC issue.

In this case - the issue of Pre 2017 pensioners , needed its analogous settlement on the lines of PRC. We have to wait and see , how DOT is going to act on the above issues.

II

Those who demanded CPC fitment got their Judicial - PBCAT Delhi directions on 20-9-2023. The associations gone to CAT are relying upon that Judgement. The issue is

‘Pension Revision to the Pensioners’ on the cut off date. The cut off date is 1-1-2016 if CPC , 1-1-2017 if PRC .

The direction of PBCAT Delhi is

" 28. ..The competent authority amongst the respondents is directed to forthwith revise the pension and FP wherever applicable, strictly in accordance with the relevant rules and the entitlement governing pension to various sets of employees of the central govt , maintaining strict parity . It is clarified that the benefits of revision of pension and family pension as notified by the Central Government on the recommendations of the Pay commission, shall stand extended in favour of the applicants, analogous to the revision of such pension in case of central Government pensioners”

The applicants here are both Pre 2017 and post 2017 pensioners. The CAT direction is about CPC benefits to be extended to the applicants as notified by the Govt, analogous to the revision of CG pensioners. Here I feel the ambiguity. If benefits as per CPC recommendations and notifications, then ‘what is the date’ and to ‘which scales’ and ‘what is the merger points’. This is not explicitly found in the direction of CAT judgement. If CPC Applicability then the date is 1-1-2016, if incorporation then the date is 1-1-2017. Applicability of CPC means DOT can automatically extend the benefits by its order to the BSNL absorbed from the CPC date itself. Incorporation of CPC benefits means, DOT has to go to the cabinet to extend the benefits and to get the approval for pension revision to the pensioners and the date here is 1-1-2017. This was in vogue ‘on the applicability’ during 6th and 7th CPC , and ‘incorporation’ during 2011 pension revision w.e.f 1-1-2007.

The CAT applicants , having got their pension fixed on the basis of Pay on second PRC scales , have to go to some new scales- If in that case to ‘which scales’ and ‘from what date’ . If the benefits of pension revision on the basis of pay matrix as per 4-8-2016 and 12-5-2017 OMs, then to what scales ‘to the employees still continuing in the PSU ‘ and from which date - that is post pensioners . So I strongly feel the ambiguity here.

Associations like AIBSNLPWA have all along been telling, even in writing about the methodology of Pension Revision on the basis of multiplication factor analogous to CPC. They felt no need of any pay scales for revision of pension for their delinking demand. They advocated their simple fitment methodology of ‘pension plus IDA 119.5 percent with 32 percent of the existing pension as on 31-12-2016’. When the question of post 2017 cropped up, they preferred to settle the anomaly by changing their pension also as per the above methodology then and there on retirement. Here also they did not feel the necessity of pay scales for post 2017 . Their advocacy is nothing but postponing the benefits of post 2017 to a far off retirement date of them, instead of seeking from the same 1-1-2017.

I do not know still they are holding this opinion. If not, they have to resolve the question of Pay scales. They have to educate their members, CPC benefits means on which

scales - on pay matrix or on PRC scales and from which date from 1-1-2016 or from 1-1-2017. One may expect clarification from them , how CPC benefits as per Govt notification can be linked to employees of PSU on that cut off date.

Moreover , DOT is fighting to nullify the PBCAT judgement at Delhi HC. DOT's main argument here is that on absorption , they all become PSU employees and ceased to be Government servants. Their Getting pension from consolidated fund as per Govt pensioners formula does not change their 'nature of employment' . The IDA pensioners are retiring on absorption not as Government servants like CG pensioners, but only as BSNL absorbed PSU employees.

I do not know what will happen in the Delhi HC. I do not know whether any one of them- associations or DOT- will stop their claim with the HC and not taking the same to Supreme Court. This battle may find its long road to get either way of disposal.

So BSNL Employees and Pensioners are at the cross roads. They have to rely upon DOT only for their expected benefits , in today's context - one side CAT judgement connected struggles and the other side Unions' efforts of bringing 'Terms of Settlement ' . It may be a difficult situation. Hope DOT may find some solution at the earliest to bring peace to the young minds of employees and aged hearts of pensioners.

20 hrs 11-10-2025 R. Pattabiraman

oct 12

Gandhi, Marx and India

In 2020, Aakar Publications brought out Gandhi, Marx and India, a book written by the late Pradhan Prasad, a renowned thinker from Patna who passed away in 2001. Pradhan had written this work in 1992, in the years following the collapse of the Soviet Union.

Friends of the Patna Economic Association, who had studied under Pradhan, revived his memory by bringing out this book through Aakar.

There have been several books on Marx and Gandhi. Gandhian scholars have written about Marx, and Marxists have written about Gandhi. Books have also appeared on Lenin–Gandhi, Stalin–Gandhi, and Mao–Gandhi. Comrade Pattabi’s 'Understanding Gandhi' and 'Comrade Gandhi’s Socialist Dialogues' also belong to this line of thought.

Pradhan’s Gandhi, Marx and India is a concise work—only about 140 pages long—almost in the nature of lecture notes. Each topic discussed in it demands deep understanding; to grasp them fully requires serious effort.

In a brief, Pradhan touches on topics such as Marx and Engels’ understanding, Lenin’s view of Soviet socialist construction, the collapse of the Soviet Union and the resulting distortions, British rule in India, Gandhi’s entry into the national struggle, India’s freedom movement, Nehru’s rule in independent India, the split in the Communist movement, and the understanding of the Marxist-Leninist (ML) comrades.

Pradhan concludes that just as Lenin could not build the Soviet Union in the way he envisioned, Nehru and others failed to build the new India in the way Gandhi desired. On Lenin’s experiment, Pradhan writes:

“Lenin laid the foundation for the emergence of a privileged class within the Party. Over time, this class accumulated power and privileges for itself.

When competition for a place within this privileged stratum intensified, everyone who thought differently from Party orthodoxy was declared an enemy of the working class and the peasantry.

Consequently, instead of uniting with the majority of society, the practice became one of using the machinery of the state to suppress those labeled as ‘class enemies.’”

Similarly, Pradhan cites what Lenin and Mao said about their interpretations of Marxist theory in practice. Lenin stated:

“We do not regard Marx’s theory as something final or infallible. Rather, it is only the foundation of social science. If socialism is not to fall behind the march of life, it must be developed in all directions.”

Mao’s words, quoted by Pradhan, read:

“Marx lived in the era of laissez-faire capitalism and could not have foreseen certain laws specific to the age of imperialism. Imperialism, being the final stage of capitalism, had not yet emerged then, and there was no experience of it. This task fell to Lenin and Stalin.”

While explaining how Nehru failed to adopt Gandhi’s perspective, Pradhan quotes Gandhi:

“I fear that industrialization is going to be a curse for mankind… The entire system of industry depends on your capacity to exploit.”

Pradhan then comments on Nehru:

“Is it not strange that Jawaharlal, who wrote The Discovery of India, did not take into account this simple historical truth while leading India on the path of development? Or was he completely deceived by the mercantile and feudal tricksters who had begun to dominate the Indian ruling class?”

Here, Pradhan gently expresses a viewpoint close to that of the Marxist-Leninist movement.

Chaitanya Krishna, one of Pradhan’s close comrades, wrote the preface for the 2020 edition. In his foreword, he observes:

“Had Gandhi’s vision of self-sufficient villages been implemented, we would never have witnessed the tragic scenes of migrant workers walking back to their villages. Gandhi’s solution was to integrate economy, politics, and technology with morality—and to make the welfare of the poor and the weak the central aim.”

That millions of Indians, caught up in the politics of mere rhetoric, have ignored a man who spoke as he lived and lived as he spoke, remains one of the greatest continuing tragedies of this land.

oct 13

நேருவின் டிஸ்கவரி

என்னதான் அருகிலேயே இருந்தாலும், கூடவே பயணித்தாலும் மனித வாழ்க்கையில் ஒருவரையொருவர் சரியாக புரிந்துகொள்கிறோமா என்ற கேள்வியை சந்திக்காதவர் இல்லை. பெற்றோர்- குழந்தைகள், கூடப் பிறந்தவர், சக தோழர்கள்- ஏன் இன்னும் மனைவி- கணவன் என சக பரிமாற்றங்களில் இக்கேள்வி- சரியாகத்தான் புரிந்துகொள்கிறோமா என்பது எழாமல் இருக்காது. நம் மனம் எடுத்துக்கொள்ளும் போக்கில் எதிர்வினை ஆற்றிவிடுகிறோமா- அடுத்தவர் தரப்பு என்ன என செவிமடுக்க தயாராக இல்லாமல் அவசரப்படுகிறோமா என்கிற அவதியான கேள்வி இருக்கவே செய்யும்.

நேருவிற்கும் கமலா குறித்து இக்கேள்வி எழுந்தது. தன் துணைவியின் உடல்வதை காலத்தில், சூழலின் வெப்பம் இக்கேள்வியை அவரிடம் உந்தித் தள்ள செய்திருக்கலாம். நேரு தன் The Discovery of India வில் இதை கொஞ்சம் அசை போட்டுப் பார்க்கிறார். அவளை சரியாக புரிந்து கொண்டேனா..அவள் எப்படி..என்ன நிலையில் வந்தாள்.. முறையான பள்ளிக் கல்வி இல்லா சிறு காஷ்மீரத்து பெண்ணாக எங்கள் குடும்பத்திற்குள் நுழைந்தாள். இன்று...

நேரு எழுதுகிறார்- நானோ கனவுலக சஞ்சாரி- மனம் முழுக்க விடுதலை புரட்சியின் கனவுடன் ஊர் சுற்றி. சுற்றி நிற்கும் நிஜ மனிதர்களை பொருட்படுத்தாமல் நிழலாக பாவித்து கனவின் இறக்கைகளால் கால் பாவாது பறந்து கொண்டிருந்தவன். கமலா முட்டாளா- இல்லை புத்திசாலியா. படார் எனப் பேசக்கூடியவளா இல்லை நிதானமும் உடையவளா. சக மனிதரை எடை போடத் தெரியாதவளா எடை போட்டால் அவ்வளவுதான் சரியான நிறுவைக்காரியா இப்படி நேருவிடம் கமலா குறித்து ஏராளக் கேள்விகள்.

நேரு தாகூரை ரசித்தவர். அவரின் நாடகம் ஒன்றின் பாத்திரமான சித்ரா போன்றவளா கமலா என்ற கேள்வியும் அவரிடம். தாகூரின் சித்ரா சொல்வாள்- இதப்பாரு, உன் சாகசத்தில் ஆபத்தான பயணத்தில் என்னை அருகே வைத்திருந்து பார்- உன் கடமையில் எனக்கும் பங்கை கொடுத்துப் பார், பின் யார் நான் என்று நீ உணரக் கூடும். ஆனால் கமலா இப்படி ஒரு நாளும் பேசவில்லையே. அவளும் நிறைய படிக்க ஆரம்பித்தவள் தானே. ஆனால் கமலா தன் கண்ணால் அப்படி என்னிடம் சொல்கிறாளோ என நேருவிற்கு மனதில் நிழல்.

நோய்வாய்ப்பட்ட கமலாவை, ஜெர்மனியின் சானிடோரியம் ஒன்றில் கவனித்து வந்தனர். நேரு , ப்யர்ல் பக் எழுதிய 'தி குட் எர்த்' லிருந்து படித்துக் காட்டுகிறார். இருவரும் 20 ஆண்டுகால மணவாழ்க்கையின் மகிழ்ச்சியான கணங்களை பேசி அபத்தங்களையும் பேசி வாய்விட்டு சிரித்து மகிழ்ந்தனர்.

நேரு, கமலாவிடம் வளர்ந்த உறுதி ஒன்றைச் சொல்கிறார். அவை நல்ல realisation கூட

" with her inordinate pride and sensitiveness she did not want to come to me to ask for any help, although I could have given her that help more than anyone else.She wanted to play her own part in the national struggle and not be merely hanger on and shadow of her husband. She wanted to justify herself to her own self as well as to the world…" கமலாவின் கம்பீரத்தை கொஞ்சம் நேரு காட்டிவிட்டார்..

2

நேருவிற்கும் எழுதுவது என்றால் என்ன என்கிற கேள்வி எழாமல் இல்லை. சிறைக்காலம் படிக்க எழுத உகந்த காலமாக அவருக்கு அமையாமல் இல்லை. அங்குதான் autobiography, Letters to Daughter உலக சரிதை என அவர் எழுதி முடித்தவர். குவிட் இந்தியா கால சிறைவாசம் நீண்ட ஒன்றுதான். தோட்ட வேலை போன்றவை இருந்தன. நண்பர்களோ, இன்னொரு நூல் எழுதுங்கள் எனச் சொல்லாமல் இல்லை.

எழுதுவது நேருவிற்கு பெரிய விஷயமே இல்லை. பேனாவைத் திறந்தால் எழுத்து விழுந்து தாள்களில் நாட்டியமாடும். அது அவருக்கு எளிதானதே. என்ன எழுதுவது -எது குறித்து- அல்பாயிசில் என் எழுத்து போகவேண்டுமா, சாகாவரம் பெற்று சக மனிதர்களிடம் தொடர்ந்து வரும் காலங்களில் உரையாட வேண்டுமா என நேருவின் மனதில் போராட்டம். அதனால் எழுத்து strike நடந்து கொண்டிருந்தது. மனதிற்குள் பேச்சுவார்த்தை நடந்ததால்

காலவரையற்ற ஸ்டிரைக் ஏதுமில்லாமல் போனது. அதனால் நமக்கு வாய்த்த பேறுதான் அந்த செட்டில்மெண்ட்டான The Discovery of India.

நாட்டில் நடப்பதை நிகழ்வதை எழுதுவதா..உள்ளே சிறையில் அமர்ந்துகொண்டு, செயலில் பங்கில்லாமல் எழுதுவது சரியாகுமா நிற்குமா? எதிர்காலம் பற்றி..இல்லையே தீர்க்கதரிசி இல்லையே..சரி என்னதான் எழுதுவது. என்னில் புகுந்து ஆட்டம் போடும் என்னை துரத்திக்கொண்டே வரும் கடந்தகாலம்- அது நடத்தும் சேட்டைகள்

அல்லது வழிக்காட்டல்கள்- அது தரும் பெருமிதங்கள் அல்லது சோகவலிகளைப் பற்றி..சரி அப்படியே ஆகட்டும் என மனதின் ஆமோதிப்பால் கிடைத்த ஒன்றுதான் அவரின் டிஸ்கவரி நூல். ஏறத்தாழ 600 பக்கங்களைத் தொடும், இன்றும் நேருவின் அடிப்படைகளை பதியம் போட்டதாக கருதப்படும் நூல்.

நேருவின் இலக்கிய ரசனைகளை வரலாற்று பார்வையை, விஞ்ஞான மனோபாவத்தை, மார்க்சிய நேசத்தை, காந்தியின் தலைமைத்துவத்தை- அதே நேரத்தில் எதையும் கடவுள் பீடமாக்கி பூஜிக்காத மனோநிலையை இந்நூல் ஒருவருக்கு தரக்கூடும் என எனக்குத் தோன்றும்.

மௌனியின் புகழ் வாய்ந்த கேள்வி- எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம் (whose walking shadows are we?) . நேருவின் விவாத விரிவிற்கான கேள்விகள் what is my inheritance? To what am I an heir?

நேரு , நீட்சேயின் எச்சரிக்கை வரிகளையும் தருவார்

Not only the wisdom of centuries, also their madness breaketh out in us. Dangerous is it to be an heir.

Wisdom என்கிற கிறுக்குத்தனமும், madness என்கிற பைத்தியக்கார வெறித்தனமும் கூடவே வந்துகொண்டுதான் இருக்குமா? மனிதனுக்கு பாவத்துடன் சேரா வரம் என ஏதுமில்லையா? வாழ்க்கை இப்படி கலந்து குழைத்துதான் நம்மை அழைத்துச் செல்லுமா.. பைத்தியக்காரத்தன ஆட்டம் நிற்காதா … வரம்மிகும் வாழ்க்கை கனவா..

13-10-2025

oct 14

Nehru and the Spirit of India

Manush Firaq Bhattacharjee அவர்கள் எழுதிய 'Nehru and the Spirit of India' மிக மிக ஆழமான நூல். தேர்ந்த விவாத செறிவை வைத்துக்கொண்டிருக்கும் நூல். 'அகாடமிக்' என ஒதுக்கப்படக் கூடாத நூல்.

மானஷ் நூலை 2024ல் கிழக்கு பதிப்பகம், ஜனனி ரமேஷ் மொழி பெயர்ப்பில் தமிழில் கொணர்ந்துள்ளனர். ஜனனி ரமேஷ் திறமையான மொழிபெயர்ப்பாளர். அவரின் ஔரங்கசேப் மொழி பெயர்ப்பு குறித்து முன்னர் ஒருமுறை எழுதியிருக்கிறேன்.

மானஷ் என்கிற நேரு சிந்தனையாளர், இந்திய வரலாற்றாய்வாளர், தத்துவ பின்புலம் கொண்ட அறிஞர் இந்நூல் வழியே நம்மிடம் வெளிப்படுவார். நேருவின் வரலாறு, அறிவியல், மதம், மரபு மற்றும் நவீனத்துவம், கலாச்சாரம் நாகரீகம், காஷ்மீர் பிரச்சனை - அனைத்திற்கும் மேலாக காலனித்துவத்தும் தந்ததில் கொள்ள வேண்டியவையும் தள்ள வேண்டியவையும் குறித்து இந்நூலில் பெருந்தேடலை மானஷ் பிராக் செய்கிறார்.

கிழக்கு வங்க குடும்ப பின்னணி- வங்க வட்டார மொழிப்பாட்டுடன், அஸ்ஸாமில், டெல்லியில் இன்னும் இந்தியாவின் எப்பகுதியிலும் தான் இந்த நாட்டின் குடிமகன் தானா- அந்த belonging ness தன்னால் ஏன் உணரமுடியா சூழல் என்கிற கேள்விகளின் வெம்மையும் அவரது உளவியலில் தொழிற்படுவதைக் காணலாம்.

நேரு தன் காலத்தில் தான் சுவீகரிப்பாக பெற்ற இந்தியாவை எப்படி கண்டறியப் பார்த்தார் என்பதைப் பேசும் அறிமுக இயல். அடுத்தடுத்த இயல்களில் காலனித்துவம், குடிமகன் அரசின் மதச் சார்பின்மை தொழிற்பாடு, கலாச்சாரம், வரலாற்றை நிகழ்கால கண்ணாடிக்கு பொருத்தும் தன்மைகளை மானஷ் விவாதித்துச் செல்கிறார்.

வரலாற்றை அறிகிறோம் என்கிற பெயரில் மிகைப்படுத்தல்களை உண்மையாக்க முயற்சித்தல், நிதானத்தை இழந்து போடும் கூச்சல்கள் குறித்து நம் ஒவ்வொருவரைப் போலவே அறிவார்ந்த தளத்தில் மானஷ் கவலை கொள்கிறார். நேரு வெறுமனே அய்ரோப்பிய கருவிகளின் மூலம் மட்டுமே இந்தியாவை உணர முயற்சிக்கவில்லை என்கிறார் மானஷ். அரசியலையும் கலாச்சாரத்தையும் வெறுப்பை நுழைக்காமல்

பொருத்தமாக கலந்து பார்க்க வேண்டிய இந்தியா நேருவிற்கு தேவைப்பட்டது என நான் புரிந்துகொள்கிறேன்.

ஜனநாயகத்திற்கு முக்கியமானது அதன் அரசியல் மற்றும் அது உத்தரவாதப்படுத்தும் சமூக ஒற்றுமையும் ஆகும். சமூக ஒற்றுமையை எப்போதும் பதட்டத்தில் வைக்கும் அரசியல் சூழல் கவலைக்குரிய ஒன்றே.

காஷ்மீர் விஷயத்தில் நேருவிற்கு எமோஷனல் தன்மையும், ஊசலாட்ட உணர்வுகளும் இருந்தன என்கிறார் மானஷ் . அதே நேரத்தில் அரசியல் நம்பிக்கையை மத உணர்வுகளின் அடிப்படையில் அமைக்கக் கூடாது என்கிற தெளிவு அவரிடம் இருந்தது. ஆனால் ஷேக் அப்துல்லா மீதான எதிர்பார்ப்புகளையும் அவரது நட்பு கொண்டிருந்தது. நட்பின் அரசியலும் அவசியம் என அவர் கருதாமல் இல்லை. வதந்திகள் சில நேரம் உன்னத நட்பையும் கவிழ்த்துவிடும் என்கிறார் மானஷ். ‘நட்பின் அரசியல்’ என்கிற கார்ல் சிமிட் நூலையும் அவர் சொல்கிறார். ஏராள நூல்கள் ஆசிரியர்கள் இந்நூலில் வந்து போகின்றனர்.

நேரு தன்னை குறித்த பெருமிதம் கொண்டவராக இருந்தாலும் , தன் லிமிட்டேஷன் உணர்வையும் அவர் கொண்டவராக இருந்தார். வரலாற்றின் திறவுகோலை தான் கொண்டிருப்பதாக அவர் கருதாமல் இருந்தார் என மானஷ் சொல்கிறார். இந்திய பிரச்சனைகளோ இந்திய ஜனநாயகத்தைவிட பழமையானவை என அவர் அறிந்திருந்தார்.

நவீனம் என்பதை பேசும்போது தான் ‘மரபு’ என்பதும் தன் தனித்துவ நாற்காலியைக் கோருகிறது. நவீனத்திற்கு முன்பு மரபு என அது தன்னை அழைத்துக்கொண்டிருக்க முடியுமா?. இந்திய ஜனநாயகத்தைக் கொண்டு சமத்துவ மதிப்புக்களை இந்த பழம் பெரும் சமூகத்தில் நல்லிணக்கப்படுத்த இயலுமா- ஒத்திசைவை உருவாக்க முடியுமா என நேரு பார்த்தார்.

மார்க்சையும், சோவியத் பற்றியும் நேரு அறியாமல் இல்லை. அந்நியமாதல் என்பது பொருளாதார தளத்தில் மட்டுமல்லாமல், ஆன்மீக கலாச்சார தளத்திலும் நிகழ்வதை அம்பேத்கர், நேரு போன்றவர் பார்க்கவே செய்தனர்.

மானஷ் சொல்கிற இக்கருத்தில் பலர் மாறுபடலாம். அவர் மார்க்சியம், தாராளமயம் இரண்டும் தீவிர வரலாற்று பிரச்சனைகளில் உதவவில்லை என மதிப்பிடுகிறார். மேலும் மானஷ் “ யாரோ ஒருவர் சுதந்திரமாக இருக்கிறார் எனில், பகுத்தறிவு மற்றும் அவரின் சொந்த

மேன்மை, ஏனையோர் மீது நிலைநிறுத்தப்பட்டுள்ளது எனச் சொல்கிறார். இங்கெல்லாம் மானஷின் விளக்கம் போதுமா என என்னால் ஊகிக்க முடியவில்லை.

இன்றைய சமூகத்தில் உண்மையோ, பொய்யோ அதை அரசியல் கலப்பில்லாமல் அதிசயமாக்க முடியாது என்கிறார் மானஷ். பகுத்தறிவால் விளக்க முடியாததை அதிசயம் என்கிறோம்- 'பிள்ளையார் பால் குடித்தார்' என மக்கள் நம்பவும் செய்கிறார்களே என கேள்வியை மானஷ் வைக்கிறார். அனைத்து பாரம்பரிய நம்பிக்கைகளிலிருந்தும் வரலாற்று தப்பெண்ணங்களிலிருந்தும், மக்களை விடுவிப்பதாக பேசிய 'பகுத்தறிவு மந்திரக்கோல்' வேலை செய்யவில்லை என்கிறார் மானஷ்.

நேரு கூட அய்ரோப்பாவில் நடந்தது போல், இந்தியாவில் மதத்துக்கும் அறிவியலுக்குமான மோதல் கசப்பாகும் எனக் கருதவில்லை என்பதை மானஷ் சுட்டிக் காட்டுகிறார். அறிவியலுக்கும் ஜோதிடத்துக்கும் வித்தியாசம் அறிந்த இஸ்ரோ விஞ்ஞானிகள் இரண்டிலும் ஈடுபாட்டுடன் இருப்பதை மானஷ் சொல்கிறார். விஞ்ஞானிகள் சமூகத்தின் மனிதர்கள் தானே...

சாதி என்பது மனித இழிவு என நேரு பார்த்தார். அது இந்திய சமூக கட்டமைப்பின் அழிவிற்கான விதைகள். அது சமூகத்தின் பெருந்தோல்வி என நேரு நினைத்தார். நவீன எண்ணங்களையும், இடைக்கால பழக்க வழக்கங்களில் ஊறின சமூகமாக இந்தியாவை நேரு பெற்றார். நாமும் அப்படியான இந்தியாவையே பெற்று, அதை நவீனமாக்க முடியுமா என்கிற போராட்டங்களின் சாட்சியாக நிற்கிறோம். அதே நேரத்தில் ஆட்சியாளர்கள் காலனித்துவ வழிகளை போலியாக பின்பற்றிய சவாலும் கூடவே வந்தது என்கிறார் மானஷ். இதனால் தான் பிரிட்டிஷ் ஆட்சியே மேல் என்கிற அரசியல் குரல்கள் வந்தன என்கிறார்.

கலாச்சார அரசியல் என்பது அதிகாரப் போட்டியை சுற்றியே நிகழ்கிறது என்பதை மானஷ் இந்நூலில் தெளிவுபடுத்துகிறார். எதை அனுமதிப்போம், எவர்களை அனுமதிப்போம் என்கிற மேலாதிக்கத்தின் அங்கீகாரத்திற்காக அது போராடும்.

நேரு தொடங்கி, இந்திய மார்க்சிஸ்ட் மற்றும் தாராளவாத மதசார்பற்ற சிந்தையாளர்களிடம் 'அறிவுசார் விரக்தி' ஏற்பட்டுள்ளதாக மானுஷ் மதிப்பிடுகிறார்.நேருவின் இக்கூற்றை நாம் கவனிக்காமல்

விடமுடியவில்லை. நான் யாரை பிரதிநிதித்துவப் படுத்துகிறேன் என அவர் கேட்டுக்கொண்டார். கிழக்கு மேற்கின் விசித்திர கலவையா நான் எனக் கேட்டுக்கொண்டார். நான் மேற்குலகிலும் அந்நியன். சொந்த நாட்டிலும் , சில நேரம், நாடு கடத்தப்பட்ட உணர்வு உள்ளது ..இது பெரும் வலியின் வெளிப்பாடு. நவீனத்துவமான நான் இந்தியாவில் எப்படி பொருந்துவேன் என்கிற நேர்மையான கேள்வியை அவர் தனக்குத்தானே எதிர்கொண்டார். தான் எதிர்கொள்ளும் அதே நவீனத்துவத்தை, இந்தியா எப்படி எதிர்கொள்ளும் என்கிற பெரிய கவலை நேருவை கவ்விபிடித்திருந்தது.

பாஜக அரசாங்கம் கொணர்ந்த குடியுரிமை திருத்தச் சட்டம் பற்றியும், அரசியலமைப்பு அவையில் நடந்த விவாதங்களையும் மானஷ் விரிவாக விளக்குகிறார். 'அப்பீஸ்மெண்ட்' என்ற குற்றச்சாட்டு வரும்போதெல்லாம், நேரு கடுமையாக எதிர்வினை புரிந்ததை மானஷ் சொல்கிறார். ஒரே ஒரு கலாச்சாரம் என்கிற அழைப்பை , ஒரே கலாச்சார பாதைக்கான ஆபத்தான அழைப்பு என அவர் கருதினார்.

இந்தியாவில் நடந்த காலனித்துவ எதிர்ப்பு இயக்கம் ஒற்றை இயக்கமாக இல்லாமல், பலவற்றின் இயக்கமாக உள் போட்டிகளுடன் இருந்தது.

இந்து வலதுசாரிகளின் சோகமான முரண்பாடு என்னவெனில், பிரிவினையின் தர்க்கத்தை அது ஏற்காது. ஆனாலும் அந்த தர்க்கத்தின் வெற்றியால்தான், அதன் அரசியல் தூண்டப்படுகிறது என்பதை தெளிவான கருத்தாக்கமாக மானேஷ் இந்நூலில் முன் கொணர்கிறார்.

விரிவஞ்சி நிறுத்துகிறேன். நேரு ஆர்வலர்கள் தேடிப் படிக்க வேண்டிய நூல். மொழி பெயர்த்து பெரும் உழைப்பை தந்துள்ள ஜனனி ரமேஷ்க்கு என் வாழ்த்துகள்..

14-10-2025

oct 15

CPI பிறந்த போது நடந்த விவாதம்..

கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு தொடக்க மாநாடு 1925ல் நடந்ததை பலரும் அறிவர். அந்த துவக்க மாநாடே முக்கியமான ஒரு விவாதத்தையும் பெருக்கியபடி நகர்ந்தது. அகிலத்துடன் உறுப்பினராகி அதன் வழி சர்வதேசியமா- அல்லது தனித்த தேசிய அமைப்பாக இருந்து கொண்டே பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் அமைப்புகளுடன் தோழமையா- போல்ஷ்விசமா அல்லது இந்திய நிலைமைக்கேற்ப தனித்த புரிதலா என்பது விவாதமானது. இதில் அப்போது பல்வேறு முக்கிய பெரு நகர்களில் குழுக்களாக செயல்பட்டு கான்பூர் சென்ற இளைஞர்களுக்கும், மற்றொரு பக்கம் சத்யபக்தா, சிங்காரவேலர், மொகானி ஆகியவர்களுக்குமான விவாதமானது. அகிலத்துடன் தொடர்பில் வெளிநாட்டில் இருந்த எம் என் ராயும் கடிதம் மூலம் தன் பாரவையை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணத்தை துணைக்கு வைத்து மிகச் சுருக்கமாக , இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. 1300 வார்த்தைகளால் அமைந்த ஒன்று. ஆங்கில வரிகள் தமிழாக்கம் (Courtesy Copilot) பெற்றுள்ளன.

2

சத்திய பக்தா என்பவர்தான் 1925 இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தவர். குழுக்களாக செயல்பட்ட ஆங்காங்கே இருந்த இளம் தோழர்கள், மூத்தவர் சிங்காரவேலர் உட்பட 1925 டிசம்பர் மாநாட்டில் பங்கேற்றனர். Indian Communist Party என்ற பெயரில்தான் அழைப்பு விடப்பட்டிருந்தது. சத்திய பக்தாவுடன் பெயர் வைப்பதிலும், சர்வதேச அகிலம் பங்கேற்பு குறித்தும் மாறுபாடு ஏற்பட்டது. சத்திய பக்தா அகிலத்துடன் தோழமை இருக்கலாம். அதனின் அங்கீகாரம், கட்டளை போன்றவற்றிற்கு இடம் கொடுக்க வேண்டாம் என வாதாடினார். ஜானகி பிரசாத், காட்டே போன்றவர், கம்யூனிஸ்ட் கட்சி என்றால் சர்வதேச அங்கீகாரம் இல்லாமல் இருக்க முடியாது என்ற அன்றைய நிலைப்பாட்டை சொல்லினர். சத்யபக்தாவின் கட்சி கலைக்கப்பட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவானதை அவர்கள் தெரிவித்தனர்.

சத்யபக்தாவும் கமிட்டியிலிருந்து விலகுவதாகச் சொல்லி விளக்கம் எழுதினார். சத்யபக்தா விளக்கம் சிபிஅய் கட்சி வரலாற்று ஆவணம் 1923-25ல் பக் 636/782ல் இருப்பதைக் காணலாம். சத்திய பக்தா எழுத்தும்

நூறு ஆண்டுகள் கண்ட ஒன்று. அவரின் வரிகளாக சிபிஅய் ஆவணத்திலிருந்து..முதலில் அப்படியே ஆங்கில வரிகள்..பின்னர் தமிழாக்கி அவரின் வரிகள்

" I am not hostile to Communist International. We are ready to send our representative to the sessions if only we can do so openly. We agree in general principles of communism with our foreign comrades and trying to preach its economic side in India as the economic conditions is the root of all social and religious changes. Looking this way the Indian communists have got a friendly relation with the communists of other lands and it is simply natural that we should have a sympathetic attitude towards CI. But as I have declared in my previous manifestos, it is neither possible nor beneficial to affiliate ourselves or to have any direct connection with the comintern of Moscow. Besides, we are not ready to tie our hands nor do we want to take orders or instructions from outside.

The position of India is peculiar in many respects from that of other parts of the world and our programme must be chalked out according to the needs and conditions of the Indian society. Keeping all these vital points in view, we prefer a policy on national communism for this country to an international one and for this reason, the name of the Indian Communist Party has been changed into the National CPI. This change also will distinguish our work from the ostentatious propaganada of Mrs Roy. It is a matter of satisfaction that this change has been appreciated, and supported by our several Indian and foreign communist friends"

"நான் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலுக்கு எதிராக இல்லை. நாம் பகிரங்கமாக கலந்து கொள்ள முடிந்தால், அதன் கூட்டங்களுக்கு நமது பிரதிநிதியை அனுப்ப தயாராக இருக்கிறோம். வெளிநாட்டு தோழர்களுடன் கம்யூனிசத்தின் பொதுவான கொள்கைகளில் நாம் ஒத்துப்போகிறோம், மேலும் அதன் பொருளாதார அம்சத்தை இந்தியாவில் பரப்ப முயலுகிறோம், ஏனெனில் பொருளாதார நிலைமைகளே சமூக மற்றும் மத மாற்றங்களின் அடிப்படை. இந்த பார்வையில் இந்திய கம்யூனிஸ்ட்கள் பிற நாடுகளின் கம்யூனிஸ்ட்களுடன் நட்பான உறவுகளை கொண்டுள்ளனர், எனவே CI-க்கு நாம் அனுகூலமான மனப்பான்மையுடன் இருப்பது இயற்கையானது.

ஆனால், நான் முன்பு வெளியிட்ட அறிக்கைகளில் கூறியதுபோல, மாஸ்கோவின் கோமின்டெர்னுடன் இணைவதும் நேரடி தொடர்பு கொள்ளுவதும் சாத்தியமில்லை, மேலும் பயனுள்ளதாகவும் இல்லை. அதற்கு மேலாக, நாங்கள் எங்கள் கைகளை கட்டிக்கொள்ள தயாராக

இல்லை, வெளிநாட்டிலிருந்து உத்தரவு அல்லது வழிகாட்டுதல்களை ஏற்க விரும்பவில்லை.

இந்தியாவின் நிலைமை உலகின் பிற பகுதிகளிலிருந்து பல வகைகளில் தனித்துவமானது, எனவே இந்திய சமுதாயத்தின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நமது திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்த முக்கிய அம்சங்களை கருத்தில் கொண்டு, இந்த நாட்டிற்கு சர்வதேச கம்யூனிசத்திற்குப் பதிலாக தேசிய கம்யூனிசக் கொள்கையை விரும்புகிறோம். இதற்காகவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் தேசிய CPI-யாக மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றம் நமது பணியை ராயின் ஆடம்பரமான பிரச்சாரத்திலிருந்து வேறுபடுத்தும். இந்த மாற்றம் பல இந்திய மற்றும் வெளிநாட்டு கம்யூனிஸ்ட் நண்பர்களால் பாராட்டப்பட்டதும் ஆதரிக்கப்பட்டதும் மகிழ்ச்சியளிக்கிறது"

சத்யபக்தா எடுத்த இந்த நிலைப்பாட்டிற்கு அயோத்திய பிரசாத் பிரதாப் பத்திரிகையில் பதிலாக எழுதிய ' Mr satyabhaktha and communism" மீரத் வழக்கு ஆவணங்களில் ஒன்றாக வைக்கப்பட்டதாக சிபிஅய் ஆவணம் சொல்கிறது (பக் 638/782) . இவர் ஏ பி ஸ்ரீவத்சவா என்கிற கட்சித்தோழர் எனவும், மீரத் வழக்கில் இருந்தவர் எனவும் சிபிஅய் ஆவணம் சொல்கிறது. சத்யபக்தா பங்களிப்பை குறைத்து மதிப்பிடுவது நோக்கமல்ல. அப்போது இருந்த மாறுபட்ட பார்வைகளை சொல்லவே ஆவணம் விழைகிறது என்ற செய்தியும் நமக்கு கிடைக்கும். சத்ய பக்தாவின் ஆவணத்தை குறைத்து மதிப்பிடவில்லை என்கிற பார்வை விவாதத்திற்கு காது கொடுத்த தன்மையை காட்டுகிறது. ஏற்கப்படவில்லை என்பது வேறு..

3

1925 கட்சி அமைப்பு மாநாட்டில் தோழர் சிங்காரவேலர் உரை பல தோழர்களிடம் இன்று சென்றடைந்த ஒன்று. எம் என் ராய் அவர்கள் மார்ச் 20, 1926 அன்று பாகர்கட்டாவிற்கு எழுதிய கடித வரிகளையும் ஆவணத்தில் தந்துள்ளனர் (பக் 643/782). அதில் ராய்

" I must draw attention to the suggestion of comrade Mohammed Ali about the realtions with CI. The statements made by Satyabhakta as well as Hasrat Mohani and Singaravelu at Kanpur made very bad impression here....The formal affiliation cannot be effected until te next world congress to which a delegation of the party must be sent"

இதன் தமிழாக்கம்

““CI-யுடன் உள்ள உறவுகளைப் பற்றிய தோழர் முகம்மது அலியின் பரிந்துரையை நான் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. கன்பூரில் சத்யபக்தா, ஹஸ்ரத் மொஹானி மற்றும் சிங்காரவேலு ஆகியோர் வெளியிட்ட அறிக்கைகள் இங்கே மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தின. கட்சியின் பிரதிநிதிகள் அனுப்பப்பட வேண்டிய அடுத்த உலக மாநாட்டுவரை, அதிகாரப்பூர்வ இணைப்பு ஏற்படுத்த முடியாது.”

ராய், 'மோசமாக பார்க்கப்பட்டது' எனக் குறிப்பிட்ட மூன்று தோழர்களுமே இந்திய நிலைமைக்கேற்ப என்கிற பார்வையை கான்பூர் மாநாட்டில் முன் வைத்தவர்கள் எனப் பார்க்கிறோம். ராய் மேலும் கான்பூரின் ஆவணங்கள் தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும், தேசிய இயக்கத்துடன் அய்க்கிய முன்னணியை சிபிஅய் கைக்கொள்ளலாம் எனவும் அறிவுரை தருவதைக் காண்கிறோம்.

ஹஸ்ரத் மொகானி தன் உரையில், இந்திய சுயராஜ்யம்- 'சோவியத் கான்ஸ்டிடியூஷனுடன்' என்றார். பிற நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தோழமை, ஆனால் எவருக்கும் கட்டுப்பட்டதல்ல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி- அது முழுக்க முழுக்க இந்தியர்களின் அமைப்பு. மதவிரோத அமைப்பும் அல்ல எனப் பேசியிருந்தார்.

தோழர் சிங்காரவேலர் உரையில் லெனின் மறைவு, சிறையில் தோழர்களின் தியாகம், மார்க்ஸ்-லெனின் தத்துவ பங்களிப்பு, இந்தியாவின் வறுமை, தீண்டாமை, விவசாயி தொழிலாளர்க்கான சுயராஜ்யம், உழைப்பவர்க்கு வாக்குரிமை, சுயநிர்ணய உரிமை , காங்கிரஸ் இயக்கம் என பல்வேறு அம்சங்களில் விரிவாக செல்வதைக் காணலாம்.

கம்யூனிஸ்ட்களின் முழக்கமாக

"சுயாட்சி இல்லாமல் வாழ்க்கை இல்லை, தொழிலாளர்கள் இல்லாமல் சுயாட்சி இல்லை" என்றார். கம்யூனிஸ்ட்களுக்கு சாதி, மதம், அல்லது சமய நம்பிக்கைகள் எதுவும் இல்லை. இந்திய கம்யூனிசம் என்பது போல்ஷ்விசம் அல்ல; போல்ஷ்விசம் என்பது ரஷ்யர்கள் தத்தெடுத்த கம்யூனிசத்தின் ஒரு வடிவம், அது இந்தியாவிற்கு தேவையில்லை. உலகின் கம்யூனிஸ்டுகளுடன் நாம் ஒன்றாக இருக்கிறோம், ஆனால் போல்ஷ்விக்களுடன் அல்ல- என்று அவர் விளக்குவதைக் காணலாம்.

ஆவணத்தில் இவ்வரிகள்

”No life without swaraj and no swaraj without workers என்றார்.Communists have neither caste nor creed nor religion.. Indian communism is not Bolshevism and Bolshevism is a form of communism Russians adopted and may not be needed in India.. we area one with the world communists but not with Bolsheviks ”

சிபிஅய் ஆவணத்தில் மொகானி மற்றும் சிங்காரவேலர் உரைகளை முழுமையாக காணமுடியும்.

1927ல் பம்பாயிலிருந்து கட்சி சார்பாக வெளிவந்த Annual Report ல் சத்யபக்தா ஆவணங்களையோ, நிதியையோ கைமாற்றித் தராமல் போய்விட்டார்.அவரிடம் 200-300 உறுப்பினர்வரை இருந்திருக்கலாம். நாம் கட்சியை கைப்பற்றிவிட்டோம் என்றாலும்- the party was kept in a provisional form and neither a definite constitution nor a programme could be formulated. the executive appointed four provincial organisers என சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். (பக் 645/782)

சத்திய பக்தா சொன்னது போல Indian communist party என கான்பூரிலிருந்து வராமல் Communist party of India எனத் திரும்பினோம்...CPI which wanted a link up with the international communist movement, though this was not explicitly declared at the conference for obvious reasons. அதாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைப்பு ஏற்படுத்த விரும்பியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI),. இது தெளிவாக மாநாட்டில் அறிவிக்கப்படவில்லை நிலவிய பல்வேறு உணர்ந்த காரணங்களால்..

1927 மதராசில் நடந்த காங்கிரஸ் அமர்வின் போது சிபிஅய் மத்திய செயற்குழு கூடியது. பாகர்கட்டா போலீஸ் ஏஜெண்ட் என அறிந்து அவரை வெளியேற்றியது (expelled).

கான்பூர் அமைப்பு மாநாடு சரியான கூறுகளைக் கொண்டதல்ல என்றாலும் அதையே துவக்கமாக கருதுகிறோம் என்கிற விளக்கத்தை ஆவணம் பக் 646/782ல் தந்துள்ளது. அவ்வரிகள்

True, the Kanpur communist conference of 1925 did not have the features of a proper foundation congress of communist party. But the creation of all india nucleus of a central leadership at the conference and its continuity and role through succeeding years in building the mass base for the CPI make the conference a turning point in the life of the party. That is why the leadership of the united CPI in 1958 decided to adopt the date of the conference as the foundation date of CPI “

தமிழில் தந்தால்

" "உண்மையாகவே, 1925ஆம் ஆண்டு கான்பூர் கம்யூனிஸ்ட் மாநாடு ஒரு முறையான கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவிட அவசியமான மாநாட்டின் அம்சங்களை கொண்டதாக இல்லை. ஆனால், அந்த மாநாட்டில் இந்திய அளவில் ஒரு மய்யத்தை , மய்யத் தலைமையின் உருவாக்கியதும், அதன் தொடர்ச்சியும், பின்னர் ஆண்டுகளில் CPI-யின் வெகுஜன அடித்தளத்தை கட்டியெழுப்பிய பங்களிப்பும், அந்த மாநாட்டை கட்சியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக மாற்றின. அதனால்தான், 1958ஆம் ஆண்டு ஒன்றுபட்ட CPI-, அந்த மாநாட்டின் தேதியை CPI-யின் துவக்க அடிப்படை நாளாக ஏற்க முடிவு செய்தது."

சத்தியபக்தா ஜூன் 18 1925ல், அக் 12 1925ல் வெளியிட்ட அறிக்கையின் முழு விவரத்தை 647-656 பக்கங்களில் காணலாம். கான்பூரில் தேசிய காங்கிரஸ் அமர்வை ஒட்டி, கம்யூனிஸ்ட்கள் கூடி மாநாடு நடத்தலாம் என அவர் அழைத்திருப்பார். ஆர்வமுள்ளவர் அதைப் படித்துப் பார்க்கலாம். நூற்றாண்டுக்கு முன்னரான ஆவணம்.

15-10-2025

oct 17

Nehru Answered so in 1956

I think one mixes up a great deal what might be called the COMMUNIST IDEAL of society and Communist Party. The two things are quite different. The Communist Ideal , I suppose, the Socialist ideal do not differ much. When they be realised and how- I do not know.I have no objection to the Socialised Ideal at all. The question is what steps what steps will be taken in the course of the next few generations, steps which will lead forward that ideal..

I do not know how the world will change. Therefore , I have no ideological aversion to the Communist Ideal of society. I am not referring to dictatorship. do not mix up things. I do not like dictatorships, authoritarian regimes. I am sure that I would not survive an authoritarian regime.

I do not like the techniques adopted by the Communist Party. That again means that I would not like to have it in my country. But who am I to say what in a particular set of circumstances another country does...

1956-இல் நேரு கூறியது:

நான் நினைக்கிறேன், சமூகத்தில் "கம்யூனிஸ்ட் இலட்சியம்" மற்றும் "கம்யூனிஸ்ட் கட்சி" என்ற இரண்டையும் பெரிதும் குழப்புகிறோம். இந்த இரண்டு விஷயங்கள் முற்றிலும் வேறுபட்டவை. கம்யூனிஸ்ட் இலட்சியம், சோஷலிசம் இலட்சியத்துடன் அதிக வேறுபாடு இல்லை , என நினைக்கிறேன். அவை எப்போது நிஜமாகும், எப்படி நிஜமாகும் என்பது எனக்குத் தெரியவில்லை. சோஷலிசம் இலட்சியத்திற்கு எனக்கு எந்த எதிர்ப்பும் இல்லை. கேள்வி என்னவென்றால், அடுத்த சில தலைமுறைகளில் எவ்வாறு அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறுவதற்கான படிகள் எடுக்கப்படும் என்பதுதான்.

உலகம் எப்படி மாறும் என எனக்குத் தெரியவில்லை. எனவே, கம்யூனிஸ்ட் சமூக இலட்சியத்திற்கு எனக்கு எந்தவிதமான சித்தாந்த எதிர்ப்பும் இல்லை. நான் அடக்குமுறை அரசை குறிக்கவில்லை — தயவுசெய்து இரண்டையும் குழப்பாதீர்கள். எனக்கு அடக்குமுறை அரசுகள் பிடிக்கவில்லை. நான் ஒரு அதிகாரபூர்வ அரசில் வாழ முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி பயன்படுத்தும் நுட்பங்கள் எனக்கு பிடிக்கவில்லை. அதனால், என் நாட்டில் அதை விரும்புவதில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மற்றொரு நாடு என்ன செய்கிறது என்பதை நான் தீர்மானிக்க முடியாது -நான் யார் அதைச் சொல்ல ...

oct 18

நேருவின் டிஸ்கவரியில்

ஜவஹர்லால் நேரு என்கிற ஆளுமையின் போராட்டக்காலம் இரு வகைப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி எதிர்த்து போராடிய விடுதலைக்காலம். விடுதலை இந்தியாவில் தலைமை நிர்வாகியாக, நவீன இந்திய கட்டுமான போராட்டக் காலம். இந்த இரண்டு காலத்திலும் அவர் வால்யூம்கள் கணக்காக பேசியும் எழுதியும் உள்ளார்.

விடுதலைப் போராட்டக் காலம் என்கிற நேரு என்றால் மூன்று பெரிய நூல்கள் அவருடன் இணைந்து நிற்கும்.

Autobiography, Glimpses of the world History and The Discovery of India. மூன்று நூல்களும் சேர்ந்தால் 2000 பக்கங்களுக்கு மேலேதான் செல்லும். மூன்றையும் வாசிக்க முடிந்தவர்க்கு பாராட்டும் நன்றியும். இரண்டுதான் என்றால் ஆட்டோபயகிரபியும் , டிஸ்கவரியும் எனலாம். என் வாசிப்பு அனுபவத்தில் அவரின் 'உலக வரலாற்றுடன்' மல்லுக் கட்ட வேண்டியிருந்தது. சில இடங்கள் 'போரிங்' உணர்வை எனக்குத் தந்தன. இந்திரா சிறுமியாக எவ்வளவு கஷ்டப்பட்டாங்களோ...

ஒரு நூல்தான் வாசிக்க முடியும் என்றால் அது 'டிஸ்கவரி' ஆக இருக்கலாம் என சொல்லத்தோன்றுகிறது. நேருவின் எழுத்துத் திறமையை எல்லா நூல்களும் காட்டும் என்றாலும், அவரின் சிந்திக்கும் பாங்கை டிஸ்கவரி அழகாகக் காட்டும். இதனால்தான் என்னவோ மானஷ் பிராக் பட்டாசார்ஜி தனது Nehru and the spirit of Indiaவில் முழுமையாக டிஸ்கவரியை வைத்து நேருவையையும், இந்திய வரலாறு கலாச்சாரம் மரபையும் விவாதித்தாரோ என எண்ணத் தோன்றுகிறது.

நேரு இந்தியாவைக் கண்டுணர்ந்தாரா என்பதற்கு பதில்கள் பலவாக இருக்கக்கூடும். ஆனால் நேர்மையாக முயற்சித்தார் என்பதற்கு டிஸ்கவரி நூல் சாட்சியாக இருக்கக்கூடும். பிராக் சொல்கிறார்

" அறிவைவிட சிந்தனையே அடிப்படை. இந்தியாவைக் கண்டுணர முடியாது என உணர்தல்..மனித யதார்த்தம் பகுத்தறிவாத உறுதிப்பாட்டுடன் ஒத்துப் போவதில்லை என்பதை நேரு அறிந்திருந்தார்".

ஆக்டோவியா பாஸ் நேரு குறித்த மதிப்பீடாக தந்ததை மானஷ் பிராக் தருகிறார்

" நேருவின் வாழ்க்கை முழுவதும் உறுதிமொழிகளின் தொடராகவே இருந்தாலும், அவரது சிந்தனை தன்னைப் பற்றியும், இந்தியாவைப் பற்றியுமான புதுப்பிக்கப்பட்ட கேள்வியாக இருந்தது. அவர் தனது முரண்பாடுகளுக்கு விசுவாசமாக இருந்த காரணத்தால் மற்றவர்களை காயப்படுத்தவில்லை. தன்னைத்தானே சிதைத்துக்கொள்ளவும் இல்லை. நம்மோடு முரண்படுபவர்களை அடக்க, முதலில் நமக்குள் சுமந்து கொண்டிருக்கும் முரண்பட்டவரை அடக்கத் தொடங்கவேண்டும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்" (நன்றி தமிழில் ஜனனி ரமேஷ்)

பாரம்பரியம் எது வரலாறு எது என்கிற வித்தியாசப்படுத்தலை நேரு கவனித்தார். விமர்சனமின்றி, ஆய்வுகளின்றி, பாரம்பரியம் மற்றும் அறிக்கைகளை வரலாறாக பார்க்கும் இந்தியர் மீது நேருவிற்கு விமர்சனமிருந்தது. வரலாறு என்பது வெறும் தொன்மங்களோ கட்டுக்கதைகளோ அல்ல. அது objective சார்ந்த- ஆதாரம் சார்ந்திருப்பது அவசியம் எனக் கருதினார்.

பாரம்பரியம் என்பதை வாய்மொழி கலாச்சாரம், இதிகாசம், பழக்க வழக்கம், சமூக கட்டமைப்பு படிநிலைகள் போன்றவற்றில் காட்டுகிறார் மானஷ். வரலாறு என்பது கால வரையறைக்குள் குறிப்பிட்ட உண்மை அல்லது கூற்றை எடைபோடும் ஒழுக்கம் என்கிறார் மானஷ். இந்தத் தன்மையில் பாரம்பரியம் சொல்லப்பட்டால் அது வரலாறாகலாம் எனவும் சொல்கிறார்.

பிரிட்டிஷாரப் பார்த்தது போல் நேரு முகலாயர்களை பார்க்கவில்லை. இந்திய அரசியல் மற்றும் கலாச்சார வாழ்க்கையில் ஒருங்கிணைந்த அம்சமாகவே அங்கமாகவே அவர் கருதினார். தாகூரும்- இந்து முஸ்லீம் , இருவரும் ஒருவருக்கொருவர் போர் புரிந்திருந்தாலும் முஸ்லீம்களை தனி தேசமாக பார்க்கவில்லை. அவர்கள் அறிந்த மொழியிலும் நாங்கள் அறிந்த மொழியிலும் பரஸ்பரம் உரையாடினோம் என தாகூர் சொன்னதைக் காண்கிறோம்.

காட்டுமிராண்டித்தனத்திலிருந்து நாகரீகம் நோக்கிப்போவது வரலாறு என நேரு புரிந்து கொண்டார். மனிதன் உன்னதங்களையும் அபத்தங்களையும் காலம் காலமாக உருவாக்கிக் கொண்டேயிருக்கிறான். கடந்த காலமும் அப்படியான உன்னதங்களைக் கொண்டிருக்கலாம். நிகழ்காலத்திலும் மனிதன்

அதற்கான பாட்டை செய்ய உழைக்கலாம். கடந்தகாலத்தை அப்படியே அவரவர் நினைப்பது போல் கொண்டு வந்து கடை பரப்பி நிகழ்கால தேவைகளை மௌனமாக்க முடியாது. நிகழ்கால தேவைகள் என்பதே வரலாறு என நேற்றைய உன்னதங்களை இருளடிக்கவும் கூடாது என்கிற பாடத்தை நேருவிடம் கவனமாகச் சென்றால் பெறலாம் என எனக்குத் தோன்றுகிறது. இந்த சிந்தனையில் அவர் உயரே நிற்கிறார்.

நேரு நவீன மேற்கின் முழு மனிதர் அல்ல. இந்திய பத்தாம்பசலித்தனங்கள் எனக் கருதியவற்றை அப்பிக்கொண்டவரும் அல்லர். அவருக்கு வேத உபநிடத ரசனை இல்லாமல் இல்லை. அவரின் சிந்தனையில் மேற்கின் தத்துவ இலக்கிய உரையாடல் சதா மோதிக்கொண்டும் இல்லாமல் இல்லை. நான் யார் கிழக்கா மேற்கா இரண்டின் கலவையா என்கிற தவிப்புடனேயே அவர் இருந்தார். காந்திக்கு இப்படியான மூளை மன வதை இல்லை. அவருக்கு இருந்த வதை முழுவதும் 'மாரல் நெறி' சார்ந்த வதைகள்.

நேரு ரசித்த சில உபநிடத வரிகள் , டிஸ்கவரியிலிருந்து (தமிழ் உதவி ஏ அய்)

"வாய்மையே வெல்லும், பொய்யல்ல."

Truth wins ever, not falsehood.

"வாய்மையினால் இறைமைக்கான பாதை அமைக்கப்பட்டுள்ளது."

With truth is paved the road to the divine.

"அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னைக் கொண்டு செல். இருளிலிருந்து ஒளிக்கு என்னைக் கொண்டு செல். மரணத்திலிருந்து நித்திய வாழ்வுக்கு என்னைக் கொண்டு செல்." (காந்திக்கும் பிடித்த)

Lead me from unreal to real. Lead me from darkness to light. Lead me from death to immortality. (Also favored by Gandhi)

"எவரது கட்டளையால் மனம் தன் இடத்தில் ஒளிர்கிறது? எவரது கட்டளையால் முதன்மையான உயிர் (பிராணன்) செயல்படுகிறது? எவரது கட்டளையால் மனிதர்கள் தங்கள் பேச்சை வெளிப்படுத்துகிறார்கள்? எந்தக் கடவுள்தான் கண்ணையும் காதையும் இயக்குகிறார்?"

At whose behest doth mind light on its perch? At whose command doth life, the first, proceed? At whose behest do men send forth his speech? What god, indeed, directed eye and ear?

"காற்றால் ஏன் அமைதியாக இருக்க முடியவில்லை? மனித மனத்திற்கு ஏன் ஓய்வில்லை? ஏன், எதைத் தேடி, நீர் ஓடுகிறது, ஒரு கணம் கூட அதன் ஓட்டத்தை நிறுத்த முடிவதில்லை?... ஓ பயணிகள், முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள்."

Why cannot the wind remain still? Why has the human mind no rest? Why, and in search of what, does the water run out and cannot stop its flow even for a moment? …O Traveller, March along, March along.

"எல்லாப் பொருட்களையும் தன்னிடமே காண்கிறவர், எல்லாவற்றிலும் தன்னையே காண்கிறவர், அவரிடமிருந்து அவர் ஒருபோதும் மறைவதில்லை (விலகுவதில்லை)."

Aye, whose seeth all things in that Self, and the Self in everything, from That he will no more hide. (Something Gandhi attempted)

"எல்லாம் தானே என்று எவர் அறிகிறாரோ, அவருக்கு என்ன கவலை இருக்க முடியும், என்ன மயக்கம் இருக்க முடியும், அவர் ஒற்றுமையைக் காணும்போது?" (காந்தி முயன்ற ஒன்று)

Who knoweth all things are self, for him what grief existeth, what delusion, when he gazeth on the oneness. (Something Gandhi attempted)

"என் உடல் சாம்பலாகக் குறைக்கப்படும், என் மூச்சு அமைதியற்ற மற்றும் மரணமற்ற காற்றில் சேரும், ஆனால் நானும் என் செயல்களும் சேரமாட்டோம். ஓ மனமே இதை நினைவில் கொள், இதை நினைவில் கொள்."

18-10-2025

oct 19

Deepaawali wishes to all

(To question or not to question ? That is the question- Romila Thapar)

Focus on BSNL Executive Wage Revision

I have been writing pieces about the issues of Pay and Pension Revision for the benefit of BSNL Trade Union cadres and for the activists and front-liners of the Associations. I do not know how they take it or how ignore by showing indifference.

The recent 'Terms of settlement' by the NE unions is not an ordinary event in today's context and ruling guidelines. It is good to see that there is no such conditionality attached in the 'Terms' as in the earlier recorded minutes- GOI may take a common stand on the issue of all loss making units. The only thing is that the NE Pay Revision is linked to Executive Wage Revision. That is because of the DPE and DOT guidelines.

During Manmohan Singh period, there was a general DPE guidelines between 2011-12, allowing even the loss making units to avail 2007 scales provided their internal budgetary conditions satisfy the same. If a similar guidelines is issued this time by DPE, then the 'Terms' will see its realisation without any difficulty.

When Shri Arvind Sawant , MTNL leader , Shiv Sena MP was the Minister in Charge for DPE, I preferred an appeal to him, explaining my acquaintance with him telephonically during 2010 period through his Tamil background MTNL secretary - reminding him of his conversation with me on MTNL pension issue. I did not get any response from him for my appeal, but DPE has sent my mail to DOT for proper action and disposal. Nothing happened on that. Just a small attempt, nothing more.

My attempts and requests preferred to Central Trade Union leadership on this matter also did not fructify. I thought their combined letter to DPE secretary might help the issue of loss making units wage revision a live one, and DPE may feel the pressure of issuing one such order as issued during Manmohan Singh period, this time allowing the loss making units to avail 2017 scales wherever the budget of the PSU can feel right balance.

The issue of BSNL 'Executive Wage Revision' is the utmost need to solve the entire issue of Pay and Pension revision of BSNL employees and pensioners. DOT has not taken any final call , on the BSNL Board's forward of the same, sent by Nov 2017 itself. There may be some correspondences between DOT and BSNL regarding the recommendation of the Board on this subject. DPE has categorically directed DOT, no exemption is possible at its level, if DOT needs then it has to take the issue to the Cabinet.

During this 2018-2025 period on various occasions, MoC , Secretary DOT and different levels of DOT officers opened their mind about their inability of 15 % fitment , as recommended by BSNL Board. The minutes given by DOT as well as BSNL on

different occasions speak more like IDA merger on 1-1-2017 , 3rd PRC scales with zero fitment.

If DOT cannot take a decision on the sent recommendation of BSNL Board for the Pay Revision of Executives, then they have to ask BSNL Board to re-examine their proposal of Nov 2017, and send a new one coordinating the mind of DOT , to enable the same as the Admin Ministry to approve and issue Presidential Order- PO, either by going Cabinet or on its own , if within the ambit of its powers.

This issue of Executives is greatly linked to NE wage revision to get its in-principle approval of DOT.

Unfortunately some of the pensioners associations are not recognising the need of 'new pay scales' to revise their pension fixed on the basis of the 'existing pay scales' and pay. This absence of understanding led them to demand CPC related fitment. Positively they got a PBCAT legal direction to ask DOT to revise pension as per CPC rules. Some applicants, party to that prayer belong to post 2017 pensioners, who cannot claim any pension revision on that 1–1-2017. They were employees on that date. I do not know whether PBCAT understands this point of anomaly.

The issue here is the interconnectivity of Employees and Pensioners on that cut off date . Executives to NE and to Pensioners is the connectivity. Even if reversal is thought of, that connectivity stands. Whether Pay Revision to Pension Revision or Pension Revision to Pay revision, the absorbed employees stand as a flock together having connectivity . Moreover for these things to happen we need 'new Pay scales'.

The crux of the question then is, who decides these Pay scales. Pensioner may seek anything like PRC or CPC, anything. But the issue is about employees still continuing in the PSU. They can seek and find solution only on the basis of IDA pay scales as per the absorbed employees' conditions of 37 A in today's context.

If there is no such PSU absorbed employees in BSNL , then that situation is different one, may be similar to even food transferees case (there is no food transferees after 2009 and so no question for them like post 2016). But in today's context, there are lakhs of Employees started continuing in BSNL on absorbed status on that 1-1-2017.

I appeal to all the concerned to weigh this piece dispassionately and arrive proper resolution in their respective meetings like AIC etc.

The dominant issue today is 'Executive wage revision' for the settlement of wage revision of employees and pension revision of pensioners w.e.f 1-1-2017. Hope united efforts of all would help to pave the road of settlement . Best wishes.

11 hrs   19-10-2025   R. Pattabiraman

oct 20

மரபும் மார்க்சியவாதியும்

சி சிவசேகரம் எழுத்தைப் படித்து ஆண்டுகள் பல ஆனதே என எண்ணி, சிறு நூல் ஒன்றைப் பார்த்தேன். சிவசேகரம் இலங்கை இலக்கிய உலகில் மார்க்சிய பார்வையுடன் செயல்பட்டவர்.

அவரின் மரபும் மார்க்சியவாதியும், மதமும் மார்க்சியமும்,

தளையசிங்கமும் மார்க்சியம் ஆகிய மூன்று கட்டுரைகளும் சேர்ந்து 1989ல் நூல் வடிவம் பெற்றன. சிவசேகரத்தின் சிந்தனைச் சிதறல்களை இச் சிறு நூல் கொஞ்சம் காட்டும். அவரின் சில வரிகளை இங்கு நான் சுவைத்த அளவில் பரிமாறுகிறேன்..

" மார்க்சியம் காலத்துக்கும் சூழ்நிலைக்கும் அப்பாற்பட்ட நிரந்தரமான உண்மைகளின் கோவை என்றோ, மார்க்ஸ் ஆய்ந்ததைவிட, அந்த ஆராய்ச்சிக்கு வெளியில் ஆராய ஏதுமில்லை என்று மார்க்சியம் கூறுவதில்லை"

" மார்க்ஸ் நமக்கு வழங்கியது ஒரு வலிய ஆய்வு முறை, அதை சரிவர பயன்படுத்துவதிலேயே அதன் விருத்தி தங்கியுள்ளது. ..மார்க்ஸ் மனித இனத்தின் எதிர்காலத்தை இம்மியும் பிசகாதபடி ஆருடங் கூற முற்படவில்லை"

" மார்க்சிய இயக்கம் நடைமுறை சார்ந்தது. அதன் விருத்தியின் போக்கில் தவறுகள் நேராமல் இருக்க முடியாது...விமர்சனங்கள் இல்லாமல் தவறுகள் திருத்தப்பட முடியாது. விமர்சனம் ஆக்கபூர்வமானதா, சினேகமானதா , பகைமையானவையா என்பதே முக்கியமானது. அந்த அடிப்படையிலேயே விமர்சனங்களுக்கு மார்க்சிய இயக்கம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது"

" பகுத்தறிவுவாதிகள் மார்க்சியவாதிகளுடன் முரண்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆயினும் பகுத்தறிவு இயக்கத்தின் நடைமுறை, தென்னிந்தியாவில் அவர்களையே தம் சிந்தனை முரண்பாடுகளது கைதிகளாக்கிவிட்டது"

" பகுத்தறிவுவாதிகள் தாம் தூக்கியெறிய முனைந்த பழமையின் இடத்தில் எதை வைப்பது என்பது பற்றிய தெளிவில்லாமலே இருந்தார்கள்.. ஒரு சடங்கின் இடத்தில் இன்னொரு சடங்கும், ஒரு சமுதாய ஊழல் இடத்தில் இன்னொரு சமுதாய ஊழலும்

அமைந்தது..சாதி எதிர்ப்பு பார்ப்பன எதிர்ப்பாகி இன்று அதுவே பிராம்மணரல்லா உயர் சாதியினரின் பார்ப்பனியமாகி விட்டமை நல்ல உதாரணம்..”

“ மார்க்சியவாதி என்றைக்குமே தன் அறிவை சரியானதாகவும் முழுமையானதாகவும் மாற்ற முடியாத ஒன்றாகவும் கருதுவதில்லை. புதிய தகவல்களுக்கும் அனுபவங்கட்கும் சூழ்நிலைகட்கும் வரவேற்புள்ள மனதில் மூடப்பட்ட சிந்தனைக்கு இடமில்லை”

“ சமுதாய யதார்த்தத்தை மனதில் வைத்துக்கொண்டே மரபு சார்ந்த விஷயங்களை அணுக வேண்டியுள்ளது. கழிக்கப்பட வேண்டிய எந்த அம்சமும் பரவலான சமுதாய அங்கீகாரமின்றிக் கழிக்கப்படுவதில்லை..”

“ மார்க்சியம் நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதில் அய்யமில்லை. நாத்திகம் மட்டுமே மார்க்சியமாகாது. வரட்டுத்தன பொருள்முதல்வாதமும் இயந்திரரீதியான ஆய்வுமுறைகளும் மார்க்சியத்துக்கு முரணானவை..”

“ தேசிய உணர்வுகளும் மதநம்பிக்கையும் ஒரு குறிப்பிட்ட மனித சமுதாயச் சூழலுக்கு உரியன. மார்க்சியத்தின் நோக்கு அச்சூழலை மாற்றுவதே அல்லாமல் அச்சூழலின் நிழல்களுடன் போரிடுவதல்ல.”

“ மார்க்சியம் தன் பூரணமற்ற தன்மையையும் , விஞ்ஞானத்தின் பூரணமற்ற தன்மையையும் நன்கு உணர்ந்தே உள்ளது. பூரண உண்மை பற்றிய பாசாங்கு மார்க்சியத்திற்கு உரிய ஒன்றல்ல. விளங்காத விஷயம் பற்றி மார்க்சியவாதியின் பதில் “ இப்போதைக்கு விளக்க முடியவில்லை” என்பதே. எல்லாவற்றையும் விளக்கும் நிர்ப்பந்தம் சமயவாதிகட்குத்தான் இருந்து வந்துள்ளது..”

“ வரலாற்றை நேர்மையாகப் பார்க்கத் தைரியமில்லாதவர்களால் அதை உருவாக்கி வழிகாட்ட முடியாது”

சிவசேகரம் தெறிப்புகளை ஒருவர் ஏற்கலாம், அல்லது நிராகரிக்கலாம். தளைய சிங்கத்தின் புதிய சத்திய யுகம், மெய்யுள், போர்ப்பறை என அனைத்தையும் அவர் விமர்சிக்கிறார். சர்வோதயத்தை ஏனோ தளைய சிங்கம் மேல் உள்ள கோபத்தில் ,சிவசேகரம் சர்வோதயத்தை முட்டுச் சந்து என விமர்சிக்கிறார்.

மார்க்சியப் பழக்கமுள்ள சிவசேகரத்திற்கு காந்திய நூல்கள் குறித்த பயிற்சி இருக்கிறதா என என்னால் ஊகிக்க முடியவில்லை.

சிவசேகரத்தின் இச் சிறு நூல் அடர்த்தியான ஒன்று எனலாம். 20-10-2025

oct 21

Democratic Values

வினோபாஜியின் Democratic Values என்கிற ஆங்கில வழி 150 பக்க நூலை புரட்டிக்கொண்டிருந்தேன். நான் பார்த்தது 2002ல் வந்த பிரிண்ட். அதில் இதுவரை 10 ஆயிரம் பிரதிகள் எனப் போட்டிருந்தனர்.

140 கோடி மக்கள் வாழும் இந்தியா போன்ற நாட்டில் சில நூல்கள்தான் லட்சம் வாசகர் என்பதை தொட முடிகிறது. 4 like வந்தாலே போதும் என்கிற மனநிலை மாந்தர்களாக சுருங்கிப் போன உலகில், வினோபா நூல் reach இல்லையே எனச் சொல்வதில் என்ன பயன்?

இந்தியில் 'லோக் நீதி' என்பது தான் democratic values என மொழிமாற்றம் பெற்றது. காந்தியர் ஞானம் அவர்கள் இந்தியிலிருந்து நேரிடையாக தமிழுக்கு கொண்டு வந்திருக்கலாம். அவர் சொன்னால் எனக்குத் தெரிய வரும்.

தாதா தர்மாதிகாரி எழுதிய முன்னுரையில் நூலின் சாரத்தை - சுதந்திரம் என்பதாவது என்ன எனச் சொல்லிவிடுகிறார்.

True freedom connotes self discipline and self control. தர்மாதிகாரி இரு அடிப்படைகள் எனவும் பேசுகிறார். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடைத்தரகனாக புரோகிதன் இல்லாமல் போகட்டும். உற்பத்தியாளனுக்கும் நுகர்வோனுக்கும் இடையில் இடைத்தரகன் இல்லாமல் போகட்டும்.

'எந்த வேலையானாலும் மனசாட்சியுடனும் சுயகட்டுப்பாட்டுடனும்' என்பது சொல்ல எளிதானது. 'மனசாட்சியுடன் மருத்துவம்' என்பது இந்தியாவில் வளர்ந்திருந்தால், இந்திய மருத்துவம் மகத்தானதாக இருந்திருக்கும். எத்தொழிலுக்கும் இது பொருந்தும். பேராசையும் எப்படியானால் என்ன எனக்கு சொத்து என்பதும் உலகின் பெரும் நோய்கள். மனிதர்களின் அறியாமை அல்லது நம்பிக்கையை சுரண்டும் misuse செய்திடும் எந்த அறிவும் செயலும் நாணயமில்லாதவையே.

வினோபாஜியின் உரைகளை 7 பகுதிகளாக பிரித்து நூலை நிர்மாணித்துள்ளனர். அரசாங்கமும் மக்களும், விடுதலைக்குப் பின்னர், கவலைகளின் சில மூலக்கூறுகள், சர்வோதயாவும் பஞ்சாயத்து ராஜ்யமும், வன்முறை -அகிம்சை, கட்டாய நிர்ப்பந்தம்- சட்டம் -மைத்ரி, மூன்றாம் சக்தி என்கிற வகையில் வினோபா உரைகள் அடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு நிறுவனங்கள் மக்களைச் சுற்றியுள்ளன. மத நிறுவனங்கள், அரசாங்கங்கள். அவை நன்மை செய்திருக்கலாம். தொடர்ந்து நன்மை செய்யக்கூடியவையல்ல என்பது வினோபாஜியின் மதிப்பீடு. மக்கள் தங்கள் கடமைகளை பக்குவப்படுத்திக்கொள்ளாதவரை, அவர்களால் சிறந்த அரசாங்கத்தை தேர்ந்தெடுக்க முடியுமா என்பது வினோபா எழுப்பும் சந்தேகம்.

மரபு சார்ந்து முன்னோர்கள் விட்டுச் சென்ற ஞானங்களை , விஞ்ஞானம் என்கிற பெயரில் அறியாமல் ஒதுக்குவதும், பண்டைய 'ஞானத்தில் எல்லாம்' என ஏமாற்றிக் கொண்டு, விஞ்ஞானத்தை புறக்கணிப்பதும் ஆரோக்கிய போக்கல்ல. We need to imbibe both என்றார் வினோபா பாவே.

மனிதர்கள் ஏன் எப்போதும் 'நல்ல மேய்ப்போன்' என தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்களே முன்வந்து, ஆட்சியாளர்களிடம் 'ஆட்டு மந்தைகள்' எனக் காட்டிக்கொள்கிறார்களா என்பதை வினோபா விவாதிக்க விழைகிறார். சுயராஜ்யம் என்பது 'தன்னை ஆளக் கற்றுக்கொள்வதும், எவரையும் ஆளவேண்டும் என்கிற விருப்பமின்மையும்' சேர்ந்தே ஆகும் என வினோபா சொல்கிறார். அதை நம்மால் கற்க முடியுமா என வினவுகிறார். அப்படி பயிற்சி பெறவேண்டும் என விழையவும் செய்கிறார். இறுதி முயற்சி என்பது 'I want self government' என்பதில் இருப்பதாக வினோபாஜி கருதுகிறார். அப்படி அரசாங்கம் என்கிற ஒன்று மிக மிக அவசியமா என்ற கேள்விக்கு அவர் தரும் பதில்..

People imagine that they cannot do without a government. I can understand that people cannot do without agriculture or industries..also understand that they cannot do without institutions like marriage and family. But governments do not come into this category.

இதில் வினோபாவுடன் statists வேறுபடலாம். அவர் 'anarchist ' ஆ எனக் குரல் எழுப்பலாம். வினோபா மார்க்சை படித்துள்ளார் என உணரமுடியும். குரோபோட்கின், புரூதோன், பகுனின் போன்ற anarchists

எழுத்துக்களைப் படித்து அறிந்தவரா எனத் தெரியவில்லை. அவர் அழுத்தம் தருவது , மக்கள் ஏன் எல்லாவற்றிற்கும் அரசாங்கம் என்ற ஒன்றை நம்பி பழக்கப்பட வேண்டும் - என்கிற கருத்தாக்கத்தில்தான் என நான் புரிந்து கொள்கிறேன்.

வினோபாஜி , சர்வோதாயாவின் உயரிய எண்ணம் not absence of government but freedom from government எனச் சொல்வதைக் காணலாம். அது ஒழுங்கின்மைக்கு இடம் கொடுக்காத, தன்னொழுங்கு மனிதர் நிறை சமூகம் என அவர் எண்ணிச் சொல்கிறார். மார்க்ஸ் வந்த அதே 'அரசு உதிர்தல்' கருத்தாக்கத்திற்கே வினோபாவும் வந்தடைகிறார். மார்க்ஸியம் பாட்டாளி அரசை பலப்படுத்தி உதிரச் செய்தல் பற்றி எண்ணினார். இது பகுனினால் விமர்சிக்கப்பட்டது.வினோபா காந்தி வழியில் , அரசிடமிருந்து முடிந்தவரை தள்ளியிருந்து அவரவர் கிராமம், வாழிட ஏரியா மக்கள் முயற்சி -ஒத்துழைப்பு - மனசாட்சியுடன் அன்றாட பாடு - வழியே அரசாங்கத்திலிருந்து மெல்ல மெல்ல விடுதலை நோக்கி எனப் பேசுகிறார்.

வினோபாவும் இறுதி இலக்கை மார்க்சைப் போலவே stateless system என்றே நகர்த்துகிறார். Decentralisation through regional self sufficiency என்பதை- localised system என்பதை அவர் 'வழியாகச்' சொல்கிறார். இங்கு 'unit of self sufficiency' என்பது கிராமங்களின் தொகுப்பு வழி என சற்று விரிவுபடுத்துகிறார்.

'செக்யூலர்' என்பதைப் பற்றி பேசும்போது, சத்யமேவ ஜெயதே என்கிற அடிப்படையைச் சொல்கிறார் வினோபாஜி. மனிதர்கள் சமத்துவமாக நடத்தப்படுதல் என்கிற அதன் முக்கிய குணத்தைச் சொல்கிறார். அதற்கு இணையான சமஸ்கிருத சொல்லாட்சியாக lok yatrik என்பதை பயன்படுத்துகிறார். ஆங்கிலத்திலிருந்து விரைந்து வெளியேறல் அவசியம் என்கிறார். இன்று மாறியுள்ள இந்தியா இதை ஏற்குமா எனத் தெரியவில்லை.

அதிகாரம் பெற்று மக்கள் சேவை எனச் சொல்வோர் உண்டு. சேவை மூலம் அதிகாரத்தைப் பெறுதல் என பணியாற்றுவோர் உண்டு. அதாவது service through power and power through service. இதற்கு மாற்றாக மூன்றாவது தரப்பாக the abolition of power through service என்பதை வினோபாஜி முன் வைக்கிறார். இவையெல்லாம் intellectual skill தெறிப்பா அல்லது நடைமுறை சோதனைக்கானவையா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை.

விடுதலைக்கு முன்னரான காங்கிரஸ் நோக்கம் மற்றும் அரசியல் வேறு. விடுதலைக்குப் பின்னரான அரசியல் வேறு என்கிறார். விடுதலைக்கு முன்னர் அது வலிமைக்கான பாதையாக இருந்தது. தேவையும் இருந்தது. இப்போது பெற்ற வலிமையிலிருந்து விடுதலை என்கிற பாதை உணரப்பட வேண்டியுள்ளது என வினோபா- renunciation from strength பற்றி பேசுகிறார். அவர் politics of power state (ராஜநீதி) என்பதிலிருந்து விடுவித்துக்கொண்ட லோக் நீதி மக்கள் அரசியல் எனச் சொல்கிறார். ஆனால் இன்று நிலவும் அரசியல் சூழலில் இது பெரும் குழப்பத்தை நல்கலாம். பலரும் மக்கள் அதிகாரம் என துப்பாக்கியுடன் நிற்பதையும் பார்க்கிறோம். state power என்பது போலவே Non State power என்பதும் வேறுவகை அதிகார மய்யமாகவே தொழிற்படுவதைக் காணலாம்.

வினோபா பேசும் லோக் நீதி

Lok Niti means an ordered society whose affairs are managed by common consent. The broader your outlook, the greater is the value of your service, and this value does not depend upon its visible results, nor upon its external range or limitations..

மக்கள் அரசாங்கத்திடமிருந்து தங்கள் வலிமையை பெறுவதில்லை. அரசாங்கம் தான் மக்களிடமிருந்து வலிமையைப் பெறுகிறது- இந்த விழிப்புணர்வு பரவலாகவேண்டும் என வினோபா சொல்லித் தருகிறார். மக்கள் தங்களின் உண்மையான விடுதலையை 'பிரதிநிதித்துவ ஜனநாயக' வழியில் பெறமுடியாது என வினோபா நினைக்கிறார். மக்கள் தங்கள் வாழிட , கிராமவழியில், தங்கள் ஒற்றுமை அடிப்படையில் தங்களை நிர்வகிக்க பழகிவிட்டால் , அரசாங்கம் தூரமாக்கப்படும் என அவர் நினைக்கிறார். One cannot realise his freedom until he feels his responsibility என்கிற பெரிய வேலையை நம் ஒவ்வொருவருக்கும் தருகிறார். அவரின் வரிகள்

We have no control over any part of our own lives. As long as we burden ourselves with the power of the State and regard this power as our security, so long shall we remain utterly insecure.

'மக்களை நோக்கி அரசாங்கம்' என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், அன்றாடம் மக்கள் அரசாங்க ஆட்சியாளர்களை அண்ணாந்து பார்க்கும் நிலையே யதார்த்தமாக இருக்கிறது. வினோபாவின் முன் வைப்பான அரசாங்கத்திடமிருந்து தள்ளி நிற்கும் மக்கள் முயற்சியில் அன்றாட வாழ்க்கை என்பதை, இன்றைய அரசியல் உலகம் எண்ணிக்

கூட பார்க்காது. பின்னர் தானே ஏற்பது நடக்கும். இங்கு ஏற்பது இகழ்ச்சியோ என்னவோ...

21-10-2025

oct 23

யுவான் சுவாங்கும் பள்ளிக்கூட நினைவுகளும்- நேருவின் டிஸ்கவரியும்

பள்ளிக்கூட தமிழ் மீடியம் வரலாற்றுப் பாடத்தில் - பா ஹியான், யுவான் சுவாங் என சீனா யாத்திரிகள் இந்தியா வந்தனர். இந்தியாவில் தங்கி, கற்று அறிந்து பழகி இந்தியா பற்றி எழுதிச் சென்றனர் எனச் சொல்லிக் கொடுத்த நினைவு.

தஞ்சை தெற்கு வீதியில் எங்கள் பள்ளிக்கூடம். பெண்கள் வகுப்பிற்கும், பசங்க வகுப்பிற்கும் வரலாறுக்கு ஒரே வாத்தியார். தஞ்சை வீரராகவ பள்ளியில் வரலாறு பூகோளம் என்றால் ஆறுமுகம் சார் என எங்களுக்கு. அப்போதே அவருக்கு வயது 50க்கு மேல் இருந்திருக்கக்கூடும். நாங்கள் தூங்கு மூஞ்சி வாத்தியார் என சிரித்து மகிழ்வோம். அவர் டெஸ்ட் வைத்தால் எங்கள் பேப்பர்களை, பெண்கள் கிளாசிடமும், அவர்கள் பேப்பர்களை எங்களிடமும் திருத்தத் தருவார். பசங்க தரும் செய்தியை வைத்து எவர் வகுப்பு மாணவர் அதிக மார்க், ஆணா பெண்ணா போட்டி வரும். குறைத்து மார்க்ஸ் போட்டு சேட்டை செய்வதுண்டு.

அறிவியல் ஆசிரியர் இராமரத்னம். கறார் ஒழுக்க வாத்தியார். ஒருமுறை அவர் போய்க்கொண்டிருந்த போது கத்தியதால், அவர் பளார் விட்டது நினைவில். பின்னர் தஞ்சாவூரில், சமீபத்தில் மறைந்த எல் கணேசனுக்கு முன்னதாகவே , ஆர் எஸ் எஸ் இயக்கத் தலைவராக இருந்தார் என அறிந்தேன் . வேறு ஒரு வாத்தியார் மீசை சோமசுந்தரம். கம்பீரமா வருவார். கண் சிவப்பா இருக்கும். பசங்க சொல்வாங்க வாத்தியார் சாராயம் குடிப்பார் என. கடலில் தூக்கி போட்டுduவேன் . நாகப்பட்டினம் பக்கம் தான் என பயமுறுத்துவார். மற்றொரு வாத்தியார் படு அழகன். வேட்டி சட்டையில் நேர்த்தி தெரியும். SSLC மார்க்ஸ் வந்துவிட்டது என வாங்க ரோடில் வந்து கொண்டிருந்தபோதே, தெற்குவீதியில் பள்ளிக்கு சற்று முன்பாகவே ‘ அசடே நீ ஸ்கூல் பர்ஸ்ட் வரலை போ’ என சொல்லி அழுகை அடைத்து திணற வைத்துவிட்டு போய்விட்டார். நினைவில் நிற்கும் ஆசிரியர்களுக்கு என் மரியாதை.

SSLC தேர்வில் பள்ளியில் முதல் 5 இடங்களைப் பெற்ற A B C D E section மாணவர்களில் முதலில் வந்தவர் ஸ்டேட் பாங்க் வேலைக்குப் போனார். அடுத்த நான்கு பேரும் டெலிகாமிற்கு வந்து சேர்ந்தோம். ஒருவர் தன்னலமின்றி 5 ஆண்டுகள் சேவையிலேயே வெளியேறி, ம க இ க செயலராகி மருதையன் என்கிற தியாகியானார். மற்றவர் டெலிகாமில் குப்பைக் கொட்டி எங்கள் அளவில் ஏதோ செய்து ஓய்வு பெற்றோம். அதில் நாங்கள் குறைத்து மார்க்ஸ் போட்ட பெண்மணி, என்னைவிட

பொதுத்தேர்வில் கூடுதல் பெற்று தன் திறமையை நிருபித்தவர். வேறு ஒருவர் உயர் அதிகாரி என உயர்ந்தார். நான் தொழிற்சங்கத்தில் கொஞ்சம் குப்பைக் கொட்டினேன்.

எல் கணேசனின் அண்ணன் இல நாராயணன். என் தாய்மாமாவின் நண்பர். டெலிகாமில் சூப்பர்வைசர். அப்போது காங்கிரஸ் யூனியன் தலைவராக இருந்தார். என் மாமாவிடம் என்னடா அவன் கம்யூனிஸ்ட் யூனியனில் இருக்கான் எனச் சொன்னதாக மாமா கேட்டதுண்டு.

சரி நேரு - யுவான் சிங் கதைக்கு வருகிறேன்.

நேருவும் தனது டிஸ்கவரி நூலில், கொஞ்சம் சீன யாத்திரிகர்கள் பற்றி சொல்லிக்கொடுக்கிறார். பா ஹியான் இந்தியாவிற்கு 5 ஆம் நூற்றாண்டில் வந்தார். நேருவின் வாசிப்புப்படி முன்னதாக முதலாம் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவிலிருந்து பல அறிஞர்கள்- காஷ்யப மாதங்க, தர்மரக்ஷா, புத்தபத்ரா, ஜீனபத்ரா, குமராவிஜயா, பரமார்த்தா, ஜினகுப்தா, போதி தர்மா போன்றவர் சென்று சீன சக்ரவர்த்திகளிடம் பெரும் மரியாதையையும் பெற்றுள்ளனர்.

குமாரவிஜயா என்பவர் 1600 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து சீனா சென்றவர். அவர் சீனாவில் எழுதிய 47 நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவரது சீன மொழிப் புலமை பிரமிக்கத் தகுந்ததாக சொல்லப்படுகிறது. புத்த பேரறிஞர் நாகர்ஜுனரின் வாழ்க்கையை சீனர்களுக்கு குமராவிஜயா அறிமுகப்படுத்தியும் உள்ளார். இந்த குமாரவிஜயாவிடம் மாணவராக இருந்தவர்தான் பா ஹியான்.

பா ஹியானுக்கு இந்தியா குறித்த ஆர்வம் மேலிட, அவர் தன் சாகச விருப்பத்தை குமாரவிஜயாவிடம் தெரிவிக்கிறார். போய் வா மகனே. ஆனால் வெறும் சமய ஆராய்ச்சி என முடங்கிவிடாதே. பரந்த இந்தியாவைப், மக்களைப் பார்த்து வாழ்க்கையை அறிந்து வா என ஆசான் தன் மாணவருக்கு அறிவுரை நல்கினாராம். பா ஹியானும் இந்தியா வந்து பாடலிபுரத்தில் கற்றாராம்.

யுவான் சுவாங் , பா ஹியானுக்கு இருநூறு ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியா வந்தவர். சாகசக்காரரர் என அறியப்பட்டவர். அவர் நாலந்தாவில் தங்கி கற்கிறார். அப்போது 10 ஆயிரம் மாணவர்கள் இருந்தனராம். இந்திய சட்ட முறைகளை அவர் பயின்று மாஸ்டர் ஆனாராம். நாலந்தாவின் துணை முதல்வர் ஆனாராம். நேரு vice principal என்று தான் எழுதியுள்ளார்.

சுவாங் எழுதியது மேற்கு ராஜாங்க பதிவுகள் என்கிற Si Yu Ki நூலாகும். கல்வி 5 பகுதிகளில் - இலக்கணம், கைவினை மற்றும் கலை, மருத்துவம், தர்க்கம், தத்துவம் என சொல்லித்தரப்பட்டதாம். தாம் பழகிய மக்கள் மிகவும் upright and honourable ஆக இருந்தார்கள். சுவாங் எழுதியதை நேரு ஆங்கில வரிகளாகத் தருகிறார்

In money matters they are without craft, in administrating justice they are considerate..they are not deceitful or treacherous in their conduct and are faithful in their oaths and promises.

As the administration of the government is founded on benign principles, the executive is simple..people are not subject to forced labour ..taxes light. The merchants come and go in carrying out their transactions

சுவாங் நற்சான்றிதழை கொடுத்ததாகவே இவ்வரிகள் நமக்குக் காட்டுகின்றன. கட்டாய உழைப்புக்கு எவரும் தள்ளப்படவில்லை என்கிற முக்கிய செய்தி விரிவாக சரித்திர பேராசிரியர்களால் விவாதிக்கப்பட்டுள்ளதா எனத் தெரியவில்லை. சுவான் வந்து போன காலத்து ஹர்ஷவர்த்தனா அரசர் சீனாவில் தூதரக உறவுகளை வைத்திருந்த செய்திகளைப் பார்க்கிறோம்.

சுவாங்கிற்கு சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இரு கடிதங்களை சீனர்கள் காப்பாற்றியுள்ளனர். ஒரு கடிதம் கிபி 654 ல் எழுதப்பட்டுள்ளது. இந்திய புத்த அறிஞர் ஸ்தவீர பிரக்ஞதேவா அக்கடிதத்தை எழுதியுள்ளார். அதில் காணப்பட்ட இந்த வரிகளை நேரு தருகிறார்

We are sending you a pair of white cloths to show that we are not forgetful. The road is long, so do not mind the smallness of the present. We wish you may accept it. As regards Sutras and Shastras which you may require please send us a list. We will copy them and send them to you..

யுவான் சுவாங் பதில் எழுதியிருக்கிறார்

I learnt from an ambassador who recently came back from India that the great teacher Shila Bhadra was no more. The news overwhelmed me with grief that knew no bounds..Among Sutras and Shastras that I brought with me have already translated the Yogacharya bhumi Shastra and other works in all 30 volumes. While crossing the Indus I had lost a load of sacred texts. I now you send them to me if you get the chance . I am sending some small articles as presents. Please accept them.

இந்த இரு கடிதங்களும் ‘ஞானம் தேடிகள் ‘ எவ்விதம் ஒருவொருக்கொருவர் மரியாதை மற்றும் அன்புடன் தேவைகளை நிறைவேற்றும் தன்மையில் நடந்துள்ளனர் எனக் காட்டுகிறது. ஏராள எழுத்துக்கள் சீனாவிற்கு போனதையும் சொல்கிறது.

Yi tsing பற்றி நேரு எழுதுகிறார். எனக்கு பள்ளியில் கேட்ட நினைவில்லை. யி 671 ஆம் ஆண்டில் நாளந்தா வந்தவர். சீனா போகும்போது ஆயிரக்கணக்கான சமஸ்கிருத பிரதிகளை எடுத்துச் சென்றவர் என்கிற செய்தியை நேரு தருகிறார். இந்திய மக்களின் பழக்க வழக்கம், சடங்கு சம்பிரதாயம், நடை உடை பாவனைப் பற்றி யீ எழுதினாராம். வட இந்திய கோதுமை விளைச்சல், இறைச்சியை அவ்வப்போது மக்கள் எடுத்துக் கொள்ளும் உணவுப் பழக்கம். நெய்- எண்ணெய், பால் குறித்த தகவல்களைச் சொல்கிறார் யீ.

சீனர்கள் மத்திய பிரதேசப் பகுதியை noble region என வழங்கியுள்ளனர். யீ இந்து என்கிற பதத்தை பயன்படுத்தியது குறித்து நேரு ஆச்சர்யப்பட்டு எழுதுகிறார். ஆனால் ஒப்பிட்டளவில் சீனா குறித்த பெருமிதம் யீ க்கு இருந்ததாம். சுத்தம், ஞானம் , உணவுச் சுவை, கலை, அக்குபஞ்சர் மருத்துவம் எல்லாவற்றிலும் சீனா சீனாதான் என்றாராம் யீ. இங்கு இந்தியர் சீனாவை divine land என பெருமையாக கருதினர் என்றும் யீ சொல்லியுள்ளார்.

இப்படி நேருவின் டிஸ்கவரி யுவான் சுவாங் எனது பள்ளி நினைவுகளையும் கிளறிச் சென்றன...

23-10-2025

oct 24

மோகன் பகவத் ஆர் எஸ் எஸ்

ஆர் எஸ் எஸ் நூற்றாண்டையொட்டி அவர்களும் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். பொதுவாக ஆர் எஸ் எஸ், இந்திய மற்றும் மேற்கு intellectuals மீது bias உள்ள இயக்கம் என்கிற பெயரை வாங்கியுள்ளது. வலது அறிவுஜீவிகள் இதை மாற்றமுடியுமா என உழைத்து வருகின்றனர்.

இங்கே சிறுபிரசுரம் ஒன்றை நான் சொல்ல வந்தேன். ஏப்ரல் 10, 2025ல் ஆர் எஸ் எஸ் தலைவர் டாக்டர் மோகன் பகவத் அவர்களை , அவர்களது இயக்கம் சார்ந்த இதழாளர்கள்- எடிட்டர்கள் பேட்டி கண்டனர். நூற்றாண்டு தருண பேட்டியாக அது சிறு பிரசுர வடிவத்தை எடுத்தது. எந்த அமைப்பினரும் அவர்களின் தலைவர்கள் கொடுக்கும் பேட்டிகளை, உதிர்க்கும் கருத்துக்களை கொண்டாடவே பார்ப்பர். அவர்கள் இப்பேட்டியை கொண்டாடி வருகின்றனர்.

ஆர் எஸ் எஸ் இதழான ஆர்கனைசர் எடிட்டர் பிரபுல்லா கேட்கர் ஒரு பேட்டியில் , ஆர் எஸ் எஸ் என்ன சொல்கிறதோ அதை எடுத்து வைத்து எங்களை பலரும் விமர்சிப்பதில்லை. அவரவர் perceptions வழி விமர்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை வைத்தார். இங்கு பேட்டியில் அவர்கள் சொன்னதை சொல்லப்பார்க்கிறேன்.

திரு மோகன் பகவத் பேட்டியின் ideological அம்சங்கள் மீது ஏராள விவாதம் விமர்சனங்கள் வந்துள்ளன. கொள்கை தவிர, அவர்கள் அமைப்பு கட்டுமானம்- தொண்டர் கேடர் தலைவர் தத்துவ உறவுகள் குறித்து இப்பேட்டி சில விஷயங்களைச் சொல்கிறது.

எந்த அமைப்பிற்கும் அடிப்படை அதன் கொள்கை தத்துவம் போலவே அமைப்பு கட்டுமான பலமும் கூட. Organise என்பது அனைத்து அமைப்புகளின் அ ஆ. எதற்கு திரள வேண்டும் யாரை எதிர்த்து எதனை வீழ்த்தி எவரை காக்க என்பதில் தான் text discourse மாறும். ஆர் எஸ் எஸ் தன் பத்திரிகைக்கே ஆர்கனைசர் என்றுதான் பெயர் சூட்டியுள்ளது. அமைப்பு பலத்தை அவர்கள் அவ்வளவு நம்புகிறார்கள் என புரிந்துகொள்ளலாம்.

நூற்றாண்டு ஆர் எஸ் எஸ் பயணம் பற்றிய கேள்விகள் உள்ளன. பல கேள்விகள் பதில்கள் எந்த வித அறிவு கிளர்த்தலையும் என்னிடம் உருவாக்கவில்லை. சில 'பழைய பஞ்சாங்க' பாணியாக உள்ளன. அது அவர்களுக்கு புனிதமாகக்கூட இருக்கலாம்.

சங், ஸ்வயம்சேவக், கார்யகர்த்தா, ஷாகா , சர்சங்சாலக் போன்ற தமிழர்களுக்கு அதிக பழக்கமில்லா பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமஸ்கிருத, இந்தி பழக்கமுள்ளவர்க்கு புரியலாம்.

ஒன்றுமில்லா நிலையிலிருந்து பிரம்மாண்டம் நோக்கிய பயணமாக மோகன் பகவத் ஆர் எஸ் எஸ் நூற்றாண்டு வளர்ச்சியை சித்தரிக்கிறார். கம்யூனிஸ்ட்களை வரலாறு சொல்லச் சொன்னால் விவசாய- விவசாயதொழிலாளர்- தொழிலாளிவர்க்கப் போராட்டங்கள் வழி , சதி வழக்குகள் தண்டனைகள், தெலங்கான ஆயுத எழுச்சி உள்ளிட்ட பாதை வழி தங்கள் வரலாற்றை அவர்கள் எழுதி மேற்செல்வர்.

ஆர் எஸ் எஸ் வளர்ச்சி கட்டங்களாக 1948 , எமர்ஜென்சி கால தடைகள்- மீள்தல் -அதை வாய்ப்பாகக் கொண்டு வளர்தல், ஏகத்மாதா ரத யாத்திரை, ராமஜென்மபூமி , விவேகானந்தர் 150 என இயக்கங்களை மோகன் பகவத் பட்டியலிடுகிறார். இவையெல்லாம் மக்களை திரும்பி பார்த்து தங்களை ஏற்க வைத்ததாக அவர் வரலாறு சொல்கிறார்.

இந்த நூற்றாண்டில் இயக்க வளர்ச்சிக்கு பாடுபட்ட தலைவர்கள் பலரை அவர் சுட்டிக்காட்டுகிறார். வெகுஜன இயக்கங்கள் என பி எம் எஸ், வித்யார்த்தி பரிஷத் மாணவர் இயக்கம், கிசான் இயக்கம் என சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

1948 தடை வெறும் ஒரு மணி நேர ஷாகா பயிற்சி என சமூக ஒதுக்கத்தில் இருந்த ஆர் எஸ் எஸ்சை சமூகத்தின் பல திக்குகளுக்கும் போகவைத்ததாம். எமர்ஜென்சி ஜனநாயக போராட்டம் பல மய்ய நீரோட்ட கட்சிகளின் அங்கீகாரத்தை பெற வைத்ததாம். இந்த இரண்டுமே காங்கிரஸ் கால நடவடிக்கைகள்- அவை சாபம் என்பதற்கு பதில் வரமானதாக அவர்கள் வரலாறு பேசுகின்றனர்.

சரி - பல மனிதர்கள் பல்வேறு பின்புலத்திலிருந்து வருவார்களே, எப்படி ஓர்படித்தாக மாற்றுவீர்கள் எனக் கேள்வி அவரிடம் வைக்கப்பட்டது. அதற்கு மோகன் பகவத்

Accept people as they are- we have this flexibility- we also have that art of transforming them as per the need. எப்படி வேண்டுமானாலும் வரட்டும்..இங்கே டிரில் எடுத்து எங்க தேவைக்கேற்ப மாற்றும் கலை எங்களிடம் என்கிறார் போலும்.

ஒரு கேள்வியை , அடிப்படை நோக்கம் சார்ந்த கொள்கை கேள்வியாக நான் எடுத்துக்கொள்கிறேன். அக்கேள்வி what is Nitya in the Sangh? அதாவது ஆர் எஸ் எஸ் நடைமுறை வேலை எந்த நோக்கத்திற்காக - எது உங்களின் மாறா அடிப்படை நோக்கம் என இக்கேள்வியை எடுத்துக்கொள்கிறேன். மோகன் பகவத் தந்த பதில்

Hindustan is a Hindu Rashtra . இந்த நோக்கத்தை வைத்துக்கொண்டு அவர்களால் எப்படி சமூக ஒற்றுமையை, தேச ஒற்றுமையை கட்ட இயலும்? அடிப்படையில் பிளவைக் காட்டும் கட்டும் நோக்கமிருந்தால் , எப்படி 'பிறரை' நம்ப வைக்க இயலும்? தெரியவில்லை.

1920 'Age ideologies' என்றால் ஆர் எஸ் எஸ் மட்டும் வீழாமல் வளர்ந்தது பற்றி அவர்கள் கதைத்துள்ளனர். 5 அம்சங்கள் வேலைப்பாங்கு என்கிறார் மோகன் பகவத். அதாவது அடிப்படை, செயல்படுபவர், அமைப்பு கருவிகள் , தொடர் செயல்பாடுகள் இந்த நான்கும் நம் எல்லைக்குள். 5 வது fate என்கிறார். அதாவது விதி வாய்ப்பு அல்லது அதிர்ஷடம் என சுருக்கி எடுத்துக்கொள்கிறேன். இன்னொரு வரியை அவர் தருகிறார். அது அவர்கள் கருதும் உண்மை போலும். அவ்வரி the amount of truth in the foundation that determines how long lasting it will. Everything based on it becomes permanent. பவுண்டேஷன் என அவர் சொல்வது இந்துத்துவா என்பதை.

தலைவர்கள், தொண்டர்கள் பக்குவம் பயிற்சிக்கு ஒன்றை மோகன் பகவத் சுட்டிக்காட்டுகிறார். செய்யும் வேலைகளில் வெற்றி பலன் எனில் அது கூட்டு முயற்சி என்கிற பாராட்டைப் பெறும். தோல்வி எனில், தனிப் பொறுப்பாளர்களின் பலம் பலவீனம் அசட்டை ஆராயப்படும் . 'தனி நபர் சிறப்பாக மிளிர ' சூழல் உருவாக்கப்படும். இதை அவர் இவ்வரிகள் மூலம் சொல்கிறார்.

Even an ordinary person also can do extraordinary work and unimaginable sacrifices. For achieving this, what is needed is a conducive environment and condition to be part of that environment.

இளைஞர்கள் ஆர் எஸ் எஸ் ஆல் ஈர்க்கப்படுகிறார்களா என்கிற சந்தேக கேள்விக்கு மோகன் பகவத் இவ்வாறு பதிலளித்துள்ளார். பத்தாயிரம் ஸ்வயம் சேவக்கிலிருந்து ஒரே ஒருவர்தான் பிரச்சாரக் என்கிற தகுதிப்பாட்டைப் பெறுகிறார். ஆண்டிற்கு குறைந்தது 550 என்கிற அளவில் பிரச்சாரக்குகள் உருவாகி வருகின்றனர். இது உண்மையெனில் , சாதாரண விஷயமாக பார்த்தல் கூடாது என எனக்குத் தோன்றுகிறது.

மிக மிக மரபான சங் அமைப்பு டெக்னாலஜி வளர்ச்சியில் எப்படி சமாளித்து வருகிறது என்பது மற்றொரு கேள்வி. எங்கள் style flexible என்கிறார் மோகன் பகவத். Working in society with Sangh methodology is a process என்பதை சொல்கிறார். Samarth Bharath என்பதில் ஆர் எஸ் எஸ் பயிற்சி இல்லாத இளைஞர்களையும் சேர்த்து செயல்படுவதாகச் சொல்கிறார்.

மதமாற்றம், மத சுதந்திரம் பற்றி என்ன கருதுகிறீர்கள் எனக் கேள்வி. Freedom of worship is a value we uphold என பதில் வருகிறது. இன்று பல மத வழிப்பாட்டில் உள்ளவர்களின் பூர்வீக மனிதர்கள் இந்துக்கள். இந்து எனச் சொல்ல பிடிக்கவில்லையெனில் அவர்கள் பாரதியா என சொல்லிக் கொள்ளலாம். எவராவது வீட்டு மதம் திரும்ப வர விரும்பினால் 'கர்வாப்சி' எனமோகன் subtle ஆக இந்துத்துவா அரசியலை பதிலாக தருகிறார்.

நீங்கள் 'மெஜாரிட்டேரியனிசம்' பேசுகிறீர்களா? பதிலில் மோகன் பகவத் வழக்கமாக அவர்கள் சொல்லும் 'வசுதைவ குடும்பகம்' என்கிறார். அதில் மெஜாரிட்டி மைனாரிட்டி என்கிற இரட்டை -பைனரி கிடையாது. One Nation one People எனப் போடுகிறார். இங்கும் அவர் 'பாரதியா அல்லது Indic' என்கிற பொதுமையை சொல்கிறார்.

இந்து ஒற்றுமை என்கிறீர்கள் அதில் அரசியல் சமூக வேற்றுமைகள் கிடையாதா? கண்டிப்பாக வேற்றுமைகள் நிலவவே செய்யும். பகவத் பதிலில் differences are natural. Uniform is for organisation but Uniformity is not organisation. We may differ but must live together..even opponents are our own. Therefore working with this self discipline is the sign of true organisation.

இந்த பதிலின் படி அவர்கள்தான் தங்களை உண்மையானவர்களா என மதிப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் வளையா ஒற்றைத்தன்மை அமைப்பினரா? It is possible to maintain flexibility and diversity through devotion towards goal and discipline. Sangh does not expect to worship anyone, or to follow a specific diet. Come , become capable, live a life of service and sacrifice. Be prepared to live and die for the nation என்பதை தாங்கள் சொல்லிக் கொடுப்பதாக பகவத் விளக்கம் செல்கிறது. எங்களிடம் ஹீரோ ஒர்சிப் இல்லை எனச் சொல்கிறார் என எடுத்துக்கொள்கிறேன். திரு மோடி அவர்கள் இதில் திரிபா என அவர்கள்தான் சொல்லவேண்டும்.

கலாச்சார தேசியவாதம் இந்த உலகமயமாதல் காலத்தில் நிற்குமா? இந்துத்துவா நவீனத்துடன் உரையாடுகிறதா என்கிற முக்கிய கேள்வியும் இருந்தது. பதில் சற்று தப்பிப்பது போன்று மழுப்பலாக எனக்குப் பட்டது. எது மாடர்ன்- இன்று இருப்பது அடுத்த 20 ஆண்டுகளில் மாடர்னாக இருக்குமா? நடை உடை ஆகாரம் மாறலாம். மனிதம் மாறுமா - AIவந்து கூட அதை மாற்றிவிடுமா? Hindutva is humanity and humanity is Hindutva. Fraternity is the essence of dharma. Hindutva Humanity is timeless என்பது அவர் பதில்.

மோகன் பகவத்தின் இந்துத்துவா மீது மக்களுக்கு , உரையாட வேண்டிய பல அரசியல் கட்சிகளுக்கு , அமைப்புகளுக்கு நம்பிக்கையில்லை என்பதை அவர் உணர்கிறாரா எனத் தெரியவில்லை. சோசலிசம் என்பது பொது புத்தியில் போனதால்தான் வாஜ்பாயியும் அதை பயன்படுத்தினார். அப்படி இந்தியர்களின் பொது புத்திக்கு போகக்கூடிய செக்யூலர் பதமாக இந்துத்துவாவை புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்துத்துவா குறித்து சந்தேகங்கள் எழுப்பப்படுவதை வரவேற்பதாக பகவத் சொல்கிறார். அப்போதுதான் அவற்றையும் உள்வாங்கி அதை acceptable reinterpretation ஆக உருவாக்க முடியும் என்கிற உரையாடல் வெளியை அவர் முன் வைக்கிறார். Bharath is a Hindu Rashtra, a Dharmic nation என்று ஆர் எஸ் எஸ் கருதுகிறது. ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்கிறார். அதற்காக இந்துத்துவாவை தீவிரவாதம் அல்லது முழு அரசியல் எனச் சொல்வது நியாயமல்ல என மோகன் பகவத் பதில் இருக்கிறது. நாங்கள் சொல்வதை நீங்கள் ஏன் வேறு வகையில் குழப்புகிறீர்கள் என எதிர் கேள்வியில் அவர் தஞ்சம் அடைகிறாரோ என எனக்குத் தோன்றுகிறது.

நீங்கள் எவ்வளவு virtues கொண்டவரானாலும் பலம் இல்லையெனில் பயனில்லை. எனவே Strength என்கிறார். ஸ்வயம் சேவக்குகளில் சிலர் அரசியலில் இருக்கின்றனர். ஆர் எஸ் எஸ் அதனால் அரசியல் அமைப்பு ஆகிவிடாது என்று நியாயம் பேசுகிறார் பகவத். நாங்கள் வாக்கு, மற்றும் அதிகார அரசியலுக்காக இல்லை என்கிறார். இதை நம்புவது கடினம் என அவர் அறியாதவரா என்ன?

ஆர் எஸ் எஸ் social equality ஆக இருக்கிற இயக்கம் என அவர் உரிமை கோருகிறார். Fraternity is social harmony- brotherhood is Samarasta. The edifice of freedom and equality rests on fraternity. இங்கு அவர் அம்பேத்கரை சுவீகரிக்க நினைக்கிறாரா?

பெண்கள் குறித்து கேள்விக்கு , பெண்கள் முன்னேற்றம் ஆண்களால் வருவதில்லை, அவர்கள் தங்களை தாங்களே முன்னேற்றிக்கொள்ள முடியும் என நினைப்பதாக பதில் இருந்தது.

எதிர்கால கடமைகள் என்பதில் சமாஜிக் சமராஸ்தா - social harmony சொல்லப்படுகிறது. Temple, cremation grounds, water bodies must be inclusive . இதை நடைமுறையாக்க ஆர் எஸ் எஸ் பாடபடவேண்டும் என்கின்றனர்.

குடும்ப மதிப்பீடுகள் உயர்த்தப்பட்டு, சிதையா வண்ணம் காப்பது எனப் பேசுகின்றனர். சுற்றுச் சூழல் விழிப்புணர்வு கடமையாகவேண்டும் என்கின்றனர். National self hood என்கின்றனர். அடுத்து அவர்கள் சொல்வது சட்டம், அரசமைப்பு , சமூக நாகரீகம் ஆகியவற்றை அனுசரிப்பது என்கின்றனர். இவற்றை நூற்றாண்டு தருண five resolves என முடிவாக்கியுள்ளனர்.

சொல்வதும் நடப்பதும் ஒன்றாகுமா?

வலதுகள் குறித்து அவ்வப்போது சில இடுகைகள் செய்து வருகிறேன். திரட்டினால் நூல் அளவிற்கு கூட வரலாம். வலதுடன் உரையாடல் என்பது தொடர்ந்து நடைபெறவேண்டிய ஒன்று. பார்க்கலாம்..

24-10-2025

அக் 27

'Religion In Indian History'

இந்திய வரலாற்றில் மதம் 'Religion In Indian History' நூலை பார்த்துக்கொண்டிருந்தேன். மார்க்சிய வரலாற்றாய்வாளர் பேராசிரியர் இர்பான் ஹபீப் எடிட் செய்த நூல். 2010 ஜனவரியில் அநேகமாக சென்னை கண்காட்சியில் வாங்கியிருக்கக்கூடும். அல்லது அஜாய்பவன் டெல்லியில் வாங்கியிருக்கலாம். சரியாக நினைவில்லை. இங்கு இர்பான் ஹபீப் - D P சட்டோபாத்யாயா ஆகிய இரு மார்க்சிய அறிஞர்களை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த pieceயை தரப்பார்க்கிறேன்.

1

‘அலிகார் ஹிஸ்டாரியன்ஸ் சொசைட்டி’ சார்பில் இந்நூல் வந்து 18 ஆண்டுகள் ஆகின்றது. இர்பான் அறிமுகத்தையும் எடிட்டோரியல் குறிப்புகளையும் விரிவாக தந்துள்ளார். வரலாற்றுக்கு முன்னர் சமயம் குறித்த புரிதல், மதமும் சாதியும், இந்தியாவில் இஸ்லாம், நவீன காலகட்டத்தில் மதம் போன்ற உபதலைப்புகளில் இர்பான் குறிப்புகளை தந்து செல்கிறார். அவரின் ‘மதம் சாதி’ உபதலைப்பை கொஞ்சம் சொல்கிறேன். இர்பான் மேற்கோள் காட்டுகிற செய்தியிலிருந்து

" முக்கிய வேதக் கோப்புகளில் விவரிக்கப்பட்டுள்ள வர்ண அமைப்பில், ஜாதி அமைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்—தொழில்முறை நிலைத்தன்மை மற்றும் அகமணம்—இல்லை. 'ஜாதி' என்ற சொல் வேதக் கோப்புகளில் கண்டறியப்படவில்லை. ரிக் வேதம் 9.112-ல் வாழ்க்கைக்காக பலவிதமான தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; ஆனால் அவை மரபுரிமை கட்டுப்பாடுகளைக் குறிக்கவில்லை.

(The varna order as it is described in the main Vedic corpus lacks two essential elements of the caste system viz occupational fixity and endogamy. The Jati itself has not been traced in the Vedic corpus. Rig 9.112 describes diverse occupations for livelihood with no suggestions of hereditary constraint.)

அடுத்து இர்பான் விவாதிக்கக்கூடிய முக்கிய அம்சம் சாதியின் தோற்றத்திற்கு முழு பொறுப்பையும் பிராமணியம் மீது சுமத்த முடியுமா என்பது. அவர் காட்டும் மேற்கோள்

"ஜாதி அமைப்பின் வளர்ச்சி மற்றும் பரவல் பெரும்பாலும் பிராமணியத் தூண்டுதலால் ஏற்பட்டதென்று கூறுவது சந்தேகத்துக்குரியதாகத் தோன்றுகிறது. உலகியலான வாழ்க்கையில் நெறிமுறைகள் குறித்து புத்தர் வழங்கிய உபதேசங்கள், ஜாதி அமைப்பைச் சார்ந்த neither endorsement nor rejection எனும் ஒரு விசித்திரமான நடுநிலையை எடுத்துக்கொள்கின்றன — அதாவது, ஆதரிக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை."

(It seems particularly doubtful if the evolution and spread of caste system can be attributed primarily to Brahmanical inspiration..Buddha's sermons about morality in worldly life adopt a curiously neutral attitude towards Caste neither endorsement nor rejection -)

விளக்கம் கொடுத்த பின்னர் தனது மதிப்பீடாக இர்பான் ஹபீப் வைப்பது :

இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், இது ஒரு எளிய பிராமணீயமயமாக்கல் (Brahminisation) செயல்முறை அல்ல. புத்தமதம் மற்றும் ஜைனமதமும் ஜாதி அமைப்பை விளக்க, நியாயப்படுத்த மற்றும் அதோடு வாழக்கூடிய சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளை கொண்டிருந்தன.

(The point here is that it was no simple process of Brahminisation. Buddhism and Jainism also contained ideological baggage with which the caste system could be explained , justified and lived with.)

இஸ்லாமின் வருகை இந்துயிசம் மீது என்ன செல்வாக்கை செலுத்தியிருக்கக்கூடும் என்பதை இர்பான் சொல்லப்பார்க்கிறார். ஒன்று இருக்க வாய்ப்பில்லை என negate செய்கிறார். அதாவது monotheistic trend யை இஸ்லாம் தான் கொடுத்திருக்க வேண்டும் என அவர் கருதவில்லை. ஏற்கனவே கீதையால் காட்டப்பட்ட , இருந்த ஒன்றை மய்யப்படுத்தி இஸ்லாம் செல்வாக்கு கெட்டிப்படுத்தியிருக்கலாம் என இர்பான் கருதுகிறார். - to move monotheism to a more central position within Hinduism என்கிறார். அதேபோல் படிநிலை சாதி சமூகத்தின் மீது ஏதாவது விமர்சன வினையாற்றியதா இஸ்லாம் என்பதை அவர் பேசுகிறார். இதற்கு பாசிட்டிவ் பதிலை இர்பான் தரவில்லை. அவர் தருவது :

"இந்த காலகட்டத்தில் ஜாதி அமைப்பை வெளிப்படையாக முஸ்லிம்கள் கண்டனம் செய்ததாகக் காண முடியவில்லை. இந்தியாவிற்கும் வெளியிலும் இருந்த இஸ்லாமிய தத்துவவாதிகள் சமூக அமைப்பில்

நிலைமைகளை (hierarchy) ஒரு இயல்பானதாய் மட்டுமல்ல, விரும்பத்தக்கதாயும் ஏற்றுக்கொண்டனர்."

(one searches in vain for any explicit Muslim condemnation of the caste system in this period, whereas Islamic theologians both outside and inside India accepted hierarchy as a normal and, indeed, desirable state of social organisation.)

இந்துயிசம் இஸ்லாம் இரண்டுமே கபீர் போன்றவர்களை எதிர்கொள்ள வேண்டியதானது. இஸ்லாம் சூபிக்களையும் பார்க்கவேண்டியிருந்தது.

காலனிய ஆட்சிக்கு எதிரான போராட்ட வரலாற்றில் மதம் பங்காற்றியுள்ளது. 1857 முதல் சுதந்திர எழுச்சியில் patriotism was explicitly breaking the bonds of religious separation என்கிற கருத்தாக்கத்தையும் இர்பான் தருகிறார். ஆனாலும் இந்திய தேசியம் என்பது கம்யூனலிசத்துடன் வளர்ந்த ஒன்றாகவும் இருந்தது என்கிறார். அவர் கவலை தோய்ந்த வரிகளுடன் தன் அறிமுக எடிட்டோரியல் குறிப்பை இவ்வாறு முடிக்கிறார். அவ்வரிகள்

"இந்தியாவின் தேசியவாதத் தலைவர்கள், இந்தியாவில் ஒரு மதச்சார்பற்ற குடியரசை உருவாக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தியதே, அவர்கள் எடுத்த நிலைப்பாட்டின் மறக்க முடியாத ஒரு சான்றாகும்; இது காந்திஜியின் தியாகத்தால் புனிதமாக்கப்பட்டது. ஆனால் வகுப்புவாதம் (communalism) தொடர்ந்து நிலைத்திருக்கிறது; மேலும், பல தசாப்தங்களில் அது வலுப்பெற்று, மத்திய அரசின் அதிகாரப்பூர்வக் கொள்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது — குறிப்பாக, மில்லேனியம் தொடங்கிய காலத்தில் NDA ஆட்சிக்காலத்தில்.

(The fact that India's nationalist leaders yet insisted on creating in India a secular republic makes theirs an unforgettable act of steadfastness to principle, hallowed by Gandhiji's martyrdom. Communalism has, however persisted and, indeed, grown stronger over the decades , so much as to have become , in all but the name of, part of official doctrine of India under NDA govt around the turn of the millennium.)

2

மார்க்சிய அறிஞர் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா ஆழமான தனது ஆய்வை முன் வைத்துள்ளார். அவரின் ஆய்வுத் தலைப்பு " In search of the Roots of Religion or Dharma- Linguistic and Social Routes"- என்பதாகும். அவர் comparative philological அணுகுமுறையை கையாண்டுள்ளார். பல்வேறு மதங்களில் சொல்லப்படும் புனிதப் பதங்களின் வேர்ச்சொல் ஆய்வை ஒப்பீட்டு அடிப்படையில் செய்துள்ளார். மனிதப் பதங்கள்

புனிதமேற்றப்பட்டு மனிதர்கள் அதன் முன் மயக்கு நிலை கொள்வது உறுதியாவதை பேசுகிறார்.

வரலாற்று மற்றும் மானுட இயல் பார்வையில் வைத்துப் பார்த்து, சட்டோ முக்கிய புள்ளி ஒன்றை நமக்குத் தருகிறார்

"சுத்தமான இனம்', 'சுத்தமான மதம்', 'சுத்தமான பண்பாடு' என்ற மாயக்கதைகள் விலக்கப்பட வேண்டியவை. அடுத்து அவர் முன்வைக்கும் முக்கியமான புள்ளி: வரலாற்று ஆதாரங்களை ஆய்ந்து பார்த்தபோது, பல்வேறு இன மற்றும் மதக் குழுக்கள் நீண்ட காலமாக ஒரே பண்பாட்டு சூழலில் வாழ்ந்தால், அவர்கள் ஒருவரையொருவர் ஏற்கும் முறைகளை கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது நாகரிக வளர்ச்சியின் ஒரு அங்கமாகும் — ஒரு நாகரிகத் தேவையாகும்."

(The myths of 'pure race' 'Pure Religion' and 'Pure Culture' need to be discarded. அடுத்து அவர் நகர்த்தும் புள்ளி One may rightly affirm, on the basis of studied historical facts, that where different ethnic and religious groups share the same cultural space over along period of time, they are obliged to learn the ways of mutual accommodation. It is a part of civilisation all process- civilisational imperative.)

சமயம் ஆட்சியாளரின் பின்புல ஆதரவைக்கொள்ளும் போது நேர்வதை சட்டோபாத்யாயா சொல்கிறார். இதை மனிதர்கள் அவ்வப்போது அனுபவித்தே வந்துள்ளனர். சில மத அறிஞர்கள் தன் சிந்தனை மூட்டை முடிச்சுகளுடன் ஓடி தப்பியும் உள்ளனர். தேவி பிரசாத் சட்டோ எழுதுகிறார்-

When religion is backed by political power the range of permissible interpretation turns out to be rather limited…The devious path from doctrinal orthodoxy to argumentative epistemology tends to become inevitable mainly when religion is state enforced. பண்டைய சமூக நம்பிக்கைகள் குறித்து நாம் இன்று கேலியாக பார்க்கலாம். ஆனால் அவற்றை அந்த வரலாற்று சமுக நிலை தருணத்துள் வைத்து நாம் புரிந்து கொள்ளவேண்டும் என தேவி பிரசாத் சட்டோபாத்யாய சொல்லித்தருகிறார். Situate it in its appropriate historical social contexts.

சில அவசியமான , எவரும் ஒதுக்ககூடாத கேள்விகளை அவர் எழுப்புகிறார். பதில்களை அந்த அந்த சமூகம் தான் இன்னும் தனிநபர்கள் தான் பொறுப்பாக தேட வேண்டும். தேவி பிரசாத்தின் கேள்விகள்

- மதம், ஒரு முக்கியமான பண்பாட்டு கருத்தாக இருந்தும், ஏன் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே அர்த்தத்தை (அல்லது அர்த்தங்களின் தொகுப்பை) பெறவில்லை?

- மதம், ஒரு பரவலாக ஏற்கப்பட்ட நிறுவாக இருந்தும், ஏன் ஒரே மாதிரியான கோட்பாட்டு, நடைமுறை, மற்றும் கட்டமைப்புச் சிறப்பம்சங்களை காட்டவில்லை?

- மதத்தின் உள்ளேயே, மனிதர்கள் ஒன்றிணைவதற்குப் பதிலாக, ஏன் முடிவில்லாத பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறார்கள்?

{Why does not religion , as a key cultural concept , have any universally acceptable connotation or set of connotations? Why does religion, as a widely acknowledged institution, not exhibit any universal, theoretical, practical, structural characteristics? Why is that within religion , humans are endlessly segmented, rather than being united? {

அவரின் கடைசி கேள்வி என்னை மிகவும் தொந்தரவு செய்தது. கடவுள் சொல்லும் மதமானாலும், கடவுளற்ற சமயமானாலும், அதீத சக்திகளின் நம்பிக்கைகளை சொல்லவே செய்கின்றன. Supernatural reality என ஏதாவது கட்டுகின்றன. Spiritual என்பது பேசப்படுகிறது. சுயத்திற்காகவும் பிற அனைவருக்குமான உய்தல் என அங்கு பேசவும் செய்கின்றனர். இவை எல்லாவற்றிலும் the ideal of universalism rooted in earthly humanism இருக்கிறதா .. இருந்தால் ஆரோக்கியம் என தன் ஆவலை சொல்லிச் செல்கிறார் தேவி பிரசாத்.

300 பக்கங்களை தொடக்கூடிய ஆழமான பார்வைகளை கொண்ட நூல் எனலாம். இந்த நூலில் டி பி சட்டோபாத்யாயா தவிர , சுவிரா ஜெய்ஸ்வால், பருன் டே, ஒசாமு கொண்டோ, ஷ்ரின் மூஸ்வி, அதர் அலி, சையத் நதீம் ரேசவி, கமலேஷ் மோகன், ராமகிருஷ்ணா, நிர்மலாங்சு முகர்ஜி போன்ற பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். வாய்ப்பின் சிலரது கட்டுரைகளை குறித்தாவது பகிர்ந்து கொள்ள ஆசை. பார்க்கலாம்...

PostScript :

நேருவின் டிஸ்கவரியில் old Indian social structure-village self govt- The theory and practice of Caste - joint family என்கிற துணை தலைப்புகளில் அவரின் fantastic scholarship வெளியாவதை காணமுடியும். Well balanced, unemotional, unbiased assessment and interpretation இருப்பதை நான் உணர்ந்தேன். ஆங்கில நூலில் பக் 245-257 ல் அவரது நிதானமான அணுகுமுறையை எடுத்துவைப்புகளை படிப்போர் உணரமுடியும். இர்பான் போலவே, தேவி பிரசாத் போலவோ அவர் வரலாற்று

பேராசிரியர் அல்ல, ஆனாலும் நேருவின் வாசிப்பு விரிவும் உள்வாங்கி கச்சிதமாக வெளிப்படுத்தும் திறனும் வியக்க வைக்கும். 27-10-2025

அக் 29 2025

8th CPC for CG Employees

MOF has finally placed its PIB release on Oct 28,2025 regarding 8th CPC . Though it mentions TOR approved by the cabinet , the same is not found place in the PIB release, unlike that of 7 th CPC release of 2014.

So one has to wait to see that 'approved TOR' when gets its light. Then only that can be compared with 7th CPC's TOR.

The riders that need to keep while making recommendations are mostly the same, but some different wordings here and there comparing 7 th CPC PIB release dated 24th Feb 2014. The 8 th CPC need to keep the following while making recommendations.

- economic conditions in the country and the need for fiscal prudence

- The need to ensure that adequate sources are available for developmental expenditure and welfare measures

- The unfunded cost of non contributory pension schemes

- The likely impact of the recommendations on the finance of the State Governments which usually adopt with some modifications and

- The prevailing emolument structure, benefits and working conditions available to employees of CPSUs and private sector

One can understand their speaking about 'fiscal prudence' and impact on the 'finance of State Governments'. But again this time they tied with more specifics like ' developmental expenditure' and 'welfare measures' as that of 7 th CPC. If it does not have more meanings than that of 7 th CPC, then that is OK.

We can understand the other issue also, comparable with CPSU structures- benefits, but this time they added ' private sector' also . In addition, they mention 'working conditions' also. This aspect of comparing with private sector , I just guess- my perception only, may benefit higher bureaucrats but make difficult choices and environment to lower level employees. Chances of creeping of an 'inbuilt discrimination' may be there. I feel it is difficult for them to increase 'working hours' comparing private sector, and also in the area of 'Job security'. I am just giving a cautious note only, nothing to be scared of when staff side is united.

This time they avoided ' best global practices and their adaptability' like that of 7 th CPC, but added ' Private sector'. Moreover how they mean private sector big corporations or MSME or some small companies. It is not clear.

I do not know why a separate note is there regarding ‘unfunded cost’ of non contributory pension schemes. If it is to compare with funding of contributory schemes and make UPS- NPS more attractive then it is a different matter. I am unable to guess any hidden purpose . If pay structures recommended, then the pre2026 pensioners benefit cost normally would be calculated, then why this specific ‘unfunded cost’.

Against the apprehensions of many , this time they specifically mentioned- the likely ‘date of effect’ as

″ Going by this trend , the effect of the 8 th CPC recommendations would normally be expected from 1-1-2026”. This is seemingly positive.

7 th CPC PIB of 2014 left the same to the ambit of CPC recommendations, however 7 th CPC gave 1-1-2016 as the date of effect.

This time also like that of 7 th CPC, they give 18 months time and power to release Interim report if found necessary to 8 th CPC also. But for 2016, 7 th CPC was given time of 18 months in 2014 itself. This time for 8 th CPC ‘unfair delay’ is maintained to postpone the results of 8 th CPC to 2027 middle or even further far off. Even the retired top bureaucrats from MOF got irritated seeing the undue delay. This may induced some pressure to the govt to decide at least now.

The ‘Background ‘ is clearly mentioned that 8 th CPC is for CG employees.

″ The CPCs are periodically constituted to go into various issues of emoluments structure, retirement benefits and other service conditions of Central Government employees and to make recommendations on the changes required there on..”.

The above portion is as that of 7 th CPC only.

Let us be clear that 8 th CPC is appointed for CG employees and recommendations may be accordingly . Hope CG employees movement would be watchful in every step and get their best. Good luck and wishes to them.

09 hrs 29-10-2025 R. Pattabiraman

oct 30

அன்னா வர்கி

அதோ பாரு காந்தி போகிறார்..படேல் வந்து நிற்கிறார், நேரு வெளியே எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே போகிறார்- இப்படி ஒரு பால்கனியிலிருந்து பம்பாயில் வளர்ந்த குழந்தைகள் அம்மாவை கூப்பிட்ட காட்சியை நாம் அன்னா வர்கியிடம் காணலாம். 9 வயது குழந்தையாக மனிபவன் தெருவில் இருந்த வீட்டின் பால்கனியிலிருந்து அங்கு வந்து போகும் தலைவர்களைப் பார்த்து ஆச்சர்யமும் குதூகலமும் கொண்ட சிறுமியாக அன்று அன்னா வர்கி.

90 வயது தாண்டிய நிலையில் பேத்திகள் வந்து அம்மாச்சி உன் நினைவுகளை எழுது. ஊருக்கு அதை சொல்லிவிட்டுப் போ என்கிறார்கள். யாரும்மா படிப்பா- இது அன்னா அம்மாச்சியின் மெல்லிய பதில். நான் படிக்கிறேன் அம்மாச்சி என ஒரு பேத்தி கட்டியணைத்து, வாசகர் உண்டு எனச் சொல்கிறாள். பேத்தியை ஏமாற்ற வேண்டாமே எனக் கிடைத்த நினைவுக் கிடங்கு தான் “ One Woman’s India - From Gandhian Era to the Cyber Age” by Anna Varki.

இந்தியப் பெண் ஒருவர் காந்தி காலத்திலிருந்து இன்றைய மின் யுக காலம் வரை பயணித்த நினைவு ஓடை. அன்னா எழுத்தில் தேர்ச்சி பெற்றவர். நல்ல குடும்பப் பின்னணி. பல நகர exposures. Dignity Dialogue, Madras Musings, women’s Era, Chennai chronicles, Alive, Eve’s Touch இன்னும் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் என எழுதி வந்தவர். Banyan தொண்டு அமைப்பில் சூப்பர் ஸ்டார் என அழைக்கப்பட்டவர் அன்னா வர்கி. பம்பாய், டெல்லி, சென்னை என பெரு நகரங்களில் கல்விக் காலத்தை-மாணவர் பருவத்தை வாய்க்கப் பெற்றவர். குயின் மேரி கல்லூரி, பிரசிடென்சி மாணவி. சாந்தோம் கல்ச்சுரல் அகாதமி அவர் பெயரை சொல்லும். அவர் பம்பாய், சென்னையில் பேராசிரியையாகவும் இருந்தவர்.

மாத்யு வர்கி அவரது கணவர், தெற்கு ரயில்வேயில் GM ஆக இருந்து சென்னையில் பணியாற்றியவர். அப்பா போதன் பெரும் பத்திரிகையாளர். குடும்பம் கல்கத்தாவில் இருந்தபோது 1921 டிசம்பரில் அன்னா பிறந்தார். பெண் குழந்தையை கோகி என்றும் ஆண் குழந்தையை கோகா என்றும் பெங்காலிகள் அழைப்பர். அன்னா தொடர்ந்து பேத்திகள்வரை ‘குகி’ ஆனார்.

பம்பாய் கிரானிக்கிள் வேலை என்பதால், போதன் அவர்கள் மனிபவன் இருந்த தெருவில் குடியேறினார். குழந்தை அன்னாவிடம் இன்று முக்கிய கூட்டம். தலைவர்கள் பலர் வருவர். சமத்தா இருங்க, வர லேட்டாகும் எனச் சொல்லி செல்வார். குழந்தைகள் பால்கனியில் நின்று வரும் போகும் தலைவர்களை பார்த்து அச்சா அவர் இவர் என பெரிதாக கத்தி மகிழுவர். அம்மா சீக்கிரம் வா அய்யோ போய்ட்டாங்க என அம்மா பார்க்காத ஏமாற்றத்தை குழந்தைகள் மூஞ்சி காட்டும்.

அம்மா இசைப் பிரியர். ஹார்மோனியம் கூடவே வரும். பக்கத்து வீட்டு ஆண்ட்டி லீனா சர்க்கா சுற்றுவார். குழந்தைகள் வேடிக்கையாகப் பார்த்து லீனா சொல்லும் சுயராஜ்ய கதைகள் கேட்கும். அப்பாவும் பொம்மைகள் வாங்கித் தராமல் வெளியே கூட்டிப் போனால் காதி பந்தருக்கு அழைத்துச் செல்வார்.

வீடு handmade paper, agarbatties, takli எனக் காட்டும். அப்பா போதன் ஜோசப்பிற்கு அந்நிய துணி எரிப்பு, தண்டி என்பதில் சற்று தயக்கம் இருந்தது. அப்பாவின் சகோதரர் , ஜார்ஜ் ஜோசப் - நம்ம மதுரை ஜோசப் தான். காந்தி, ராஜாஜி, வரதராஜுலு நாயுடு, பெரியார், வைக்கம் தொடர்பு என அறியப்பட்ட ஜார்ஜ் ஜோசப்தான். அன்னா குட்டியா அவங்க வீட்டுக்கு வந்து சுயராஜ்ய பேச்சு சூழலை உணர்ந்தவர். அப்பா போதன் ஜோசப்க்கு காந்தியோடும் பழக்கம். ஜின்னாவுடனும் நெருக்கம். அவர் ஜின்னா அழைப்பை ஏற்று டான் பத்திரிகைக்கும் சென்றவர்.

காந்தி அப்போது நெக்குருக கடிதம் ஒன்றை போதனுக்கு எழுதினார்.

My dear Pothan, why you have left us? I am a poor man. I need to read what you write , so don’t fail to send me a copy of Dawn- Mohandas Gandhi.

இந்த கடிதத்தை எங்கள் குடும்பம் தொடர்ந்து காப்பாற்றத் தவறிவிட்டதாக அன்னா வருத்தப்படுகிறார். பள்ளி மாணவியாக, அப்பா பத்திரிகைக்கு எழுதி ‘ஆபிசில்’ கொடுத்து வா எனச் சொன்னால், 1930 களில் இன்று பார்லிமெண்ட் ரோடு எனச் சொல்லப்படும் டெல்லித் தெருவில் அன்னா சைக்கிளில் சென்று சாகசம் செய்துள்ளார். அன்னா திரும்பும்வரை அம்மாவிற்கு வயிற்றில் புளி கரைக்குமாம்.

அப்பா நீ எப்பத்தான் நேரா காந்தியைப் பார்க்க அழைத்து போவாய்..அன்னாவின் நச்சரிப்பது. அப்பா பார்க்கலாம் என்றே சொல்லி வந்தார். திடிரென ஒரு நாள் கிளம்பு கிளம்பு - அம்மாவும் நானும் காந்தியை பார்க்கப் போறோம்- நீயும் வா.. அன்னாவிற்கு மனம் அலைபாய்ந்து துள்ளியது. ஏனோ அன்னா நினைவால் தேதியை

தரமுடியவில்லை போலும். நிகழ்வைச் சொல்கிறார். காந்தியிருந்த டெல்லி பங்கி குடியிருப்பு பகுதிக்கு போகவேண்டும். சரோஜினியும் இருப்பார் என அன்னாவிற்கு சொல்லப்பட்டது.

அன்னா, கவனமாக இரு. காந்தியைப் பார்க்க பலர் வந்திருப்பர். பரக்கக் கூடாது. பொறுமையாக இருக்க வேண்டும். பக்கத்திலே நிற்க அடிச்சுபிடிச்சு ஓடக் கூடாது. இளம் பெண்ணின் மனம் இதெல்லாமா கேட்டுக்கொண்டிருக்கும். காந்தி என்ன சொல்வார், நாம் என்ன சொல்வது என மனதில் அசை போடல். மதியம் போனவர்களுக்கு காந்தியை மாலைதான் பார்க்க முடிந்தது.

காந்தி அருகாமையில் அன்னா..அவரது வரிகளைத் தருகிறேன்

As we drew closer , Gandhiji saw us, he gave us a warm smile. He was busy on his charkha and talking to people around him. We waited patiently. At the stroke of five he rose, and picked up a long bamboo pole that helped him take long strides.

He beckoned me and put his arms around me, and said, “ when you grow up I want you to make a promise to serve your country in whatever way you can..then marched forward with many followers

இந்த நாளை நான் ஒருபோதும் மறந்ததில்லை என்கிறார் அன்னா.

அன்னாவின் மாணவக் கால தோழிகளுடனான சில மகிழ்ச்சி தருணங்களை பகிர்ந்துள்ளார். அப்பா இந்துஸ்தான் டைம்சில் இருந்த போது, தினம் சிம்லா செல்லும் வேனில் பேப்பர் கட்டுடன் ஒருமுறை எங்களையும் போட்டு சுற்றிப்பார்க்க அனுப்பினார். அங்கு அப்பாவின் நண்பர்கள் உபசரித்ததை எழுதியுள்ளார் அன்னா. பேசா படங்கள் சினிமா கால அனுபவத்தைச் சொல்கிறார். ரேடியோ வந்த அனுபவத்தைச் சொல்கிறார். அப்பா டெல்லி ரேடியோவின் தலைமை பொறுப்பில் இருந்ததை நினைவு கூர்கிறார். போதனுக்கு பத்திரிகை உலகில் ஏக கிராக்கி. பாடியாலா ராஜா வருந்தி வருந்தி அழைத்த செய்தி தெரிகிறது. போதனை அழைத்து ஹைதராபாத் நிசாம் மரியாதை செய்துள்ளார்.

கஸ்தூர் பா மறைந்த செய்தி அப்பாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. பா போய்ட்டார் என எங்களை தட்டி எழுப்புகிறார். டான் பத்திரிகைக்கு இரங்கல் செய்தி ஒன்றை அப்பா போதன் சொல்ல அன்னா எழுதி அனுப்பினார் . ஜின்னா எந்த மறுப்பும் காட்டவில்லை என அன்னா நினைவு செல்கிறது.

அன்னாவின் தாய் மாமா பைலட் காப்டன் மாதென். ஜாக்குலின் கென்னடி பயணித்த விமானம் ஓட்டியுள்ளார். அவர் அன்னாவை வா

வானம் ஏறி பறந்து வரலாம் என குட்டியாக இருந்தபோதே சாகசத்தை ஏற்படுத்தியுள்ளார்.

எல்பின்ஸ்டன் தியேட்டரில் தாகூரின் சித்ரகுடா போடுகிறார்கள் என்றனர். பெங்காலி புரியாது போகலை எனச் சொன்ன அன்னா மற்றும் தோழியர்களை அப்பா கண்டிப்பா போய் enjoy என அனுப்பி வைத்தார். பண்டிட் ரவிசங்கர் நிகழ்வு என தொடர்ந்து அவர்கள் சென்றனர். மூர் மார்க்கெட் சுற்றுவது, டிராமில் போவது, ஐஸ்கிரிம் சாப்பிடுவது என மகிழ் தருணங்கள்... பெண்களுடன் சேர்ந்து போய் கிரிக்கெட் மேட்ச் பார்த்து கூச்சலும் மகிழ்ச்சியுமாய் இருந்த கணங்கள். கேப்டன் லட்சுமி பார்த்த பேசிய மகிழ்ச்சி..

இப்படி பல சுவையான செய்திகளுடன் ..ஏதோ கொஞ்சம் எடுத்து இந்நூலில் செய்திகளை தந்துள்ளேன். அன்னாவின் one woman’s India பெண் எழுத்து கிடங்கில் பேசும் நூல்..

30-10-2025